
# தாழை

## 2009




## மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்.

# தாழை

கற்றுணர்ந் தொழுகுக



2009



**மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்.**
**பேத்தாழை.**

# சஞ்சிகை விபரம்

| | | |
|---|---|---|
| சஞ்சிகையின் பெயர் | - | தாழை |
| இதழ் | - | 1வது |
| பதிப்பு | - | மார்கழி 2009 |
| வெளியீடு | - | மட்/ பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம். |
| பக்கங்கள் | - | xxiii + 157 |
| அட்டைப்படம் | - | திரு. P.விஜயபாஸ்கர் ஆசிரியர் |
| பிரதிகள் | - | 500 |
| பதிப்பகம் | - | எவகிறீன் அச்சகம், மட்டக்களப்பு. |

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தண் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ் கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே

தொல்லை வினை தரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே

வானமறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே.

# பாடசாலைக் கீதம்

வாழையூரில் அமைந்த பேத்தாழை
வானோரும் போற்றும் வரமது பெற்று
வளம்பல கொண்டு நலமுடன் சிறந்து
வாழிய வாழியவே வாழிய வாழியவே
வாழியவே வாழியவே வாழிய வாழிய வாழியவே.

விபுலானந்தர் பெயரினைத் தாங்கி
விளங்கிடும் வித்தியாலயமாக
பன் மொழியுடனே பல்கலை புகட்டி
வாழிய வாழியவே வாழிய வாழியவே
வாழியவே வாழியவே வாழிய வாழிய வாழியவே.

பல்கலை புகட்டும் அதிபர் ஆசான்களும்
பெற்றோருடனே பெரியோர் அனைவரும்
நேர்வழி நின்று நன்நெறி காத்து
வாழிய வாழியவே வாழிய வாழியவே
வாழியவே வாழியவே வாழிய வாழிய வாழியவே.

பண்புடன் வளரும் மாணவர் நாமும்
பாரினில் சிறந்து விளங்கிடவே
இறைவா எமக்கு நல்லருள் புரிந்து
வாழிய வாழியவே வாழிய வாழியவே
வாழியவே வாழியவே வாழிய வாழிய வாழியவே.

# Motto

## மகுடவாசகம்

கற்றுணர்ந்தொழுகுக..

# Vision

## தூரநோக்கு

வாழ்க்கைத் தேர்ச்சிகள், சமூக விழுமியங்கள் என்பவற்றை மேம்படுத்துவதன் ஊடாக மெச்சத்தக்க ஒரு வாழ்க்கைக் கோலத்தை அமைத்துக் கொள்ளக் கற்றல்.

# Mission

## பணிக்கூற்று

தன்னம்பிக்கை, தலைமைத்துவம், சமயக் கருத்துக்கள், நற்பழக்கவழக்கம், பொறுப்புணர்வு, பிறர் நலன் பேணல், சமூகமயமாதல், சுயதேவை பூர்த்தி போன்ற பண்புகளைக் கல்வியினூடாக ஏற்படுத்தும் வகையில் பாடவிதான, இணைப்பாடவிதான செயற்பாடுகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல்.

# ஆசிச் செய்தி



மட்டக்களப்பு பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம் முதன் முறையாக ''தாழை'' எனும் சஞ்சிகையை வெளியிடயிருப்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து இத்தகைய அறிவு சார் முயற்சிகளில் ஈடுபடுவது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். இத்தகைய செயற்பாடுகள் மேலும் மாணவர்களின் அறிவின் எல்லையை விரிவடையச் செய்கின்றது. அவர்களை சுயமாகச் சிந்திக்கத் தூண்டுகின்றது.

சுவாமி விவேகானந்தர் உண்மையான கல்வியைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார். ''பாமரர்களாகிய பொதுமக்களை வாழ்க்கைப் போராட்டத்திற்குத் தகுதி பெற்றவர்களாக இருக்க உதவி செய்யாத கல்வி, உறுதியான நல்ல ஒழுக்கத்தையும், பிறருக்கு உதவிபுரியும் ஊக்கத்தையும், சிங்கம் போன்ற மன உறுதியையும் வெளிப்படுத்தப் பயன்படாத கல்வி, அதைக்கல்வி என்று சொல்வது பொருத்தமா? எத்தகைய கல்வி தன்னம்பிக்கை தந்து ஒருவனைத் தனது சொந்தக்கால்களில் நிற்கும்படி செய்கின்றதோ அதுதான் உண்மையான கல்வியாகும்."

''தாழை" சிறப்பு மலர் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆக்கங்களைத் தாங்கிவர இருப்பதாக அறிகிறேன். உண்மையில் இதுவொரு பாராட்டத்தக்கதொரு முயற்சியாகும் மாணவர்களும் ஆசிரியர்களும் தங்கள் இலக்கியத் திறமையையும் சிறந்த கற்பனை வளத்தையும் வெளிப்படுத்த இம்மலர் வெளியீடானது ஒரு வடிகாலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இத்தகைய செயற்பாடுகள் மாணவர்களிடையே வாசிக்கும் பழக்கத்தையும் எழுத்துத் திறமையையும், கருத்துப் பரிமாறல் முறையையும் சிறப்பாக ஊக்குவிக்கும்.

கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் முயற்சி பாராட்டுதலுக்குரியது. வெளிவரவிருக்கும் ''தாழை'' சஞ்சிகை சிறப்பாக வெளிவர மனமார வாழ்த்துகின்றேன்.

அனைவருக்கும் இறை ஆசி
வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

இறை பணியில்

சுவாமி அஜராத்மானந்தா

(சுவாமி அஜராத்மானந்தா)

# ஆசிச் செய்தி



மட்டக்களப்பு பேத்தாழை விபுலானந்த வித்தியாலயத்தினரால் வெளியிடப்படுகின்ற ''தாழை'' சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அறிவின் வாயில்களைத் திறந்து விடுவது கல்வி. கல்விக் கூடங்கள் அறிவை மட்டும் பெருக்குவதில்லை. கூடவே மாணவரிடத்தே கட்டுப்பாடு ஒழுக்கம், பக்தி போன்ற நற்பண்புகளையும் வளர்க்கின்றன. ஆகவே ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும், சிறப்புக்கும் வழிசமைக்கின்ற பெரும் பொறுப்பை கல்விக் கூடங்கள் கொண்டிருக்கின்றன.

எனவே பாடசாலை மட்டத்தில் மேற் கொள்ளப்படுகின்ற முயற்சிகள் யாவும் சமூக வளர்ச்சிக்கான செயற்பாடுகளே. அந்த வகையில் பேத்தாழை விபுலானந்த வித்தியாலயத்தின் கன்னி முயற்சியாக வெளியிடப்படுகின்ற ''தாழை'' சஞ்சிகையும் சமூக மேம்பாட்டிற்கான ஒரு படிக்கல்லே. மாணவர்களின் கல்வியோடு ஏனைய இலக்கியத்துறை சார்ந்த திறமைகளையும் வளர்த்திட இச்சஞ்சிகை வழிகோலும்என எதிர்பார்க்கின்றேன். பல்வேறுபட்ட பாதிப்புக்களை கடந்து சுமுகமானதொரு கால கட்டம் எட்டிப்பார்க்கும் இந் நாட்களில் எம் அனைத்து வளங்களையும் திறமைகளையும் சரிவர பயன்படுத்தி வளர்த்தெடுக்க மாணவர் சமூகமும், ஆசிரியர் சமூகமும் முழு முயற்சி எடுக்க வேண்டியது காலத்தின் தேவை. அதற்கேற்ப மாணவர்களின் இலக்கியம் சார் ஆற்றல்களை வளர்த்திட தாழை ஒரு களமாக அமைந்திட வாழ்த்துகிறேன்

பாடசாலையின், மாணவர்களின் உயர்ச்சியில் அர்ப்பணிப்புடன் செயற்படும் அதிபர் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் அனைவரையும் மனமாரப்பாராட்டுகின்றேன். தங்கள் பணி சிறந்திடவும், மாணவர்களின் கல்வி நிலை மென்மேலும் உயர்ந்திடவும் வாழ்த்துகின்றேன்.

''தாழை'' ஆசிரியர்கள், மாணவர்களினால் உரம் பெற்று சிறப்புடன் வளரட்டும்

இறைவன் அனைவரையும் ஆசிர்வதிப்பாராக

**அதிவண. ஜே. கிங்ஸிலி சுவாம்பிள்ளை**
ஆயர்
திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டம்

# ஆசியுரை



"நீர் உயர நெல் உயரும்" என்பது போல ஒரு சமூகத்தில் கல்வி நிலை உயர்ந்தால்தான் 'அச் சமூகம் உயரும் நல்ல சிந்தனைகள் வளரும். எதிர்காலத்தில் சுபீட்சமடையும் ஒரு சமூகத்திற்கு கல்வி வழங்கும் பாரிய பொறுப்பைப் பாடசாலைகள் ஏற்றுச் செயற்படுகின்றன. இப்பாடசாலைகள் தனித்து அரசினால் வரையறுக்கப்பட்ட கலைத்திட்டத்தை மட்டும் கற்பிப்பதுடன் நிறுத்தி விடாது தமது மாணவர்கள். ஆசிரியர்கள் பாடசாலைச்சமூகத்திடமுள்ள எழுத்தாற்றல்களைத் தூண்டி "நூல்" ஆக்க முயற்சிகளில் ஈடுபடல் பாராட்டத்தக்க விடயம். மட் /பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம் 1945 ம் ஆண்டு தன் சேவையை ஆரம்பித்த போதிலும் இவ்வாண்டுதான் முதன் முதலாக "தாழை" எனும் பெயரில் சஞ்சிகை ஒன்றை வெளியிட முன்வந்துள்ளனர். இச்சஞ்சிகை மாணவர் ஆக்கங்களையும் ஆசிரியர்களின் ஆக்கங்களையும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. சஞ்சிகை வெளியீடு இப்பாடசாலை வளர்ச்சியின் மற்றுமொரு படி. படிப்படியாக ஆரம்பப் பாடசாலையாகவிருந்து தரம் 1C பாடசாலையாக வளர்ச்சியடைந்துள்ளது. கல்விப் பெறுபேறுகளிலும் முன்னேற்றம் கண்டு வருகின்றது. இந்நிலையில் பாடசாலை நிர்வாகம் சஞ்சிகை வெளியிட எடுத்திருக்கும் முயற்சி பாராட்டுக்குரியது. வருடந்தோறும் மாணவர்களது ஆக்கங்களைத் தாங்கி இச்சஞ்சிகை வெளிவரும்போது மாணவர்கள் மத்தியில் உற்சாகமும். ஊக்கமும் பெருகி சமூக விழிப்பு ஏற்பட வழிவகுக்கும் இம் முயற்சியை மேற் கொள்ளும் அதிபர். ஆசிரியர்கள் வெளியீட்டுக் குழுவினருக்கு எனது வாழ்த்துக்களும். பாராட்டுக்களும் உரித்தாகட்டும். பாடசாலை மேலும் பல வெற்றி காண இறையாசி கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி எஸ். சக்கரவர்த்தி**
வலயக்கல்விப்பணிப்பாளர்
கல்குடா கல்வி வலயம்
வாழைச்சேனை

# வாழ்த்துச் செய்தி



மட் \ பேத்தாழை விபுலானந்த வித்தியாலயத்தின் முதலாவது சஞ்சிகையான தாழை வெளியீட்டுக்கு வாழ்த்துரை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். என் இவ்அளவிலா ஆனந்தத்திற்கு பல காரணங்களைக் கூறலாம்.

நான் பிறந்து வளர்ந்த எனது கிராமத்தின் பாடசாலையில் இருந்து வெளிவரும் மலர் ஒன்றுக்கு வாழ்த்துரை தெரிவிக்கின்றேன் என்பதுவும் இதனை விட நான் கற்ற எழுத்தறிவினையும் ஒழுக்க மாண்புகளையும் எனக்கு கற்பித்த என் பாடசாலையில் இருந்து வெளிவரும் மலருக்கு வாழ்த்துரை தெரிவிக்கின்றேன் என்ற பெருமையும் என்னை ஆட்கொள்கின்றது.

கல்வித்துறையிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் துரித அபிவிருத்தி அடைந்து வரும் பேத்தாழை விபுலானந்த வித்தியாலயத்தின் கல்விச் செயற்பாட்டின் இன்னொரு மைற்கல்லாகவே நான் இச்சஞ்சிகையின் தோற்றத்தினை நோக்குகின்றேன். மாணவர்களை வெறும் புத்தகப்பரப்பினுள் மட்டும் முடக்கி வைத்திராது அவர்களின் சிந்தனையூட்டத்தை வெளியுலகிற்கு விரிபுபடுத்தும் இவ்வாறான முயற்சிகள் போற்றுதற்குரியது. இன்றைய மாணவர் சமூகத்தினை உலகின் நாளைய சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவகையில் தயார்படுத்துவதும் ஆளுமைமிக்க சமூதாயமாக கட்டியெழுப்ப வேண்டியதும் தனது சமூக அரசியல் பிரச்சினைகளை உணர்ந்து அதற்கு தலைமை தாங்கக் கூடிய பக்குவத்தினை கட்டியெழுப்பக் கூடிய பொறுப்பு அதிபர் ஆசிரியர் பெற்றோர்களைத் தாண்டி என் போன்ற அரசியல் சமூகத் தலைவர்களுக்கும் உண்டென்பதை நான் நன்கறிவேன். இவ்வகையில் தனிப்பட்ட வகையில் இம்மாணவ சமூதாயமானது உறுதியான தலைமைத்துவ பண்புகள் மிக்கதொரு சமூதாயமாக மிளிர வேண்டும் என்பதில் நான் கவனமாக இருப்பதுடன் அதற்காக என்னால் முடிந்த வகையிலும் முதலமைச்சர் என்ற வகையிலும் எம்மக்களில் ஒருவன் என்ற வகையிலும் அதிகரிசனையுடன் செயலாற்றி வருகின்றேன்.

இத் ''தாழை" சஞ்சிகையானது மாணவர்களின் புறச் செயற்பாடுகளையும் தாண்டி தம்மைச் சுற்றி அன்றாடம் நிகழும் சமூகப்பிரச்சினைகள், நெருக்கடிகள் என்பவற்றை மாணவர் சமூதாயம் நோக்கும் கண்ணாடியாகவும் பார்க்கலாம். கடந்த கால யுத்த அழிவுகள், இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றை நேரடியாக அனுபவித்த இவற்றினால் ஏற்பட்ட இருண்ட பக்கங்களை அகற்றவும் தமது அனுபவங்களை வெளியுலகில் பகிர்ந்து கொள்ளவும் இவ்வாறான மாணவர்களின் வெளியீடுகள் பக்கபலமாக நிற்கும் என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை. இவ்வாறான மாணவர்களின் வெளியுலக ஆற்றலை விரிவுபடுத்தும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். இம்முயற்சிகளுக்கு பக்கபலமாக இருந்து செயற்பட்ட பாடசாலையின் அதிபர், ஆசிரியர் குழாமிற்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

**திரு. சி. சந்திரகாந்தன்**
கௌரவ முதலமைச்சர், கிழக்கு மாகாணம்

# வாழ்த்துச் செய்தி



மட் / பேத்தாழை விபுலானந்த வித்தியாலயத்தின் கன்னி வெளியீடான தாழை என்னும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஆரம்ப பாடசாலையாக இருந்து, இடைநிலைப் பாடசாலையாக வளர்ந்து இன்று உயர் நிலைப் பாடசாலையாக உயர்ந்து அதற்கும் மேலாக, "இசுறு பாடசாலை" என்னும் விசேட செயற்றிட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படுவது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது.

உலகில் உள்ள சகல மக்களும் ஏதோ ஒரு மொழியைப் பேசுகின்றனர், வாசிக்கின்றனர், எழுதுகின்றனர், ஆனால் அவர்கள் யாவரும் கவிஞர்களோ, கலைஞர்களோ அல்ல. இந்த மொழியை அவர்கள் பயன்படுத்தும் விதத்தினாலேயே கவிஞர்களும், கலைஞர்களும் உருவாகின்றனர். பாடசாலையில் இருந்து வெளியேறும் ஒரு மாணவன் மொழியை பேசவும், எழுதவும், வாசிக்கவும், மாத்திரமின்றி அதனைப் பயன்படுத்தி வேறு ஆக்கங்களை ஆக்கவும் வழிகாட்டுவதே "தாழை"யின் ஒரு நோக்கமாகும்.

இந்த வழிகாட்டல், ஒரு கவிஞனையோ, ஒரு கலைஞரையோ உருவாக்குவதற்கு முதற்படியாக அமைகின்றது. இப் பிரதேசத்தின் பண்பாடு, விழுமியம், கலை, கலாசாரம் தொடர்பாக மாணவர்களை தேடலில் ஈடுபடுத்தி அவற்றை கதை, கட்டுரை, கவிதை வடிவில் வெளியிடும் ஒரு அரங்கமாக தாழை அமைவது மேலும் ஒரு சிறப்பு அம்சம் ஆகும்.

கல்வியினுடைய இன்னுமொரு நோக்கம் சமூகத்தின் கண்களை விழிப்படையச் செய்வது இத் தாழையில் அரங்கேறும் ஆக்கங்கள் சமூகத்தின் கண்களை விழிப்படையச் செய்வதால் நாம் கல்வியின் ஒரு நோக்கை அடைந்து விட்டதாக பூரிப்படையலாம்.

தாழை ஒரு கன்னி வெளியீடு என்பதால் இந்த முயற்சியின்போது நீங்கள் பல தடைக்கற்களைத் தாண்டி வந்திருப்பீர்கள். விவேகத்துடனும் உற்சாகத்துடனும் செயற்படும் உங்களுக்கு இத் தடைக் கற்கள் யாவும் படிக்கற்களாக அமைந்திருக்கும். என நம்புகின்றேன். இந்த வெற்றியினூடாக நீங்கள் பெறும் மன நிறைவுதான் மகத்தான ஆசிரியத் தொழிலில் நீங்கள் பெறும் நிலையான ஊதியம்.

இப் பாடசாலையில் அதிபர். திரு. த. சந்தரலிங்கம் அவர்கள் சந்தித்த தோல்விகளை எல்லாம் சவால்களாக எடுத்து இப் பாடசாலைக்காக உழைப்பதற்கு மேலுமொரு காட்டிதான் "தாழை" சஞ்சிகை அதிபர் அவரோடிணைந்த ஆசிரியர் குழாம் அனைவரினதும் தொடர் முயற்சியால் வருடாவருடம் இத்தாழை மலர் நறுமணம் வீச வேண்டும் என ஆசி கூறி எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கந்தலிங்கம் சத்தியநாதன்** SLEAS -II BA. D.Pin.Edu (Merit) MLIS (Malaysia)
பிரதிக் கல்விப் பணிப்பாளர்( நிருவாகம்)
கல்குடா கல்வி வலயம்.

# கோட்டக்கல்விப்பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி



வாழைச்சேனையின் கிழக்கே அமைந்துள்ள தாழையூரின் மத்தியில் தன்நிலை பதித்து நிற்கிறது பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம். இவ்வருடம் முதல் க.பொ.த. (உ/த) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே 1C பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளதுடன் 'இசுறு' பாடசாலையாகவும் விளங்குகிறது.

பாடவிதான இணைப்பாடவிதான செயற்பாடுகளில் படிப்படியாக உயர்ச்சி அடைந்து வரும் இப்பாடசாலை முதன் முறையாக இவ்வருடம் ஆறு மாணவர்களை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெறவைத்தும் 16 மாணவர்களை 70 புள்ளிகளுக்கு மேல் பெற வைத்தும் சாதனை படைத்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும். இந்த வகையில் முதன் முதலாக 'தாழை' எனும் சஞ்சிகையையும் வெளியிட முன் வந்தமை இப்பாடசாலைக்கு மாத்திரமல்ல இக்கிராமத்திற்கும் பெருமை சேர்க்கின்றது. சஞ்சிகை வெளியீடு என்பது சாதாரண விடயமல்ல. நிதியோடு சம்பந்தப்பட்ட விடயமாதனால் எல்லாப் பாடசாலைகளாலும் இதனைச் சாதிக்க முடியாதுள்ளது. இருந்தும் ஆசிரியர் மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் களமாக இது இருப்பதால் இப்படியான பெரிய பாடசாலைகள் வருடாந்தம் சஞ்சிகை வெளியிட வேண்டியதும் அவசியமாகின்றது.

எனவே 'தாழை'' சஞ்சிகையை வெளியிட முனைந்த அதிபர் திரு.T.சந்திரலிங்கத்தையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும், உதவி புரிந்த, பாடசாலைச் சமூகத்தையும் பாராட்டுவதிலும் வாழத்துவதிலும் பெருமையடைகிறேன். தொடர்ந்து வருடா வருடம் சஞ்சிகை வெளி வரவேண்டுமெனவும் அவாவுறுகின்றேன்.

**திரு. சி.தங்கராசா,**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**கோறளைப்பற்று.**

# Our Principal




திரு.த.சந்திரலிங்கம் - அதிபர்.

# வாழ்த்துச் செய்தி



"தாழை" எனும் தாவரம் நன்னீருக்கும் உவர் நீருக்கும் ஈடு கொடுத்து தனது முட்களால் வாசமிகு மலர்களையும் வண்ண வண்ணப் பழங்களையும் பாதுகாத்து நெய்தல் நிலத்து உயிர்களுக்கு அபயமளித்து நில அரிப்பைத் தடுத்து நிற்கும் பண்புகளைக் கொண்டது. அதைப் போல் எமது பாடசாலையும், கிராமமும் சிறந்த பல பண்புகளைத் தன்னகத்தே கொண்டு இன்று வரை வளர்ந்து கொண்டு வருவது எமக்குப் பெருமையாகும்.

ஐந்தாம் வகுப்புகளுடன் அ.த.க.பாடசாலை என்றிருந்த எமது பாடசாலை முத்தமிழ் வித்தகரின் பெயர் தாங்கி வளரத் தொடங்கியது. 1979ம் ஆண்டு தொடக்கம் அயலில் உள்ள பாடசாலைகள் ஆச்சரியப்படும் விதத்தில் துரித வளர்ச்சி பெற்று, தற்போது இசுறு பாடசாலை எனத் தரம் உயர்த்தப்பட்டு, க.பொ.த. உயர்தர வகுப்புகளுடன் பல்வேறு வசதிகள் பெற்று, மிளிர்கின்றது. பல பட்டதாரிகளையும், ஆசிரியர்களையும், அதிபர்களையும், பல்வேறு துறைகளில் பலதரப்பட்ட உத்தியோகஸ்தர்களையும், ஆயிரக்கணக்கான நற்பிரசைகளையும், ஊக்கமும் உற்சாகமும் உள்ள முதலமைச்சரையும், உருவாக்கிய எமது பாடசாலை, கடந்த காலத்தில் ஒரு சஞ்சிகையை வெளியிடாதது பெருங்குறையாக இருந்தது. இந்நிலையில் தற்போது "தாழை" எனும் சஞ்சிகையை வெளியிட்டு எஞ்சியிருந்த குறையும் நிவர்த்தி செய்யப்படுகிறது.

இந்தச் சஞ்சிகை இப்பாடசாலையின் புகழையும், மாணவர்களதும், ஆசிரியர்களதும், அதிபரதும், பாடசாலை சமூகத்தினதும் திறமைகளையும் பண்புகளையும், உலகறியச் செய்யும் என்பதில் ஐயமில்லை. "தாழை" வெளியீட்டில் சம்பந்தப்பட்ட அனைவரையும் பாராட்டுகின்றேன். எதிர்காலத்திலும் இது போன்ற முயற்சிகள் இடம் பெற வேண்டும் எனவும் எமது பாடசாலை மேலும் மேலும் வளர வேண்டும் எனவும் இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**திரு. தா. இராசநாயகம்**
**(ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர்)**
**பேத்தாழை**

# வாழ்த்துச் செய்தி



பாடசாலையின் முதலாவது சஞ்சிகை வெளியீட்டுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக சிறிது காலம் எனக்கும் பங்காற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டும் மன மகிழ்ச்சியடைகின்றேன்.

வகை 2 பாடசாலையாக இருந்த பாடசாலை எவ்வாறு வளர்ச்சியடைய வேண்டும் என எதிர்பார்ப்பு இருந்ததோ, அவ்வாறே பல துறைகளிலும் படிப்படியாக வளர்ச்சி கண்டு தற்போது 1C வகைப்பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. பாடவிதான செயற்பாடுகளோடு நின்று விடாது இணைப்பாடவிதான செயற்பாடுகளை அதிகரிப்பதன் மூலமே சிறந்த கற்றல் சமூகத்தை உருவாக்க முடியும்.

அந்தவகையிலே பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக தாழை எனும் பெயரில் சஞ்சிகை ஒன்றை வெளியிட முன்வந்த அதிபர் திரு.த.சந்திரலிங்கம் அவர்களையும் அவருடன் இணைந்து அயராது உழைக்கும் ஆசிரியர் குழாத்தினையும் பாராட்டுகின்றேன்.

மாணவர்களதும் ஆசிரியர்களதும் சிந்தனைச் சிதறல்களைத் தாங்கி வரும் தாழை சஞ்சிகையானது தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திருமதி. ஜீவராணி தம்பிப்பிள்ளை**
**உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)**
**கல்குடா**

# Our Deputy Principals



திருமதி. பானுமதி வசந்தகுமார்

பிரதி அதிபர் (நிர்வாகம்)



திருமதி. இன்பமலர் மகாலிங்கம்

பிரதி அதிபர் (கல்வி அபிவிருத்தி)

# பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி......



இதுவரை காலமும் ஆங்காங்கே அரும்பு எனும் பெயரில் அரும்பி வந்த மாணவர்களது கையெழுத்து சஞ்சிகை வடிவிலான ஆக்கங்கள் முதலடி எடுத்து அச்சுவாகனமேறி, மலர்ந்து "தாழை" எனும் பெயர் தாங்கி தரணியில் மணம் பரப்ப புறப்பட்டுவிட்ட புதுமையை எண்ணி மனம் பூரிப்படைகின்றேன்.

மாணவர்களது உள்ளார்ந்த ஆற்றல்களை உந்தி வெளிக்கொணர்ந்து, வரிவடிவில் ஆக்கங்களாக வடிவம் கொடுக்கவும், ஆசிரியர்களின் தர்க்க ரீதியான சிந்தனை ஆற்றலும் ஆக்க பூர்வமான ஆய்வாற்றலும், எழுத்தாற்றலாக வெளிப்படவும் "தாழை" சஞ்சிகை களமாக அமையும் என ஆணித்தரமாக நம்புகின்றேன்.

நவீன உலகமயமாதலுக்கு ஏற்ப பொருத்தமான பிரஜைகளை நாட்டிற்கு வழங்குதல் பாடசாலையின் தலையாய பொறுப்பாகும். தன்னம்பிக்கை, விடாமுயற்சி ஒழுக்க சிந்தனை, மனிதநேயம், தேடல் போன்ற பண்புகளை கல்வியினூடாகவும், இணைப்பாடவிதான செயற்பாடுகளுடாகவும் திட்டமிட்டு செயற்படுத்துகையில் மாணவர்களின் கற்றல் பேறுகளுக்கு மெருகூட்டும் ஊடாகமாகவும் தாழை மிளிர்கின்றது.

பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்பினால் நீண்ட காலமாக ஆசிரியராக கடமையாற்றி அதிபராக பதவியுயர்வு பெற்று நீண்டகாலமாக சேவையாற்றுபவன் என்ற வகையில் இப்பாடசாலை சமூகத்தினர் பாடசாலை வளர்ச்சி மீது கொண்டுள்ள பேரார்வத்தினை நன்கறிவேன்.

பொருளாதார வசதி மிகக் குறைவான போதிலும் இச்சஞ்சிகை வெளியீட்டுக்கு உதவி புரிய முன்வந்த பெற்றோர், நலன்விரும்பிகள் பழையமாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் மனமகிழ்ந்து பாராட்டுவதோடு தொடர்ந்தும் நீங்கள் இப்பாடசாலை வளர்ச்சிக்காக அயராது பாடுபட வேண்டும் என இறையருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

இச்சஞ்சிகை ஆக்கத்தில் தோளோடு தோள் நின்ற சஞ்சிகையின் ஆசிரியர் திருமதி. இன்பமலர் மகாலிங்கம் (கல்வி அபிவிருத்திக்கான பிரதி அதிபர்) அவர்களையும், சஞ்சிகை ஆக்கக் குழுவினரையும், ஆக்கங்களை வழங்கிய மாணவர்கள் ஆசிரியர்களையும் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பாடசாலை சமூகத்தின் ஆக்கபூர்வமான சிந்தனைகள், கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், பாடல்கள் போன்ற வடிவங்களில் வாசிப்போரின் உள்ளங்களில் "தாழை மலர்ந்து மணம் வீசி வளமுடன் வளரும்" என பூரிப்படைந்து வாழ்த்துகின்றேன்.

**திரு. தர்மலிங்கம் சந்திரலிங்கம்**
அதிபர்.

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



தற்காலத்தில் பல வகையான சஞ்சிகைகள் வெளியிடப்பட்டு வருவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அந்த வகையில் மட்/ பேத்தாழை விபுலானந்த வித்தியாலயத்திலும் இதழ் ஒன்று உருவானதை இட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு பாடசாலையானது தனது மாணவரது கல்வி அபிவிருத்திக்காக பல்வேறு வழிகளில் செயற்பட வேண்டியது அவசியம். அதில் மாணவரது எழுத்தாற்றல் விருத்தியுமொன்று. அதனைக் கருத்திற் கொண்டு இவ்விதழ் வெளியிடப்படுகிறது.

சிறியதொரு சஞ்சிகையானாலும் அதன் உள்ளடக்கங்கள் பல்துறை சார்ந்தவையாக இருக்குமென்பதில் ஐயமில்லை. இதனை வெளியிடுவதில் அனைவரும் காட்டுகின்ற ஈடுபாடு கல்விக்குத் துணை நின்று வெற்றி பெற உதவும் என்பதில் ஐயமில்லை.

எமது மாணவர்களது ஆக்கங்களும் முயற்சிகளும் நான்கு சுவர்களுக்குள் மாத்திரம் முடங்கிவிடாது நாலா புறங்களும் பரந்து சென்று அனைவராலும் உணரப்படுவதற்கு இச் சஞ்சிகை வாய்ப்பளிக்கின்றது. மாணவர்களின் படைப்பாற்றல்களை தம்மகத்தே அடக்கியுள்ள இப்பொக்கிஷம் வளர்ந்து பெருமையடைய வாழ்த்துகின்றேன்.

இச் சஞ்சிகை இத்தனைப் பொலிவோடும் பயன்தரவல்ல ஆக்கத்தோடும் மணம் பரப்ப ஆவன செய்த அனைவருமே பாராட்டுக்குரியவர்கள்.

**திருமதி. P. வசந்தகுமார்**
பிரதி அதிபர்.


அதிபருடன் மாணவர் தலைவர்களும், பொறுப்பாசிரியர்களும்



# இதழாசிரியரின்
# இதயத்திலிருந்து .....

ஆற்றல் மிகும் எம் அதிபரும், ஆசான்களும்
அறிவுசார் மாணவரும், ஆன்றபெரியோரும்

அன்பாய் அருகணைந்து அடிநின்று உரமூட்ட
ஆடி அசைந்து அரும்பியது இத் "தாழை"

அவனின்றி ஓரணுவும் அசையாதே அகிலத்தில்
அரும்பிய மொட்டு அன்பர் கரம்பட்டு
பழுதிலாது மலர்ந்து பரிமளங் கமழுமென
எழுதியதோ இறைவன் எமக்கு இந்த "நாளை"

சின்னச் சிற்பியரின் சிந்தனை முத்துக்களும்
பன்னு பெரியோரின் பவளமாம் கட்டுரையும்
வண்ண வகையான வைரமிகு சிறுகதையும்
தன்னுள் வைத்துத் தாங்கியது இப் "பேழை"

கன்னி முயற்சியில் கரம் தவழ்ந்த புதுமலர் - இனி
துள்ளி எழுந்து நடந்துவரும் குதித் தோடிவரும்
இனிதாய் எடுத்து நுகர்ந்து இன்புறுமீன்!
இனி நான் தடையில்லை புரட்டுங்கள் "தாளை"

இதழாசிரியர்
திருமதி. இன்பமலர் மகாலிங்கம்

# இணை இதழாசிரியரின் எண்ணத்திலிருந்து............



அறிவொளி பரப்பும் கல்விக் கூடமாம் மட்/ பேத்தாழை விபுலானந்த வித்தியாலத்தின் முதலாவது 'தாழை' சஞ்சிகை பெருத்த கனதியுடன் வெளிவருவது எல்லோருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. ஒரு கல்விச் சமுகத்தின் உள்ளார்ந்து மறைந்து கிடந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அதனை மற்றையோருடன் பகிர்ந்து கொள்ளும் அறிவுப் புலத் தேடல்களின் வெளியீடாக மலர்வது காலத்தின் தேவையாகும்.

பாடசாலைகள் கற்றல் கற்பித்தல் என்ற வட்டத்திற்குள் பிரதானமாக மையப்படுத்தினும் அதுசார்ந்த முழுநிறைவான கல்வியைப் பெற மாணவர்கள், ஆசிரியர்களின் ஆக்க முதலீட்டு செயற்பாடுகளுக்கு களமமைத்து சந்தர்ப்பத்தை வழங்குவதன் மூலம் புத்தாக்க அறிவுத் தேடலுக்கு வழியமைக்கலாம். மாறிவரும் இன்றைய உலகில் அபரிமிதமான அறிவுப் பெருக்கம் புதிய நூற்றாண்டில் அறிவு வெள்ளப்பிரவாகம் எடுத்து ஓடுகின்ற இக்காலத்தில் பழைய குறைபாடுகளை அல்லது சமகாலப் பற்றாக்குறைகளை விடுத்து எதிர்காலவியல் நோக்கில் கல்வி முறைகளை செம்மைப்படுத்தும் முயற்சிகள் முக்கியத்துவப் - படுத்தப்படுகின்றன. இந்நிலையில் பல்நோக்குப் பார்வையில் செயற்பட வேண்டிய கல்விச் சமுகத்திற்கு அவர்களது ஆற்றல்களை வெளிப்படுத்தி அதிக வாய்ப்புக்களை நல்க வேண்டியுள்ளது. அந்த வகையில் தாழை சஞ்சிகையும் கல்விப்புலச் சமூகத்தினரது எண்ண அலைகளுக்கு உருவம் கொடுத்து களம் அமைத்திருக்கின்றது.

"தாழை" சஞ்சிகை அறிய வேண்டிய புத்தாக்கமிகு உள்ளீடுகளுடன் புது மணம் வீசி பொலிவுடன் வெளி வருவது மிக்க மகிழ்ச்சி. இச்சஞ்சிகையை மிகச் சிறந்த முறையிலே ஆக்குவதிலும் மும்முரமாகச் செயற்பட்டு ஒத்துழைப்பு நல்கிய அனைத்துத் தரப்பினருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் தாழை சஞ்சிகை தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் மலர்ந்து அறிவொளி பரப்ப வேண்டும் என வாழத்துகின்றேன்.

**திரு. க. நிதிகரன்**
**B.A.(Hons), M.A(EUSL), PGDE (Merit)**
**இணை இதழாசிரியர்**

# எண்ணத்தில் நீ எம்மோடு



## திருமதி. ஜெயமாலா சந்திரலிங்கம்

அகிலத்தை வென்றிடும் ஆங்கில மொழியினுக்கோர்
ஆசானாய் நீ அடிபதித்து அகவைகள் ஈரெட்டு
கோலத்தில் சிலையாக கொள்கையிலே நிலையாக
மாணவர் மனங்கவர்ந்த மல்லிகையும் நீயானாய்!

மெல்லப் பேசி மெருகோடு கற்பித்து ~ பெயர்
சொல்லும் அளவிற்கு சோராதுழைத்த வேளை
பொல்லாத காலனுனைக் கண் காணாத தொலைவில் விட்டு
நில் என்று சொல்லி வந்த நியாயம் தான் ஏதோ?

பாரோர் போற்றப் பனுவலொன்று வெளியிட்டு
பரிசளிப்பு விழாக்காணப் புகுந்த இவ் வேளை
புதுவழிகள் கூறிடும் உன் பூமுகம் புலப்பட
பூரித்த உள்ளமெல்லாம் புண்பட்டுப் போனதம்மா!

கன்னத்தில் நீராக உள்ளத்தில் கனலாகச்
சொல்லத்தான் முடியாமல் சோர்விழந்தவேளை
வண்ணக் குயிலாக வானத்தில் நீ பறந்து
எண்ணத்தில் எமை நின்று வாழ்த்துவது தெரிகிறது.

ஆசிரியர்கள்
மட் / பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்.

# Our staff

இடமிருந்து வலமாக

1வது வரிசை :- 1. திருமதி. V. விஜயராகவன் (பகுதித் தலைவர்) 2. திருமதி. P. சிவகுமார் (பகுதித் தலைவர்) 3. திருமதி. P. வசந்தகுமார் (உபஅதிபர் - நிருவாகம்) 4. திரு. T. சந்திரலிங்கம் (அதிபர்) 5. திருமதி. I. மகாலிங்கம் (உபஅதிபர் - கல்வி அபிவிருத்தி) 6. திருமதி. V. சுரேஸ் (பகுதித் தலைவர்) 7. திருமதி. S. சோமநாதன் (பகுதித் தலைவர்)

2வது வரிசை :- 1. செல்வி. M. யாழினி 2. திருமதி. S. வசந்தகுமார் 3. திருமதி. M. தயாளகுணதாஸ் 4. செல்வி. ஆ. கலைவாணி 5. திருமதி. T. அருள்தாசன் 6. செல்வி. S. யோகமலர் 7. திருமதி. L. தயாபரன் 8. திருமதி. K. ஜெயதீஸ்வரன் 9. திருமதி. S. ரஞ்சன் 10. திருமதி. S. ஜெயரஞ்சித் 11. திருமதி. து. துலோகானந்தன் 12. செல்வி. P. சுஜோ

3வது வரிசை :- 1. செல்வி. M. ஸ்ரீசத்தியநாராயணி 2. திருமதி. T. பாஸ்கரன் 3. செல்வி. S. வாணிசிறி 4. திருமதி. T. ஜீவானந்தம் 5. செல்வி. V. ஜெயகௌரி 6. திருமதி. V. முருகவேல் 7. திருமதி. K. சிவராஜகுமார் 8. திருமதி. R. விக்னேஸ்வரன் 9. திருமதி. N. நிரஞ்சன் 10. செல்வி. R. ஜெயசுபா 11. திருமதி. N. பாஸ்கரன் 12. செல்வி. R. மேரிரோஜனி

4வது வரிசை :- 1. திரு. N. நிதிகரன் 2. திரு. S. சிவனேசராஜ 3. திரு. S. பிரேமகுமார் 4. திரு. A. சுகிகரன் 5. திரு. R. ராஜ்பிரகாஸ் (பகுதித் தலைவர்) 6. திரு. P. விஜயபாஸ்கர் 7. திரு. S. கார்த்தீபன் 8. திரு. S. சதீஸ்குமார் 9. திரு. S. சிவவரதன்


Our Staff


சஞ்சிகை வெளியீட்டுக் குழு

# "தாழை" மலர் வெளியீட்டுக் குழு

| | | |
|---|---|---|
| 1. திரு. த. சந்திரலிங்கம் | - | காப்பாளர் |
| 2. திருமதி. பா. வசந்தகுமார் | - | ஆலோசகர் |
| 3. திருமதி. இ. மகாலிங்கம் | - | இதழாசிரியர் |
| 4. திரு. க. நிதிகரன் | - | இணையாசிரியர் |
| 5. திருமதி. ஸோ. ஜெயரஞ்சித் | - | செயலாளர் |
| 6. திருமதி றீ. விக்னேஸ்வரன் | - | பொருளாளர் |
| 7. திரு. இ. ராஜ்பிரகாஷ் | - | உறுப்பினர் |
| 8. திருமதி வ. விஜயராகவன் | - | உறுப்பினர் |
| 9. திருமதி. பு. சிவகுமார் | - | உறுப்பினர் |
| 10. திருமதி. வி. முருகவேள் | - | உறுப்பினர் |
| 11. திருமதி. த. அருள்தாசன் | - | உறுப்பினர் |
| 12. திரு. பி. விஜயபாஸ்கர் | - | உறுப்பினர் |
| 13. திரு. ச. கார்த்தீபன் | - | உறுப்பினர் |

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| எமது பாடசாலை | 01 |
| பாடசாலையின் வரலாறு | 02 |
| ஆரம்பக்கல்வியில் பெற்றோரின் பங்களிப்பு | 08 |
| நாசகார ஆயுதப் பாவனையின் பங்களிப்பு...... | 13 |
| தாழையூரில் காத்திருக்கிறாள் | 16 |
| பேத்தாழைக் கிராமத்தின் வரலாற்று......... | 18 |
| டாட்டா நனோ கார் | 24 |
| விடியலை நோக்கி | 26 |
| சமுதாயத்தில் பெண்கள் | 27 |
| அறிஞர் பெர்ணாட்ஷா | 30 |
| இயற்கையும் இலக்கியமும் | 32 |
| ஒரு தோப்புக் குயில்கள் | 33 |
| சுகமான சுமை | 38 |
| சிறுவர் உரிமை | 39 |
| விலங்குடைத்த சிறு கரங்கள் | 41 |
| அனர்த்தங்களை முன்னெச்சிரிக்கை செய்ய......... | 42 |
| இலங்கையின் பொருளாதார நிலையும்......... | 45 |
| மனிதன் மனிதனாக வாழ | 47 |
| தமிழனின் அவலம் இன்று | 48 |
| என்னைத் தெரிகிறதா? | 52 |
| முன்னேறிச் செல்லுங்கள்.......... | 53 |
| நான் அதிசயித்த அந்த நாள் | 56 |
| வாழ்வியலை வளப்படுத்தும்......... | 58 |
| ஆசானை உருவாக்கியவர் | 62 |
| கலைகள் அறுபத்துநான்கு | 64 |
| மட்டக்களப்பு கோயில் சடங்குமுறை | 65 |

- International Day .. .. 67
- சிதைந்த நினைவுகள் .. .. 69
- இன்றைய காலகட்டத்தில் உளவளத்துணை .. .. 70
- எனது பாடசாலை .. .. 72
- புத்தகத்தை காப்பது எப்படி .. .. 73
- இலங்கைத் தமிழ் நாடக வரலாறு .. .. 74
- சிந்திக்க சில துளிகள் .. .. 77
- பிரம்மனின் வேற்றுருவமானவளே! .. .. 79
- மரியா மொண்டிசூரியம்மையாரின் ............. .. .. 80
- அம்மா .. .. 83
- விடுகதை .. .. 85
- கூத்துக்கலை .. .. 86
- என் அம்மா .. .. 88
- புலமைப் பரீட்சையும் புலக்காட்சியும் .. .. 89
- வருந்திப் பெற்றிருந்த சமாதானம் .. .. 94
- நினைவுகள் .. .. 95
- விஞ்ஞான விளக்கம் .. .. 97
- அன்னையின் ஆத்மா .. .. 98
- மட்டக்களப்பு பிரதேச மக்களின்........ .. .. 101
- யாழ்தேவி .. .. 105
- இன்றைய கல்வியும் நல்லாசிரியரும் .. .. 106
- தமிழ்மொழியில் பயன்படும் குறியீடுகள்... .. .. 109
- சின்னச் சின்னப் பாப்பா .. .. 110
- புதுமை புனைந்திடுவோம் .. .. 110
- முட்டைகள் உருண்டை...... .. .. 111
- அறிந்து கொள்வோம் .. .. 112
- யாருமற்ற இளமலரே! .. .. 113
- சூறாவளி .. .. 113
- நல்லுரை .. .. 114
- பிஸ்கட் புடிங் .. .. 115

| | | | |
|---|---|---|---|
| ✉ பொன் மொழிகள் - 50 | .. | .. | 116 |
| ✉ காலத்தால் அழியாதது கல்வி | .. | .. | 119 |
| ✉ கல்வி, விதி, இலட்சியம், நட்பு | .. | .. | 120 |
| ✉ சேரும்போது....... | .. | .. | 120 |
| ✉ பிறந்தநாள் மேசை அலங்காரம் | .. | .. | 121 |
| ✉ சமூகமயமாதலின் முக்கியத்துவம் | .. | .. | 123 |
| ✉ நீயும் ஒருவராய் | .. | .. | 125 |
| ✉ ஒழுக்கம் உயர்வுதரும் | .. | .. | 126 |
| ✉ பேத்தாழை | .. | .. | 129 |
| ✉ கல்வி எனும் சொத்து | .. | .. | 130 |
| ✉ அமைதியும் அழகுதான் | .. | .. | 131 |
| ✉ வர்த்தக சினிமாவும் அதன் தாக்கமும் | .. | .. | 132 |
| ✉ உலகின் பொருளாதார நெருக்கடி | .. | .. | 136 |
| ✉ நலமான வாழ்வுக்கு | .. | .. | 139 |
| ✉ பயன்தரும் இணைய வகுப்பறைகள் | .. | .. | 141 |
| ✉ Fashions | .. | .. | 144 |
| ✉ பாடசாலை அபிவிருத்திச்சங்கம் | .. | .. | 145 |
| ✉ மாணவர் பெறுபேறுகள் சாதனைகள் | .. | .. | 146 |
| ✉ என்றும் மறவா நன்றிக்குரியவர்கள் | .. | .. | 157 |

# எமது பாடசாலை

வேப்பமரக் காற்று
சலசலக்கும்
வருவோரை வாவென்று
வாழ்த்துரைக்கும்!

முத்தமிழ் வித்தகர் பெயர்
முகப்பிலிருக்கும் - சிலை
முன்னெதிரே முகம் காட்டி
வரவேற்கும்!

அருகில் நூலகம்
அமைந்திருக்கும் - அது
அறிவை நீ தேடென்று
அறிவுறுத்தும்!

அதிபர் ஆசான்கள் அகத்தில்
அன்பிருக்கும் - அது
அறிவுரை கூறி எம்மை
வழி நடத்தும்!


மாடிக் கட்டிடம்
உயர்ந்து நிற்கும் அது
மாணவர் நல்லொழுக்கத்தைப்
பறை சாற்றி நிற்கும்!

அகன்றதொரு மைதானம்
அமைந்திருக்கும் - அது
அகில இலங்கை வரை வீரரை
அனுப்பி வைக்கும்.

கற்ற சமூகத்தில்
எதிர் பார்ப்பிருக்கும் - அதைக்
கல்விப் பெறு பேறு
தந்து நிற்கும்!

உயர்தரம் வரை வகுப்பு
உயர்ந்திருக்கும் - அது
உன்னத நிலையினைக்
காட்டி நிற்கும்!

இன்னும் இன்னும்
ஏற்றமிருக்கும் - அதை
எதிர்காலம் எமக்கு
எடுத்துக் காட்டும்!



செல்வி. உ. கிருபாஜினி
தரம் - 12 கலை

# பாடசாலை வரலாறு

மட்/ பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம் வடக்கே வளம் மிக்க ஆற்றையும் வடகிழக்கே ஆறும் கடலும் சேருகின்ற ஆற்று வாயையும், மேலும் தாமரை மலர்கள் நிறைந்த குளத்தினையும், பசுமையான தென்னந்தோட்டங்களையும் தன்னகத்தே கொண்ட இயற்கை எழில் மிக்க புராதன கிராமமான பேத்தாழை கிராமத்தில் அமைந்துள்ளது.

தும்புச் சிறு கைத்தொழில் பயிற்சி நிலையம், மட்பாண்ட சிறுகைத்தொழில் பயிற்சி நிலையம், போன்றவை இப்பாடசாலைச் சூழலில் அமைந்திருப்பதும் சுற்றாடல் துறையில் பிரசித்தி வாய்ந்த பாசிக்குடா கடற்கரையும், மீன்பிடித்துறைமுகம், காகித ஆலை போன்றவை மிக அண்மையில் அமைந்திருப்பதும் மாணவர்களது தற்போதைய கல்வி முறைக்கேற்ப கற்றலுக்கான கருவூலங்களாக அமைந்துள்ளன.

இப்பாடசாலை ஆரம்பம் முதல் கடமையாற்றிய அதிபர் ஆசிரியர்களது விடாமுயற்சி காரணமாக படிப்படியாக வளர்ச்சி கண்டு வந்துள்ளது கண்கூடு. இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுள் அதிகமானோர் உயர் கல்விற்கான தகைமை பெறுவதோடு அரச உயர் உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் பொறியியலாளர், வைத்தியர் போன்றோரின் உருவாக்கத்திற்கும் களமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் கிழக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சர் கற்ற பாடசாலை எனும் பெருமையையும் இப்பாடசாலை கொண்டுள்ளது.

பேத்தாழை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எனும் பெயரில் 01.03.1945 இல் கல்குடா வீதியில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 96 மாணவர்கள் கல்வி கற்றனர். தலைமையாசிரியர் உட்பட 3 ஆசிரியர்கள் கடமையாற்றினர். தலைமை ஆசிரியராக கடமையாற்றியவர் திரு.S.ஆறுமுகம் என்பவராகும். ஆசிரியர்கள் திரு.V.கணபதிப்பிள்ளை, செல்வி.A.S.பரஞ்சோதி என்பவர்களாகும். ஆரம்பத்தில் 750 சதுர அடி அளவுள்ள கிடுகினால் கூரைவேயப்பட்ட நிரந்தரக் கட்டடம் ஒன்றும் 420 சதுரஅடி அளவுள்ள தற்காலிக வகுப்பறை ஒன்றும் காணப்பட்டது. LD (Lover Division), UD(Upper Division), IIம் வகுப்பு, IIIம் வகுப்பு, IVம் வகுப்பு, Vம் வகுப்பு என வகுப்புப்பிரிவுகள் காணப்பட்டது.

1969-1978 வரையான காலப்பகுதியில் அதிபராக கடமையாற்றிய திரு.கு.நாகமணி அவர்களால் கிராம அபிவிருத்தி சங்கத்தினரின் ஒத்துழைப்புடன் பாடசாலைக்காக 5 ஏக்கர் காணி பெறப்பட்டது. 16/02/1970 இல் காணிக்கான உத்தரவுப்பத்திரத்தை கோறளைப்பற்று காணி உத்தியோகத்தர் கல்வி அதிகாரிக்கு ஒப்படைத்தார்.

பாடசாலைக்காக பெறப்பட்ட புதிய காணியில் அதிபர் திரு.கு.நாகமணி அவர்களின் தலைமையில் 06.08.1971இல் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.K.W.தேவநாயகம் அவர்களால் புதிய பாடசாலைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. 28.01.1974 இல் தற்போதுள்ள இடத்தில் 60'×20' அளவு கொண்ட புதிய பாடசாலைக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டு பாடசாலை கல்குடா வீதியிலிருந்து இடம் மாற்றப்பட்டது. அப்போதிருந்த மாணவர் தொகை 182 ஆகும். ஆசிரியர் தொகை 4 ஆகும்.

கிழக்கு பிராந்திய கல்விப்பணிப்பாளரின் BT/M.148 இலக்கமும் 15.10.1974 திகதியும் கொண்ட கடிதத்துக்கமைய மட் / பேத்தாழை அ.த.க.பாடசாலை என்று வழங்கப்பட்டு வந்த பாடசாலையின் பெயர் மட் / விபுலானந்தா வித்தியாலயம் பேத்தாழை என்று பெயர் மாற்றம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

1977ம் காலப்பகுதியில் இடப்பற்றாக்குறை காரணமாக தற்காலிக கொட்டில் ஒன்று அமைக்கப்பட்டது. 1978 இல் 60'×20' அளவுள்ள மேலுமொரு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் மாணவர் தொகை 206 ஆகவும் ஆசிரியர் தொகை 5 ஆகவும் இருந்தது. 23.11.1978 இல் சூறாவளி வீசிய போது புதிதாக அமைக்கப்பட்ட கட்டடமும் தற்காலிக கொட்டிலும் முழுமையாக சேதமடைய ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட கட்டடம் பகுதி சேதத்துக்குள்ளாகியது. சூறாவளிக்கு பின்னர் மீண்டும் தற்காலிக கொட்டில் அமைத்தும், சேதமடைந்த பழைய கட்டடம் திருத்தம் செய்யப்பட்டும் பாடசாலை நடைபெற்றது.

01.02.1980 தொடக்கம் 02.01.1991 வரை திரு. T. இராசநாயகம் அவர்கள் அதிபராக கடமையாற்றினார். அக்காலப்பகுதியில் சூறாவளியால் முற்றாக சேதமடைந்த கட்டடத்திற்கு பதிலாக 60'×20' அளவுள்ள புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டது. 01.01.1986 பாடசாலை 6ம் வகுப்பு வரை வைக்கும் வண்ணம் தரமுயர்த்தப்பட்டது. 04.12.1986 இல் முதல் தடவையாக பரிசளிப்பு விழா நடாத்தப்பட்டது. 01.01.1989 இல் 8ம் வகுப்பு வரை வைப்பதற்கான அனுமதி பெறப்பட்டது. 1990 காலப்பகுதியில் மாணவர் தொகை 668 ஆக இருந்தது. 16.02.1990 இல் முதல் தடவையாக பாடசாலை மட்டத்தில் இல்ல விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டது.

03.01.1991 தொடக்கம் 14.10.1999 வரையான காலப்பகுதியில் திருமதி.ஜீவராணி தம்பிப்பிள்ளை அவர்கள் அதிபராக கடமையாற்றினார். 1991 காலப்பகுதியில் 100'×20' அளவுள்ள வகுப்பறைக்கட்டடம் அமைக்கப்பட்டது. 01.01.1992 இலிருந்து 9ம் வகுப்பு வைப்பதற்கான அனுமதி பெறப்பட்டது. 01.01.1993 இல் 10ம் தரம் வைப்பதற்கான அனுமதி பெறப்பட்டு வகை II பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது. 1992 காலப்பகுதியில் முறைசாராக்கல்வித்திட்டத்தின் கீழ் தையல் பயிற்சி வகுப்பு நடாத்தியமையால் கல்வித்திணைக்களம் மூலம் தையல் இயந்திரம் ஒன்று கிடைக்கப்

பெற்றது 30.03.1993 இல் பாடசாலைக்கு கல்வித்திணைக்களம் மூலம் ரோணியோ இயந்திரம் கிடைத்து 1994 இல் முதல் தடவையாக மாணவர்கள் க.பொ.த (சா/தர) பரீட்சைக்கு தோற்றினர்.

1997 காலப்பகுதியில் மாடிக்கட்டடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டது. 1998.12.11 இல் இரண்டாவது தடவையாக பாடசாலையில் பரிசளிப்பு விழா சிறப்பாக நடாத்தப்பட்டது.

15.10.1999 இலிருந்து திரு.த.சந்திரலிங்கம் அதிபராக கடமையாற்றி வருகின்றார். 30.11.1999 இல் மூன்றாவது பரிசளிப்பு விழா நடாத்தப்பட்டது. 24.01.2000 இல் பாடசாலையில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்காக கற்றல் கற்பித்தல் உபகரணக் கண்காட்சி நடாத்தப்பட்டது. 2000ம் ஆண்டில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஜோசப் பரராசசிங்கம் அவர்களது மாவட்ட அபிவிருத்தித்திட்ட நிதியுதவியுடன் பாடசாலைக்கு மின் இணைப்பு பெறப்பட்டது. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் அலிசாகிர் மௌலானா அவர்களது மாவட்ட அபிவிருத்தித் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து 36m அளவு கொண்ட முன் பக்க சுற்று மதில் அமைக்கப்பட்டது. அக்காலப்பகுதியிலேயே மீதி 71m அளவு முன் பக்க மதில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வாழைச்சேனை பகுதி பொறுப்பாளர் திரு.சிவா அவர்களின் உதவியுடன் கட்டப்பட்டது.

07.03.2000 இல் பாடசாலையில் மாணவர்களுக்கான சாரணர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 10.05.2000 இல் மாணவிகளுக்கான சாரணியர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் 40'×20' அளவு நூலகக்கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு 04.10.2000 இல் நூலகத்திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் நடாத்தப்பட்டது. 2002 காலப்பகுதியில் கோறளைப்பற்று பிரதேச செயலக விளையாட்டு உத்யோகத்தரின் உதவியுடன் மாணவர்கள் பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர் இணைந்து மைதானத்தில் 200m ஓட்டப்பாதையொன்றும் கரப்பந்து விளையாட்டுத்திடலும் அமைக்கப்பட்டது.

க.பொ.த. சா/தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 2003 இல் 23 பேரும் 2004 இல் 21 பேரும் சித்தியடைந்ததைத் தொடர்ந்து க.பொ.த உ/தரம் ஆரம்பிப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

2004 இல் இடைவிலகல் மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைக்கும் செயற்றிட்டத்துக்கமைய 15.11.2004 இல் யுனிசெப் நிறுவனத்தினால் 60'×20' அளவு அரைநிரந்தரக்கட்டடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டது. 26.12.2004 ஏற்பட்ட சுனாமிக்கு பின்னரான மீள் அபிவிருத்தித் திட்டத்திற்கிணங்க வெளிநாடொன்றின் மாணவர்களது நிதி உதவியுடன் BESSO நிறுவனத்தினால் 48'×16' அளவு அரைநிரந்தரக்கட்டிடம்

ஒன்று அமைக்கப்பட்டது. மேலும், வகுப்பறை பற்றாக்குறை காணப்பட்டதால் $60' \times 20'$ அளவு கொண்ட அரைநிரந்தரக் கட்டடங்கள் இரண்டு umcor நிறுவனத்தினால் அமைக்கப்பட்டு 05.04.2006 திறப்பு விழா நடைபெற்றது. மேலும் umcor நிறுவனத்தினால் மைதானத்தின் ஓட்டப்பாதை புனரமைப்பு, கூடைப்பந்துத்திடல், பட்மின்ரன் திடல், கரப்பந்துதிடல் என்பன அமைக்கப்பட்டதோடு மைதானத்தின் சுற்று வேலியும் அமைக்கப்பட்டு மைதானத்திறப்பு விழா 25.01.2007 இல் நடைபெற்றது இக்காலப்பகுதியில் பாடசாலையால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுள் ஒலிபெருக்கி உபகரணங்களான Soundboox Set, Spaker Set போன்றவையும் மேன்தலை எறியி (OHP) என்பன குறிப்பிடத்தக்கவை.

31.10.2005 இல் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.S.ஜெயானந்தமூர்த்தி அவர்களின் மாவட்ட அபிவிருத்தி திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து கணனி ஒன்று கிடைக்கப்பெற்றது அக்காலப்பகுதியில் அனர்த்த நிவாரண அமைச்சுக்கூடாக கொறியா மாணவர்கள் பாடசாலைகளுக்கு வழங்கிய நிதியுதவியின் அடிப்படையில் எமது பாடசாலைக்கு கிடைத்த நிதியுதவியினைக் கொண்டு Printer ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது.

2006 இல் கொழும்பில் கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட உலக ஆசிரியர்தின விழாவின் போது பங்கு பற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட எமது பாடசாலைக்கு கணினி ஒன்று வழங்கப்பட்டது. Americares நிறுவனத்தினால் விஞ்ஞான ஆய்வு கூடம், கணனி அறை உட்பட வகுப்பறைகள் கொண்ட இரண்டு $3[110' \times 25']$ மாடிக்கட்டிடம் அமைக்கப்பட்டது. விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள், 10 கணனிகள், Scaner, Printer, என்பனவும் தேவையான தளபாடங்கள், நூலக புத்தகத்தொகுதி, விளையாட்டு உபகரணத்தொகுதி என்பனவும் வழங்கப்பட்டு 2007 ஜூன் 24ம் திகதி திறப்பு விழா நடைபெற்றது. 2007 ஆகஸ்ட் மாதத்தில் $36' \times 24'$ அளவு கொண்ட சமயலறைக் கட்டிடம் ஒன்று உலக உணவுத்திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் சுனாமிக்கு பின்னரான சீவனோபாய உதவிகள் ஒன்றிணைந்த வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை உள்ளக வீதிகள் அமைக்கப்பட்டது. பாடசாலை மகுட வாக்கியத்துக்கேற்ப நோக்கக்கூற்று, பணிக்கூற்று என்பன வடிவமைக்கப்பட்டது. 2008ம் ஆண்டில் வகை 2 பாடசாலைகளுக்கிடையே சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்ட ஆய்வு கூடப்போட்டியில் இப்பாடசாலை ஆய்வு கூடம் 1ம் இடத்தை பெற்றது.

2007 இல் நடைபெற்ற க.பொ.த சா/தர பரீட்சையில் 21 மாணவர்கள் சித்தியடைந்ததைத் தொடர்ந்து 04.06.2008 இல் க.பொ.த உ/தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு கௌரவ கிழக்கு மாகாண முதலமைச்சர் அவர்களின் சிபாரிசினால் 02.12.2008 முதல் இப்பாடசாலை IC வகை பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. 20.02.2009 இல் முதலமைச்சர் அவர்களால் பாடசாலை பாண்ட் வாத்தியக்கருவிகளும் போட்டோ பிரதி இயந்திரமும் வழங்கப்பட்டது.

24.10.2008 இல் பாடசாலையில் முதல் தடவையாக பாரிய கல்விக் கண்காட்சி நடாத்தப்பட்டது 28.04.2009 இல் கௌரவ கிழக்கு மாகாண முதலமைச்சர் அவர்கள் பாடசாலைக்கு வருகை தந்து உயர் தர வகுப்பு மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பித்து வைத்ததுடன் பல்லூடக எறியி (Multimedia Projector) ஒன்றையும் வழங்கி வைத்தார். அன்றைய தினம் தனது ஜப்பான் பயணம் தொடர்பாக அவரால் எழுதப்பட்ட ஜப்பான் வரலாற்றுக்கட்டுரை ஒன்றை புத்தகமாக மாணவர்களுக்கு வழங்கி வைத்தார். இல்ல விளையாட்டு விழாவின் போது பாடசாலை கீதம் திருத்தம் செய்யப்பட்டு இசையமைக்கப்பட்டு இறு வெட்டு வெளியிடப்பட்டது.

கௌரவ கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இல்ல விளையாட்டு விழாவின் போது முதல் தடவையாக எமது பாடசாலை மாணவர்கள் பான்ட் வாத்தியம் இசைத்து வரவேற்றனர். 13.07.2009 ல் கௌரவ கிழக்கு மாகாண முதலமைச்சர் அவர்களால் பாடசாலைக்கு தொலைபேசி இணைப்பு வசதி செய்து தரப்பட்டதை தொடர்ந்து பாடசாலையில் வலைப்பின்னல் (Internet) வசதி ஏற்படுத்தப்பட்டது. பாடசாலை இசுறு வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலைக்கு இணையத்தளம் (Wepsite) ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இணையத்தள முகவரி (www.pethalavipul.sch.lk)

தற்போது இப்பாடசாலையில் 950 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். 40 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். நூலக உதவியாளர் ஒருவரும் பாடசாலைத் தொழிலாளர் ஒருவரும் தொண்டரடிப்படையில் கடமையாற்றுகின்றனர். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் பாடசாலைக்காவலாளி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். முக்கியமான பாடங்களுக்கான ஆசிரியர் தேவையும் கல்வி சாரா பணியினர் தேவையும் உள்ளது. பாடசாலை மைதானம் முழுமையாக கிறவவலிடப்பட வேண்டியுள்ளதோடு ஒன்றுகூடல் மண்டபம் ஒன்றும் அமைக்கப்படல் வேண்டும்

தற்போது ஒரு பிரதேச செயலாளர் பிரிவிற்கு ஒரு பாடசாலை வீதம் அபிவிருத்தி செய்யப்படல் என்னும் மகிந்த சிந்தனைக்கு அமைய இப்பாடசாலை இசுறு பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சகல வளங்களையும் கொண்ட இடைநிலைப் பாடசாலையாக 2015 ஆம் ஆண்டுக்குள் அபிவிருத்தி செய்யப்படும். அதற்கான வேலைத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இடை நிலை வகுப்புக்களைக் கொண்ட 1AB வகை பாடசாலையாக தரமுயர்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நிருவாக தொகுதியுடனான வகுப்பறைகளைக் கொண்ட மாடிக்கட்டிடம், மல்டிமீடியாஅறை, மனையியல் அறை, விவசாயஅறை, அழகியல்அறை, ஆகியவற்றைக் கொண்ட மாடிக்கட்டிடம் க.பொ.த உயர்தர விஞ்ஞான ஆய்வு கூடங்களைக் கொண்ட இரண்டு மாடிக்கட்டடம் போன்ற கட்டடங்களுடன் மைதானப்

புனரமைப்பு வேலிகளைத் திருத்துதல் ஏனைய கட்டங்களை திருத்துதல் பாடசாலையை அழகுபடுத்தல் தேவையான ஆசிரியர்களை நியமித்தல் ஆசிரியர்களை பயிற்றுவித்தல் மாணவர் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல் மாணவருக்கான ஆலோசனை வழிகாட்டல் தொழில் வழிகாட்டல் போன்றவற்றை அபிவிருத்தி செய்தல், இணைப்பாட விதான செயற்பாடுகளை அதிகரித்தல், பரிசளிப்பு விழாக்களை நடாத்துதல் போன்ற செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பகுதி ஆரம்பப்பிரிவு மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு கௌரவ கிழக்கு மாகாண முதலமைச்சர் அவர்கள் பேத்தாழையில் புதிதாக ஆரம்பப்பிரிவு பாடசாலை ஒன்றினை அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதோடு புதிய பாடசாலைக்காக நிதி ஒதுக்கீடு செய்து 31.10.2009 இல் அடிக்கல்லையும் நட்டு கட்டட வேலையை ஆரம்பித்து வைத்துள்ளார்.

2010 இல் புதிய பாடசாலையில் 1ம் தரத்திற்கான மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். எனவே இசுரு பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இப் பிரதேச கல்வி வளர்சியானது துரிதமாக அபிவிருத்தியடையும் என்பது திண்ணம்.

# பாடசாலையின் அதிபர்கள்

| | | | |
|---|---|---|---|
| திரு.S.ஆறுமுகம் | தலைமை ஆசிரியர் | 01.03.1945 - | 05.01.1948 |
| திரு.A.கணபதிப்பிள்ளை | தலைமை ஆசிரியர் | 12.01.1948 - | 30.04.1955 |
| திரு.M.ராஜரெட்ணம் | தலைமை ஆசிரியர் | 01.05.1955 - | 01.07.1956 |
| திரு.K.சிவகுரு | தலைமை ஆசிரியர் | 01.07.1956 - | 19.01.1969 |
| திரு.K.நாகமணி | அதிபர் | 20.01.1969 - | 02.10.1978 |
| திரு.S.பெரியதம்பி | நிறைவேற்று அதிபர் | 02.10.1978 - | 02.05.1979 |
| திரு.S.தருமரெத்தினம் | அதிபர் | 03.05.1979 - | 30.01.1980 |
| திரு.T.இராசநாயகம் | அதிபர் | 01.02.1980 - | 02.01.1991 |
| திருமதி.J.தம்பிப்பிள்ளை | அதிபர் | 03.01.1991 - | 14.10.1999 |
| திரு.T.சந்திரலிங்கம் | அதிபர் | 15.10.1999 - | இன்றுவரை |

**தொகுப்பு,**
**திரு.செ.பிரேமகுமார், ஆசிரியர்**

# ஆரம்பக் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பு

மனித வாழ்க்கையை இயந்திரகதியாக மாற்றும் இன்றைய கணனி யுகத்தில் மனிதர்களின் தேவைகள் அதிகரிப்பதன் மூலமாக அவன் தன்னலப் போக்கும், போட்டியும் நிறைந்தவனாக மாற்றப்படுவதோடு பல சமுதாய சவால்களையும் எதிர் நோக்க நேரிடுகின்றது. இத்தகைய நிலையில் ஒருவன் சுயகட்டுப்பாட்டுடனும் பொது சிந்தனையுடனும் செயற்பட வழிகாட்டப்படுவது அவசியமாகின்றது. அத்தகைய வழிகாட்டல் எங்கிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்? அதற்கு யார் வழிகாட்ட முடியும்? யாருக்கு வழிகாட்டல் அவசியமாகின்றது என்பன போன்ற கேள்விகள் எழுகின்றன. இக்கேள்விக்கெல்லாம் ஒரே விடையாக அமைவதென்றால் அது 'கல்வி' ஆகத்தான் இருக்க முடியும்.

கல்வி என்பது சமுத்திரம் போல பரந்தது. அதன் தொடக்கமாக அமைவதும் அடிப்படையாக இருப்பதும் ஆரம்பக்கல்வியே தான். இத்தகைய ஆரம்பக்கல்வி மூலம் தான் விவேகம் நிறைந்த விளைதிறன் விதைகளை மாணவர் மனதில் விதைக்க வேண்டும். கல்வியை ஒரு மனிதன் கரு முதல் இறப்பு வரை பல்வேறு முறைகள் மூலம் பெற்றுக் கொள்கிறான். அதாவது பிள்ளைகள் தாயின் வயிற்றில் இருக்கும் போதே கற்றலில் ஈடுபடுவதாகவும் புலன் விருத்தியை பெறுவதாகவும் உளவியலாளர்கள் கருத்துரைக்கின்றனர். அந்த வகையில் குழந்தை பிறக்கும் முன்பே தாயின் வயிற்றிலே கற்க ஆரம்பிக்கின்றது. பின்னர் பிறந்த குழந்தை ஐம்புலன்கள் மூலம் சூழலைப் பற்றிக் கற்றுக் கொள்கிறது. புலனியக்கம் மூலம் சூழலுடன் பிள்ளை இயைபாக்கமடைகின்றது. ஒலிகளின் மூலம் சொற்களஞ்சியத்தை விருத்தி செய்வதற்கு ஆரம்பிக்கின்றது. இப்பருவத்தில் பிள்ளைகள் பெரும்பாலும் பெற்றோரைச் சார்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். ஆகையால் இப்பருவத்தில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் புலனியக்க செயற்பாடுகளில் கவனம் செலுத்துவது முக்கியமானதொரு அம்சமாகும்.

மேலும் குழந்தை பிறந்து $2\frac{1}{2}$ - 3 வயது வரை பெற்றோர் மூலம் தனது கல்விக்கான அடிப்படையினைப் பெற்று பின்னர் முன்பள்ளியை நாடிச் செல்கின்றது. 'முன்பள்ளிக்கல்வி' என்பது சிலை மேல் எழுத்துப் போன்றது. இன்றைய காலகட்டத்தில் பிள்ளை முன்பள்ளிக் கல்வி மூலம் தமது ஆரம்பக்கல்வியை ஆரம்பிக்கின்றது. இத்தகைய முன்கல்வியானது, முன்பள்ளி ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் பிள்ளைகளை சமூகமயமாதல் சூழலுக்குள் இட்டுச் செல்வதுடன் பல்வேறுபட்ட திறன்களையும் பெற்றுக் கொடுக்கின்றது. "முன்பள்ளி" என்பது ஒரு "சிறுவர் களிப்பு நிலையம்" எனலாம். முன்பள்ளி ஒரு பாடசாலையும் இல்லை. அத்துடன் "முறை சார்ந்த கல்வி" முறையைக்

கொண்டதுமில்லை. இது ஒரு முறைசாராக்கல்வி நிலையமாகும். இன்னொரு வகையில் கூறின் முறை சார்ந்த கல்விக்கு "ஆயத்தம் செய்யும்" ஒரு நிலையமாகும். இத்தகைய முன்பள்ளி கல்வியைப் பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுப்பது ஒவ்வொரு பெற்றோர்களுடைய பொறுப்பும் கடமையுமாகும்.

பிறக்கும் போது குழந்தையொன்றின் உடலில் விருத்தி குறைவானதும் வளர்ச்சி குறைவானதுமான ஓர் உறுப்பு மூளையாகும். ஒரு வருடத்தில் மூளையின் நிறை 3 மடங்காக அதிகரிக்கும். இந்நிறையின் அதிகரிப்பு 5வயது வரை அதிகரித்துச் செல்லும். ஆனால் நிறை அதிகரிப்பது போல் அதன் இயக்கம், ஞாபகம், விவேகம், நுண்ணறிவு போன்றவற்றுடன் தொடர்புடைய பாகங்கள் விருத்தி பெறுவதில்லை. எனவே மேற்கூறிய விடயங்கள் விருத்தியடைவதற்கு "செயற்பாட்டுடன் கூடிய அனுபவம்" அவசியமாகின்றது. இச் செயற்பாட்டு அனுபவங்கள் முன்பள்ளிகளில் போதிக்கப்படுகின்றன. இதனால் 4 வயதில் நுண்ணறிவு 50% மும் நுண்ணறிவு ஈவு 20% மும் அதிகரிக்கின்றது. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு இன்றைய சூழலில் ஒவ்வொரு பிள்ளையும் முன்பள்ளி முறை மூலம் கல்வி பயில யூனிசெப், வேள்ட்விசன் போன்ற நிறுவனங்கள் நிதியுதவிகளை வழங்கி முன்பள்ளி கல்வியின் வளர்ச்சி போக்கினை ஊக்குவிக்கின்றன. இத்தகைய பிள்ளைப் பருவத்தில் பிள்ளைகளுக்கு முன்பள்ளிக் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதும் பாடசாலைக் கல்விக்கு ஆயத்தம் செய்வதும் பெற்றோரின் கடமையாகும்.

இன்று முன்பள்ளிக்கல்வி பாலர் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்புவதில் நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களில் பெற்றோர் சிலர் நாட்டம் காட்டுவதில்லை. அத்துடன், இந்த 3 வயதில் எதனை பிள்ளை படித்துக் கிழிக்கப் போகிறது என்ற அலட்சியப் போக்குடைய எண்ணம் மேலும் குழந்தைகளை தினமும் முன்பள்ளிக்கு கூட்டிச் சென்று, கூட்டி வரும் சிரமங்களை கருத்தில் கொண்டு முன்பள்ளிக்கு அனுப்புவதில் அக்கறை எடுப்பது குறைவு இவை போன்ற பெற்றோரின் அலட்சியப் போக்குகளினால் சில குழந்தைகள் முன்பள்ளிக் கல்வியை பெறாமலே முறைசார்ந்த கல்வியைக் கற்பதற்குப் பாடசாலையினுள் நுழைந்து பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் பல்வேறுபட்ட தாக்கங்களுக்குமுள்ளாகின்றனர். அதாவது பாடசாலை நுழை நிலையில் இணக்கமின்மை, தாழ்ந்த மனப்பாங்கு, பாடசாலை வருகைக் குறைவு, பாடசாலை இடை விலகல் போன்ற பிரச்சினைகளைப் பிள்ளைகள் எதிர்நோக்குகின்றனர். இதற்கு காரணம் யார்? ஒரு சில பெற்றோரே, எனவே இவ்வாறான பிரச்சனைகளுக்கு பிள்ளைகளை உட்படுத்தாது இருப்பதற்கு பிள்ளைகளின் தேவைகளுக்குப் ஏற்ப அவர்களின் மன விருப்பங்களை நிறைவு செய்யத்தக்க வகையில் பெற்றோர்கள் செயற்பட வேண்டும்.

முறைசார்ந்த கல்வியைப் பெற பாடசாலைக்கு செல்ல ஆயத்தமாவதற்கு முன்னர் பிள்ளையின் பராமரிப்பு விருத்தியில் பெற்றோரின் செயற்பாடு முக்கியத்துவம் பெறுகின்றது. அதாவது பாதுகாப்பு வழங்குதல், உறையுள் வசதிகள், போதுமான அளவு போஷாக்கு ஊட்டல், தேகாரோக்கியக் கவனிப்பு, மூத்தோர் மீதான பாசம், புலன் இயக்க ஊக்குவிப்புக்கள் செய்தல், சொல் வளம் பெருக்கல், சிந்தனைத் திறனை வளர்த்தல், சுதந்திரமாக இயங்க இடமளித்தல், கட்டுப்பாட்டை போதித்தல், கூடி இயங்க வாய்ப்ப -ளித்தல், பகிர்ந்து கொள்ளும் மனப்பாங்கை ஊட்டல், கேள்வி கேட்கப் பழக்குதல், அவதானிக்கும் திறனை வளர்த்தல் மேற்படி பராமரிப்பு விருத்தி பெற்ற 5வயது பிள்ளையொன்று முறைசார் ஆரம்பக்கல்வியை பெற பாடசாலைக்குச் செல்ல ஆயத்தமாகி விடும். இவ்வாறாக குழந்தைப் பருவத்தில் அடைவு நிலையை ஏற்படுத்துவதில் பெற்றோர்கள் கவனம் செலுத்துவது அத்தியாவசியமானதாகும்.

மேலும் ஆறு வயதில் முறைசார்ந்த கல்வியைப் பெறுவதற்கு பாடசாலைக்குள் காலடி எடுத்து வைத்து பிரவேசிக்கப் போகும் பிள்ளைக்கு அக்கல்வியை சரியான முறையில் பெற்றுக் கொடுப்பது பெற்றோரின் கடமையாகும். அத்துடன் முறை சார்ந்த ஆரம்பக்கல்வியைப் பயிலும் பிள்ளைகள் மீது அதிக அக்கறையும் பங்களிப்பும் செலுத்த வேண்டியதும் பெற்றோரே பிள்ளைகள் எதிர்காலத்தில் கல்வி, நல்லொழுக்கம், விழுமியங்கள், நற்பண்புகள், கலை, கலாசாரம், கண்ணியம், கட்டுப்பாடு, பற்றிய உயர்ந்த சிந்தனைகளை கொண்டவர்களாக உயர வேண்டும் என்று எண்ணும் ஒவ்வொரு பெற்றோரும் அவர்களது ஆரம்பக்கல்வியில் அக்கறை செலுத்துதல் வேண்டும். பிள்ளைகளின் ஆரம்பக்கல்வியில் பெற்றோர்களின் பங்களிப்பு என்பது வெறுமனே உணவு, உடை, பாடசாலை உபகரணங்களை வாங்கிக் கொடுப்பதோடு நின்றுவிடாது. பிள்ளைப் பருவத்தில் பிள்ளைக்குத் தேவையான தேவைகளை உரிய வேளைகளில் நிறைவேற்ற வேண்டும். அந்த வகையில் உளவியலாளரான மாஸ்லோவின் தேவைக்கொள்கையின் படி உடலியற் தேவை, காப்புத் தேவை, அன்புத் தேவை, கணிப்புத் தேவை, சுயதிறனியல் நிறைவுத் தேவை என்பனவும் ஒருவனுக்கு ஒரு தேவை நிறைவு செய்யப்பட்ட பின்னரே நிரலிலுள்ள அடுத்த தேவை எழுகின்றது என்பதுவுமாகும். இவரின் கருத்துப்படி மாணவர்களுக்கு படிமுறை அடிப்படையில் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெற்றோரே அதிக பங்களிப்பு செய்கின்றனர். இதன் அடிப்படையில் ஆரம்பக் கல்விப் பருவத்தில் இருந்தே பெற்றோர் செயற்பட வேண்டும்.

மேலும் ஆரம்பக்கல்வி பயிலும் பருவத்தில் பிள்ளையின் கல்வி மீதான பங்களிப்பு ஆசிரியர் மீது இருந்தாலும் பிள்ளைகள் அதிகளவு நேரத்தை வீட்டிலே பெற்றோருடன் செலவிடுகின்றனர். இதனால் பிள்ளைகளின் ஆரம்பக்கல்வியில் அதிகளவு அக்கறை

காட்ட வேண்டியது பெற்றோர்களே வீட்டில் பெற்றோர்கள் நல்ல பண்புகளை வளர்க்கக் கூடியவகையில் நல்ல செயல்களை செய்தல், இனிய வார்த்தைகளை பேசுதல், சிறந்த மனப்பாங்குகளை உருவாக்கக் கூடிய முன்மாதிரியான நடத்தைகளை வெளிக்காட்டுதல், மேலும் தினமும் தமது பிள்ளைகளின் பயிற்சிக் கொப்பிகளை பார்வையிடல், பிள்ளைகள் வீட்டில் செய்ய வேண்டிய செயற்பாடுகளுக்கு வழிகாட்டுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் பெற்றோர் ஆரம்பக்கல்வியில் பங்களிப்பினை செய்தல் வேண்டும்.

ஆரம்பக்கல்வி பயிலும் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பி வைப்பதுடன் பெற்றோரின் கடமை முடிந்து விடவில்லை. பாடசாலையில் தமது பிள்ளைகள் யாருடன் பழகுகின்றார்கள் எவ்வாறான நண்பர்களை தேடிக் கொள்கின்றார்கள்? எவ்வாறு கல்வி கற்கின்றார்கள்? பாடசாலையில் எவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள்? எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள்? போன்ற விடயங்களை ஆராய்ந்து அறிவதுடன் உரிய வகுப்பாசிரியருடனும் சுமுகமான உறவினை வைத்திருத்தல் வேண்டும். சில பெற்றோர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் அக்கறை செலுத்துவது குறைவாகக் காணப்படுவதனாலேயே அவர்களது பிள்ளைகள் கல்வியில் இடர்படுகின்ற நிலை ஏற்படுகின்றது. ஆசிரியரின் பங்களிப்பு காணப்பட்ட போதிலும் ஆரம்பக்கல்வியில் சில பிள்ளைகள் கற்றல் இடர்பாட்டிற்குள்ளாக நேரிடுகின்றது. இரண்டு கைகள் சேர்ந்து தட்டப்படுகின்ற போது தான் அங்கு ஒலி எழும் என்பதற்கு ஏற்ப பெற்றாரும் ஆசிரியரும் ஆரம்பக்கல்வியில் பங்கு பெறுகின்றனர். எனினும் பெற்றோரின் முழுப் பங்களிப்பு பிள்ளையின் ஆரம்பக்கல்வியில் கிடைக்கின்ற போது அப்பிள்ளையின் எதிர்காலம் ஏணிப்படிகளாக அமையும் என்பது உறுதியாகும்.

எதிர்காலத்தில் பிள்ளைகள் படித்து முன்னேற வேண்டும் என்பது பெற்றோரின் அவாவாகும். எவ்வாறான முன்னேற்றத்திற்கும் ஆரம்பக்கல்வி என்பது அத்திவாரமாக அமைகின்றது. அதனை ஒழுங்கான சீரான முறையில் அமைத்துக்கொடுக்கும் பொறுப்புக்களை பெற்றோர் அறிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக சில பெற்றோர் கல்வி தொடர்பான முழுப் பொறுப்பையும் பாடசாலை ஆசிரியர், தனியார் வகுப்பு போன்றவற்றின் மீது முழுப் பாரத்தையும் போட்டு விட்டு நழுவிக் கொண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் போது பிள்ளைக்கு அதிகளவு அழுத்தங்களைக் கொடுக்கின்ற போது பிள்ளைகள் மன அழுத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு கல்வியில் நாட்டம் குறைகின்ற சந்தர்ப்பங்களும் இடம் பெறுகின்றது. இதனது விளைவுகள் பிள்ளைகளில் எதிர்காலத்தில்தான் பிரதிபலிக்கும் என்பதனை அறிந்து கொள்ளவேண்டும்.

எனவே ஆரம்பக்கல்வியில் பெற்றோர்கள் குழந்தை பிறந்ததிலிருந்து பாடசாலையில் ஆரம்பக்கல்வி பயிலும் நாட்களில் தினமும் அக்கறை செலுத்துதல் வேண்டும்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே, அது நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே........" என்பதற்கு இணங்க ஆரம்பத்திலிருந்தே ஒரு சீரான பாதையில் கற்றலை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் வழிகாட்டுபவர்கள் பெற்றோரே அவ்வாறு ஆக்க பூர்வமாக பெற்றோர்கள் பங்களிப்பினை வழங்குகின்ற போது இன்றைய புதிய கல்வி சீர்திருத்திற்கு அமைய கல்வியின் குறிக்கோளுக்கு இயைபாக இன்றைய சிறார்களை நாளை நாட்டின் நற்பிரஜைகளாக ஒவ்வொரு பாடசாலைகளினாலும் உருவாக்க முடியும். "இளமையில் கல்வி சிலை மேல் எழுத்து" என்பதற்கு இணங்க பசுமையான மாணவப் பருவத்தில் ஆரம்பநெறியில் பெற்றோர், பெற்றோரின் பங்களிப்பு என்பது அத்தியவசியமானது என்பதனை உணர்ந்து செயற்பட்டால் ஆசிரியரின் புத்தாக்கங்களை ஏற்படுத்தும் மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தலுடன் சேர்ந்து ஆரம்பக்கல்வி மாணவர்களின் வெற்றி என்பது உறுதியான பிரதிபலிப்பாக அமையும்.

**ஆக்கம் :**
**செல்வி. மு. கலைவாணி,**
ஆசிரியை.

*Every time you influence somebody in a good or bad way, you're assuming leader ship. It is not a position. Rember Leadership is influence.*



# நாசகார ஆயுதப் பாவனையும் அதன் தாக்கமும்

உலகில் எதிர்நோக்கும் பிரச்சனைகளில் நாசகார ஆயுத தாக்கமும் ஒன்றாகும். இன்றைய உலகில் பல்வேறு நாடுகளில் பல காரணங்களுக்காக ஆயுத தாக்குதல் நடைபெறுகிறது. இத்தாக்கம் அபிவிருத்தியடைந்த நாடுகளில் மட்டுமின்றி அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் காணப்படுகிறது. ஆரம்ப காலத்தில் கம்பு, அம்பு, கத்தி, வாள், என்பவற்றை கொண்டு போர் புரிந்தவர்கள் தற்போது நவீன ஆயுதங்களை கொண்டு போர் புரிகின்றனர்.

நாசகார ஆயுதத்தில் முதலிடம் பெறுகின்ற அணுகுண்டினை அல்பேர்ட் ஐன்ஸ்ரன் கண்டு பிடித்தார். இவர் பிரிக்கப்பட முடியாது என கூறப்பட்ட அணுவில் இருந்து அதன் மூலக்கூறுகளை பிரித்தெடுத்து அதன் மையக் கருவில் இருந்து தான் அணுகுண்டை தயாரித்தார். இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு இரு ஆண்டுகளுக்கு முன்புதான் உலகில் மாபெரும் மனித அழிவை ஏற்படுத்தக்கூடிய அணுகுண்டினை கண்டு பிடித்தார்.

கைத்தொழிலில் பல நாடுகள் அதிக அன்னியச் செலாவணியைப் பெற அழிவு தரும் ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றன. அணுகுண்டினை கொண்ட நாடுகள் அமெரிக்கா, சீனா, இந்தியா, பாகிஸ்தான், பிரான்ஸ், வட கொரியா, போன்ற நாடுகளாகும். வல்லரசு நாடுகளாக பெயர் பெற அணுகுண்டு பரிசோதனையை நாடுகள் மேற்கொள்கின்றன. அத்தோடு மற்றைய நாடுகளை அச்சுறுத்தவும், கொத்தணிக்குண்டு, கதிர் இயக்க துப்பாக்கி, பல்குழல் துப்பாக்கி, அதுமட்டுமின்றி அணுப்பிளவு அதிக வெப்பசக்தி, அதிகளவு உயிர்களை அழிவுக்குள்ளாக்கும் ஐதரசன் குண்டு, நியூத்திரன் குண்டு என்பனவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

1ம், 2ம் உலகப்போரின் பின்பே உலகளாவிய ரீதியில் அகதிகளும், பிரச்சனைகளும் உருவாகியது. பல்வேறு நாடுகளில் இடம்பெறும் உள்நாட்டு ஆயுதப்போர்கள் காரணமாகவும் நாளுக்கு நாள் அகதிகளும் பிரச்சனைகளும் அதிகரித்து வருகின்றன. நாட்டில் திடீரென வரும் நாசகார ஆயுத தாக்குதலால் மக்கள் பாதுகாப்பு தேடி ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்கு செல்வதால் அவர்களது சொத்துக்களை இழப்பது மட்டுமின்றி உடைமைகளையும் இழந்து பல இடர்களை எதிர்நோக்குகின்றனர்.

சூழல் மாசடையும் வழிமுறைகளில் ஒன்று அழிவை உண்டாக்கும் அணு ஆயுத பொருட்களாகும். இவை எவ்வாறு சூழலை மாசடைய செய்கிறது என்றால் அதில் இருந்து வெளிவரும் நச்சு வாயுக்கள் வளியோடு கலப்பதால் நாளடைவில் வளி மண்டலம் மாசடையும். அதுமட்டுமின்றி அணுகுண்டினை செய்து அதனை நீருக்கு அடியிலும், நிலத்திற்கு அடியிலும் பரிசீலினை செய்வதால் நிலம் அதிர்வுக்கு உள்ளாகின்றது. நீர் வாழ் அங்கிகள் இறக்கிறது. இதன் காரணமாக 1963ம் ஆண்டு அணுசக்தி ஆயுதங்களை வளிமண்டலத்திலும் அதற்கு மேலும் நீருக்கு அடியிலும் பரீட்சிப்பதை தடை செய்யும் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

ஆகஸ்ட் 06ம் திகதி 1945ம் ஆண்டு இராணுவ தலைமையகத்தில் இருந்து கிடைக்கப் பெற்ற உத்தரவினையும், அணுகுண்டினையும் சுமந்து கொண்டு அமெரிக்க யுத்த விமானம் ஜப்பானிய நேரப்படி காலை 08.15 மணியளவில் ஹிரோசிமா நகரத்தின் மீது Bad Boy எனப் பெயர் சூட்டப்பட்ட முதலாவது அணுகுண்டும் தொடர்ந்து வீசப்பட்ட Fat man எனும் அணுகுண்டும் மாபெரும் மனித அழிவினை ஏற்படுத்தியது. 500°C வெப்பம் 2 Km விஸ்தீரணம் உள்ள பகுதியினை புல், பூண்டு கூட இல்லாமல் அழித்தது. இதிலிருந்து எழுந்த வெப்ப சுவாலை 600m வரை ஆட்கொண்டது. ஒரே கணத்தில் ஒன்றல்ல இரண்டல்ல சுமார் இரண்டு இலட்சம் மக்கள் கருகிப் போயினர். உலகமே அதிர்ச்சியில் உறைந்து போனது. அமெரிக்கா மகிழ்ச்சியில் குதித்தது. இராணுவவீரர்கள், வயோதிபர்கள், பெண்கள், பாடசாலை சிறுவர்கள் எந்த ஒரு பாகுபாடும் இன்றி கருகிப் போனார்கள். ஹிரோசிமா உருக்குலைந்து தரமட்டமானது. இவ் அணுக்கதிர் வீச்சின் தாக்கம் காரணமாக இன்னும் ஒரு புல், பூண்டு கூட முளைக்க வில்லை. அதுமட்டுமின்றி அங்கு பிறக்கும் குழந்தைகள் கூட குறைபாடுடைய குழந்தைகளாகவே பிறக்கின்றனர். இதுவே இரண்டாம் உலகப்போரின் கொடூர விளைவாகும். அதே ஆண்டு 09ம் திகதி நாகசாகி மீதும் அணுகுண்டு வீசப்பட்டது. இந்த நாடும் பாரிய விளைவுக்கு உள்ளாகியது. இந்த அணுகுண்டினை காவிச் சென்ற விமானம் F16 ஆகும்.

1941ம் ஆண்டு டிசம்பர் 07ம் திகதி எந்தவித முன்னறிவிப்பும் செய்யப்படாமல் ஜப்பானில் இருந்து புறப்பட்ட யுத்த விமானம் பசுபிக் பிராந்தியத்தில் அமைந்திருந்த அமெரிக்காவின் பிரதான கடற்படை தளமான பேர்ளின் துறை முகத்தை இலக்கு வைத்து யாரும் எதிர்பார்த்திராத அதிரடியான பயங்கர தாக்குதலை மேற்கொண்டது. சுமார் 2000 இற்கு மேற்பட்ட கடற்படையினர் மரணமடைந்ததுடன் அமெரிக்க யுத்த விமானங்கள், கப்பல்கள் என்பன பாரிய அழிவிற்கு உள்ளாகியது. அமெரிக்கா ஆடிப்போய்விட்டது.

அமெரிக்கா மிக நவீன கணனிமயப்படுத்தப்பட்ட வானில் வெடித்து சிதறி துகள்களாகப் பரவக்கூடிய ஆயுதங்களைப் பரீட்சித்து வருகின்றது. ஆங்கில திரைப்படமான Judge Dred எனும் படத்தை தழுவி அதில் கற்பனையில் காண்பிக்கப்பட்ட ஆயுதம் மற்றும் செயற்பாடுகளுக்கு உயிர்ப்பூட்டியுள்ளது. அமெரிக்கா ஆராய்ச்சி நிலையம் 543 m துல்லியமான இலக்குடன் லேசர் வழி காட்டி துணையோடு இயக்கக்கூடிய இவ் நவீன வகை ஆயுதங்கள் மறைந்திருந்து சாதாரண ஆயுதங்களால் இலக்கு வைக்க முடியாதவாறு தாக்கும். எதிரிகளை அழிப்பதற்காகவும் அவர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகவும் இவ் ஆயுதங்களை பயன்படுத்தவுள்ள அமெரிக்க இராணுவ ஆராய்ச்சி மையம் இதன் உயிர் ஆபத்துக்களை பற்றி தகவல்களை வெளியிடவில்லை.

முப்பது வருடகாலமாக நிலவிய பயங்கரவாதம் என முத்திரை குத்தப்பட்ட தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பானது அவர்களின் பல்வேறுபட்ட காரணத்தால் இராணுவத்தினர் நவீன ஆயுதங்களைக் கொண்டு போர் புரிந்து முற்றாக அழித்து ஓர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இவ்வாறு ஆயுதப்போர் ஏற்பட்டதன் விளைவாக பெறுமதியான அரிய உயிர்கள் இழக்கப்பட்டன. சுமார் ஒரு இலட்சம் பொது மக்கள் உயிர் இழந்தனர். அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டது. குடும்பங்கள் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டதன் காரணமாக விதவைகளும், அநாதைகளும் உருவாகினர். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. இதனால் வறுமை ஏற்பட்டது. சிறுவர்கள் முதியோர்கள் உளரீதியான தாக்கங்களுக்கு உட்பட்டதுடன் ஊனமும் அடைந்தனர்.

சர்வதேச சட்ட விதிமுறைகளுக்கு அப்பால் சில நாடுகள் அழிவை உண்டாக்கும் ஆயுதங்களை பயன்படுத்துகின்றனர். இதற்கு உதாரணமாக எம் தாய் நாடான இலங்கையை எடுத்துக் கொள்ளலாம்.

இவ்வாறான ஆயுத போரினால் மக்கள் அழிவடைவதோடு அகதிகளும் உருவாகின்றனர். இதனால் பாரிய துன்பத்தை எதிர் நோக்குகின்றனர் ஆகவே ஆயுத போரினை நிறுத்தி நாட்டு மக்கள் அனைவரும் சுதந்திரம் சமத்தவம் சகோதரத்துவம் எனும் முறைமைக்கமைய சாதி, மத, பேதமின்றி எமது மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கருத்துப்படி எல்லோரும் இலங்கை நாட்டு மக்கள் என்ற கோட்பாட்டிற்கு இணங்க ஒற்றுமையாய் வாழ்வோம்.

**செல்வி. க. டிகாந்தினி**
தரம் 12 கலை

# தாழையூரில் காத்திருக்கிறாள் ஒரு முல்லை

கண்ணம்மா கதிகலங்கிப்போய் கத்தா மர நிழலிலே காத்திருக்கின்றாள். அவள் யாருக்காக காத்திருக்கிறாள் என்று யாருக்கும் தெரியவில்லை.

"கூ........... கூ........" என்று கொண்டு மட்டக்களப்பில் இருந்து வாழைச்சேனை வரையான உதயதேவி புகைவண்டியின் சத்தம் முகாமையே ஒரு ஆட்டம் ஆட்டிக் கொண்டு அருகால் சென்றது. யோசித்துக் கொண்டிருந்த கண்ணம்மாவைப் பார்த்து

"என்ன கண்ணம்மா பச்சத் தண்ணி கூட வாயில படமால் எந்தச் சிகரத்தை பிடிக்கணும் என்று பாத்துத்து இருக்கா" என்று கேட்டாள் பொன்னம்மாக்கிழவி. பேச்சு மூச்சற்றவளைப் போல கண்ணம்மா காட்சியளித்தாள். கிழவி மறுபுறம் சென்றுவிட்டாள் பொழுது புலர்ந்தது. முகாமிற்கு வந்த சமூக சேவை நிறுவனங்கள் ஒரு சிலருக்கு விசுக்கோத்து, பாண், வாழைப்பழம், உடைகள் என்பவற்றை கொடுத்துவிட்டு மின்னலைப் போல பறந்தன.

பலமானவர்கள் பறந்து சென்று முட்டிமோதி ஏலுமானவரை பெற்றுக் கொண்டனர். கண்ணம்மாவிற்கு கடந்த காலம் மனக்கண்முன் ஓடியது.

பேத்தாழை பொலிஸ் நிலையத்திற்கு பக்கத்து வளவில் உள்ள பங்களாவில் தான் கண்ணம்மாவின் குடும்பம் வசித்து வந்தது. மிகவும் சந்தோசமான கூட்டுக்குடும்பம் கண்ணம்மாவிற்கு அன்பை மழைபோல பொழிந்து கொண்டிருப்பான். அவள் அண்ணன் ராஜா ஊரில் உள்ள எல்லோரும். "இவங்க பாசமலர் படத்தில் வாற சிவாஜிகணேசன், சாவித்திரி போல பெரிசா பாசத்தை பொழியிறாங்க" என்று இருவரையும் பார்த்து ஊர்மக்கள் கேலி செய்வார்கள்.

அழகின் சிறப்பிற்கு உரிய பேத்தாழை ஊரில் விடுமுறை வந்து விட்டால் பிள்ளைகளுக்கெல்லாம் ஒரே கொண்டாட்டம் அருகில் ஆற்றங்கரையும், பக்கத்து ஊரான பாசிக்குடாவில் அழகிய கடற்கரையும், ஊருக்குள்ளே கோயில்களும், விளையாட்டு மைதானமும் அமைந்து காணப்பட்டது.

கண்ணம்மாவிற்கு ராஜவிற்கும் பாடசாலை விடுமுறை வந்துவிட்டது மிகவும் சந்தோசமாக தன் குடும்பத்தோடு விடுமுறையைக் களிக்க ஆயத்தமானார்கள்.

இவர்கள் இருந்த பங்களா பழையகாலத்தில் இருந்தே காணப்பட்டதாக தாத்தா இவர்களிடம் அடிக்கடி கூறுவார்.

ஒருநாள் மெதுவாக வீசிய காற்று சற்று பலமாக வீச ஆரம்பித்தது. எல்லா மனிதர்களும் நடுநடுங்கிப் போனார்கள். தென்னை மரங்களில் இருந்து தேங்காய்கள் தொப் தொப் என்று விழுந்தன மரங்கள் சுழன்று ஆடின. ஒரு தென்னங்குரும்பை ஒன்று கண்ணம்மாவின் வீட்டு ஓட்டை பொத்துக் கொண்டு விழுந்தது.

எல்லோரும் கதி கலங்கிப் போய் நின்றார்கள். ''என்ன பாட்டி காத்து இவ்வளவு பலமாக அடிக்கிறதே சூறாவளி நம்ம எல்லாரையும் தூக்கித்துப் போகப்போது'' என்றான் ராஜா.

''ஆமாண்டா அதுதான் நடக்கப் போகிறது'' என்றாள் பாட்டி. அவர்கள் எல்லோரும் ''பிளேட்'' போட்ட அறைக்குள் சென்றார்கள். சிறிது நேரத்தில் ஓடுகள் எல்லாமே அவர்கள் வீட்டை விட்டுப் பறந்தன. மக்கள் அழும் அவலக் குரல் கேட்டது. காற்றோடு சேர்ந்து மழையும் பொழிந்தது இவர்கள் இருந்த அறை மட்டுமே அரைகுறை சேதத்தோடு இருந்தது.

''அம்மா நாம பக்கத்து வீட்டு அன்ரிட வீட்டுக்கு போவமா? அவங்கட வீடு இப்பத்தானே கட்டினாங்க நல்ல பலமாக இருக்கும்'' என்றான் ராஜா.

''இல்லடா'' வெளியில எல்லா வீடுகளும் உடஞ்சு போய்த்தான் இருக்கும் அவங்கட வீடு மட்டும் தப்புமா'' என்றான் ராஜாவின் சித்தப்பா.

சிறிது நேரத்தில் காற்றும், மழையும் ஓய்ந்துவிட்டது. துடிப்பான ராஜா தன் தங்கையுடன் ''இளநீர் குடிக்கலாம்'' என்று அறையை விட்டு வெளியே வந்தான். ஈரமான நிலையில் காணப்பட்ட சுவர் அந்தரத்தில் இருந்தது. இவர்களுக்கு தெரியாது. கண்ணம்மா வந்த வழிக்கு பக்கத்தில் இருந்த பெரிய சுவர் ஒன்று விழ வருவதைக் கண்டு ராஜா கண்ணம்மாவை தள்ளிவிட்டவுடன் அச்சுவர் ராஜா மேல் விழுந்தது.

''அம்மா, அப்பா, பாட்டி எல்லாரும் வாங்க அண்ணா மேல சுவரு விழுந்துத்து'' என்று கத்தினாள். எல்லாரும் தலைதெறிக்க ஓடி வந்தார்கள். இரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தது. ராஜா பேச்சு மூச்சற்றுப் போய்க் கிடந்தான். அவனை உடனடியாக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்த்தனர்.

''ஊரில உள்ளவங்கட கண்பட்டுத்தான் என் ராஜா இப்படி கிடக்கிறான்'' என்று புலம்பினாள். தாய்

முகாமில் தங்கியிருக்கும் கண்ணம்மாவிற்கும் பாட்டிக்கும் தகவல் கிடைத்தது உடனே வைத்தியசாலைக்கு வருமாறு. சிட்டுக்குருவி போல சென்றாள் கண்ணம்மா. அங்கு எல்லோரும் கதறி அழுகின்றனர்.

"நம்மட ராஜா நம்ம எல்லாரையும் விட்டுப்புட்டு போயித்தான் அம்மா'' என்றாள் தாய் வைத்தியசாலையே அதிரும்படி கண்ணம்மா கதறினாள். எவ்வளவோ சமாதானப்படுத்தியும் அவள் அழுகை ஓயவில்லை எத்தனை வருடங்கள் ஓடிச் சென்றாலும் அண்ணா இருக்கின்றான் என்கின்றாள் கண்ணம்மா.

**செல்வி. சிறிக்கந்தராஜா கிருசாந்தி**

**தரம் - 12 கலை (2011)**

# பேத்தாழைக் கிராமத்தின் வரலாற்றுச் சிறப்பு

கிழக்கிலங்கையில் மீன்பாடும் தேனாடாம் மட்டுமா நகரில் அதன் வடக்கே மாதுறு ஓயா கடலோடு சங்கமிக்கும் பகுதியில் அதன் வலதுகரையில் கல்குடாவிற்கு மேற்கே வாழைச்சேனைக்குக் கிழக்காக அமைந்து இருப்பதுதான் எமது பேத்தாழைக்கிராமமாகும்

கி.பி. 1505 இல் காலித்துறைமுகத்தை அடைந்த போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு இருந்தனர். அச்சந்தர்ப்பத்தில் தற்போதைய் எமது கோறளைப்பற்று , கோறளைப்பற்று மேற்கு, கோறளைப்பற்று வடக்கு எனப்பிரிக்கப்படாது ஒன்றிணைக்கப்பட்ட பிரதேசமாகவே காணப்பட்டது. இவ்வாறு ஒரே பிரதேசமாகக் காணப்பட்ட இப்பகுதியை கதிராமன் அதிகாரி என்பவர் நிர்வகித்துக் கொண்டு இருந்தார். அப்போது போர்த்துக்கேயத் தலைவன் வெந்லூஸ் என்பவன் தன் மொழிபெயர்ப்பாளர்களுடன் வந்து பாசிக்குடாவில் கதிராமன் அதிகாரியைச் சந்தித்தான். அப்போது கதிராமன் அதிகாரிக்கு தங்க மாம்பழத்தை பரிசாகக் கொடுத்து தான் வியாபாரம் செய்யவே இங்கு வந்ததாகவும் தங்களுக்கு கறுவா, சாதிக்காய், யானைக்குட்டி என்பவற்றைத் தருமாறும் அதற்கு பவுண் முதலியவற்றைத் தருவதாகவும் ஒப்பந்தம் செய்து வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கறுவாச்சோலை அல்லது கருங்காலிச்சோலையில் தற்போது ஜோண்பிள்ளைக்கு சொந்தமாக உள்ள இடத்தில் கிட்டங்கி (பண்டகசாலை) அமைத்து யானை வண்டியில் கொண்டு வந்து சேர்க்கப்படும் பொருட்களை பாய்க்கப்பலில் தங்கள் பிரதேசத்திற்கு கொண்டு சென்றனர்.

வெந்லூஸ் வந்து இறங்கியதால் வெந்லூஸ் குடா என்றும் பாசிக்குடா என்று கூறப்படும் இடத்தில் கோட்டை அமைக்கத் தீர்மானித்த போர்த்துக்கேயர் பொருட்களைச் சேகரித்தனர். காலி, கொழும்பு போன்ற கோட்டைகள் கறுவா, இரத்தினம் என்பவற்றைப் பெற முக்கியத்துவம் உடையதாக இருந்ததால் பாசிக்குடாவில் சேகரித்த பொருட்களை மட்டக்களப்புக்கு கொண்டு சென்று தற்போது கச்சேரியாக இருக்கும் கோட்டையை அமைத்தனர் தேன், சுண்ணாம்பு, வைரக்கல், சுண்ணல்கல் என்பன இதற்குப் பயன்படுத்தப்பட்டது.

போர்த்துக்கேயரின் பின் ஒல்லாந்தர் காலத்தில் கருங்காலிச் சோலையில் அமைக்கப்பட்டிருந்த பண்டகசாலை அழிக்கப்பட்டு 1698 இல் வாகனேரியில்

அமைக்கப்பட்டது. இப்பண்டகசாலையில் சேகரித்த பொருட்களை யானை வண்டி மூலம் பாசிக்குடாவிற்கு கொண்டு வந்து இங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குக் கொண்டு சென்றனர். இவர்களும் கதிர்காமன் அதிகாரிக்கு தேச வழமைப்படி அதிகாரத்தைக் கொடுத்தனர். கதிராமர், ஆறுமுகம் போன்ற பெயர்கள் பாட்டன் வழியாக வழக்கில் இருந்தது. இங்குள்ள உற்பத்திப் பொருட்களான நெல், தேங்காய் என்பவற்றைப் பெற்றுக் கொண்டு பவுண்களைக் கொடுத்தனர். 1713 இல் கதிராமன் அதிகாரி இறந்ததும் மகன் ஆறுமுகம் என்பவருக்குப் பட்டங்கட்டி என்னும் பட்டத்தைக் கொடுத்து அவரின் கீழ் உதவிபுரிய ஒல்லாந்தரின் கடமைகளைச் செய்வதற்கு கருங்காலிச்சோலையில் மேற்குப்பக்கமாக கோறளையன், சின்னக்கோறளையன் என்னும் இருவரையும் நியமித்தனர்.

அக்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்த சுதேச மக்கள் நதிக்கரையில் பந்தல் அமைத்து தெய்வம் ஆடிஅன்னை வழிபாடு செய்தனர். இவ்வாறு வழிபட்டு வந்த ஆலயத்தை காசுபதி (சக்கயம் போடி) என்பவர் தொடர்ந்து நிர்வகித்து வந்ததாகக் கூறப்படுகின்றது. மட்டக்களப்பு கொத்துக்குளத்து மாரியம்மன் ஆலயத்திலிருந்து அம்மனின் முகம் இங்கு கொண்டு வந்து வைத்து பூசைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. இது தற்போதைய மாவடிமாரியம்மன் ஆலயமாகும்.

பின்னர் பாசிக்குடாவில் இருந்து வாழ்ந்த ஆறுமுகம் பட்டங்கட்டியும் தங்கை பத்தநாச்சியும் எருமை, பசு என்பவற்றுடன் வந்து கோறளையன் இருக்கும் இடத்துக்கு மேற்குப் பக்கமாக அமைந்த வீரையடியில் 1767 ல் குடியேறி அங்கு ஒரு பிள்ளையாரையும் வைத்து வழிபட்டதுடன் பக்கத்தில் ஒரு பாடசாலையையும் அமைத்தனர். வீரையடியில் குடியிருந்த தங்கை பத்தநாச்சிக்கு 1772 ல் கறுவா முதலிய பொருட்களைச் சேகரிப்பதற்காக பாசிக்குடாவில் இருந்து ஆரையம்பதியில் கொண்டுபோய்க் குடியேறிய தமது சந்ததியில் உள்ள ஒருவரைத் திருமணம் செய்து வைத்துவிட்டு ஆறுகம் பட்டங்கட்டி 1777 இல் பாசிக்குடாவில் இருந்து நாவற்குடாவில் குடியேறிய தமது சந்ததிப் பெண்ணை மணம் செய்து கொண்டு வாழைச்சேனையில் குடியேறி பக்கத்தில் ஒரு பிள்ளையார் கோயிலையும் அமைத்து வழிபட்டு வந்தனர். கதிராமன் அதிகாரியும் அவரது சந்ததியினரும் இந்தியாவில் இருந்து வாடா எனப்படும் பாய்க்கப்பலில் வந்து வியாபார நடவடிக்கைகளை மேற் கொள்ளும் சந்தர்ப்பத்திலேயே பாசிக்குடாவில் குடியேறினர்.

1796 இல் ஒல்லாந்தரை வெளியேற்றி ஆங்கிலேயர் ஆட்சி இலங்கையின் கரையோரப்பிரதேசங்களில் ஆரம்பமானபோது ஆறுமுகம் என்பவருக்கே பட்டங்கட்டி பதவி வழங்கப்பட்டது. ஆறுமுகம் பட்டங்கட்டி இறந்ததும் மகன் உமையர் 1830 இல் இப்பகுதிக்கு விதானையானார். இவரது காலத்தில் எல்லோரும் நிலம் வாங்கலாம்

என்னும் சட்டம் கொண்டுவரப்பட்டது. உமையர் இறந்ததும் ஆழ்வாடியார் அதன் பின் இவரது யாழ்ப்பாணத்துக் குடும்பி வேலுப்பிள்ளை பின் தம்பினைனார் அதன் பின் 1900 ஆண்டில் கதிராமர் சின்னத் தம்பி விதானையானார். (கதிராமர் பத்தநாச்சியின் மகன்) இவருடைய காலத்தில் 1907 இல் இப்பகுதி பல கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு விதானையார் நியமிக்கப்பட்டனர்.

கண்டியில் இருந்து வந்து ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலைக்கட்டிய திருக்கோரிஸ் அப்புகாமி ஒதிரிஸ் அப்புகாமி ஆகியோரைக் கொண்டு வந்து சின்னத் தம்பி விதானையார் 1897 இல் வாழைச்சேனையில் கல்லினால் வீட்டைக் கட்டுவித்தார். 1954 இல் எமது பிரதேச கிராமசபையின் உதவித் தவிசாளராக இருந்தவர் சின்னத்தம்பி விதானையாரின் மகன் ஆறுமுகம் இவரது காலத்திலேயே கல்லடி வீதி அமைக்கப்பட்டிருக்கின்றது. இவரால் அமைக்கப்பட்ட பேத்தாழையில் உள்ள இவ் வீதியே இப்பிரதேசத்தில் முதன் முதல் அமைக்கப்பட்ட கிறவல் வீதியாகும். இவரது பேரனே தற்போதைய கிழக்கு மாகாண முதலமைச்சராகும்.

1907 இன் பின் சின்னத்தம்பி விதானையார் உத்தியோகத்தைத் தாமாகவே துறந்துவிட்டு தமையன் கதிராமர் வீரகத்தியுடன் தம்முன்னோர் வாழ்ந்த பாசிக்குடாவில் தென்னை, கரும்பு, நெல், பசு முதலியவற்றை வளர்த்து வந்தார். அவருடன் சந்தியார். குமாரவேலியார், மார்க்கண்டு முதலியார் போன்றோரும் ஸ்கொட், சோட்டான், அஜித்தன் போன்ற ஆங்கிலேயரும் தென்னை உற்பத்தியைச் செய்து கொப்பறாவாக நீராவிக்கப்பலில் இந்தியா, ஐரோப்பா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.

போர்த்துக்கேயர். ஒல்லாந்தர் காலங்களில் கதிராமன் அதிகாரி கிறிஸ்தவ சமயத்தை எதிர்த்ததால் இவரது காலத்தில் இப்பிரதேசத்தில் கிறிஸ்தவ தேவாலயம் அமைக்கப்படவில்லை 1870 இல் கல்குடா வீதியில் ஒரு இங்கிலாந்துத் திருச்சபை கிறிஸ்தவ தேவாலயமும் ஒரு பாடசாலையும் அமைக்கப்பட்டது. இதுவே தற்போதைய அங்கிலிக்கன் தேவாலயமாகும். பின் வாழைச்சேனையில் சைவப்பாடசாலை அமைக்கப்பட்டதும் மிசன் பாடசாலை மூடப்பட்டது. இங்குள்ள சுதேசிகளுக்கு (ஆதிக்குடி மக்கள்) மதபோதனை செய்யும்போது பாடசாலையினுள் மரத்தினால் செய்யப்பட்ட பீடத்தில் சிலுவையையும் மெழுகுதிரியையும் வைத்து போதனை நடைபெறும் இத் தேவாலயத்துக்கு மட்டக்களப்பு கல்லடி தம்பிமுத்து என்பவரை பாதிரியாராகவும் ஆசிரியராகவும் நியமித்தனர்.

ஆங்கிலேயர் தங்கள் செயற்பாடுகளை நிறைவேற்ற இப்பகுதியில் கடினமாக இருந்ததால் போர்த்துக் கேயரால் அமைக்கப்பட்டிருந்த பண்டகசாலை துறைமுகம் கல்லடியில் பெரிய கோறளையன், சின்னக் கோறளையன் போன்றோர் இருந்த இடங்களை எல்லாம் அழித்துவிட்டு அருகில் உள்ள கல்குடாவில் துறைமுகம்

அமைத்தனர். கல்குடாவில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த இங்கிலாந்து கப்பலுக்கு 2ம் உலகமகா யுத்தத்தின் போது யப்பானால் குண்டு போடப்பட்டுத் தகர்க்கப்பட்டது.

விக்டோரியா மகாராணியின் சகாக்கள் மட்டக்களப்பில் இருந்து திருகோணமலைக்கு கரையோரமாகச் சென்றபோது பேத்தாழை ''கொலிடேகோம்'' இருந்த வீதியில் சென்று ஆற்றைக்கடக்கும்போது இங்கு இருந்த ஆதிக்குடிகள் தங்கள் வத்தையில் பொருட்களை மிக இலகுவாகவும் விரைவாகவும் தூக்கிவைத்து மறு கரையில் விட்டதால் இவர்களது திறமையை மெச்சி இவர்கள் இடத்துக்கு இடம்பெயர்ந்து செல்லும் ஆதிவாசிகள் என்பதை அறிந்து விக்டோரியா மகாராணியின் ஆலோசனையுடன் பேத்தாழைக்கிருஷ்ணன் கோயில் வீதியில் இருந்து வீரையடி வரைக்கும் உள்ள 50 ஏக்கர் கண்டத்தை பத்துக் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்துக்கு 5 ஏக்கர் வீதம் குடியிருப்பு நிலமாகவும், வாகனேரியில் 50 ஏக்கரில் ஆண்களுக்கு 5 ஏக்கர் வீதம் விவசாய நிலமும் பகிர்ந்து கொடுக்கப்பட்டது.

மின் வசதி இல்லாத அக்காலத்தில் அடர்ந்த காடுகளும் இரவில் செல்லும்போது மிருகங்களின் நடமாட்டமும் ஒரு பய உணர்வை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. அக்காலத்தில் மீன் பிடிக்கச் செல்வோர் தீப்பந்தங்களைக் கொண்டு செல்வர். தாழைமரம் சதுப்பு நிலம் அங்கு சருகுகள் உக்கியதால் உருவான மெதேன் வாயுக்களின் செயற்பாட்டினால் நீல நிற வெளிச்சம் தோன்றுதல் என்பவற்றைக் கண்டு பயந்தவர்கள் அறியாமை காரணமாக அங்குள்ள தாழை மரங்களில் பேய்கள் இருப்பதாக நம்பினர். இதனால் பேய்த்தாழை என அழைக்கப்பட்டது. இக்கிராமம் பின்னர் மருவி பேத்தாழை என அழைக்கப்படுகின்றது. அதற்கு முன் மருங்கையடிப்பூவல் என அழைக்கப்பட்ட வாழைச்சேனையுடன் இணைந்ததாகவே காணப்பட்டது.

கல்குடாவீதியில் தற்போது பாலர் பாடசாலை (கலைமகள் முன்பள்ளி) அமைந்துள்ள இடத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்போதைய விபுலானந்த வித்தியாலயம் 1945 ல் ஆரம்பிக்கப்பட்டு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என அழைக்கப்பட்டது. இப்பாடசாலை திரு.கு. நாகமணி அதிபராக இருந்த காலத்தில் தற்போதைய இடத்துக்கு மாற்றப்பட்டு பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

கருங்காலிச் சோலையில் உள்ள நாக தம்பிரான் ஆலயம் 1975 ம் ஆண்டு அளவில் நாகப்பர் என்பவரால் உருவாக்கப்பட்டது. கருங்காலிச் சோலையில் ஸ்ரீ கிருஸ்ணா வித்தியாலயம் 1990 இல் திரு.த. சந்திரலிங்கம் அவர்கள் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக இருந்தபோது முன்னாள் தலைவர்களான

கு. கதிர்காமத்தம்பி, ச. சந்திரமோகன் ஆகியோர் இணைந்து கோட்ட கல்விப் பணிப்பாளராக இருந்த திரு. த. பரசுராமப்பிள்ளை அவர்களது ஆலோசனைக்கமைய உருவாக்கப்பட்டு அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. பேத்தாழைக்கிருஷ்ணன் கோயில் 1985 ல் சிவபாக்கியம் இராசநாதன் குருக்கள் என்பவர்களினால் உருவாக்கப்பட்டது. 1979 ல் திருமதி தங்கநாயகம் என்பவரினால் ஸ்ரீ முருகன் ஆலயம் உருவாக்கப்பட்டது. கோராவெளி கண்ணகி அம்மன் ஆலயம் அக்கினி கணபதி என்பரால் 1935 அளவில் ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. 1979 இல் திரு. பி. கிருஸ்ணப்பிள்ளை என்பவரால் சிவன்கோயில் உருவாக்கப்பட்டது. 1989 இல் நாற்சதுர சுவிஷேச சபை திரு. சோ. யோகராஜா அவர்களினால் உருவாக்கப்பட்டது.

இக்கிராமத்துக்கலைகளில் நாட்டுக்கூத்து முக்கியத்துவம் பெறுகின்றது. இதற்கு வெள்ளைக்குட்டி, கணபதிப்பிள்ளை (புட்டுவர்), நல்லதம்பி போன்ற அண்ணாவிமாரின் முயற்சியே காரணமாகும். கோறளைப்பற்று பிரதேசத்திலேயே பேத்தாழைக் கிராமத்தில்தான் நாட்டுக் கூத்துக்ககலை இன்றும் காணப்படுகின்றது. இக்கிராமத்தில் மீன்பிடி, தச்சுத் தொழில், கட்டிடத் தொழில், வியாபாரம், விவசாயம், வீட்டுப்பணியாளராக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லல் போன்றவற்றின் மூலம் வருமானம் பெறுகின்றனர்.

தற்போது கிழக்கு மாகாண சபை உறுப்பினர் திரு. நா. திரவியம் அவர்களும் பிரதேச சபை உறுப்பினர்களான திரு. ஆ. சிவநேசதுரை, திரு. க. நவராசலிங்கம் ஆகியோரும் பேத்தாழையிலேயே வாழ்ந்து வருகின்றனர். தற்போது பேத்தாழைக்கிராம உத்தியோகத்தர் பிரிவின் இலக்கம் 205 B இங்கு இரு வாக்கெடுப்புப் பிரிவுகள் காணப்படுகிறது. 56. பேத்தாழை வடக்கு, 57 பேத்தாழை தெற்கு என்பனவாகும். பேத்தாழைக்கிராம சேவகர் பிரிவில் தற்போது மொத்தக் குடும்ப எண்ணிக்கை 839 ஆகவும் மொத்த சனத்தொகை 2896 ஆகவும் காணப்படுகின்றது. அதில் ஆண்களின் எண்ணிக்கை 1397, பெண்கள் 1499 ஆகவும் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 1839, இந்துக்கள் 2645 கிறிஸ்தவர்கள் 251 ஆகும். மொத்த மீன்பிடிக் குடும்பம் 279 உள்ளது.

தற்போது பேத்தாழைக்கிராம சேவகர் பிரிவில் நான்கு பாலர் பாடசாலைகள் காணப்படுகின்றது. பாரதி முன்பள்ளி எகெட் நிறுவனத்தினாலும், சிவசக்தி முன்பள்ளி தனிப்படவும், விபுலானந்த முன்பள்ளி சேவ்த சில்றன் என்னும் அமைப்பினாலும், கலைமகள் முன்பள்ளி பிரதேச சபையினாலும் நடத்தப்படுகின்றது. பேத்தாழைக்கிராமசேவகர் பிரிவில் கிராம அபிவிருத்திச் சங்கம் பேத்தாழை வடக்கு தெற்கு என்னும் இரு பிரிவுகளாக காணப்படுகின்றது. மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் பேத்தாழை வடக்கு தெற்கு என கல்குடாவீதியை மையமாக வைத்து

பிரிக்கப்பட்டுள்ளது. சாரதா மகளிர் சங்கம், கம்பன் முதியோர் சங்கம், இளம் தளிர் விளையாட்டுக்கழகம், தாழை இளைஞர் கழகம், புலவர்மணி கலாமன்றம், மீனவர் சங்கம் போன்ற அமைப்புக்கள் இங்கு காணப்படுகின்றது.

பேத்தாழை சிவன்கோயிலுக்கு கிழக்குப்பக்கமாக ஒரு சிறிய தாமரைக் குளமும் உள்ளது. பேத்தாழையின் வடக்கில் நதிக்கரையோரமாக கற்குன்று காணப்படுவதால் இப்பகுதி கல்லடி என அழைக்கப்படுகின்றது. 2008 இல் ஆயுர்வேத வைத்திய நிலையமும் 2009 இல் கலாசார மண்டபமும் எமது முதலமைச்சரின் முயற்சியால் உருவாக்கப்பட்டு இருக்கின்றது. அத்துடன் இப்பகுதியில் ஒரு நூலகம் அமைக்கப்பட்டு வருவதுடன் உபதபால் நிலையமும் அமைக்கத் திட்ட - மிடப்பட்டிருக்கின்றது. தற்போது மட் / பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம் ''இசுறு'' பாடசாலையாக தரமுயர்த்தப்படவுள்ளதால் ஆரம்பப்பிரிவை மட் / பேத்தாழை கனிஸ்டவித்தியாலயம் என்னும் பெயரில் வேறாக அமைப்பதற்கும் முதல் அமைச்சரினால் அடிக்கல் நாட்டப்பட்டு வேலை நடைபெறுகின்றது.

தற்போது சகல விதமான வசதிகளையும் பெற்று ஒரு வளர்ந்து வரும் கிராமமாக பேத்தாழைக் கிராமம் காணப்படுகின்றது. என்பதை நாம் அனைவரும் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

**திருமதி. சிவசோதிமலர் சோமநாதன் (ஆசிரியர்)**

**மாணவரது திறமை வெளிப்படும் வண்ணம்**
**சஞ்சிகை தொடர்ந்து வெளிவர**
**வாழ்த்துகின்றேன்.!**



திருமதி. T. ராஜ்மோகன்
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

# டாட்டா நனோ கார் (Tata Nano car)

பிரயாணம் என்பது மனித வாழ்க்கையில் மிக சந்தோஷமான இனிய செயலாகும். எந்த ஒரு மனிதனும் தனக்கென ஒரு வாகனம் வைத்திருக்க விரும்புகிறான். அதுவும் வாகனம் விலை குறைந்து காணப்பட்டால் அதை வாங்குவதில் பெரிதும் முயற்சி எடுக்கிறான். இந்த வகையில் உலகிலேயே மிகவும் குறைந்த விலையுடைய கார் என்று கருதப்படும் கார்தான் டாட்டா நனோ கார் ஆகும்.

டாட்டா நனோ காரை இந்தியாவின் பிரபல மோட்டார் வாகன நிறுவனமான 'டாட்டா' நிறுவனம் தயாரித்துள்ளது. இக்கார் மத்திய தரவர்க்க மக்களுக்கென அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள சிக்கனமான புதிய வடிவிலான வாகனமே இந்த "டாட்டா" நனோ வாகனமாகும்.

டாட்டா கார் அறிமுக விழா அண்மையில் சம்பிரதாய பூர்வமாக நடைபெற்றது. இவ் விழாவில் டாட்டா நிறுவனத்தின் தலைவர் ரத்னன் டாட்டா அவர்கள் கலந்து கொண்டு அறிமுகம் செய்து வைத்தார். மற்றைய கார்களுடன் இதை ஒப்பிடுகையில் மிகவும் விலை குறைந்தே காணப்படுகிறது. இதை தயாரிக்க முன் இவ்வளவு விலை குறைவாக கார் ஒன்றை உருவாக்க முடியுமா? என்ற கேள்வி எழுந்தது. பின் இக் காரை கண்டவுடன் அனைவரும் அதிசயித்து போய்விட்டனர்.

இக்காருக்கு 'மக்களின் வாகனம்' என்ற பெயரை இந்திய 'ஒட்டே கார்' சஞ்சிகை சூட்டியுள்ளது. இக்காருடன் தொடர்புடைய கம்பனிகளாக Marut, Alto, Chevrolet, Spark போன்றன காணப்படுகின்றன. இக்காரை வடிவமைத்தவர்கள் Girish Wagh, Jusfin Norek, Trilik, Pierre Castine என்போர் ஆவார்கள்.

டாட்டா நனோ கார் 3100 mm அதாவது 3.1 m நீளமும் 1500 mm அதாவது 1.5 m அகலமும் உடையது. மழை நீரை விலக்க ஒரே ஒரு வைப்பர் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இரண்டு சிலிண்டர் இயந்திரத்தில் பொருத்தப்பட்டுள்ளது. 623 cc பெற்றோல் என்ஜீன் காரின் பின்புறம் பொருத்தப்பட்டுள்ளது.

மற்றும் டாட்டா கார் மணிக்கு 105 கிலோ மீற்றர் செல்லக்கூடியது. ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 28 கிலோ மீற்றர் மைலேஜ் செல்லலாம். ஐந்து பேர் வசதியாக

பயணம் செய்யலாம். இதன் எரிபொருள் கொள்ளளவு 15 லீற்றர் ஆகும். 2009 மார்ச் 23 அன்று இந்திய சந்தைக்கு அறிமுகமாகியது.

இக்கார் மாசுக் கட்டுப்பாட்டுக்கு அமைய உருவாக்கப்பட்டுள்ளது. இதன் நிறை 580 கிலோ கிராம் ஆகும். இதன் விலை 2000 அமெரிக்க டொலராகும். இந்திய ரூபாயில் 100,000 ஆகும். இக் காரின் சக்கரத்தின் அடிப்பாகம் 2.230mm அளவுடையது.

இக் கார் விலை குறைந்து காணப்படுவதால் இதை வாங்குவதில் மக்கள் அதிகம் நாட்டம் காட்டுகின்றனர். இக்கார் மக்களின் நிறைவேறாத ஆசையை நிறைவேற்றியுள்ளது.

**செல்வன். த.சர்மிதன்**
தரம் - 12 கலைப் பிரிவு.

"தாழை சஞ்சிகை வருடாவருடம் காலமாய் வெளிவர வேண்டும் அதன் மூலம் மாணவர் திறன்கள் தொடர்ந்து வெளிக்கொணரப்பட வேண்டும்" என வாழ்த்துகின்றேன்.

**திரு. K. ஜெயந்தன். M.A.**
**கிழக்கு மாகாண முதலமைச்சு செயலகம்,**
**கிழக்கு மாகாண சபை.**

# விடியலை நோக்கி

பாரினில் கார்மேகம் சூழ்வது போல்
சூழ்ந்தனவோ போர் மேகம்
இவை ஊரெல்லாம் ஊர்வதனால்
உதிர்ந்தனவோ வெடி குண்டுகள்

வெடியும் அடியும் தான் எம் சொத்தோ?
கொடியும் கூட்டமும் தான் எம் உறவோ?
தேடியும் ஓடியும் புதை குழிகள் தோண்டியும்
பிணங்களோடு புலம்பி அழுதும் புதைந்து
போவது தான் எம் வாழ்வோ?

உயிரை ஊசலாடவிட்டு உறவுகளை
முடக்கியிருக்கும் முகாம்களைத் தேடி
முட்டி வலிக்க ஓடிச் சென்று தஞ்சம்
புகுவதோ தரணியில் நாம்
அவதரித்ததன் தாற்பரியம்

தாயின் வயிற்றிலிருந்து தலையெடுத்த
சிசுவின் தலையைக் காணோமே
சேயின் துயரில் செந்தாமரைப்
பேதையவள் பேதலித்து குண்டடிபட்ட
காயங்களை மறந்து பித்தான
அவள் மனம் சொத்தான
குழந்தையைத் தேடிக் கொந்தளிக்கின்றது
இதன்றோ பரிதாபம்!

பச்சைக் குழந்தையவள் பல் கூட
முளைக்கவில்லை இச்சை மொழிபேசி
இங்கும் அங்கும் திரிவாளவள்
மறத்தமிழ் மங்கையவள் ஈன்றெடுத்த
செந்தமிழ்ச் செல்வியவள்.

அந்தி சாயும் நேரம் அன்னம் போல்
நடையிட்டு கன்னம் சிவக்க
எட்டி உதைத்தாள் பந்தை
சின்னஞ் சிறு சிறுமியவள் சிதைந்து போன
நிலையில் அவள் உணர்வுகள் அடங்க
அடக்கமாகிறாள் எங்கிருந்தோ
வந்த வெடி குண்டினால்;

இயற்கை அன்னையவள் தன்தமிழ் மக்கள்
வாழவென தந்தாள் தமிழ் ஈழத்தை
காலத்தின் கோலத்தால் கருகியதோ
தமிழ் ஈழம் காக்கைகளின்
உணவு தான் தமிழ் மக்களின் உடலானதோ?

பார்க்கையிலே பதறுதம்மா இதயம்
இயற்கையிலே நாம் எல்லாம் மானிடன்தானே
எங்கிருந்து எழுந்தது மும்மொழி, மூவினம்
மும்மதம், முட்டாள் மானிடனே முதிர்ந்து
போனதோ உன் மூளை சத்தம் வேண்டாம்
மனக் குறைகள் வேண்டாம் அன்பு வேண்டும்
மன அமைதி வேண்டும்
பண்புடனே நீயும் வாழ்ந்து அன்புடனே
பிறரையும் வாழ விடமாட்டாயோ!

முத்தமிழின் தித்திப்பு நித்தம் நித்தம்
கிடைப்பதெப்போது தமிழன்னை அவள்
உறக்கம்
கலைந்து எம்மை முத்தமிடுவது எப்போது?
முதுமொழியாம் முத்தமிழைச் சொத்தாகக்
கொண்டு நாம் ஜீவனம் நடத்துவது
எப்போது?

கதிரவன் வருவதால் காலை விடிகிறது
இறையவன் அருளால் எம் வாழ்வு விடிவது
எப்போது?

விழி நிரம்பி நீர் வழிய
வழிநின்று காத்திருக்கிறோம் விடியலை
நோக்கி.......

செல்வி. தயானந்தம் வனித்தா
தரம் - 11P

# சமுதாயத்தில் பெண்கள்........

பெண்மை என்றாலே மென்மை என்பது பொதுவழக்கு. இதனால் பெண்களை மலரிற்கு ஒப்பிட்டுக் கூறினார்கள் சங்ககாலப் புலவர்கள். பெண்கள் இயல்பாகவே அழகானவர்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவை ஒருங்கே நிறைந்து அவற்றிற்கு இலக்கணமாய் திகழ்ந்தார்கள். குழந்தைப் பருவத்தில் இருந்து பல்வேறு பருவங்களையும் கடந்து ஈற்றில் புனிதம் பொருந்திய தாய்மையை அடைகிறாள். அவளை இவ்வுலகம் சிரம்மேல் வைத்துக் கொண்டாடுகிறது. இத்தகைய சிறப்புப் பொருந்திய பெண்ணின் சமுதாய நிலைபற்றி இங்கு நோக்குவோம்.

பண்டை நாளிலே சமூகம் பெண்களுக்குப் பெருமதிப்பளித்தது. ஔவையார், காக்கைபாடினியார் ஆகியோர் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்த சான்றோராக மதிக்கப்பட்டு வந்தனர். இதனை இலக்கியச் சான்றுகள் கொண்டுணரலாம். ஆயினும் பெண்களின் பெருமையைப் போற்றிய அக்கால நிலையானது இடைக்காலத்தில் மாறுதலடைந்தது.

பெண் சமுதாயத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டு இருந்தாள். தீண்டாத சாதியினர் போல் பெண்ணும் ஒருகால் மூலையிலே ஒதுக்கப்பட்டாள். அடுக்களையில் அடுப்பூதப் பிறந்தவளே பெண் என்ற கருத்து அக்கால சிற்றறிவு சமுதாயத்தில் நிலவி வந்தது. இதனாலன்றோ அவளுக்குப் போதிய கல்வி வசதி வழங்கப்படாமல் ஈன அறிவு படைத்த ஆண்களை திருப்திப்படுத்தவும் உணவு சமைத்துப்போடும் இயந்திரமாகவும் பிள்ளைகளைப் பெற்றுக் கொடுக்கும் ஓர் இயந்திரமாகவும் நினைக்கப்பட்டு

"பெண்புத்தி பின்புத்தி என்றும் அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பெதற்கு" என்றும் கூறுமளவிற்கு தாய்க் குலம் ஒதுக்கப்பட்டு அடிமைகள் போல ஆளப்பட்டனர்.

இவ்வாறான பெண்கள் கண்ணீரும் கம்பலையுமாக வாழ்ந்த காலகட்டத்தில் தான் நவயுக நாயகனாக சமுதாயத்தில் ஒரு ஒளிப்பிளம்பாக தோன்றினான் பாரதி அவன்

"பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லைக் காணென்று கும்மியடி" என்று பாடினான்.

பெண்கள் அறிவுத்துறையிலும், கல்வித்துறையிலும், சமூகத்துறையிலும், கலைத் துறையிலும் ஆண்களோடு சரிநிகர் சமமாக உழைக்கத் தொடங்கி விட்டனர். அன்றியும் கிராம மக்களின் முன்னேற்றத்திற்கும் அதனால் நாடுகள் மேல் நிலையடைவதற்கும் உறுதுணையாக விளங்கக்கூடியவர்கள் பெண்களே என்ற உண்மையும் எல்லோருக்கும் தெளிவாக விளங்கிவிட்டது.

"கண்ணுடையோர் என்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"

என்ற பேருண்மை மக்களின் உள்ளத்திலே பசுமரத்தாணி போல பதிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் பீடு நடையுடன் கல்வித்துறையில் முன்னேற்றப்பாதையில் விரைந்து சென்று கொண்டிருக்கின்றனர். பொறுமையும் தியாக மனப்பான்மையும் கொண்டவர்களாகிய பெண்பாலார் கல்வித்துறையில் மேம்பட்டுப் பணியாற்றி வருகின்றனர். வீட்டுக்குள்ளே பெண்கள் முடங்கிக்கிடந்த காலம் போய் தற்போது வெளியுலகிலே கல்வியிலே போட்டிபோட்டுக் கொண்டு கற்கும்நிலை உள்ளது.

சமுதாயத்தில் ஆணிவேராம் பெண்களைப் பற்றி அவர்களின் எதிர்கால உயர்வுகள் பற்றி கனவு கண்டவன் பாரதி "மாதராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும்" மாதர் தம்மை இழிவு செய்யும் மடைமையை ஒழிப்போம்" என்றான் பாரதி.

பாரதியின் புதுமைப் பெண்ணாகவே காட்சியளித்தாள். பாரதியின் புதுமைப்பெண் நானிலத்தை காத்து நிற்பவளாகவும் ஞானம் மிக்கவளாகவும் இருந்தாள். உண்மையும் அதுதான் சகல சக்திகளையும் படைத்த பெண்ணினம் தான் இன்று கல்வித்துறையில் மேம்பட்டு சமுதாயத்தை ஆட்டிப்படைக்கிறது. பெண்களைப் பற்றிய அவனது கணிப்புப் பிழையாகி விடவில்லை.

இன்றைய உலகில் பெண்களின் பெருமைகள் எண்ணிலாதவை அரசியல்வாதிகளாக, அரியாசனை தலைவிகளாக, ஆண்களுக்கு சவால்விடும் அபார துணிச்சல்காரர்களாக விளங்குகின்றனர். கல்வித்துறையில் படித்து முன்னேற்றப் பாதையில் தொழில்புரிந்து வருகின்றனர். பெண்களுக்கு இன்னதொழில்தான் ஏற்றதென்று வகைப்படுத்தப்பட்ட தொழில் காலம் சென்று எல்லாத் தொழிலுமே பெண்ணானவள் செய்வாள் என்ற நிலை வந்தது. வைத்தியர்களாகவும், ஆசிரியைகளாகவும், பொறியியலாளர்களாகவும், தாதிகளாகவும், பெண்கள் பணியாற்றி வருகின்றனர். நம் நாட்டைப் பொறுத்தவரையில் பெண்கள் பாதுகாப்புத்துறையிலும் கூட ஆண்களோடு போட்டி போட்டு பணியாற்றுகின்றனர்.

வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைத்த விந்தை மனிதனைத் தலைகுனிய வைத்து பெண்களை நாட்டின் தலைவிகளாய் உயர்த்திய அந்த பாவரசன் பாரதிக்கு பூமாலை கட்ட வேண்டும். பெண்களின் உரிமைக்கு குரல்கொடுத்து பெண்பாலாரை கல்வித்துறையில் மேம்பட உழைத்த பாரதி இப்போதிருந்தால் பெண்களைப் பற்றி எவ்வளவோ கவிதைகள் பாடியிருப்பான் என்பதில் ஐயமில்லை.

மாநிலம் போற்றும் மகாகவி பாரதியார் சொன்னார்.................................... பெண்கள் அறிவை வளர்த்தால் வையம் பேதமையற்றிடும் காணீர் என்று அந்த கவிஞனின்

எழுச்சிமிக்க கவிதையின் திறத்தால் வரட்சியாயிருந்த பெண்களின் சமூகத்தில் ஒரு புரட்சிகரமான மாற்றுதல் ஏற்பட்டது. சட்டங்கள் ஆளப்பிறந்த பெண்கள் அடுப்பங்கரையில் சட்டி முட்டிகளுடன் சண்டை போடுவதா? ஆக்கவும், அழிக்கவும் வல்ல அன்னை பராசக்தியின் வடிவங்கள் அடங்கி கிடப்பதா? வேண்டாம் இந்த இழிநிலை.

நாணத்தையும், அச்சத்தையும் ஒழித்து பெண்கள் நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும் பெற்று ஆண்களைப் போல சமூகத்தை எதிர்நோக்கும் சக்திகள் பெறவேண்டும். ஒவ்வொரு பெண்ணும் ஆண்களைப் போல் கல்வி கற்று வையகத்தில் வளர்ந்து இயங்கும் பேதமைகளை ஒழிக்க வேண்டும். இதுதான் பாரதியார் பெண்களைப் பற்றிக் கண்ட கனவு பாரதியின் கனவை நனவாக்கி விட்டனர். இவ் இருபத்தோராம் நூற்றாண்டுப் பெண்கள் என்றால் மிகையாகாது.

இன்று ஒவ்வொரு பெண்ணுமே தான் கல்வியறிவு பெறவேண்டிய அவசியத்தை உணர்ந்து விட்டாள். இப்படி உணரும் தன்மையால் மட்டும் பாரதியாரின் கனவு நனவாகிவிடவில்லை. படித்த பெண்கள் அத்தனை பேரும் தங்கள் அறிவுத்திறமைக்கேற்ப செயல்புரிந்து நாட்டிற்கும், வீட்டிற்கும் பெருமை தேடித்தரும் வேளையில் தான் பாரதியின் கனவு நனவாகி விட்டதென்று கூற முடியும். இப்போது பெண்கள் தாங்கள் மட்டும் கல்வி கற்று விட்டு இருக்காமல் "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று கல்வியெனும் பெருஞ்சோதியைப் பரப்பியும் வருகின்றனர். இவர்கள் கல்வித்துறைக்கு மாத்திரமின்றி பொருளாதாரத்துறைக்கும் பெரும் பணியாற்றி வருகின்றனர்.

இப்படியாக தற்போதைய காலகட்டத்திலே ஒவ்வொரு பெண்ணும் தங்கள் அறிவுத்திறன் கொண்டு ஆக்கபூர்வமான செயல்களைச் செய்து வருகின்றனர். புரட்சி, புதுமை, மறுமலர்ச்சி இவற்றை காணத்துடிக்கும் இன்றைய உலகில் காலாகாலமாக சமுதாயத்தில் இரண்டாவது இடத்திற்கே தள்ளப்பட்டிருந்த பெண் இனம் தனக்கு உரிமை கோரி ஆணுக்குப் பெண் சரிநிகர் சமம் என்ற உண்மையை நிலைநாட்ட ஒன்றுபட்டு குரல் எழுப்பியதுடன் நில்லாது போர்க் கொடியும் உயர்த்தி விட்டது. இப்படியாக பெண்கள் சமுதாயத்தில் வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கின்றனர். எத்துறையிலும் இக்காலப் பெண்கள் முன்னேற்றம் கண்டு விட்டனர். இனி பெண்கள் சமுதாயத்தில் மென்மேலும் உயர்ந்து செல்வார்கள் என்பதில் ஐயமில்லை.

**திருமதி. ஷோபா ஜெயரஞ்சித்,**
**ஆசிரியை.**

"The misuse of time is a Crim. If you loose your car or house you can always get another. But time is gone forever. Make every minute count."

# அறிஞர் பெர்னாட் ஷா

உலகில் சமுதாயச் சீர்கேடுகளை ஒழித்து உயர்ந்த சமூகப் பண்புகளை உருவாக்கப் பலர் பாடுபட்டுள்ளனர். சிலர் சமுதாயச் சீர்கேடுகளை ஆவேசத்துடன் சுட்டிக்காட்டுவர். ஆனால், மிகச் சிலரோ கேலியும், கிண்டலும் நிறைந்த எழுத்துக்களாலோ, நகைச்சுவையுடன் கூடிய கருத்துக்களாலோ, மனதில் சுருக்கென்று தைக்கும் விதத்தில் வெளிப்படுத்துவர். அறிஞர் ஜோர்ஜ் பெர்னாட் ஷா இதில் இரண்டாம் வகையைச் சார்ந்தவர். வடமேற்கு ஐரோப்பாவில் அயர்லாந்து நாட்டின் டப்ளின் நகரில் 1856ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26ஆம் நாள் ஜோர்ஜ் பெர்னாட் ஷா பிறந்தார். தந்தை ஜோர்ஜ் கார்ஸா மதுபோதைக்கு அடிமையானார். தாய் நுகிண்டா எலிசபெத் இசை ஆசிரியை. ஷாவின் தந்தை சதா மது அருந்துவதால் ஷா பிறந்தபோது குடும்பத்தில் வறுமை நிலவியது. மாதாந்த வீட்டு வாடகை கூடக் கொடுக்கமுடியாமல் குடும்பம் திண்டாடி கடற்கரைப் பகுதியில் உடைந்த படகொன்றில் ஷாவின் குடும்பம் குடியேறியது.

தந்தையின் தீய பழக்கங்கள் பெர்னாட் ஷாவைப் பெரிதும் பாதித்தன. தனது குடும்பக் கஷ்டத்திற்கும், வறுமைக்கும் தந்தையே காரணம் என்பதை உணர்ந்து, அதனையே ஒரு தீய படிப்பினையாகக் கொண்டு தமது வாழ்வில் எந்தத் தீய பழக்க வழக்கங்களுக்கும் உட்படாமல் மிகக் கவனமாக வாழ்ந்தார் ஷா. ஆரம்பக் கல்வி கற்ற போதே பெர்னாட் ஷா இலத்தீன் மொழி கற்றார். 1867 இல் டப்ளின் நகரக் கல்லூரியில் பள்ளிப்படிப்பை ஆரம்பித்தார். நான்கே ஆண்டுகள் தான் அவரின் பள்ளிப்படிப்பு 1871இல் படிப்பைத் தொடர முடியாத காரணத்தால் ஒரு பெருந்தோட்ட முகவராக வேலை பார்த்தார். அப்போது அவரது சம்பளம் 18 ஷில்லிங்கமாகும். தாய் ஒரு இசை ஆசிரியர் என்ற ரீதியில் ஷா இசையைத் திறம்படக் கற்றார். தட்டச்சும் நன்கு தெரியும். சிறந்த புகைப்படக் கலைஞராகவும் இருந்தார். தனது செலவு போக மிகுதிப் பணத்தை சேமித்ததோடு வேறு பல தொழில்களிலும் ஈடுபட்டுத் தனது 35 ஆவது வயதில் ஒரு அச்சகத்திற்கும், தினசரி செய்திப் பத்திரிகை நிறுவனத்திற்கும் உரிமையாளரானார். 1746 இல் தனது நாற்பதாவது வயதில் மின்சார சக்தி பற்றிய ஆய்வில் ஈடுபட்டார். வானில் 'மின்னல்' என்பது இயற்கையாய்த் தோன்றும் மின்சக்தி என்பதை அவர் நிரூபித்துக் காட்டினார். இடிவிழும் பொழுது கட்டிடங்கள் சேதத்திற்குள்ளாவதை தடுக்கும் பொருட்டு இடிதாங்கிச் சாதனமொன்றைக் கண்டு பிடித்தார். குறைவான எரிபொருளுடன் மிகுந்த வெப்பம் தரக்கூடிய புதுவகையான அடுப்பைக் கண்டு பிடித்தார். அவருடைய Poor Richard's Almanac என்கிற பஞ்சாங்கம் விற்பனையில் பல சாதனைகளைப் புரிந்தது. தனது சுய சரிதையைச் சுவைபட எழுதியிருக்கிறார். பல சுவரிசியமான தகவல்களைக் கொண்டது. அந்நூல் அரசியல்துறையிலும் பெஞ்சமின் பிரேங்கலின் கொடிகட்டிப் பறந்தார். தான் சார்ந்த கட்சியில் தன்னை நிலைநாட்டிய அவர் பின் அமெரிக்க சட்டமன்ற உறுப்பினராகி சிறந்த சேவைகளை ஆற்றினார். புகழ்பெற்ற அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தில் கையெழுத்திட்ட பெருந்தலைவர்களில் அவரும் ஒருவர். அத்துடன் காலனிப் பகுதிகளில் தீயணைப்பு நிலையங்களை அமைத்ததும் இவரே. நகரங்கள் தோறும் நகராட்சிக் காவல் நிலையங்களை உருவாக்கியது இவரது மற்றொரு சாதனையாகும். பிரேங்லின்

மிகச் சிறந்த சிந்தனையாளர் ஒழுக்கம், பண்பு, கல்வி, ஒற்றுமை, அரசியல் எனப் பலவற்றிலும் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டிருந்தார். பெஞ்சமின் பிரேங்லின் 1790 ஏப்ரல் 17ஆம் நாள் இவ்வுலகில் இருந்து மறைந்தார்.

இலக்கியங்கள் படித்தார். தான் எழுதியவற்றைப் பத்திரிகைகளுக்கு அனுப்பினார். ஆனால், ஆரம்பகாலத்தில் அவர் அனுப்பிய படைப்புகள் பத்திரிகை அலுவலகங்களில் ஏற்கப்படாமல் திரும்பி வந்தன. அவருடைய நாடகங்களையும் பதிப்பிக்க எந்தப் பதிப்பாளரும் முன்வரவில்லை. ஆனால், அவர் சற்றும் மனம் தளரவில்லை எழுதினார். தொடர்ந்து எழுதிக் கொண்டே இருந்தார். எழுதியவற்றைத் தொடர்ந்து பத்திரிகைகளுக்கு அனுப்பிக் கொண்டே இருந்தார். காலப்போக்கில் அவரின் படைப்புக்களுக்கு வார்த்தைக்கு இவ்வளவு தொகை எனக் கணக்கிட்டு பெருந்தொகைப் பணத்தை அவருக்கு சன்மானமாக வழங்கினார். பத்திரிகைத் துறையினர் சொந்த வாழ்க்கையிலும் நகைச்சுவை ததும்ப வாழ்ந்தவர் ஷா ஒரு முறை புகையிரத நிலையத்தில் உள்ள நகரும் படிக்கட்டில் (எஸ்கலேட்டர்) அவசர அவசரமாய் இறங்கினார். இறங்கிய வேகத்திலே தடுக்கி விழுந்து தரைக்கே வந்துவிட்டார்.

ஆனால், மிகவும் இயல்பாய் எழுந்து நடக்கத் தொடங்கினார். அங்கு நின்றவர்கள் எப்பொழுதும் இந்த மனிதர் இப்படித்தான் போகிறவர் போலும் என நினைத்துக் கொள்ளும் படியாக அந்தக் காட்சி இருந்தது. மிகவும் மெலிவான தோற்றமுடைய ஷாவைப் பார்த்து மிகவும் குண்டான உடல் அமைப்பைக் கொண்ட சக எழுத்தாளர் எச்.ஜி வெல்ஸ் நகைச்சுவையாக இப்படிக் கூறினார். “இங்கே வருபவர்கள் உங்களைப் பார்த்தால் இங்கிலாந்தில் பஞ்சம் நிலவுவதாக நினைப்பார்கள்” எனக் கேலி செய்தார். “சரிதான், அதே நேரம் அந்தப் பஞ்சத்திற்கு யார் காரணம் என்பதும் உங்களைப் பார்த்தால் அவர்களுக்குப் புரியும்.” என ஷா அலட்டிக் கொள்ளாமல் பதிலடி கொடுத்தார்.

ஒரு முறை இங்கிலாந்தில் இருந்து அமெரிக்கா சென்றிருந்தார். அப்பொழுது அவரின் அறிவைக் கருத்திற் கொண்டு அமெரிக்க செனட் (SENATE) சபைக் கூட்டத்தில் பேச அழைத்தார்கள். உள்ளதை உள்ளபடி கூறும் குணம் கொண்டஷா, “இங்கே இருப்பவர்களில் அரைவாசியினர் முட்டாள்கள்” என்று யதார்த்தத்தை வெளிப்படுத்திப் பேசினார். உடனே அவையில் எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. அவர் பேசியதை திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது உடனே ஷா எழுந்தார். ‘சரி’ இங்கே இருப்பவர்களில் பாதிப்பேர் புத்திசாலிகள் என்றார். அமைதியாக, இப்படி இன்னோரன்ன பல சம்பவங்களைக் கூறலாம். பெர்னாட் ஷா அவர்களிடம் காணப்பட்ட இயல்பான நகைச்சுவை உணர்வு அவருக்கு மிகுந்த ஆரோக்கியத்தைக் கொடுத்தது. அவர் மாமிசம் உண்பதில்லை. எப்பொழுதுமே சைவ உணவுப் பழக்கத்தைக் கடைப்பிடித்தார். நீண்டகாலம் வாழ்ந்து தனது 95ஆவது வயதிலேயே மறைந்தார். தினமும் குறைந்தது 5 பக்கம் எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தம்முடைய எழுத்தை மற்றவர் திருத்தம் செய்ய ஒருபோதும் அவர் அனுமதிக்கவில்லை. தம்முடைய குழந்தையை அடுத்தவர் துன்புறுத்த யாரால் சகித்துக் கொள்ள முடியும்? அது போலத்தான் இதுவும் என்பது பெர்னாட் ஷாவின் கருத்தாகும்.

**செல்வி. நா. ராஜிதா**

தரம் - 09V.

# இயற்கையும் இலக்கியமும்

| மொழிகள் | சிறப்புப் பெயர்கள் |
|---|---|
| தமிழ் | பக்தி மொழி |
| பிரெஞ்சு | காதல் மொழி |
| ஆங்கிலம் | வணிக மொழி |
| கிரேக்கம் | சட்ட மொழி |
| இத்தாலி | இசை மொழி |
| உருது | கவிதை மொழி |

**சிறுபொழுது ஆறு**

- மாலை
- யாமம்
- வைகறை
- விடியல்
- நண்பகல்
- ஏற்பாடு

| நூல்கள் | மூல மொழிகள் | திசைகள் | வீசும் காற்றுக்கள் |
|---|---|---|---|
| பைபிள் | கீப்ரு | வடக்கு | வாடைக் காற்று |
| தம்மபதம் | பாளி | தெற்கு | தென்றல் காற்று |
| குர்ஆன் | அரபு | மேற்கு | கோடைக் காற்று |
| | | கிழக்கு | கொண்டல் காற்று |

| இராகங்கள் | பாடப்படும் நேரங்கள் |
|---|---|
| பூபாளம் | காலை நேரம் |
| ஆனந்தா | மதிய நேரம் |
| வசந்தா | மாலை நேரம் |

| மொழிகள் | அகராதியை முதலில் தொகுத்தவர்கள் |
|---|---|
| தமிழ் | கதிரவேற்பிள்ளை |
| சிங்களம் | சோரட்ட தேரர் |
| ஆங்கிலம் | சாமுவேல் ஜோன்சன் |

**பெரும்பொழுது ஆறு**

| | | |
|---|---|---|
| சித்திரையும் வைகாசியும் | - | இளவேனிற் காலம் |
| ஆனியும் ஆடியும் | - | முதுவேனிற் காலம் |
| ஆவணியும் புரட்டாதியும் | - | கார் காலம் |
| ஐப்பசியும் கார்த்திகையும் | - | குளிர் காலம் |
| மார்கழியும் தையும் | - | முன்பனிக் காலம் |
| மாசியும் பங்குனியும் | - | பின்பனிக் காலம் |

செல்வி. ப. தயானி
தரம் - 10P

# ஒரு தோப்புக் குயில்கள்
## (சிறுகதை)

அன்றைய தினத்துக்குரிய தனது கடமையை முடிப்பதற்கு இன்னும் இரண்டு மணி நேரமேயுள்ளது. என்ற மகிழ்ச்சியால், ஆதவன் தன் பொன்னிறக் கதிர்களை ஆதரவாகப் பரப்பிக் கொண்டிருந்தான். மாலையிளம் தென்றல் இதமாக வீசியது. சலசலவென ஒலி எழுப்பியவாறு ஓடுகின்ற கால்வாய் நீரின் நுரை கால்களிலே படும் படியாக காலைத் தொங்கவிட்டபடி சிறிய மதகு போன்ற அமைப்பு ஒன்றில் அமர்ந்தபடி தென்றலின் அசைவுக்கேற்ப நெற்பயிர்கள் நடமிடும் நளினத்தை இரசித்தவாறு அமைதியாக அமர்ந்திருந்தான் ராகவன்.

"சார்............. என்ன செய்யிறீங்க..............? என்ற சத்தம் கேட்டு ராகவன் திரும்பிப் பார்த்தான். கையில் புத்தகங்களோடு சுரேஸ் நின்று கொண்டிருந்தான். "அடடா...........! நேரம் போனதே தெரியல்ல.......... நில்லு சுரேஸ். வாறன்" என்று கூறி விரைவாக எழுந்த ராகவன் நாளை கற்பிக்கப் போகின்ற பாடங்களின் ஆயத்த வேலைகள் சற்றுப் பாக்கி இருக்கின்றன. என்பதையும் தனக்குத்தானே ஞாபகப்படுத்தியபடி நடந்தான்.

ராகவன் துடிப்பான இளைஞன், மிகவும் அழகானவன் நகர்ப்புறத்தில் பிறந்து வளர்ந்து படித்தவன், ஆயினும் கிராமப்புறப் பாடசாலை ஒன்றிற்கே அவன் ஆசிரியராக நியமிக்கப்பட்டிருந்தான். அவன் எதுவித தயக்கமும் இன்றி பூரண சம்மதத்தோடு கிராமப்புறப் பணிக்காகச் சென்றிருந்தான். அவன் விசேடமாகத் தமிழ்மொழியைக் கற்பிப்பவன். பாடசாலை விடுதியில் தங்கியிருக்கின்றான். எல்லா மாணவர்களையும் சமமாக நோக்கும் அவனது பார்வையும் ஒவ்வொரு தனிப்பட்ட மாணவரிலும் கல்வியில் அவன் காட்டும் அக்கறை அன்பு, ஆதரவு என்பன அவன் பால் ஈர்க்கச் செய்தன. தரம் பத்துப் படிக்கும் மாணவன் சுரேஸ் ராகவன் பால் அதிகம் ஈர்க்கப்பட்ட ஒருவன். ஒரு நாள் மொழிப்பாடம் சம்பந்தமான சந்தேகம் ஒன்றைத் தீர்ப்பதற்காக பின்நேர வேளை ஒன்றிலே ராகவனைத் தேடி சுரேஸ் வந்த போது, ராகவன் புன்னகை பூத்த முகத்தோடு அவனை வரவேற்று அவனுக்கு அப்பாடம் சம்பந்தமான பூரண விளக்கமளித்ததுமன்றி, கற்றல் செயற்பாட்டில் சுரேஸ் காட்டும் ஆர்வத்தையும் பாராட்டி மேலும் அவனை ஊக்கப்படுத்தினான். அன்றிலிருந்து பிற்பகல் வேளைகளில் ராகவன் சாரிடம் வந்து அனைத்துப் பாடங்களையும் கற்கலானான் சுரேஸ் இரவில் கூட அவனோடு தங்கியிருந்து படிக்குமளவிற்கு அவனோடு நெருக்கமாகி விட்டிருந்தான் சுரேஸ்.

வயல்வெளியில் இருந்து கால்வாய் ஓர நடைபாதையால் ராகவனும் சுரேசும் நடந்து கால்வாயின் மறுகரை ஓரத்தில் இருந்த பாடசாலை விடுதியை அடைந்தனர். அப்போது பதினாறு வயது மதிக்கத்தக்க ஒரு இளைஞன் ராகவனை நோக்கி வந்தான். "இங்.......க ராகவன் சார் என்றது.............." என்று அவ்விளைஞன் இருக்கும் போதே..........ம்.......நான் தான். உள்ள வாங்க, உட்காருங்க, என்றவன் என்ன விடயம்.........?

என்று கேட்பது போல் அவன் மீது பார்வையைச் செலுத்த "எம் பேரு ரஸாக் பக்கத்துக் கிராமம் உங்களைப் பற்றி அறிந்திருக்கேன் சார். படிப்பு விடயமாக உங்க உதவி எனக்குத் தேவை" என்று ரஸாக் கூறி முடிக்க தாரளமாக............ எப்ப வேணுமென்டாலும் வாங்க, கேளுங்க உதவி செய்ய நான் தயார் என்றான் ராகவன் சிரித்த முகத்துடன் நன்றியுடன் விடை பெற்றுச் சென்றான் ரஸாக்.

சுரேஸ் புத்தகத்தை மேசையில் வைத்து விட்டு பக்கத்தில் இருந்த கதிரையில் மௌனமாக அமர்ந்து கொண்டான். வந்ததுமே படிப்பென்றும் எழுத்துவேலையென்றும் தொடங்கி விடும் சுரேஸ் வழமைக்கு மாறாக மௌனமாக இருந்தது ராகவனுக்கு அதிசயமாக இருந்தது. "என்ன பெரியவரே............! களைச்சிப் போனீங்களோ..........? என்றான் ராகவன் "ஒண்டுமில்ல சார்................ என்றான் சுரேஸ். ஆனாலும் அவனுடைய பார்வையில் ஏதோ ஒரு வினா தென்படுவது போலுணர்ந்தான் ராகவன். "நீ..... என்ன தான் சொன்னாலும், சொல்லுவமா? மறைப்பமா.........? என்று தடுமாறுவது எனக்கு விளங்காதா.........? சும்மா சொல்லு சுரேஸ் என்று! ராகவன் சேர் கூறவே "ம்....கேட்டிட வேண்டியது தான்" என்று நினைத்த படி" சார்..... நீங்க தமிழர் தானே...........! பிறகேன் அந்த முஸ்லீம் பெடியன இங்க வந்து படிக்கச் சொன்ன நீங்க" என்று அவசர அவசரமாகக் கேட்டு விட்டான்.

"ஓ............ கோ......... சங்கதி அது தானா........? இங்க பாரு சுரேஸ் அப்படியெல்லாம் நீ நினைக்கக் கூடாது. நம்மட நாடு சிங்களம், முஸ்லீம், தமிழ், பறங்கியர் என்று வேறு வேறு இனங்களையும் நாம மதிச்சி அன்பா நடத்தணும் அவங்களப் பிரிச்சி வைக்கக் கூடாது. என்று ராகவன் கூறி முடித்து விட்டு சுரேசினது முகத்தை உற்றுப் பார்த்தான். அவனது முகத்திலிருந்த கலவரம் தீந்ததாகத் தெரியவில்லை.

ராகவன் தொடர்ந்தான் "சுரேஸ்.............! எதையோ நினைத்து வீணாக மனதைப் போட்டு அலட்டிக் கொள்ளாதே............! இனக் கலவரங்கள் நாட்டில் நடந்த நேரம் அப்படியான சம்பவங்கள் நடந்தது தான் அதுவெல்லாம் நடக்கக் காரணம் என்ன தெரியுமா........? இப்படியான முரண்பாடான எண்ணங்களை வளர்ப்பது, ஒரு இனத்த மற்ற இனம் ஒதுக்கி நடக்கிறது. இதுகள் தான்........ எங்களோட அவங்களும் அவங்களோட நாங்களும் கதைச்சிப் பழகினாத் தானே அன்பு வளரும். புரிந்துணர்வு வரும், பிணக்குகள் வந்தாலும் பேசித்தீர்க்கலாம், அதவிட்டுத்து நீ சொல்ற மாதிரி இருந்தா திரும்பவும் இப்படியான சம்பவங்கள் தானே நடக்க வாய்ப்பிருக்கும். இல்லையா.......சுரேஸ்.........? " என்றவன். அத்தோடு அந்தக் கதையை தற்காலிகமாக நிறுத்திக் கொண்டான்.

இலங்கையின் இனப் பிரச்சினைகள் ஒரு உடன்பாட்டின் கீழ் நிறுத்தப்பட்டிருந்த காலத்தில் அதாவது 2002 ஆம் ஆண்டில் தான் ராகவனுக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்தது. மீண்டும் பிரச்சினைகள் கலவரங்கள் ஏற்படாது இனங்கள் எல்லாம் நல்லிணக்கத்தோடு வாழுங் காலம் நிரந்தரமாக உதயமாக வேண்டும் என்று விரும்புகின்ற நல்ல உள்ளம் படைத்தவர்களில் ஒரு வகை இருந்ததுடன், அதற்காக தனது துறை சார்ந்து தன்னால் எவ்வளவு பணியாற்ற முடியுமோ அவ்வளவு பணியை அயராது ஆற்ற வேண்டும் எனத் துடிப்பவனாகவும் விளங்கிய ராகவன் அதற்காக முழுமூச்சோடு உழைத்தான்.

மறுநாள் பாடசாலையின் காலைக் கூட்டத்தில் நற்சிந்தனை கூறும் பொறுப்பு ராகவனிடம் விடப்பட்ட போது நற்சிந்தனைக்காக ஒரு சிறு கதையைக் கூறி அதன் கருத்துக்களைத் தெளிவுபடுத்தினான். ஒரு கொய்யாப் பழத்திற்காக முள்ளம்பன்றி, முயல், கிளி என்பன வாதாடியதும் முரண்பட்டு நின்றதுமான வேளையில் புறாவின் ஆலோசனையைக் கேட்டு ஒரு இணக்கப் பாட்டிற்கு வந்து கொய்யாப் பழத்தைப் பகுத்துண்டதுமான கதையை மிகவும் தெளிவுற அழகாகக் கூறி மாணவர்களாகிய நீங்களும் உங்களிடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளை முரண்பாடுகளை பேசித்தீர்த்து ஒரு இணக்கப்பாட்டிற்கு வரப் பழகிக் கொள்வீர்கள் என எதிர்பார்க்கின்றேன் என முடித்தான். மாணவர்கள் அனைவரும் கருத்தைக் கேட்டதும் அமைதியாக நின்றனர்.

ஒரு நாள் பிற்பகல்வேளையில், தன்னுடன் வேலை பார்க்கும் ஒரு நண்பன் வீட்டுக்கு ராகவன் சென்றிருந்தான். சென்று திரும்பும் போது வீதியிலே ரஸாக்கைச் சந்திக்க நேரிட்டது. “ரஸாக் ......... படிக்க வாறதாக சொன்னீங்களே............! பிறகேன்...... வரல்ல.............?” என்று கேட்க ”அது........ வந்து........... சார்...........” பரவாயில்ல....... சொல்லுங்க..........!” தமிழ் ஊருக்குள்ள படிக்கப் போறன் என்கிறாயே உண்ட பாதுகாப்பு பற்றி நீ யோசிச்சுப் பாத்தாயா? எண்டு எங்க உம்மா, வாப்பா சொன்னாக...........! எண்ட கூட்டாளிகளும் சொன்னாக அதனால்தான் படிக்க வாறதப் பத்தின முடிவு என்னால எடுக்க முடியல......... சார்..........” என்று வாடிய முகத்துடன் கவலைதோய்ந்த குரலில் ரஸாக் கூறியது ராகவனை என்னவோ செய்தது. “கவலப்படாதே ரஸாக் நிச்சயம் உன்னோட ஆசை நிறைவேற நல்ல நேரம் வரும்” என்று கூறுவதைத் தவிர உடனடியாக எந்த முடிவும் எடுக்க அவனால் முடியவில்லை.

இன்று ரஸாக் கூறிய வார்த்தைகள் அன்றொரு நாள் அவன், ராகவனின் விடுதிக்கு வந்து சென்ற பின்னர் ரஸாக் விடயமாக சுரேஸ் நடந்து கொண்ட விதம், பேசியவார்த்தைகள் ராகவனின் மனதில் ஒரு சுமையையும் வேதனையும் கொடுத்தது. இவர்கள் இருசாராரதும் மனங்களிலும் பதிந்துள்ள தவறான எண்ணங்களை எப்படியாவது நீக்கி அவர்கள் நண்பர்களாக வாழ வழிசமைக்க வேண்டும். என்ற ஆர்வத்தோடு அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டான்.

நல்ல கற்பனை வளமும், எழுத்தாற்றலும் கொண்ட ராகவனால் தன் எழுத்துக்கள், ஆக்கங்கள் மூலம் சமூகத்திற்கும், கல்விக்கும் பணி செய்ய முடிந்தது. அவன் ஒற்றுமையை வலியுறுத்தும் சிறுவர் பாடல்களை எழுதினான். படங்களை வரைந்து வகுப்பறைகள் தோறும் காட்சிப்படுத்தினான்.

நாளடைவில் மாணவர்களுடைய நடத்தைகளில் நல்ல பல மாற்றங்களைக் கண்டு மன மகிழ்ச்சியடைந்தான்.

என்னடா மகனே........! இப்பெல்லாம் நீ எங்கள மறந்திருக்க பழகிவிட்டாய் கடிதமும் அனுப்புறதில்ல ஒரு வேளை போன் கூடவா உனக்கு பண்ண முடியல்ல.......! என்னவோ அப்பா எங்க எல்லாரையும் மறந்து அங்கேயே தங்கிடாத என்ன? வேளாவேளைக்குச் சாப்பிடு, உடம்ப நன்றாகக் கவனிச்சுக்கோ, இரவில் நன்றாகத்

தூங்கு, பகலில் சிறிது நேரம் ஓய்வெடு. இது ராகவனின் அம்மாவின் அன்பு கலந்த ஆதரவான மடல்.

அதைப் படித்ததும் தனது சேவைக்கு தன் தாயும் உறுதுணையாக இருப்பதாகவே அவனால் உணர முடிந்தது.

மாணவர்களது மனங்களில் ஒற்றுமையையும், அன்பையும் உருவாக்கவும் அதன் மூலம் சமூகத்தில் நல்ல பல மாற்றங்களை ஏற்படுத்தவும் மேலும் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் ராகவன் மேற்கொண்டான். உலகில் நடக்கும் நன்மைகளுக்கெல்லாம் காரணம் அன்பே. அந்த அன்பையே எல்லா மதங்களும் வலியுறுத்துகின்றன. என்பது பற்றி கட்டுரைகளை வரைந்தான். புறாவுக்காக தன் உடலையே கொடுத்த சிவி, மானுக்குப் பிணை நின்ற நபிபெருமான் அன்னப்பட்சிக்காக வழக்காடிய புத்தபெருமான், பாவிகளான மக்களுக்காக தன்னையே சிலுவையில் பலி கொடுத்த இயேசுக்கிறிஸ்து போன்றோரை மேற்கோள் காட்டி எழுதினான்.

மனித உரிமைகளை மதித்தல், சட்டத்திற்கு அடி பணிதல், பிரச்சினைகளுக்கு தீர்வு, ஏனையோரது கலாசாரங்களை மதித்தல் என்பன பற்றியும் பேச்சுவார்த்தை கலந்துரையாடல்கள் மூலம் முரண்பாடுகளைக் களையலாம் என்றெல்லாம் சாதாரண மக்களுக்கு விளங்கக் கூடிய எளிதான மொழி நடையில் கட்டுரைகளை வரைந்தான். அவற்றையெல்லாம் ஒரு நூலாகத் தொகுத்தான். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு புத்தகம் என்ற அடிப்படையில் மாணவர்களுக்கு வழங்கினான். அந் நூல்கள் மாணவர்களின் பெற்றோர்களது கையிலும் தவழ்ந்தன.

ராகவன் வாரத்தில் மூன்று நாட்கள் தனது பாடசாலையிலும், மிகுதி இரண்டு நாட்கள் ரஸாக் கற்கும் முஸ்லீம் பாடசாலையிலும் கற்பிக்க ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டது. ராகவன் வெளியிட்ட நூல்களை ரஸாக் மற்றும் அவனது சமூகத்தினரும் வாசித்தனர்.

அன்று சனிக்கிழமை கடைத்தெருவுக்குச் சென்ற ராகவனுக்கு புதிய நபர் ஒருவருடனான அறிமுகம் கிடைத்தது. அவர் அயற் கிராமத்தில் வசிக்கும் சகோதரமொழி பேசும் ஆசிரியர் ஒருவர் அவரது பெயர் 'திலக்' அவரும் ராகவனும் அறிமுகமாகி உரையாடி நண்பர்களானார்கள். 'திலக்' சார் ராகவனுடன் பேசும் போது ”தமது மாணவர்களுக்கும் தமிழ் மொழி பேசும் இரு சமூகத்தவரோடும் உறவாடி நண்பர்களாக 'வாஞ்சை இருந்தும் 'மொழி' ஒரு பிரச்சினையாக இருப்பதாக அவர் கூறினார். ராகவன் சிங்கள மொழியை கற்றிருந்ததால் அவர்களோடு உறவாடுவது அவனுக்கு இலகுவாயிருந்தது.

(4 வருடங்களின் பின்னர்.....................................................)

“மச்சான் ரஸாக் ............ வெளிய வாடா..............! என்றழைத்தவாறு மூச்சிரைக்க ஓடி வந்தான் சுரேஸ். “என்ன மகன் நடந்திச்சி.......... களைச்சிப்போய் ஓடி வாறீங்க...........

என்று விசாரித்தாள் ரஸாக்கின் உம்மா ஜெஸ்மினா. ரஸாக் எங்க அன்ரி.......? என்று கேட்டு விட்டுத் திரும்பியவன். ரஸாக் - சமிந்த இருவரும் வருவதைக் கண்டான். "டேய்............ மச்சான் சுரேஸ், ராகவன் சாரக் காணல்லே............டா............." என்றான் சமிந்த (தமிழ் மொழியில்) அதச் சொல்லத் தான்டா.......... நானும் ஓடி........... வந்............ "மேற்கொண்டு சுரேசால் எதுவும் பேச முடியவில்லை. மூவரும் கதிகலங்கிப் போனார்கள். சுரேஸ் கண்ணீர் வடித்தான். சமிந்த சோர்ந்து போனான். ரஸாக் வேதனையால் புலம்பினான். அப்போது ரஸாக் வீட்டுத் தொலைபேசி அலறியது. மறுமுனையில் இருந்த நபர் "மூவரையும் அழைத்துத் தனித்தனியாக உரையாடினார். "அவசரமான தந்தி கிடைச்சதால உங்களக் கண்டு சொல்ல முடியாம எனது வீட்டுக்கு வந்து விட்டேன் வருவீங்க தானே சார்...........? நிச்சயமா வருவன் அதற்கு முன்........... வாற பதினாலாந் தேதி எனக்கு திருமணம் நடக்க இருக்கிறதால உங்க எல்லாரையும் நான் அன்புடன் அழைக்கிறன். அழைப்பிதழ் அனுப்பியிருக்கேன். உங்க எல்லாரையும் நான் எதிர்பார்க்கிறேன் என்று கூறி விடை பெற்றான் ராகவன்.


சுரேஸ் - ரஸாக் - சமிந்த ஆகியோரும் அவர்களது பெற்றோர் சகோதரர் உட்பட்ட பெரியதோர் குழுவே ராகவனின் திருமணவிழாவில் கலந்து கொண்டு ராகவனையும், குடும்பத்தினரையும் இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தினர்.

"தனியொரு ஆசிரியரான நீங்க சமுகத்துல இவங்கட மனதுல இவ்வளவு *மாற்றத்த ஏற்படுத்தியிருக்கீங்கன்னா............ எல்லா ஆசிரியர்களும்.......... எல்லோரும்* முயற்சி செய்தா................ எவ்வளவுங்க............... சாதிக்கலாம்" இது ராகவனின் அழகான மனைவி தன் கருவிழிகளை அகல விரித்து ஆச்சரியத்துடன் தன் கணவனைப் பாராட்டியது.

மூவின சமூகத்தினரும் ஓரினம் போல் தன் திருமணத்தில் கலந்து கொண்டதும் தன் மனைவி வதனா தன்னைப் புகழ்ந்து பாராட்டியதும் அவனுக்கு என்றுமே காணாத அழகானதோர் புதிய உலகத்தில் காலடி பதித்தது போலிருந்தது. இந்த மட்டற்ற மகிழ்ச்சியோடு மேலும் அவனது பணி தொடரும்.

**முற்றும்.**

**செல்லத்தம்பி வாணிஸ்ரீ**
**ஆசிரியர்.**



# சுகமான சுமை

பாலனாக நான் பவனி வந்த நாளில்

வண்ண வண்ணக் கனவுகள்

பலித்தவையுள் பள்ளியும் ஒன்றாம்

முன்பள்ளி நாட்களோ பசுமரத்தாணி

பல வண்ணப் புத்தகங்கள் பலவிதமாம்

அதிகம் வேண்டும் என மனம் ஏங்கும்

பள்ளிப்பையும் பானப் போத்தலும் புத்தகங்களும்

பவித்திரமாய் என்மனதில் பரவசமாம்

பள்ளியிலோ ஆண்டாண்டாய் பெருத்தது புத்தகப்பை

புத்தகங்கள் புதுப் பொலிவுடன் கண்ணைக்கவரும்

அறிந்திட ஆசையூட்டும் அழகிய சுமையாம்

ஆசையும் மெல்லத்தான் அகன்றதுவே

ஆறு ஆண்டுகளில் பாடங்கள் கூடிவிட

கனதியான புத்தகங்கள் கனத்துவிட

சுகமான சுமையென உடல் கூன சுமக்கின்றேன்

சுமை குறையும் எனும் சுகமான கனவுடன்



செல்வன். ச. கிரண்ஷாந்

தரம் - 6P

# சிறுவர் உரிமை

சமூகங்களின் எதிர் காலத்தை நிர்ணயிப்பவர்கள் சிறுவர்களே! ஆனால் மிருகத் தன்மை கோரத் தாண்டவமாடும் நாடுகளில் இளமைப்பருவத்தைப் பறி கொடுத்த சிறுவர்களிடம் இருந்து எந்தவகையான எதிர்காலத்தை நாம் எதிர்பார்க்க முடியும்? 13ம் நூற்றாண்டு வரை சிறுவர் உரிமை பற்றி யாரும் அக்கறை காட்டவில்லை. 18, 19ம் நூற்றாண்டுகளில் மேற்குலகம் சிறுவர் தொடர்பில் காட்டிய அக்கறை காத்திரமானதாகும். சிறுவர்கள் விடயத்தில் நாம் அவர்களோடு அன்பாக நடந்து கொள்ள வேண்டும். சிறுவர், சிறுமியரை நமது பிள்ளைகளாக பராமரிக்க வேண்டும்.

போரின் கொடுமைகள் சிறுவர்களையே பெரிதும் பாதிக்கின்றன. இலங்கையில் கடந்த ஒரு தசாப்த காலத்தில் ஒன்றரைலட்சம் சிறுவர்கள் ஆயுத போரினால் கொல்லப்பட்டிருக்கிறார்கள் இதிலும் நான்கு மடங்கானோர் அங்கவீனர்களாக உள்ளனர். எண்ணிக்கையற்ற மேலும் பலர் மிருகத்தனமான விளைவுகளினால் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்னும் ஏராளமான சிறுவர்கள், சிறுமியர்கள் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல நாடுகளின் போரில் படைகளாகவும் இலக்குகளாகவும் சிறுவர்கள் நடத்தப்படுகின்றனர். அணிதிரட்டப்பட்டும் கடத்திக் சொல்லப்பட்டும் சிறுவர்கள் யுத்த களங்களில் ஆயுதம் ஏந்தி போராட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்படல் கடுமையான சித்திரவதை, காணாமல் போதல், பணம் கேட்டுக்கடத்துதல் எனப் பல வடிவங்களில் சிறுவர்களின் மீதான அவலங்கள் நிகழ்கின்றன. யுத்தத்தின் சகலவிதமான அவலங்களிற்கும் முகம் கொடுக்கும் சிறுவர்களின் வாழ்விற்கு உரிமை மறுக்கப்படுகின்றது. சிறுவர் உரிமைகளுக்காகப பாடுபடுபவர்கள் சிறுவர்கள் தொடர்பில் சமூதாயத்தின் மனப்பாங்கை கருத்திலெடுத்தல் அவசியம். சிறுவர் தொடர்பான சமூதாயத்தின் மனப்பாங்கானது பொருளாதார, சமூக, அரசியல், கலாச்சார, காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றது.

19ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் குழந்தை ஒரு சொத்தாகவே காணப்பட்டது. எனவே அதை விற்கலாம் அதை கைவிடலாம், அல்லது துஸ்பிரயோகம் செய்யலாம் சிறுவர் தொடர்பான நீதி அமைப்புக்கள் இவற்றினை உள்வாங்கி சிறுவர் தொடர்பான வன்முறைகளிற்கு சட்டங்கள் மூலம் முற்றுப் புள்ளி வைத்தன. இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் சிறுவர்களைத் தனித்த பிரிவினராக ஏற்றுக் கொள்ளும் பாரிய மாற்றம் ஏற்பட்டது.

1949ம் ஆண்டில் ஜெனிவா சமவாயம் ஆயுதப் பிணக்குகளில் சிறுவர்களின் நிலை பற்றி விசேடமாக குறிப்பிட்டு 15 வயதிற்கு உட்பட்ட சிறுவர் எவரும் போரில் பங்கு கொள்ளலாகாது என்று தடை விதித்துள்ளது. 1960 களின் பிற்கூற்றில் யுனிசெப்

ஆரம்பித்த புதியதொரு முயற்சி சிறுவர்களிற்கென சமாதானப்பிரார்த்தனைகளை உண்டாக்கியமையாகும் போர் நடக்கின்ற நாடுகளின் குறுகிய கால போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி சிறுவர்களுக்கென தடுப்பு மருந்துகளை ஊட்டக்கூடிய சூழ் நிலையை யுனிசெப் ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

லெபனான், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் யுனிசெப் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு சமய, இனப்பின்னணிகளைச் சார்ந்த சிறுவர்களைஒன்று சேர்த்து அவர்களிடையேயுள்ள வேறுபாடுகளை விளக்கி அவற்றை மதித்து வளரப்பயிற்றும் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. இன்று சிறுவர்களின் கருத்துக்கள், சமூதாயத்துடன் மக்களுடனான உறவுகள் தார்மீக ஆசாரங்கள் சமூதாயத்தையும் வாழ்க்கையையும் விளங்கிக் கொள்ளும் மனப்பாங்கு யாவும் பாதிக்கப்படுகின்றன.

1924 இல் ஐக்கிய நாடுகள் அவையினால் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் பசியில் இருந்து ஏனைய பொருளாதாரத் தேவைகளிலிருந்தும் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும். என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. 1948 ஆம் ஆண்டு சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. ஐக்கிய நாடுகள் சபை 1979 ஆம் ஆண்டை சிறுவர் ஆண்டாக பிரகடனப்படுத்தி 1999 இல் சிறுவர் உரிமைகள் பிரகடனத்தின் இருபதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.

1989 ஆம் ஆண்டின் பொதுச்சபை சிறுவர் உரிமைகள் சமவாயத்தை அங்கீகரித்தது. சர்வதேச சிறுவர் தினம் ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது.

**செல்வி. கி. ஜோயன்னா**
தரம் - 8p

*"தாழை சஞ்சிகை ஆசிரியர்களதும் மாணவர்களதும் திறமைகளை வெளிக்காட்டும் களமாக மிளிர வாழ்த்துக்கள்!"*

**திரு. N. திரவியம் (ஜெயம்)**
கௌரவ மாகாண சபை உறுப்பினர்,
கிழக்கு மாகாணம்.

# விலங்குடைத்த சிறு கரங்கள்

'அ' கரம் படிக்கும் பருவம்
கரத்தில் பேனா பிடிக்கும் பருவம்
வாழ்வை தேனாக மாற்றும் பருவம்
சிலர் வீணாய்ப் போகும் பருவம்

பேனா பிடித்தனர் சில நாள் மட்டுமே
பேராயுதம் தாங்கினர் பல நாள்
தூக்கிப் போட்டனர் இப்போது
சீர்தூக்கி விட சேர்ந்தே வாருங்கள்

ஆயிரம் பறவைகள்
சிறகிழந்து தவிக்கிறது
சிறகாய் இருந்து பறக்க வைப்போம்
சிந்திக்காது ஓடி வாருங்கள்

மலர் போன்ற மனம்
சருகாய் காய்ந்து கிடக்கிறது
சாந்தமாய் பேசி
சாதனையின் பக்கம் அழைத்துச் செல்லுங்கள்

நாட்டின் நாளைய தலைவர்கள்
என்ற நம்பிக்கை ஊட்டுங்கள்
வெற்றி பெற்ற தேசத்தை
சிறுவர்களுக்காக கட்டியெழுப்ப கை கொடுங்கள்

**செல்வி. ஜெ. டயனி**
தரம் - 12 கலை

# அனர்த்தங்களை முன்னெச்சரிக்கை செய்ய விலங்குகள் தயார்! ஏற்றுக்கொள்ள விஞ்ஞானம் தயாரா?

மனிதன் ஒரு சிறந்த விலங்கு என அறிவியல் கருதுகின்றது. இயற்கையில் விலங்குகள் ஒன்றி வாழ்ந்து அவ்வியற்கையிலிருந்து தப்பிப்பிழைப்பது போல் இயற்கையுடன் ஒன்றி வாழும் மனிதனும் இயற்கையில் ஏற்படும் அனர்த்தங்களை முன்னுணர்ந்து வாழ்ந்தான். இருப்பினும் தற்காலத்தில் ஏற்பட்ட பல மாற்றம் காரணமாக மனிதன் இரண்டு திறன்களை இழந்துவிட்டான் ஒன்று விலங்குகளின் அசாதாரண நடத்தைகளை அவதானித்து இயற்கையை அறிதல், இரண்டாவது முன்னுணரும் ஆற்றல் ஆயினும் இன்றைய காலம் வரை இயற்கை அனர்த்தம் ஏற்படுவதற்கு முன் அதை முன்னுணர்ந்து துலங்கலைக் காட்டி தன்னை தற்காத்துக் கொள்ளும் முயற்சியை தற்போதும் விலங்குகள் செய்து வருகின்றன.

அந்த வகையில் நோக்கும் இயற்கை அனர்த்தங்களான மழை, புயல், புவியதிர்வு, சுனாமி போன்றவற்றை விலங்குகள் முன்கூட்டியே அறிந்து கொள்கின்றன. இதற்கு பல நாடுகளில் பல சான்றுகள் உள்ளன. அதிலும் முக்கியமாக சுனாமி அனர்த்தத்திலிருந்து தாம் தப்பிக்கொள்ள விலங்குகள் பல துலங்கல்களை காட்டுகின்றன.

அந்த வகையில் நோக்கும் போது யானை, மான், நரி, சிறுத்தை போன்ற பல வன விலங்குகள் யால தேசிய பூங்காவில் காணப்பட்ட போதிலும் சுனாமி அனர்த்தத்தினால் பல மனித இழப்புக்கள் ஏற்பட்ட போதிலும் வன விலங்குகள் இழப்பு மிக குறைவாகவே காணப்பட்டது.

அத்தோடு இலங்கையில் உள்ள செந்நாரைகள் தாழ்நிலத்தில் முட்டையிடுவதைத் தவிர்த்ததுடன் மிருககாட்சிசாலையில் உள்ள விலங்குகள் கூடுகளில் பதுங்கிக் கிடந்தன. இவ்வாறு இந்தியாவிலும் கடலூர் கரையோரத்தில் சுனாமி அனர்த்தத்தினால் ஆயிரக்கணக்கானோர் இறந்த போதிலும் ஆடு, எருமை, நாய்கள் போன்ற விலங்குகள் பாதிப்பின்றி தப்பியது எனக் கூறப்படுகின்றது. மேலும் மட்டக்களப்பு நகரில் சுனாமி அனர்த்தம் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் கல்லடி பாலத்தை கடந்து ஆயிரக்கணக்கான பாம்புகள் நகர்ந்தமையும் இதற்கான 'சான்றாகும்.

மேலும் சீனாவில் 1975ம் ஆண்டு ஒரு மில்லியன் குடித்தொகையுள்ள கன்சென் மாகாணத்தில் பூகம்பத்திற்கு சில நாட்களுக்கு முன்னரே வெளியேறும்படி உத்தரவிட்டுள்ளனர். அப்பொழுது அங்கு 7.3 ரிச்சட் அளவில் பூகம்பம் ஏற்பட்டது. இதன் போது மிகக் குறைவான தொகையினரே பாதிக்கப்பட்டனர். இதற்கு விலங்குகளின்

அசாதாரண நடத்தையே காரணம் எனக் கூறப்படுகின்றது. இதைத் தவிர மிக அண்மைய கடல்கோள் அனர்த்தம் வருவதை அறிந்த மிகப் பழைமையான மனித இனத்தின் எச்சமாக இன்றளவும் உள்ள அந்தமான், நிக்கோபார் தீவுகளில் உள்ள ஆதிக்குடிகளான ஜாவாஸ், ஏன்சீஸ், சொம்பின்ஸ, பெரிய அந்தமானிஸ் போன்றோர் காடுகளுக்கு ஓடி தப்பி தம்மை பாதுகாத்துக் கொண்டனர் என இந்திய மானுடவியல் அளவைத் திணைக்கள அதிகாரிகள் கூறியுள்ளனர்.

விலங்குகள் எவ்வாறு இவ்வாறான விடயங்களை அறிந்து அசாதாரண நடத்தையை காட்டுகின்றன என்பதை ஆராய்ந்தோமானால் பல உண்மைகள் புலனாகும் அந்த வகையில் "விலங்குகள் உணர்வுள்ளவை அவை வெள்ளம் அல்லது பேரலைகள் தம்மை நோக்கி வருவதை தொலைவிலே கேட்டிருக்கக் கூடும். என்கிறார் டெபிமாட்டர். இவர் இந்தோனேசியா தீவுகளில் புவி பாதுகாப்பு செயற்திட்டத்தில் பணி புரிகின்றார். அத்துடன் அவர் அதிர்வுகள், காற்றழுத்தில் ஏற்படுத்திய மாற்றத்தை கூட அவை புலனுறுப்புக்களால் உணர்ந்திருக்கக் கூடும் என்கிறார். அத்துடன் "இயற்கை அனர்த்தத்தை விலங்குகள் அறிகின்றன அவற்றுக்கு ஆறாம் அறிவு உள்ளது" என்கிறார். இலங்கை வனவிலங்குகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் H.D ரத்னாயக்க அதிர்வுகள், நிலநடுக்கங்கள், ஒலி அலைகள் என்பவற்றை உணரும் சக்தி விலங்குகளுக்கு உண்டு மனிதர்களுக்கு இல்லை. மனிதக் காதுகளால் உணரமுடியா குறைந்த மீடிறன் உள்ள ஒலிகளை யானைகள் கேட்கவல்லன. குறைந்த அதிர்வெண் உடைய ஒலிகள் மூலமே அவை தமக்குள் தகவல்களை பரிமாறிக் கொள்கின்றன. என்கிறார் பிரான்சின் தேசிய அறிவியல் ஆய்வு நிலையத்தின் (CNRS) விலங்கு நடத்தை ஆய்வாளர் கேல் பிரிட்ஸ்.

விலங்குகள் இவ்வாறு அறிவது அறிவியலுக்கு புதிரான விடயம் இவற்றை விளக்க பல கொள்கைகள் முன்வைக்கப்படுகின்றன. அதில் ஒரு கொள்கையின் படி மனிதர்கள் உணர முன்னரே பூமி அதிர்வதை விலங்குகள் அறிகின்றன. இன்னொரு கொள்கையின் படி அவை மின்னேற்ற இறக்கங்களை இனங்காணுகின்றது. பிறிதொரு கொள்கையின் படி புவியிலிருந்து வெளியிடப்படும் வாயுக்களை இனங்காணுகின்றது என கூறப்படுகின்றது.

ஷெல்டிராக் (Sheldrake) எனும் ஆய்வாளர் நில அதிர்வுகளுக்கு முன்னரான விலங்கு நடத்தையில் ஆய்வு செய்பவர். இவர் 1994 கலிபோர்னியா 1999 துருக்கி நில நடுக்கங்களை தமது துறை சார்ந்து ஆராய்ந்தவர். இவர் "எல்லா நில நடுக்கங்களின் போதும் விலங்குகளின் விசித்திரமான நடவடிக்கைகள் ஆராயப்பட்டன. அதில் நாய்கள் இரவில் ஊளையிட்டுள்ளன. கூண்டில் உள்ள பறவைகள் அமைதியற்று காணப்பட்டுள்ளன. பூனைகள் பதுங்கியுள்ளன என்று கூறினார். மேலும் இவர் இன்னும் இணையத்தளமோ அன்றி தொலைபேசி சேவையொன்று இதற்கென அமைக்கப்பட்டு விலங்குகளின் அசாதாரண நடத்தைகளை கண்ணுறும் போது பொதுமக்கள் அதை

அறிய கூடியதாக இருப்பதுடன் அந்தத் தகவலின் உண்மைத் தன்மையை அனுப்பியவரின் நம்பகம் அனுப்பி வைத்த இடம் என்பவை கணனி மூலம் பகுத்தாயப்பட்டு வித்தியாசமான நடத்தைகள் தோன்றும் போதெல்லாம் நிலநடுக்க அளவீடுகளையும் உடன் வைத்து புவி நடுக்கத்தை எதிர்வு கூறும் எச்சரிக்கை நிலையத்தை அமைக்க முடியும் என அவர் பிரேரிக்கின்றார்.

இவ்வாறு ஒரு சாரார் இயற்கை அனர்த்தங்களை அங்கிகள் முதலில் இனம் காணுகின்றன என்கின்ற போதும், அமெரிக்க புவிச் சரிதவியல் அளவைத்துறை ஐயத்தை தெரிவிக்கின்றது. இது புவி நடுக்கத்திற்கும் விலங்கின் குறிப்பான ஒரு நடத்தைக்குமிடையிலான மீளச் செய்யத்தக்கதான தொடர்பு நிலைநாட்டப்பட வில்லையென்கிறது. அது எமக்கு தருபவை துண்டு துண்டான நிகழ்வுகள் மட்டுமே, விலங்குகள் பலவற்றுக்கு துலங்கலை காட்டும் அவை பசி, பாதுகாப்பு, உறவு, எதிரி என்பனவாகும். எனவே உயர்மட்ட எச்சரிக்கை சமிக்ஞையை பெற ஒரு கட்டுப்பாட்டை பெற்று ஆய்வு செய்வது கடினம் என்கிறார்கள் அந்நிலைய ஆய்வாளர்கள்.

எனினும் உலகெங்கிலும் உள்ள ஆய்வாளர்கள் விலங்குகளை முன்னெச்செரிக்கை செய்யும் சாதனமாகக் கொள்வதற்குரிய அடிப்படையை பெறும் நோக்கில் தொடர்ந்தும் ஆய்வுகளை முன்னெடுத்த வண்ணம் உள்ளனர்.

இவ்வாறு இரு வேறு கருத்து வேறுபாடு காணப்படுகின்றபோது மக்களாகிய நாம் என்ன செய்வது என்ற எண்ணப்பாடு தோன்றுகிறது அல்லவா? அதற்கான விடை ஒன்று தான் அதாவது மனிதன் இயற்கையை விட்டு விலக விலகவே இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றது எனவே இவ் அனர்த்தம் நிகழக்கூடாது எனின் இயற்கையோடு நெருங்கி வாழ்வதுடன் இயற்கையை அதன் பாட்டில் விட்டு விட்டு அதற்கிணங்கி வாழ்வதேயாகும்.

**தொகுப்பு**
**செல்வி ஆ. யாழினி** (ஆசிரியை)

***"Birds don't swim, fish don't climb trees & cows don't fly. Enjoy your natural abilities & develop year own style, as there is only ONE you"***

# இலங்கையின் பொருளாதார நிலையும் அதன் வீழ்ச்சியும்

இலங்கையின் பொருளாதார நிலையானது ஆரம்பகாலத்தில் ஏற்றுமதி, இறக்குமதி என்பவற்றோடு தொடர்புடையதாக அல்லாமல் பண்டமாற்றோடு தொடர்புடையதாக காணப்பட்டது. இதனால் அக்காலத்தில் பொருளாதாரம் தன்னிறைவு கொண்டதாக காணப்பட்டது. இதனால் அக்காலத்தில் அயல் நாடுகளில் கடன் உதவி பெறுகின்ற தேவை இருக்கவில்லை. இப் பொருளாதாரம் விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டது. இதனால் இலங்கை ஆரம்பகாலத்தில் "கீழைத்தேய தானியக் களஞ்சியம்" என வெளிநாட்டவர்களால் அழைக்கப்பட்டது.

பின் ஆங்கிலேயரின் வருகையின் பின் இப்பொருளாதார நிலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமுறை தேயிலை பயிரை அடிப்படையாகக் கொண்டதாக மாற்றமடைந்தது. இதன் மூலமே அந்நியச் செலவாணி அதிகமாகக் கிடைத்தது. இதன் மூலம் பொருளாதாரம் மேன்மை அடையத் தொடங்கிற்று.

எக்காலக்கட்டத்திலும் வீழ்ச்சியடையாத அளவிற்கு பொருளாதாரமுறை இலங்கையில் தன்னிறைவு பெற்று காணப்பட்டது. இது தவிர வெளிநாட்டவர் வருகையின்பின் ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதாரமும் ஆரம்பமாகலாயிற்று. வெளிநாட்டவர்களின் பொருளாதார வர்த்தக மையமாக இலங்கை காணப்பட்டது.

அரசாங்காத்தினால் மட்டும் பொருளாதாரத்தில் தன்னிறைவு காண முடியாததால் தனியார் மயப்படுத்தலின் மூலமும் பொருளாதாரத்தில் தன்னிறைவு காண முயற்சித்தது. இயந்திர மயமாக்கலின் கீழ் பொருளாதாரமுறை திசை திரும்ப தொடங்கியது. இவ்வாறான பல்வேறு காரணிகளால் இலங்கையின் பொருளாதாரம் உச்ச நிலையை அடைந்திருந்தது.

இவ்வாறு இலங்கை பொருளாதார முறையில் உச்சகட்டத்தை அடைந்திருந்த போதும் அது தற்காலத்தில் படிப்படியாக வீழ்ச்சியடைய தொடங்கிற்று. தற்பொது இலங்கையில் ஒரு நிலையான வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாமலே இருக்கிறது.

இதற்கு முக்கிய காரணமாக உள்நாட்டு யுத்தமே திகழ்கிறது. அதாவது தற்காலத்தில் பொருளாதார நிலையையும் அதன் வளர்ச்சியையும் கவனிப்பதை விடுத்து

போரும் அதன் மூலம் கிடைக்கும் வெற்றியையுமே கவனிப்பதாக இன்றைய அரசு காணப்படுகின்றது.

அது மட்டுமல்லாமல் ஏற்றுமதிகள் மூலமும் கைத்தொழில்கள் மூலமும் கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டு போர்ச் செலவுகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படுகிறது. மேலும் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்பவதற்கான முயற்சிகளோ, மாற்று வழிகளோ இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த யுத்தச் செலவினங்களுக்காக வெளிநாடுகளிடமிருந்து யுத்த உபகரணங்களையும், கடன் உதவிகளையும் பெற்று ஒரு கடனாளி என்ற அந்தஸ்தை இலங்கை பெற்றுள்ளது.

இதனால் பொருளாதார நிலை ஆரம்பகாலத்தைவிட மிகவும் வீழ்ச்சியடைந்ததாகவே காணப்படுகின்றது. ஆரம்பகாலத்தோடு ஒப்பிடுகையில் பொருளாதாரநிலை தற்காலத்தில் இலங்கையில் சரிவடைந்துள்ளது எனக் கூறமுடியும்.

பொருளாதார நெருக்கடி மிகுந்தகால கட்டமாகவே தற்காலம் கருதப்படுகிறது. இத்தகைய பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதாயின் சுயதொழில் வாய்ப்புக்களையும், வேலையில்லா பிரச்சினைகளையும் தீர்த்து, வீழ்ச்சியடைந்த பொருளாதார நிலையங்களை மீள்கட்டுமானம் செய்வதன் மூலமும் இலங்கையில் பொருளாதார நெருக்கடியை தீர்த்து எதிர்காலத்தில் இலங்கையின் பொருளாதாரத்தை எழுச்சி பெறச் செய்யலாம்.

**செல்வன். ஜீ. பால்ராஜ்,**
தரம் - 13 (2010)
கலைப்பிரிவு.

*Dr Martin Luthar king Fr. Said "We will remember not the worlds of our enemies but the silence of our friends"*



# மனிதன் மனிதனாக வாழ 18 விடயங்கள்

01. மிகவும் மதிக்க வேண்டியவர்கள் - தாய், தந்தை

02. மிக நல்ல நாள் - இன்று

03. மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு



04. மிகவும் வேண்டியது - பணிவு

05. மிகவும் வேண்டாதது - வெறுப்பு

06. மிகப் பெரிய தேவை - நம்பிக்கை

07. மிகக் கொடிய நோய் - பேராசை

08. மிகவும் சுலபமானது - குற்றம் காணல்

09. கீழ்த்தரமான விடயம் - பொறாமை

10. நம்பக் கூடாதது - வதந்தி

11. ஆபத்தை விளைவிப்பது - அதிக பேச்சு

12. செய்யக் கூடாதது - நம்பிக்கைத் துரோகம்

13. செய்யக் கூடியது - உதவி

14. விலக்க வேண்டியது - சோம்பேறித்தனம்

15. உயர்வுக்கு வழி - உழைப்பு

16. நழுவ விடக் கூடாதது - வாய்ப்பு

17. பிரியக் கூடாதது - நட்பு

18. மறக்கக் கூடாதது - நன்றி

**செல்வி. அ. அகலியா**
**தரம் - 8V**

# தமிழனின் அவலம் இன்று ............

" அம்மா........... அம்மா............ இப்ப நேரம் என்ன"

"ஏன்டா நீ எழும்பி பார்க்கிற தானே ஏன் என்ன கரைச்சல் படுத்திரா......... விடிஞ்சி எவ்வளவு நேரம் இன்னும் அக்காளுக்கும் தம்பிக்கும் தூக்கமா...........

"அம்மா தம்பி தானே ஸ்கூல் போகணும் என்ன ஏன் சும்மா எழுப்புற.

அம்மா, தம்பி, தமக்கை என மூன்று உன்னத உயிர்களை கொண்ட குடும்ப தலைவன் அற்ற மகிழ்ச்சி நிறைந்த குடும்பம் அந்த முல்லைத்தீவு மாவட்டத்தில் ஓர் எல்லையில்,

தங்களுக்கென்று ஒரு வீடு தங்கள் வருமானத்துக்கென இரு ஏக்கர் கொண்ட வயல்வெளி, அக்காளின் பொழுது போக்கிற்காக ஒரு சில்லறைக் கடை இது போதும் அவர்கள் வாழ்ந்து முடிக்க.

அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரதேசமோ எப்பொழுதும் எங்கும் கொண்டாட்டமும், குதூகலமும் நிறைந்ததாகவே காணப்படும் ஆலயங்களில் உள்ள தெய்வம் அவ்வூர் மக்களுக்காகவே உள்ளது போன்று திருவிழாக்களும் களை கட்டும்.

"ஆஹா என்ன கவர்ச்சி என்ன அற்புதம் பார்க்க திகைக்காத இன்பம் ஊட்டும் பிரதேசம் என்றால் அது முல்லைத்தீவு பிரதேசம் தான்."

அன்றைய நாள் சூரியன் கண்விழித்து சிரிக்க தொடங்கி விட்டான். அகிலன் பாடசாலை செல்ல அவசரமாக ஆயத்தமானான். அவனது அக்கா நிசாந்தினியோ தன் சில்லறைக் கடையை திறக்க அதிகாலையே சென்று விட்டாள்.

தாய் தங்கமோ நிசாந்தினி எழும்பும் முன் எழுந்து வீட்டு வேலைகளை எல்லாம் முடித்து விட்டு அகிலனை பாடசாலைக்கு அனுப்பி வைப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவாள்.

என்னமோ தெரியாது தாய்க்கே தன் பெண் பிள்ளையை கவனிப்பதை விட ஆண் பிள்ளையைப் பாராமரிப்பதிலே அதிக ஆர்வம். "ஆண் பிள்ளை என்றால் அதுவும் தகப்பன் இல்லா ஆண்பிள்ளை என்றால் சொல்லவா வேண்டும்"

பிள்ளைகள் தங்கள் தங்கள் கடமைகளில் ஈடுபட்டதும் தங்கம் தன் வயல் வேலையை பார்க்க சென்று விடுவாள் அதன் மூலம் தான் தங்கள் வயிற்றுப் பசியை போக்குகின்றனர். அவள் மீண்டும் வீடு திருப்புவதற்கே மாலையாகிவிடும். அதற்குள் இரு பிள்ளைகளும் வீடு திரும்பி விடுவார்கள்.

அவர்கள் இருவரும் வந்ததும் கூட தாய் வர நேரம் போனால் இருவரும் தாயை தேடி சென்று விடுவார்கள். இது இவர்கள் இருவரினதும் பழக்கமாகி விட்டது. அவ்வாறு தான் அன்றும் தங்கம் வயல் வேலை செய்ய புறப்பட்டாள்.

"என்ன தங்கம் வயலுக்கா புறப்பட்டாய்" "ஓம் கமலம் அது இல்லாட்டி என்ர பாடு பெரும் பாடு ஆகிவிடும்." "சரி சரி நீ உன்ட வேலையை பாரு நான் ஆஸ்பத்திரி வரையும் போயிட்டு வாறன்" என்று எதிர்வீட்டு கமலம் சொல்லிய படியே நடையை கட்டினாள்.

காலை முழுமையாக பத்து மணி கூட ஆகியிருக்காது தங்கம் வயலை சென்றடைந்தாள். பின் அவள் தன் வேலைகளை கவலை மறந்து வழமையாக செய்வதை போல செய்ய தொடங்கினாள்.

திடீர் என்று தூரத்தில் எங்கேயோ வெடிப்பு சத்தம் ஒன்று "டுபீர்" என்றது. அச் சத்தம் தங்கத்தின் காதுகளை சென்றடைந்ததும் அதை அவள் மழைக்கு இடி முழங்குவதாக எண்ணி தன்னுள்ளே. "அய்யய்யோ இன்னும் வேலை செய்ய ஆரம்பிக்கவே இல்ல அதற்குள் மழையா என்ன செய்யிறது.......... என்று எண்ணிக் கொண்டே அவசர அவசரமாக வேலையை முடிக்க தயாரானாள்.

அவள் காதுகளை சென்றடைந்த சத்தம் மீண்டும் மீண்டும் எதிர் ஒலிக்க தொடங்கியது. மனதில் சிறுபயம் ஏற்பட்டாலும் அதனை அசண்டையாகவே தங்கம் எடுத்துக் கொண்டாள்.

இதுக்கிடையில் அகிலன் பாடசாலை சென்று அவன் பாடங்களை அறிவு பூர்வமாக கற்றிருந்த வேளையில் நேரம் பத்தரை மணியை தட்டியது. மாணவர்களை பசி உலுக்க இடைவேளை நேரமும் வந்தது.

"அகிலன் பசிக்குதுடா கெதியா வா சாப்பிட போவம்" என்றான் அவன் நண்பன். "ஏன்டா அவசரம் முதலில் படிப்ப பார்ப்பம் பிறகு சாப்பிடலாம் தானே" என்று இருவருமே பேசிய படி பாடசாலைக்கே என்று அமைந்த ஆலமர நிழலில் இருந்து சாப்பிட தொடங்கினர்.

திடீர் என்று " அய்யோ அம்மா என்ன காப்பாத்துங்க" "ஓடுங்க ஓடுங்க நிக்க வேணாம்" "ஒழிஞ்சிருங்க ஒழிஞ்சிருங்க" என பல குரல்கள் ஒலி எழுப்பின. அகிலனுக்கோ என்ன செய்வதென்றே தெரியாமல் ஒரே பதட்டமாக இருந்தது. அவனும் அவன் நண்பனும் கைகளை தூக்கிப் பிடித்தப்படி தமது வகுப்பறைக்குள் சென்று மேசையின் அடியில் ஒழிந்து கொண்டனர்.

சில நிமிடங்களின் பின் "டுபீர், டுபீர்" என்று செல்களின் தாக்குதல் பல மாணவர்களின் உடல்களை பதம் பார்க்க தொடங்கின.

அய்யோ! என்ன செய்வது அந்த அலறல் ஒலிகளை கேட்கவே மனம் பதைக்கிறதே எத்தனை சிறுவர் சிறுமியர் அதன் வேதனையை அனுபவித்து இறந்திருப்பார்கள். சுமார் இரண்டு மணி நேரம் பாடசாலை வளவுக்குள் என்ன நடந்தது என்று சொல்ல தெரியாதபடி தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

விதியின் சதியில் பலர் இறக்க கடவுளின் துணையில் அகிலனும் சில மாணவர்களும் தாக்குதலில் இருந்து உயிரை காப்பாற்றி கொண்டார்கள்.

இரு மணி நேரம் கழிந்ததும் அகிலன் வெளியில் வந்து பார்த்த போது அவன் நண்பர்கள் மட்டும் அல்ல அவனுக்கு கல்வி போதித்த வித்துவான்கள் கூட இரத்தம் சொட்ட சொட்ட மடிந்து கிடப்பதை பார்த்தான்.

இவற்றையெல்லாம் பார்த்தவுடன் அவனுக்கு அவன் குடும்பம் மட்டும் தான் ஞாபகத்துக்கு வந்தது. உடனே அவன் மனதில் "அய்யோ என் தாய், சகோதரி என்ன ஆனார்கள்" என்ற எண்ணமே ஓடிக் கொண்டிருந்தது.

அவன் நேரத்தை அழுவதில் வீணடிக்காது தன் வீட்டை நோக்கி ஓடினான். அங்கே அவன் வீடு மட்டுமல்ல சகோதரியின் நினைவுச் சின்னமான சில்லறை கடையும் கூட குண்டு தாக்குதலுக்கு இரையானது. இரையாகியது அவன் குடியிருந்த வீடோ அல்லது சில்லறை கடையோ அல்ல அகிலனின் மனம் தான்.

தன் தாய்க்கும் சகோதரிக்கும் என்ன நடந்ததோ என்று தெரியமால் சிதறுண்டு போனான். உயிரற்று பிணம் கிடப்பதை போன்று நிலத்தில் பாய் போல தன் உடலை மண்ணில் சுமத்தி கிடந்த அகிலனை இரு கைகள் மெதுவாக வந்து அணைத்து கொண்டன.

"யார் அது, அவன் தமக்கையார் தான், அவள் கைகள் தான்'

இறப்பதற்கு இருக்கும் உயிரை சாவா மருந்து கொடுத்து காப்பது போல அகிலனையும் அவன் சகோதரி காத்துக்கொண்டிருந்தாள். அகிலனும் தன் தமக்கையை அணைத்துக் கண்ணீரை சொரிந்தான்.

"அம்மா! எங்க அக்கா ஏன் என்ன பாக்க அம்மா இன்னும் வரல்ல சொல்லுக்கா..............." என்ற படி அவன் தன் தமக்கை மடியில் தலை சாய்த்தான்.

தமக்கை தன் தாயை பற்றி சிந்தித்த படியே "அகிலன் வா போய் அம்மாவ வயலில் தேடலாம்..............." என்று கூறியபடி கைகளில் அகிலனை பிடித்துக் கொண்டு வயலை நோக்கி புறப்பட்டனர்.

மகிழ்ச்சியும் உல்லாசமும் நிறைந்த அந்த பிரதேசம் தோறும் இரத்த மழையும், உடல்களின் ஆராதனையும் மட்டுமே நிறைந்தது.

கருவறையில் இருக்க வேண்டிய தெய்வம் வீதியில் கவனிப்பார் அற்று கிடக்கும் நிலை யாரால் ஏற்பட்டதோ தெரியவில்லை. "ஏன் இந்த அவலம் அய்யயோ நான் என்ன செய்வேன்".

வயலை நோக்கி சென்ற இரு சகோதரர்களும் பிணங்களையும், இரத்த குருதிகளையும் தாண்டி வயல் வெளியை சென்றடைந்தனர்.

தாய் இறந்து கிடப்பதை தன் தாய் மண்ணில் காண்பது என்ன கொடுமை தாயை பற்றி சொல்லி அழ வார்த்தையோ நூறாயிரம் இருந்தும் ஒரு சில வார்த்தைகள்.

"என் தாயே உன் உடல் பயிரோடு பயிராக கிடக்கிறதே, நீ வாடி வதங்குகிறாயே இறப்பு கூட உன்னை தூய்மை படுத்தவில்லையே......... என்று அழுகிறாள் நிசாந்தினி.

"அம்மா என்ன பாரும்மா நீ இல்லாம நான் எப்படி அம்மா வாழ்றது சோறூட்ட நீ வேணுமே, நான் உன்ன வளர்ந்து நல்லா பாப்பம்மா..................... என்று அழுகிறான் அகிலன்.

விதியின் வலையில் இருந்து யார் தான் தப்ப முடியும் தங்கம் வாழ்க்கையும் விதியில் சிதறுண்டது. தகப்பன் இல்லா குறை தீர்க்க தாய் ஒருத்தி இருந்தாள் இன்று அவளும் கூட இல்லை. என்ன தான் செய்யும் அந்த இரு ஜீவன்களும்.

தாய் இல்லை என்றதும் வாழவும் பிடிக்காமல், சாகவும் வழி இல்லாமல் இருக்கும் அவர்கள் இருவருக்கும் ஒருவரை ஒருவர் தான் ஆறுதல் படுத்தமுடியும்.

வாழ வாழ்விடம் இன்றி, சாப்பிட வழியும் இன்றி இரு சகோதரர்களும் ஒரு பாடசாலையில் அகதிகளுடன் அகதிகளாக தஞ்சம் புகுந்தனர்.

இனி அவர்கள் வாழ்வில் ஒளியேற்ற யார் வருவார். அவர்களுக்கு இருக்க கூடிய ஒரே ஆறுதல் தமிழர்கள் என்பதை தவிர வேறொன்றும் இல்லை.

பிறருக்கு கொடுத்து வாழ்ந்த கை இன்று பிறரிடம் இரந்து கேட்கின்றது. இந் நிலை மனிதன் என்பதால் உருவானதா இல்லை தமிழன் என்பதால் உருவானதா? இறைவன் ஒருவனுக்கே தெரியும்.

"விடியும் ஓர் நாள் தமிழனும் வாழ்வான் பிறரையும் வாழ வைப்பான். மனிதனாய் பிறந்து பெருமை பெறுவதை விட நான் தமிழனாய் பிறந்து பெருமை பெறுவதையே விரும்புகிறேன்"

**செல்வி R. மேரிரோஜினி**

ஆசிரியை.

# என்னைத் தெரிகிறதா?

என்னைத் தெரிகிறதா? நான் இயற்கை அன்னை உங்களுக்குத் தந்திருக்கும் எத்தனையோ வளங்களுள் நானும் ஒருவள். நான் பலருக்கு உணவு வழங்குகிறேன். பல அழகுப் பொருட்களையும் அள்ளி வழங்குகிறேன். பலர் தூய காற்றைப் பெறுவதற்கு என்னை நாடி வருவார்கள். நான் எப்பொதும் இயற்கைக்கு அழகு சேர்ப்பேன்.

பலர் என்னை நம்பியே சீவியம் செய்கிறார்கள் சிறுவர்கள் என்னில் கூச்சலிட்டு குளித்து மகிழ்வார்கள் பலர் என்னை பயணப்பாதையாகவும் பயன்படுத்துகிறார்கள். சிலர் என்னைத் தெய்வமாகவும் போற்றித் துதிப்பார்கள். இவர்களை எல்லாம் நான் துன்பப்படுத்துவதில்லை.

சிலர் என்மீது குப்பை கூழங்களைக் கொட்டி என் அழகைக் கெடுக்கிறார்கள். தொழிற் சாலை கழிவுகளை என்மேல் செலுத்தி என்னை துர்நாற்றம் வீசச் செய்கிறார்கள். என் ஓரங்களை சீர்கெடுத்து உருவத்தை மாற்றுகிறார்கள்

என் பொறுமையை சோதித்தால் நான் பொங்கி எழுவேன். 2004 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் திகதி என் அலைக்கைகளை நீட்டி ஆடிய அகோரத் தாண்டவத்தை நீங்கள் அனுபவித்திருப்பீர்கள்.

எனவே என்னை திரும்பவும் சீண்டிப்பார்க்க நினைக்காதீர்கள் சிறார்களே! இப்போது தெரிகிறதா? நான் யார் என்று

செல்வி. தி.கிறிஸ்டிக்கா
தரம் - 6P

**"Work is a rubber ball that will bounce back.**

**But family, health, friends and spirit are glass balls**

**that shatter. Keep your life blanced.**

# முன்னேறிச் செல்லுங்கள்....... அல்லது ஒதுங்கி நில்லுங்கள்

வரப்பிரசாதமாக நமக்கு கிடைத்திருக்கும் பிரமிக்கத்தக்க இந்த வாழ்க்கையில் தேர்ந்தெடுப்பதற்கு எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. இந்த தேர்வினைப் பொறுத்துத்தான நம்முடைய எதிர்கால வாழ்க்கைப் பாதையும் அமைகின்றது.

எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற இந்த தேர்வில் ஒன்று தான் "முன்னேறிச் செல்லுங்கள் ......... அல்லது ஒதுங்கி நில்லுங்கள்" என்பதாகும்.

"யார் முன்னேறிச் செல்கிறார்களோ அவர்களுக்கு இந்த உலகம் வழி விடுகிறது என்கிற வாசகம் பல நூற்றாண்டுகாளகவே வழங்கி வருகின்ற அறிவு மிக்க வாசகமாகும்." ஆகவே ஒன்று நீங்கள் முன்னேறிச் செல்ல வேண்டும். அல்லது முன்னேறிச் செல்பவர்களுக்கு வழி விட்டு விலகி நிற்க வேண்டும். அப்படி நிற்கும்போது மற்றவர்களுக்குப் பின்னால் வெகு தூரத்தில் யாருடைய கவனத்திற்கும் வராத ஒருவராக நீங்கள் ஆகிவிடுவீர்கள்.

நிலைத்து உயிர்வாழ்வதற்கு தொடர்ந்து முன்னேறிச் செல்வது எவ்வளவு தேவை என்பதை பரிணாம வளர்ச்சி தெளிவாக உணர்த்திக் கொண்டு இருக்கிறது. உயிர் வாழுகின்ற தாவரங்களாயினும் சரி, பிராணிகளாயினும் சரி முதலில் சுற்றுப்புற சூழலுக்கு தங்களை சரி செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகு போட்டியிடுகின்ற உயிரினங்களுக்குச் சமமாகவோ அல்லது அதைவிடச் சிறப்பாகவோ தங்கள் திறமையினை வளர்த்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது. அப்படிச் செய்யாதவை போட்டியால் அழுத்தப்பட்டு முன்னேறுகின்ற உயிரினங்களால் அழிக்கப்பட்டும் விடுகின்றன.

"முன்னேற்றம் தேவை என்பது இயற்கையின் நியதி"

பரிணாம வளர்ச்சியில், மனிதனின் அண்மைக்கால வளர்ச்சியின் ஓர் மிகச் சிறிய ஒரு பகுதியினை மட்டும் இப்போது நாம் பார்க்கலாம். அதைப் பரிசீலித்தால் முன்னேற்றத் தேவை இயற்கையின் விதி என்பது தெளிவாகின்றது. உலகத்தின் மிகச் சிறந்த சிந்தனையாளர்கள் சிலரின் கருத்துக்களை இனி நாம் பார்க்கலாம்.

"முன்னேற்றமும் வளர்ச்சியும் தான் மெய்யான விதியாகும் வெற்றிப் பாதையில் எந்தெந்தச் சமயங்களில் நாகரிகம் தயக்கம் காட்டியிருக்கிறதோ அந்தச் சமயங்களில் அது தூக்கியெறியப்பட்டு இருக்கின்றது" என்கிறார். வில்லியம் இல்மோர் சிம்ஸ் என்கிற அமெரிக்க நூலாசிரியர்.

"முன்னேற்றம் என்பது வாழ்க்கையின் விதி" என எழுதினார் ராபர்ட் பிரகனிங்.

"இயற்கைக்கு முன்னேற்றத்தில் தயக்கம் என்பதே கிடையாது வளர்ச்சியிலும் அப்படித்தான் தயங்கிச் செயலற்று நிற்பதை அது சபித்து விடுகிறது" என்கிறார் கத்தே.

மூன்று மாறுபட்ட சிந்தனையாளர்கள் முன்னேற்றம் பற்றிச் சொல்லியுள்ள கருத்துக்கள் மேலே தரப்பட்டுள்ளன. இதில் கத்தேயின் கருத்துக்கள் மிகச் சிறந்தது என பல சிந்தனையாளர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் முன்னேற்றம் என்பது இயற்கையின் விதி என்கின்ற தத்துவம் மீண்டும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. செயலற்று இருப்பவை இயற்கையின் சாபத்திற்கு ஆளாவதாக கத்தே கூறியிருகிறார். இந்த அத்தியாயத் தலைப்பு அதைத்தான் சொல்லுகிறது. நீண்ட காலத்திற்கு நீங்கள் ஒதுங்கி நின்று கொண்டிருக்க முடியாது. ஏனெனில் அதற்கான தண்டனை கத்தே சொல்லியுள்ளதைப் போல இயற்கையின் சாபத்திற்கு ஆளாவதுதான்.

ஆகவே இயற்கையின் பரிணாம விதியில் இருந்து ஒன்று நமக்கு தெளிவாகின்றது. நாம் முன்னேற வேண்டும் அல்லது முன்னேறுகிறவர்களுக்கு வழிவிட வேண்டும். வரலாறு முழுவதிலும் மிகப் பெரிய சிந்தனையாளர்கள் இதைத் தான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்போது நம்முடைய விஷயத்திற்கு வருவோம். உங்களுக்குத் தெரிந்த வெற்றி பெற்ற மனிதர்களைப்பற்றி உங்களின் மதிப்பீடு என்ன? இவர்கள் அனைவரும் முன்னேற்றத்தின் பக்கம் நின்றவர்கள் அல்லவா? முன்னேறுகின்ற தோற்றத்தை அவர்கள் கொண்டிருக்கவில்லையா? சில குறிப்பிட்ட வார்த்தைகளை வெற்றியோடு இணைத்துச் சொல்வது வழக்கமாக இருந்து வந்திருக்கின்றது. "முன்னேற்றம்" என்ற வார்த்தை அதில் ஒன்று. நீங்கள் மற்றவர்களின் கவனத்தை கவர வேண்டுமானால், பதவி உயர்வு பெற வேண்டுமானால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமானால் முன்னேற்றப் பாதையில் செல்லக்கூடியவர் நீங்கள் எனும் செல்வாக்கினை முதலில் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

முன்னேற்றத்தை எப்படித் துவங்கப் போகிறீர்கள்? கடற்படையில் ஒரு வாசகம் உண்டு "தன்னுடைய கப்பல் புறப்படுவதற்கு முழுமையாக தயாராகும் வரை காத்திருக்கின்ற கப்பல் தலைவன் துறை முகத்திலேயே நின்று கொண்டிருப்பான்" என்பது தான் அந்த வாசகம். முன்னேற்றம் என்பது முழுமையாக அடைந்து விடுவதில்லை. முன்னோக்கி முன்னேறுவதாகும். எல்லாமே சரியாக இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. நீங்கள் முன்னேற்றப் பாதையில் நடைபோட்டால் போதும்.

முன்னேற்றப் பாதையின் படிக்கட்டுக்கள் எண்ணங்களால் உருவானவை. இந்த படிக்கட்டுக்கள் மூன்றுக்கு அப்பால் இன்னொன்றாகத்தான் அமைய முடியும். ஆனால் ஒன்றையடுத்து இன்னொன்று முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் தொடு வானத்தை நோக்கிச் செல்லும். அதற்கு அப்பால் நம்மால் பார்க்க முடியாமல் இருக்கலாம். ஆனாலும் இலட்சியம் என்கிற ஒளியை நோக்கி நாம் செல்லுவதால் நாம் மேற்கொள்ளுகின்ற பயணம் பயனுடையதாகவே இருக்கும்.

ஒரு வேளை ஏதோ ஒரு படிக்கட்டு சரியானபடி அமையாமல் இருந்து நீங்கள் சறுக்கியும் விழலாம். முன்னேற்றப் பாதையில் சறுக்கி வீழ்ந்த முதல் மனிதராக நீங்கள் இருக்க மாட்டீர்கள் என்பது திண்ணம் தோல்விகள் மட்டுமே எழுந்திருப்பதில்லை. வெற்றிகள் சறுக்கி விழும் போதும் முன்னோக்கியே விழுகின்றன. ஆகவே அவை எழுந்திருக்கும் போது கூட முன்னேறிய நிலையில்தான் எழுகின்றன. முன்னேற்ற சாமர்த்தியங்களில் இதுவும் ஒன்று. விழும்போதும் முன்னோக்கி விழ வேண்டும்.

முன்னேறுவதற்கு எத்தனையோ உபாயங்கள் இருக்கின்றன. அவற்றைப் பட்டியல் போடவோ தனிப் புத்தகம் வேண்டும். நீங்கள் எங்கே சென்றாலும் முன்னேற்றத்தின் சின்னமாக உங்களை ஆக்கிக்கொண்டிருக்கும் முயற்சியில் ஈடுபடுங்கள் அதற்காக நீங்கள் எவ்வளவு உழைப்பையும் நேரத்தையும் செலவிடலாம். உங்களுக்கு கிடைக்கின்ற பலன்கள் மிகப் பெரியது.

தேர்வு செய்வது இனி உங்களைப் பொறுத்தது.

"முன்னேறிச் செல்லுங்கள்....... அல்லது முன்னேறுகிறவர்களுக்கு விழி விடுங்கள்".

வழி விட்டு விலகி நிற்பவர்களை உலகம் நினைவிலும் வைத்துக் கொள்வதில்லை பெரிய வெகுமதியும் கொடுப்பதில்லை.

**தொகுப்பு : திரு.எஸ்.கார்த்தீபன்**
ஆசிரியர் (விஞ்ஞானம்)



# தாழை தளராது தழைத்தோங்க வாழ்த்துகின்றேன்.

**திரு. க. நவராசலிங்கம்,**
பிரதேசசபை உறுப்பினர்,
கோறளைப்பற்று.

# நான் அதிசயித்த அந்த நாள் ...............

பக்கத்து வீட்டிலிருந்து
பாடசாலையைப் பார்க்கிறேன்

பல நாளாய் - அங்கு
ஒரே பரபரப்பு!

ஏணியும் கையுமாய்
இரண்டொரு மாணவர்கள்
ஏறிச் சுவரில்
ஓட்டடை தட்டுகின்றார்

பெயின்ற் வாளியோடு
பெடியன்கள் ஐந்து பேர்
பேசித் திரிகின்றார்
சுவரைப் பார்த்தபடி

புதுசாய் சேர்ந்த
சின்னஞ் சிறுசுகள்
பூக்கண்டோடு கையால்
பூமியைக் கிளறுகின்றார்.

என்ன விழாவோ?
எண்ணங்கள் சரியாகச்
சொல்ல மறுத்தன
எதற்கும் பார்ப்போம்
பொறுத்திருந்து.

அழகழகான அட்டைகளோடு
அசைந்து ஆடுது

யன்னல் பூச்
சீலைகளும் கூட

கட்டியது முதல்
வெளிச்சிருந்த சுவரில்
கறுப்பு மையால் இப்போ
கனரக வாசகங்கள்

எட்டிப் பாத்தேன்
என்ன? இவங்க
இன்னும் விழாவுக்கு
'இன்விடேசன் கொடுக்கேல்ல'

அவையள் நாளைக்கு
வருகினமாம்

அப்பாலிருந்தொரு குரல்
என் காதில்
தப்பாமல் ஒலிக்கிறது

அட அமைச்சர் வாறாரோ?
அப்போ நல்லது தான்
நடக்கட்டும் அபிவிருத்தி
அபிவிருத்தி

அதிகாலை முதல்
அந்தி வரை
அதிபர் அலுவலகம் இப்போ
அடிக்கடி திறந்திருக்கு

விடியலும் ஆயிற்று
ஆனால்.
வாசலில் வாழையில்லை
வரவேற்புப் பலகையில்லை

என்ன அதிசயம்!
எட்டுமணி வரைக்கும்
எக்காளம் இடும் வீதி இன்று
ஏழு மணிக்கே
ஏப்பம் விட்டது.

ஆடி அசைந்து வரும்
ஆசிரியர் கையிலெல்லாம்
அடுக்கடுக்காய்
அட்டைகள் ஆயுதங்கள்!

ஒரு வகுப்பில்
புத்தகக் கடையாட்டம்
புதுப்புதுப் போஸ்டர்கள் - அதைப்
புகுந்து புகுந்து பிள்ளைகள்
புதினம் பார்க்கின்றார்.

ஏங்கி நான் நிற்கின்றேன்
எங்கிருந்தோ ஒரு வாகனம்
இறங்கினர் பலர்
எந்திரமாய்

ஓ ஓ ...............................

படம் கீறுகீறென்று
பத்து மணி வரைக்கும்
படுக்க விடாமல் - போர்த்தி
படுத்திய பாடு
இப்போதுதான் பளிச்சிட்டது.

ஏதோ ............. ரீம்......................மாம்

என்ன! நிசப்தம் இன்று
சின்ன ஒலி கூடச்
சீராய் கேட்குது

எப்பவும் ரீம் .......... என்றால்
ஆஹா!.......................

பன்னிரெண்டரைக்கெல்லாம்
பாடம் முடிஞ்சு
பெரியோர்கள் சேர்ந்தேதோ பேச்சு
முடிய பஞ்சாய்ப் பறக்கின்றார்.

சில ஆசான்கள் முகத்தில் சிரிப்பு
சிலரின் முகத்தில் சிடுசிடுப்பு
சிணுங்கிச் செல்கின்றார்
காதைக் கொடுத்தேன்

பத்து மணிக்குப் பறந்தோடி வந்து
படாமல் பாடம் நடத்தும்
பரந்தாமன் வாத்திக்குத்
தொண்ணூத்தாறாம்

விடுமுறையிலும் வகுப்பெடுத்து
விரும்பிப் படிப்பிக்கும் - அந்த
வித்தியா ரீச்சருக்கு
எழுபத்தொன்றாம்

சீச்சீ .......................
என்ன உலகமிது
அதிசயித்துப் போனேன்.

திருமதி. இ. மகாலிங்கம்
பிரதி அதிபர்,

# வாழ்வியலை வளப்படுத்தும் சமயக்கல்வி

மனிதன் தனியாக வாழ்பவன் அல்லன் அவன் சமூகத்தில் ஓர் அங்கத்தவன் எனவே சமூக விழுமியங்களுக்கேற்ப தன் நடத்தைகளைக் கட்டுப்படுத்தி அவற்றின் மூலம் ஆளுமையை விருத்தியாக்கல் வேண்டும். அதற்கு வழிகாட்டியாக அமைவது சமயக் கல்வியாகும். இத்தகைய சமயக்கல்வி ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் அத்தியாவசியமானதாகும். அத்தோடு பண்பான மனித சமுதாயத்தினை உருவாக்குவதற்கும் வளப்படுத்துவதற்கும் அதுவே வழி சமைக்கின்றது.

"மக்களின் உடல் உள்ளம் ஆன்மா ஆகியவற்றின் இயற்கைப் பேறுகளை வெளிக் கொணர்ந்து விளக்கம் செய்வது கல்வி" என்று மகாத்மா காந்தி கூறினார். இங்கு குறிப்பிடப்பட்ட ஆன்மா பற்றிய விளக்கம் தருவது சமயக் கல்வியாகும். உலகில் எல்லா நாடுகளிலுமுள்ள கல்வி முறைகளில் சமயக்கல்வி முறையே முக்கியமானதும் தொன்மையானதுமாகும். மனித வாழ்க்கைக்கு என்றும் அடிப்படையாக இருக்க வேண்டிய ஆன்மீக நெறியைக் கூறுவதே சமயக் கல்வியாகும் சமயம் வேறு வாழ்க்கை வேறானதல்ல அது எமது வாழ்வியலோடு பின்னிப் பிணைந்ததாகும் சமய நெறி என்பது வாழ்க்கை நெறியாகும்.

ஆதிகாலத்தில் மக்கள் இறைவன் எழுந்தருளியுள்ள சந்நிதானத்திலேயே சகல கலைகலையும் கற்றார்கள் கோயில் குருக்களே ஆசானாக திகழ்ந்தார். சமயக் கல்வியின் மூலம் மனிதப் பண்பை வளர்த்துக் கொண்டு சிறந்த சமூகத்தை உருவாக்கினார்கள். வாழ்வியலுக்கு அவசியமான பிறருக்குத் தீங்கு விளைவிக்காமை, பிறர் பொருளைக் கவராமல் உழைத்து வாழ்தல், நேர்மை, ஒழுக்கம், தர்மம் செய்தல், மற்றவருக்கு இரங்குதல், பொறுமை, தன்னடக்கம், உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் போன்ற வாழ்வியலை வளப்படுத்தும் விடயங்கள் யாவும் சமயக்கல்வியினூடாகவே போதிக்கப்பட்டன. சமயம் மனிதனை மயக்கும் மருந்தெனச் சிலரால் சொல்லப்பட்ட போதும் ஒரு சமூக மேம்பாட்டிற்குத் தேவையான விடயங்களை தெளிவுபடுத்துவதாக சமயக்கல்வியே அமைகின்றது எனவே சமயக்கல்வியினூடாக வாழ்வியலை வளப்படுத்தும் விடயங்கள் எடுத்துக் கூறப்படுகின்றன அதனை உரிய முறையில் பெற்றுப் பயனடைய வேண்டியது மாணவர்களது கடமையாகும்.

கல்வியானது ஏட்டுக் கல்வியாக அமையாது அது வாழ்க்கைக் கல்வியாகவும் அமைதல் வேண்டும் இதனையே மகாத்மா காந்தியவர்களும் "வாழ்க்கைக்கு ஆதாரமாக அமைவதே சிறந்த கல்வி" என்கிறார். இவ்வாறாக வாழ்க்கை முன்னேற்றமடைய ஒரு சமூகத்துடன் பொருத்தப்பாடடைந்து வாழ சமயக்கல்வியே வழி காட்டுகிறது. இத்தகைய சமயக் கல்வி தற்காலத்தில் முக்கியத்துவம் குறைந்து வருகின்றமை வேதனைக்குரிய விடயமாகும்.

எமது புராண இதிகாசங்கள் வரலாறுகள் தோத்திரப் பாடல்கள் போன்றவற்றை எடுத்து நோக்குவோமாயின் எமது வாழ்க்கைக்குத் தேவையான சிறந்த விடயங்களை அவை கூறுகின்றன ஒரு மனிதன் தனது கடமைகளைச் சிறப்பாகவும் ஒழுங்காகவும் செய்ய வேண்டுமென்பதை பின்வரும் முதுமொழிகள் கூறுகின்றன. "நன்றே செய் அதனை இன்றே செய்" எனவும் "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்றும் "மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை" என்பதிலிருந்து ஒரு மனிதன் ஒழுங்காக கடமைகளைச் செய்தால் அது இறைவனுக்கே உரியதாகின்றது என கூறப்படுகின்றது. எனவே ஒரு மனிதன் உதவுதல் மூலம் இறைவனை அடையலாம் என விளக்குகிறது இதனையே அப்பரும்" என் கடன் பணி செய்து கிடப்பதே" எனக் கூறி உழவாரத் தொண்டு புரிந்தார். தேவாலயமும் வித்தியாலயமும் ஒன்றாக இருந்த காரணத்தினால் அத் தொண்டு கல்வித் தொண்டாயிற்று "துன்பத்தினால் வாடுபவனின் துயர் தீர்க்காமல் கடவுளை நினைத்து கண்ணீர் மல்கிப் பயனில்லை இவ்வாறு வாழ்வியலோடு ஒட்டியதாக சமயக் கருத்துக்கள் அமைந்திருப்பதனைக் காணக் கூடியதாக உள்ளது. சமூகத்தில் உள்ளவர்களிடம் வளர்க்கப்பட வேண்டிய வாழ்வியல் பண்புகளில் பகிர்ந்துண்ணுதலும் ஒன்றாகும்.

ஔவையார் ஆத்திசூடியில் "ஐயம் இட்டுண்", "அறம் செய விரும்பு" என அழகாக கூறியுள்ளார். பசியென்று வந்த எவருக்கும் நாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி உணவாவது கொடுக்க வேண்டும். இதனை திருமூலர் "யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி" என கூறுகிறார். திருவள்ளுவரும் பகிர்ந்துண்ணல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்." பகுத்துண்டு பல்லுயிர் ஒம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" எனவும் செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருப்போர். நல்விருந்து வானத்தவர்க்கு" எனவும் "விருந்து புறத்திருக்கத் தானுண்ணல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாலது" அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாக விளங்குவது தமக்குக் கிடைத்த உணவை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுவதாகும். திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் திருவீழிமிழலையில் பஞ்சம் ஏற்பட்ட போது இறைவனை வேண்டிப் பாடி படிக்காசு பெற்று மக்கள் பஞ்சத்தைப் போக்கினார். ஆறுமுகநாவலரும் கஞ்சித் தொட்டித் தருமம் செய்து மக்கள் பசிப் பிணியைப் போக்கினார் இவ்வாறாக சமயக் கல்வியானது வாழ்வியலை வளப்படுத்தும் சிறந்த கருத்துக்களை கூறுகின்றது.

மேலும் மனித வாழ்வில் பேணப்பட வேண்டியவற்றுள் வாய்மை முக்கியமானதாகும் இதனை சத்தியம், உண்மை, மெய்மை எனவும் கூறலாம். "பொய் சொன்ன வாய்க்குப் பொரியும் கிடையாது" என்பது முதுமொழி "சத்தியமேவ ஜயதே" என மகாத்மா காந்தியடிகளும் சத்தியத்தின் அவசியம் பற்றி கூறுகிறார். வாய்மை தவறாது வாழ்ந்த அரிச்சந்திரன் வரலாறு இதற்குச் சிறந்ததொரு உதாரணமாகும் ஒரு மனிதனுக்கு எத்தகைய துன்பங்கள் வந்த போதும் அவன் தன்னுடைய வாய்மையினின்றும் வழுவாது வாழ வேண்டியது அவசியமாகும்.

சமூகத்தில் வளர்க்கப்பட வேண்டியவற்றுள் செய்நன்றியும் முக்கியமானதாகும். ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு என வள்ளுவப் பொருந்தகை வலியுறுத்துகிறார் ''நன்றி மறப்பது நன்றன்று'' ஒருவன் செய்த நன்றியை நாம் எப்போதும் மறக்கக் கூடாது செய்நன்றி மறத்தலின் கேட்டை கந்தபுராணம் நமக்கு விளக்குகின்றது. சிவபிரானை நோக்கித் தவமிருந்து வரம் பெற்ற சூரன் அத்தவ வலிமையின் செருக்கால் சிவனின் மகனான முருகப்பெருமானுடனே போர் புரிகின்றாார். அவ்வாறு செய்நன்றி மறந்து போர் புரிந்ததால் சூரன் இறுதியில் முருகனிடம் சரணடைந்து சேவலும் மயிலுமாக தோற்றம் பெற்றதாக வரலாறு கூறுகிறது.

மேலும் பிறர்மனை விளைதலும் வாழ்வியலை சீர்கேட்டிற்கு இட்டுச் செல்லும் ''இராமாயணத்திலே இராவணன் சீதாபிராட்டியின் மேல் ஆசைகொண்டு அவளைச் சிறை வைத்தான். அதனால் இலங்காபுரி அழிந்தது. எனவே அடுத்தவன் மனைவி மேல் ஆசை கொள்ளாதே என எமக்கு இச் சம்பவம் உணர்த்துகிறது இவ்வாறாக பெண்களுக்கு மதிப்பளித்து பெண்ணியம் பேண வேண்டும் இத்தகைய கருத்துக்கள் பலவற்றை சமயக் கல்வியினூடாகப் போதித்து வாழ்வியலை வளப்படுத்தலாம்.

மேலும் ஒரு மனிதனுடைய வாழ்வில் அன்பின் முக்கியத்துவம் பற்றியும் வலியுறுத்துகிறது. நாவலர் பெருமான் அன்பு என்பதற்கு ''ஒருவருக்குத் தம்மோடு தொடர்புடையவராய், தமக்கு இனியவராய் உள்ளவரிடத்தே நிகழும் உள்ளத்தின் நெகிழ்வு அன்பு'' என்று விளக்கம் தந்துள்ளார் நாம் அன்பு செலுத்த வேண்டியவர்களில் இறைவன் முதன்மையானவர் "அன்பே சிவம்" அவரை இடைவிடாது சிந்திக்க வேண்டும் அவரால் படைக்கப்பட்ட மனிதர்கள் பிராணிகளிடமும் அன்பு செலுத்த வேண்டும், மனுநீதி கண்டசோழன் பசுவுக்காக இரங்கினான். சிபிச்சக்கரவர்த்தி என்ற அரசன் பருந்திடம் இருந்து புறாவைக் காப்பதற்காகத் தன் உடலின் தசையை அறுத்து ஈந்தான், கௌதமபுத்தர் புறாவுக்காக நீதி கேட்டார், திருவள்ளுவர் அத்தகைய அன்பின் பெருமையை "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர் என்பும் உரிய பிறர்க்கு'' எனவும்'' "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்'' எனவும் வலியுறுத்தியுள்ளார். இதனை திருமூலரும் "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்'' என அன்பின் முக்கியத்துவம் பற்றி கூறியுள்ளார் சுவாமி ஞானப்பிரகாசர் பசுவதைக்கு அஞ்சி நாட்டை விட்டு ஓடினார் இவ்வாறான சம்பவங்கள் உயிர்களிடம் அன்பு செலுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகின்றன.

மேலும் சாதிப் பாகுபாடு ஏற்றத்தாழ்வு என்பனவும் சமூகத்திலிருந்து விலக்கப்பட வேண்டியது அவசியமாகும். நாம் இராமாயணத்தை எடுத்து நோக்கினால் ஏழை வேடனாகிய குகனை நோக்கி இராமபிரான் இவ்வாறு கூறுகிறார். "என் தம்பி உன் தம்பி எனது மனைவி உனது மைத்துனி என குகனை தனது சகோதரனாக ஏற்றுக் கொண்டான். அதேபோல் புத்தபிரான் களைப்புற்றிருந்த வேளையில் அவருக்கு பாலினை கொடுக்க தயங்கிய இடைச் சிறுவனிடம் "பிறப்பினால் எவர்க்கும் பெருமை வராதப்பா''

சிறப்பு வேண்டுமெனில் நல்ல செய்கை வேண்டுமப்பா" என கூறி பாலினை வாங்கி அருந்தினார். எனவே ஒரு மனிதனுடைய வாழ்வியலுக்கு ஆதாரமான விடயங்கள் சமயக்கல்வி எடுத்துக் கூறுகின்றது.

மேலும் ஒரு மனிதனிடம் மன்னிக்கும் மனப்பான்மையும் இருக்க வேண்டியது அவசியமாகும் "மன்னிக்கத் தெரிந்த மனித உள்ளம் மாணிக்கக் கோயில்" என்ற முதுமொழியும் யேசுபிரானின் "ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு" எனும் வாசகமும் மன்னிக்கும் பண்பு வாழ்வியலுக்கு தேவையானது என்கின்றது. இதனை வள்ளுவரும் "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" எனவும் வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய கணனி மயப்படுத்தப்பட்ட சமூகத்தில் மாணவர்கள் சமயக்கல்வியில் ஆர்வம் காட்டாமை வருந்தத்தக்கது சமயக் கல்வியினை மாணவர் விரும்பக் கூடிய முறையில் அறக்கருத்துக்களை எளிமையாக எடுத்துக் கூறி அவர்களை வழிப்படுத்துவதற்கு அனைவருமே முன்வர வேண்டும்.

இன்றைய சமூகத்தில் மனித நடவடிக்கைகள் மிகவும் சீரழிந்த நிலையில் காணப்படுகிறது. ஜீவகாருண்யமற்ற பாதகச் செயல்கள் தற்போது பெருகி வருகின்றது இவற்றுக்கெல்லாம் அடிப்படை சமயப் பற்றின்மையாகும் சமய வரலாறுகளை அதிலுள்ள தத்துவங்களை அறியாமலே பஞ்சமாபாதகச் செயல்களில் அஞ்சாமல் ஈடுபட்டு வருவதால் மனிதநேயம் புதைக்கப்படுகிறது. இத்தகைய நிலை மாற வேண்டும். நாம் நமது வாழ்வியலுக்கு வழிகாட்டும் சமயக் கல்வியினை அதன் அவசியத்தினையும் எடுத்துக் கூறி அதன் தார்பரியத்தை உணர்த்த வேண்டும், வீடு, கோயில், பாடசாலை ஆகிய மூன்று இடங்களிலும் முக்கியமாக பெற்றோரும் ஆசிரியர்களும் சமூகமும் முன்வந்து சமய நற்பணிகளிலும் பழக்க வழக்கங்களிலும் மாணவர்களை ஈடுபடுத்தி நற்பண்புடைய தார்மீக சமுகத்தை உருவாக்க வேண்டும் எனவே அனைவரையும் இத்தகைய நற்பணிகளில் ஈடுபடுத்த வேண்டியது ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும்.

**திருமதி.வ. விஜயராகவன்**
ஆசிரியை.

**"Stop & take a good look, as your real value is inside of you. You are not just average.**

**Be what you are meant to be, there is ONLY one of you.**

# ஆசானை உருவாக்கியவர் ஆசிரியரே

மனித வரலாற்றில் பழம்பெரும் உயர் தொழில்களில் பிரதான தொழில் ஆசிரியர் தொழிலாகும். மனிதகுலம் என்று தோன்றியதோ அன்றே ஆசிரியர் பணியும் தோன்றிவிட்டது.

ஒரு ஆசிரியர் ஒரு ஊரை அல்லது ஒரு சமூகத்தை முன்னேற்றுகிறார். பல ஆசிரியர்கள் சேர்ந்து ஒரு நாட்டை முன்னேற்றுகின்றனர். முற்காலத்தில் ஆசிரியர்களே புத்தி சீவியாகவும், அறிவுக்களஞ்சியமாகவும் காணப்பட்டனர். அதனால்தான் ஒரு நாடு வளர்ச்சியடைவதும் தாழ்வடைவதும் ஆசிரியர் கைகளிலேயே தங்கியுள்ளது என்று கருதப்பட்டது. கற்றலில் எந்நாடு மேம்பட்டுள்ளதோ அந்நாடே பொருளாதார வளர்ச்சியில் மேல்நிலை வகிக்கும்.

மெழுகுவர்த்தியின் திரி கருகி சிதைந்து ஒளிகொடுப்பதைப் போலவே ஆசிரியர்களும் தங்களை உருக்கிக் கொண்டு மாணவர்களுக்கும் ஒளியை கொடுக்கிறார்கள். தியாகம் அர்ப்பணிப்பு, விட்டுக்கொடுப்பு, அன்பு, கருணை. காருண்யம் போன்ற நற்பண்புகளை அணிகலன்களாகப் பூண்டு சமூகத்தை சிருஷ்டிக்கிறார்கள்.

தனது அறிவை ஒருவர் இனங்கண்டு கொள்ளவும் தனது சூழலைப் பற்றிய அறிவினை அறிந்து கொள்ளவும் தேவையான எழுத்தறிவினை வழங்குபவராக ஆசிரியர் விளங்குகிறார் புராதன காலங்களில் கிராமத்தின் மையவிசையாக ஆசிரியர் விளங்கினார். ‘குரு’ என்ற பெயர் பல்வேறு பணிகளை உள்ளடக்கியதாக காணப்பட்டது. அதனால்தான் அன்று முதல் இன்று வரை குருவுக்கு தட்சணை வழங்கி தமது கல்வியை ஆரம்பிக்கின்றனர். வழிகாட்டி, முன்னோடி, நிபுணர், அறிவுப் பொக்கிஷம், நல்வழிப்படுத்துபவர், எதிர்வு கூறும் ஒரு ஞானி, மதியுரைஞர் என பல்வேறு கணிப்பிலும் குருத்துவம் மதிக்கப்பட்டது.

ஆசிரியர் எதனை கூறுகின்றாரோ அதனை வேத வாக்காக கொண்ட காலம் அன்று கல்வி கற்பவர்கள் வெற்றுப் பாத்திரங்கள் எனவும் அதனை அறிவால் நிரப்புபவர்கள் ஆசிரியர்கள் என்றும் ஓர் எண்ணக்கரு சமூகத்தின் மத்தியில் இருந்தது.

ஆசிரியர் தமது அனுபவங்கள் மூலமாக புதிய புதிய அணுகுமுறைகளில் கல்வியை கட்டி எழுப்புகிறார்கள். அவ்வாறான கல்வியை இந்த நவீன உலகிற்கு வித்திடுகின்றார்கள். அறிவை அள்ளிக் கொடுப்பது மட்டுமன்றி ஒருவன் தாமாகவே சிந்திப்பதற்கும் தமக்கான தீர்மானங்களை தாமே மேற்கொள்வதற்கும் ஆசிரியர் தூண்டு கோலாக அமைகின்றார்.

இந்த நவீன உலகில் கணனி வேகத்தில் கல்வி வளர்ச்சியடைந்து செல்கின்றது. அக்கல்வியை மாணவர்களுக்கு வழங்க வேண்டுமானால் முதலில் ஆசிரியர் நவீன முறைகளைப் பின்பற்றி உயர்ந்த அறிவு நூல்களைக் கற்று அசிரியர் பணிக்கான விசேட பயிற்சிகளையும் பலவிதமான செயலமர்வுகளிலும், கருத்தரங்குகளிலும் பங்கு கொண்டு தான் கற்ற கல்வியை மாணவருக்கு போதிக்க முற்படுகின்றார்.

ஒவ்வொரு மாணவனும் படைக்கின்ற சாதனைகள் அனைத்தும் ஆசிரியர்களிமிருந்து வெளிப்பட்டவையாக காணப்படுகின்றன. ஏட்டுக்கல்வியாக இருந்தாலும் சரி கணனிக்கல்வியாக இருந்தாலும் சரி முதலில் ஆசானே வழிகாட்டியாகின்றான். சேவை மனப்பான்மையுடன் ஆசிரியர் தொழிலை செய்யும் ஆசானே ஓர் ஆசிரியரை உருவாக்கின்றார்.

**செல்வன். வி. கலைரஞ்சன்,**
தரம் - 13
கலைப்பிரிவு.



# கலைகள் அறுபத்து நான்கு

01. அக்கர இலக்கணம்
02. இலகிதம்
03. கணிதம்
04. வேதம்
05. புராணம்
06. வியாகரணம்
07. நீதி சாஸ்திரம்
08. சோதிட சாஸ்திரம்
09. தரும சாஸ்திரம்
10. யோக சாஸ்திரம்
11. மந்திர சாஸ்திரம்
12. சகுன சாஸ்திரம்
13. சிற்ப சாஸ்திரம்
14. வைத்திய சாஸ்திரம்
15. உருவ சாஸ்திரம்
16. இதிகாசம்
17. காவியம்
18. அலங்காரம்
19. மதுரபாடனம்
20. நாடகம்
21. நிருத்தம்
22. சுத்த பிரம்மம்
23. வீணை
24. வேணு
25. மிருதங்கம்
26. தாளம்
27. அத்திரபரீட்சை
28. கனக பரீட்சை
29. இரதப் பரீட்சை
30. கஜ பரீட்சை
31. அசுவ பரீட்சை
32. இரத்தின பரீட்சை
33. பூ.பரீட்சை
34. சங்கிராம இலக்கணம்
35. மல்யுத்தம்
36. அக்ருஷணம்
37. உச்சாடனம்
38. வித்துவேஷனம்
39. மதன சாஸ்திரம்
40. மோகனம்
41. வசீகரணம்
42. இரசவாதம்
43. காந்தர்வ வாதம்
44. பைபீல வாதம்
45. கௌதுக வாதம்
46. தாது வாதம்
47. காருடம்
48. நட்டம்
49. முட்டி
50. ஆகாய பிரவேசம்
51. ஆகாய கமனம்
52. பரகாயப் பிரவேசம்
53. அதிர்ச்சயம்
54. இந்திர ஞாலம்
55. மகேந்திர ஞாலம்
56. அக்னித் தம்பம்
57. ஜல ஸ்தம்பம்
58. வாயுத் தம்பம்
59. சுக்கில தம்பம்
60. கன்னத் தம்பம்
61. கடகத் தம்பம்
62. அவத்தைப் பிரயோகம
63. வாக்குத் தம்பம்
64. திட்டித் தம்பம்

செல்வி. க. சர்மிளா
தரம் - 11V

## மட்டக்களப்பில் நடைபெறும் கோயில் சடங்கு முறைகள்

ஈழம் அழகிய இயற்கை வளங்களைக் கொண்ட ஒரு நாடாகும். இவ்வாறான இயற்கையே சடங்கின் ஆரம்பமாய்த் தோன்றுகின்றது. அன்றைய மனிதன் தான் கண்ட இயற்கைகளைக் கண்டு பயந்தான் அவ்வாறான இயற்கையை தன்வசப்படுத்த வேண்டும் என்பதற்காகவே அவர்கள் மத்தியில் சடங்கு தோன்றத் தொடங்கியது. இதன் பயனாக அன்றில் இருந்து இன்றை வரை இது தமிழர் மத்தியில் காணப்படும் ஒன்றாகவே அமைகின்றது. இச்சடங்குகள் நடைபெறுவதை இன்றும் நாம் இந்துக் கோயில்களிலும் காணலாம். அவற்றில் நமது பிரதேசங்களில் நடைபெறும் சில சடங்குகளைப் பார்ப்போமானால்.

மட்டக்களப்பில் நடைபெறுகின்ற குமார தெய்வச்சடங்கு இது வேட வெள்ளாளர் சாதியினர் மத்தியில் நடைபெறும் சடங்காகும். இத் தெய்வத்திற்கென நிரந்தரமான கோயில் கிடையாது. குறிப்பிட்ட ஒரு தினத்தில் கிராமத்தில் அல்லது கிராமத்திற்கு வெளியில் நிரந்தரமான பந்தல் அமைத்து இச்சடங்கு நடைபெறும். இச்சடங்கிற்கு என அவர்கள் மத்தியில் வித்தியாசமான பாசையும் பாட்டும் பாட்ப்படுகின்றது. இங்கு பூசாரியே தெய்வமேறி ஆடுவர் 07 நாட்கள் நடைபெறும் 07 வது நாள் அன்று தேன் எடுத்தல், தேன் பூச்சி குத்துதல், மாடு கட்டுதல் யானை கட்டுதல் போன்ற நிகழ்வுகள் நடைபெறும் இவ்வாறாகவே இச்சடங்கு நடைபெறுகின்றது.

அடுத்தது வேட்டைத்திருவிழா இச்சடங்கானது கோயிலுக்கு முன்னுள்ள வயலை மிருகங்கள் அழிக்க அவற்றை சுவாமி புறப்பட்டு வந்து மீளும் காட்சியே இச்சடங்கு ஆகும்.

மட்டக்களப்பில் நடைபெறும் இன்னொருவகைச்சடங்கு மாரியம்மன் குளுர்த்தி இது மழைவேண்டியும் நோய் தீர்ப்பதற்காகவும். நடத்தப்படும் சடங்காகும். இது வருடா வருடம் நடைபெறுகின்ற ஒன்றாகும் இறுதி நாள் சடங்கில் மாரியம்மனிற்கு வேடமிடும் ஒருவர் பெண்வேடம் அணிந்து ஆராதிப்பிள்ளைகள் என்றழைக்கப்படும் பெண் பிள்ளைகளுடன் பக்தர்கள் குரவைபோட கோயிலைச் சுற்றிவந்து கோயில் முன் வைக்கப்பட்டிருக்கும். குங்குமம் கலந்த சிவந்த தண்ணீரை பக்தர்கள் மீது வேப்பம் பத்திரத்தினால் தெளிப்பார். இந்த தண்ணீர் பட்டால் நோய் தீரும் என்பது நம்பிக்கை பின்னர் பள்ளையம் எனும் உணவு பரிமாற்றம் இடம்பெறும் தொடர்ச்சியாக 07 நாட்கள் சடங்கு நடைபெற்று வைகாசி திங்களிற்கு அடுத்து வருகின்ற திங்களில் குளுத்தி பாடுவதோடு இச்சடங்கு முடிவடையும்.

மட்டக்களப்பில் நடைபெறும் கொம்பு முறித்தல் விழாவானது கண்ணகி அம்மன் சடங்கோடு தொடர்புடையதாகும். இவ்விழா மழை வேண்டுவதோடு நோய் தீர்த்தலோடும்

சம்மந்தப்பட்டது. கொம்பு விளையாட்டு தொடங்கியது ஊர் முழுவதும் இரண்டு கட்சியாகிவிடுதல் உண்டு. ஒன்று கண்ணகிக்கும் மற்றையது கோவலனிற்குமாகிய அக் கட்சிகள் முறையே வடசேரி, தென்சேரி எனப் பெயர் பெறும்.

இதற்காக கரையாக்கு எனும் ஒருவகை மரத்தின் கொம்புகளை (வளைதடிகள்) இரு சேரியாரும் வெட்டியெடுத்து அவற்றை முறுக்கேறிய புரிகளால் வரிந்து கட்டி பனிச்சங்காய் பசையுருட்டி காயவைத்து எடுப்பர். இக் கொம்புகளை இணைத்து சிறு வடத்திலே அவற்றைக்கட்டி இரு சேரியாரும் இரு புறமும் நின்று அதனை இழுப்பர்.

இந்த இழுப்பில் இரண்டில் ஒரு கொம்பு முறியும் உடனே வென்ற பகுதியினர் தமக்கு வெற்றியென ஆடிப்பாடுவர் பல நாட்களில் நடைபெறும் இவ் ஊர் விழாவில் ஒவ்வொரு நாளும் கொம்பு முறித்த பின் இரவு தோறும் தத்தம் கொம்புகளை வைத்து கண்ணகி சிலையை ஊர்வலமாகக் கொண்டுவருவர். இந்த வேளையில் உடுக்குச் சிந்து ஊர்சுத்து காவியம், வெற்றிப்பாடல்கள் என்பன பாடப்படுவதுடன் வினோத உடை அணிந்து ஆடுதல் மேளமடித்தல் என்பன நடைபெறும்

இவ்வாறு மட்டக்களப்பில் இந்துக்கள் மத்தியிலான சமயம் சார்ந்த சடங்கு முறைகள் காணப்படுவதைக் காணலாம்

**செல்வி. தங்கராசா நித்தியவானி**
13 கலைப்பிரிவு

*"When a door of opportanity closes, another opens.*
*So don't look hard & long at the closed doors, as you will miss the one just opened for you."*

# International Days

| | |
|---|---|
| Feb. 02 | - World Wetlands Day |
| Mar .08 | - International Women's Day |
| Mar..15 | - World Consumer Day |
| Mar..22 | - World Water Day |
| Mar.24 | - World T.B Day |
| Apr.22 | - Global Earth Day |
| Apr.23 | - World Book Copy Right Day |
| May.01 | - International Worker's Day |
| May.03 | - World Press Freedom day |
| May.08 | - Words Red Cross and Red Crescent Day |
| May.09. | - International Mother's Day |
| May.12 | - International Nurse's Day |
| May.15 | - International Day of Families(UN) |
| May.17 | - World Telecommunication Day |
| May.21 | - World Culture Day |
| May.24 | - Common Wealth Day |
| May.31 | - World No Tobacco Day |
| Jun.01 | - World Mass Communication Day |
| Jun.03 | - World Environment Day |
| Jun.10 | - International Day Against Drugabuse & Illicit Trafficking |
| Jun.20 | - World Refugee |
| Jun . 20 | - Father's Day |
| Jun.26 | - UN Charters Day |
| Jun.26 | - World Anti - Drug Day |
| Jul.01 | -International Co-operative Day |
| Jul.11 | - World Population Day |

| | |
|---|---|
| Jul.22 | - International Child Birth Education Awareness Day |
| Sep.12 | - Third World Information Day |
| Sep.17 | - International Peace Day |
| Sep.18 | - World Peace day |
| Sep.22 | - Internatioanal Literacy Day |
| Sep.27 | - International Tourism Day |
| Oct.01 | - International Day for the Elderly |
| Oct.01 | - Universal Children's Day |
| Oct.04 | - World Habitant Day |
| Oct.06 | - World Teacher's day |
| Oct.09 | - World Postal day |
| Oct.14 | - World Standard Day |
| Oct.15 | - International White Cane Day |
| Oct.16 | - World Food Day |
| Oct.24 | - United Nations day |
| Oct.31 | - World Thirft day |
| Nov.05 | - World Community Day |
| Dec.01 | - World AIDS Day |
| Dec.01 | - International Prisoners for Peace Day |
| Dec.03 | - International day of Disabled Persons (UN) |
| Dec.05 | -International Volunteer Day of Economic and Social Development (UN) |
| Dec.10 | - Universal Human Rights Day |
| Dec.15 | - Bill of Rights Day |
| Dec.31 | - World Peace Mediation Day |

**Miss. S. Dilokshana,**
**Grade - 8^V^**

# சிதைந்த நினைவுகள்

பச்சை வயல் நடுவே அமைந்த
என் மாளிகை
தென்னங் கீற்றுக்களும்
நீர் நிறைந்த கேணியும்

அழித்துச் சென்றதே ஆயுதங்கள்
கண்முன் சிதறியது என் குடும்பம்
தாய் மண்ணில் தாயுடன்
அனைத்தையும் இழந்தேன்

ஆழி கடந்து அயல் நாடு சென்றேன்
கடக்கும் கடலில்
கடைசி சொந்தங்களையும் இழந்து
தமிழகத்தில் தனியனானேன்.

பட்டுப் போனது பனை மர நிழலிலே
பாட்டுப் பாடிப் பகிர்ந்துண்ட நாட்கள்
வரம் பல தரும் முருகன் கோயில்
வளமாய் வாழ்ந்த என் குடும்பம்

நிலைத்து நிற்பதோ இன்று
நீலவானத்தை நோக்கும்
நீர் நிறைந்த விழிகளும்
நிம்மதியில்லாப் பெருமூச்சும் தான்.

அகதியாய் ஆதரவற்று இருக்கும்
அநாதையின் அழு குரல்
ஆழி கடந்து சென்று - எம்
தாயகத்தில் ஒலிக்காது.

தாய் மண்ணைத் தீண்டும்
தவிப்போடு நானும்
நினைவலையில் சிக்கி நனவிழந்த வேளை
சிதைந்தன நினைவுகள்
சிசு ஒன்றின் வீரிட்ட ஒலியால்

செல்வன் ஜீ. பால்ராஜ்
13 கலை

# இன்றைய காலகட்டத்தில் உளவளத்துணை

நகர மயமாதலும் கைத்தொழில் மயமாதலும் வேகமாக வளர்ந்து வருகின்ற காலகட்டத்தில் சமுதாய கட்டமைப்பில் ஒவ்வொரு தனிமனிதனதும் வாழ்க்கை முறை சிக்கலானதாக மாறுவதற்கு காரணமாக அமைவதோடு உலக மயமாதலும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. வேகமாக மாறி வரும் சமுதாய கட்டமைப்பில் சமூக உறவுகள் சீர்குலைந்து உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பாரிய அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க நேர்கின்றது. இதனை வேறுவிதமாக நோக்குவோமாயின் நாளாந்த வாழ்க்கை வட்டத்தில் தனிநபர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சிக்கல்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியாததன் விளைவாக பிரச்சினைகளை இன்னொருவரோடு பகிர்ந்துகொள்ள முடியாத நிலை அல்லது மற்றவர் பிரச்சினையினை செவிமடுக்கின்ற தன்மைகள் தற்கால சமூகத்தில் இல்லாதநிலை காணப்படுகின்றது.

இதன் பின்னணியாக குடும்ப ரீதியாக பிரச்சினைகளும், சமூக வன்முறைகளும், குற்றச்செயல்களும், தற்கொலை செய்து கொள்ளும் நிகழ்வுகளும் பிறழ்வான நடத்தை வெளிப்பாடுகளும் சிறுவர் துஷ்பிரயோகச் செயல்களும் வளர்ந்து வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இச்சிக்கலான சூழ்நிலையில் இருந்து மனித சமூகத்தினை மீட்டெடுக்க உதவி செய்ய வேண்டியது அவசியமானதாக இன்று காணப்படுகின்றது. இவ்வாறு சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு உதவி செய்கின்ற துறையே உளவியல் உளவளத்துணை எனக் குறிப்பிடப்படுகின்றது.

உளவியல் உளவளத்துணையின் மூலம் தனிநபர் முகம் கொடுக்கும் பலவிதமான உளவியல், நடத்தை மற்றும் தீர்மானம் எடுத்தல் என்பவற்றில் உள்ள பிரச்சினை என்பவைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாமல், தவிர்த்துக் கொள்ளவும் அவற்றை நல்லமுறையில் முகங்கொடுக்கவும் தனிநபரின் ஆளுமையினையும் திறன்களையும் விருத்தி செய்வதற்கான உதவியினை மேற்கொள்வதே உளவியல் உளவளத் துணையாகும்.

இவ்வாறு அமைகின்ற உளவியல் உளவளத்துணை தற்காலத்தில் நேரடியாக உளவளத்துணை என அழைக்கப்படுகின்றது. உளவளத்துணை என்பதனை வரைவிலக்கணப்படுத்திப் பார்க்கும் போது.

"மனிதர்கள் முகங் கொடுக்கும் பல தரப்பட்ட உளவியல் நடத்தை மற்றும் ஆளிடை உறவுகள் போன்ற பிரச்சினைகளை உளவியல் விஞ்ஞான ரீதியில் அணுகி அவற்றைத் தீர்ப்பதற்கு வழிகாட்டுதல், தீர்மானம் எடுக்க உதவுதல் கற்றுக் கொடுத்தல் வேறு நிபுணத்துவ சேவைகளுக்கு வழிகாட்டுதல் என்பதே உளவளத் துணையாகும்.

இதனடிப்படையில் யாருக்கு உளவளத்துணை அவசியமானது என்பதனை நோக்குவோமாயின்.

(i) குடும்பப் பிரச்சினை

(ii) பாலியல் பிரச்சினை

(iii) சுகாதாரப் பிரச்சினை

(iv) கல்விப் பிரச்சினை

(v) காதல் பிரச்சினை

(vi) தொழில் பிரச்சினை

(vii) கடுமையான பொருளாதாரப் பிரச்சினை

(viii) தீர்மானம் எடுக்கமுடியாமல் கஷ்டப்படுதல்.

(ix) ஏதாவதொரு பொருத்தப்பாடற்ற நடத்தைப் பிரச்சினை

(x) ஏதேனுமொன்றுக்கு அடிமையாக இருத்தல்.

போன்ற ஏதாவது ஒரு காரணிக்கு ஆட்பட்டு இருப்போராயின் உளவளத்துணையாளரின் உதவியினை பெற்றுக்கொள்வது வாழ்வினைச் சரியாகச் சிறந்தமுறையில் திட்டமிட்டுக் கொள்வதற்கு உதவியாக அமையும்.

உளவளத்துணையின் போது சேவை நாடியின் பிரச்சினையை நன்றாக செவிமடுத்து அவரைப் புரிந்து கொண்டு அவரின் பிரச்சினையின் உண்மை நிலையை அவருக்கு சரியாகப் புரிந்து கொள்ள வாய்ப்பளித்து அதனைத் தீர்த்துக்கொள்ள அவரின் உள்ளே காணப்படும் இயல்பான ஆற்றல்களை வெளிக்கொணரச் செய்வதே உளவளத்துணையின் நோக்கமாகும். சேவை நாடி தனது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள ஆலோசனை வழிகாட்டல்களே உளவளத்துணையின் போது வழங்கப்படுகின்றது. மாறாக அவரின் பிரச்சினையை தீர்ப்பதல்ல.

எல்லோரும் தமது பிரச்சினைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் இருப்பின் அப்பிரச்சினைகளைச் சுயமாக தீர்த்துக் கொள்ளக்கூடிய இயலுமை அவரில் காணப்படும் மாறாக அவரில் பிரச்சினை ஏற்படுவதற்கான காரணத்தினை அவர் தெளிவாக புரிந்துகொள்ள முடியாத நிலையில் உளவளத்துணையின் போது உளவளத்துணையாளர் தனது உளவியல் அறிவையும் உளவியல் செயன்முறைகளையும் பயன்படுத்தி அவரது பிரச்சினைகளை யதார்த்த பூர்வமாக விளங்கிக் கொள்ளவும் தீர்த்துக் கொள்ளவும் சேவைநாடிக்கு தேவையான சூழ்நிலைகளை ஏற்படுத்தி ஒழுங்குபடுத்திக் கொடுப்பதே உளவளத்துணையாளரின் பணியாகும்.

நாளாந்த வாழ்க்கை நிகழ்வுகள் காரணமாக ஒரு மனிதனில் பல்வேறு நிலையில் அழுத்தங்கள், பிரச்சினைகள் ஏற்படுகின்றது. அவற்றிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கு உளவளத்துணை உதவிபுரிகின்றது.

**திரு. இ. ராஜ்பிரகாஷ்**
வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்.

# எனது பாடசாலை

எனது பாடசாலையின் பெயர் மட் / பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம் ஆகும்.

இப்பாடசாலை 1945 ஆண்டு பங்குனி மாதம் முதலாம் திகதி, மட் / பேத்தாழை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்னும் பெயருடன் நிறுவப்பட்டது.

இப்பாடசாலையின் முதல் அதிபர் மதிப்புக்குரிய திரு. S. ஆறுமுகம் ஐயா அவர்கள் ஆவார்.

இப்பாடசாலை ஆரம்பித்த போது 96 மாணவர்களும் 3 ஆசிரியர்களும் காணப்பட்டதாக எமது பாடசாலை வரலாறு கூறுகின்றது.

எனது பாடசாலையின் தற்போதய அதிபர் மதிப்புக்குரிய திரு. த. சந்திரலிங்கம் ஐயா அவர்கள் ஆவார்.

எனது பாடசாலையில் தற்போது கிட்டதட்ட தொள்ளாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

எனது பாடசாலையில் தற்போது 40 ஆசிரியர்கள் கல்வி போதிக்கின்றார்கள்.

இன்று எனது பாடசாலை பல்வேறுபட்ட பௌதீக வளங்களை கொண்டு காணப்படுகிறது. அதாவது விஞ்ஞான ஆய்வுகூட வசதி கணனி அறை வசதி விளையாட்டு மைதான வசதி, நூலக வசதி போன்ற வசதிகளை முன் உதாரணமாக கூறலாம்.

எனது பாடசாலையில் கல்வி கற்று உயர்ந்த நிலையில் வாழ்வோர் இன்றும் உள்ளனர். உதாரணமாக மேன்மைதகு கிழக்கு மாகாண முதலமைச்சர், வாழைச்சேனை அஞ்சல் அலுவலக தபால் அதிபர், அதிபர், பொது சுகாதார தலைமை பரிசோதகர், வைத்தியர், ஆசிரியர்கள் போன்றோரை குறிப்பிடலாம்.


எனது பாடசாலை இன்று போல் மலரும் ஒவ்வொரு ஆண்டுகளிலும் வளர்ச்சி அடைவதுடன் கல்வி பயிலும் மாணவர்கள் மூலம் சிறந்த பெறுபேறுகளை பெற்று உயர்ந்த நிலையை அடைய வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் ஒரு மாணவன் என்ற வகையில் ஏணிப்படியாக உழைப்பேன். என்பது எனது மனதின் திடகாத்திரமான உறுதி மொழியாகும்.

**ஆக்கம் : ஜெ அட்சயன்**

**தரம் -** 5P

# புத்தகத்தைக் காப்பதெப்படி?





புத்தகத்தை அதிகமாகப் பிரிக்காதீர்.

பிரித்தபடியே கவிழ்த்து வைக்காதீர்.

மூலைகளை மடிக்காதீர்.

தூக்கம் வரும்போது எடுத்து வைக்க மறவாதீர்

தலையணையாக வைத்துக் கொள்ளாதீர்.

வைக்கும் போதும் கொடுக்கும் போதும் வீசியெறியாதீர்.

ஆளின் மீதோ, பூமியிலோ அடிக்காதீர்.

குழந்தைகளிடம் கொடாதீர்.

குறிப்புக்களும் கோடுகளும் எழுதாதீர்.

எண்ணெய், தண்ணீர் பட்ட கைகளோடு தொடாதீர்.

**செல்வன். சா. நிசாந்தன்**
**தரம் - $7^P$**

"In you are in a place of authority never forget why you are in that position.
Alwayes stoop as low as required to bless and serve others"

# இலங்கை தமிழ் நாடக வரலாறு

இலங்கை தமிழர் நாடக அரங்கியலைப் பற்றிய ஆய்வுகள் பலரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 20ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமூக பொருளாதார அரசியல் சூழ் நிலைகளுக்கு ஏற்றவாறு இலங்கையில் தமிழ் நாடக அரங்கு புதிய மாற்றங்களை பெற்றுள்ளது. அண்மைக்கால ஆய்வுகளும், வெளியீடுகளும் இலங்கைத் தமிழர் இந் நாட்டின் பழங்குடிகள் என்பதை உறுதிப்படுத்துகின்றன. இதற்கு நாடக ஆய்வு முறைகள் சான்றுகளைத் தந்து உதவுகின்றன.

இலங்கை தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு குழுக்களும் பல்வேறு சடங்கு முறைகளும் வழக்கில் இருந்து வருகின்றன. இவற்றுள் எவை நாடகமாகும் தன்மையுடையன என்பதை நாம் ஆராய வேண்டும். சமய சடங்குகளினாலும் நாடகத்துறை வளர்ச்சி பெற்றுள்ளது. சடங்கிலிருந்து நாடகம் தோன்றியது என்னும் கொள்கை இப்போது அதிகமானோரினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஒன்றாகும். சடங்கு என்பது யாது? அதில் இருந்து எவ்வாறு நாடகம் தோன்றியது.

உலக நாடக தோற்றத்திற்கு கிரேக்க சடங்குகளை அடிப்படையாகக் கொள்வதைப் போல் இலங்கை தமிழ் நாடக அரங்கும் சடங்குகளின் அடிப்படையிலிருந்து தோன்றியதாகும். நாடகம் என்ற கருத்து பொதுவாக மக்கள் இடையேயுண்டு. இதே போன்று நாடகங்கள் பரிணாமத்தினால் தோன்றியது என்றும் நாடகத்தின் அடிப்படை என்பதை சமய சடங்குகளிலே தான் காண முடிகிறது. நாடகத்தின் தோற்றமும் அங்கு இருந்து தான் தோன்றியுள்ளன.

சமூதாயம் என்கின்ற கட்டுக்கோப்புக்குள் இயங்குகின்ற நிறுவனமே நாடகம் என்கின்றனர். நாடகம் பற்றிய பூரண ஆய்விற்கு உட்படும் போது நவீன நாடகங்களுடன் அல்லது நவீன நாடக சூழலில் நடக்கின்ற நாடகங்களுடன் நின்றுவிடாமல் விஞ்ஞானம் தொழினுட்ப வளர்ச்சியில் பின்தங்கிய மக்களிடையே வழங்கிய நாடகங்களையும் எடுத்துக் கொள்வோம். ஏன் என்றால் இவை அனைத்தும் நாடக வளர்ச்சிக்கு பல்வேறு படிநிலைகளை காட்டி நிற்பனவாகும். அந்த வகையில் ஒரு சமூகத்தில் நாடக வளர்ச்சியை ஆராயும் போது நாடகம் சார்ந்த சமயக் காரணங்கள் சாராத நாடகங்கள் என்று சற்று ஆழமாக ஆராயப்பட வேண்டும்.

சடங்கு என்ற சொல் மதரீதியாக அல்லது சமூக ரீதியாக ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட ஒரு நடைமுறையை குறிக்கின்ற தொன்றாகும். இதனாலேயே நாம் விவாகத்தினை சடங்கு என்கிறோம் அல்லது ஒரு மனிதன் இறந்த பின் 5 ஆம்

நாள் அல்லது 08ஆம் நாள் செய்ய வேண்டிய கருமங்களை சடங்கு என்று சொல்கின்றோம். மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, நுவரலெியா போன்ற இடங்களில் வருடா வருடம் நடைபெறும் கோயில் உற்சவத்தை சடங்கு என்கின்றோம். சடங்கு என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செய்ய வேண்டிய ஒரு காரியமாகும். இதனையே வடமொழியில் 'கரணம்' என்று கூறுவார்கள் செய்யப்படுவது என்பது இதன் கருத்து ஆங்கிலத்தில் இதனை RITUAL என்று சொல்வார்கள். அதாவது ஒரு (RITE) சடங்கு முறையோடு சம்பந்தப்பட்டுள்ளது.

சடங்கு என்பது பொதுவாக எதனைக் குறிக்கிறது. என்பதனை நாம் பார்த்தல் வேண்டும். அது ஒரு சாதாரண விரத நாளாக இருக்கலாமல்லது ஒருவருடைய இறப்பின் பொழுது செய்யப்படுகின்ற சடங்காக இருக்கலாம். இவை எல்லாவற்றிலும் அடிப்படையில் காணப்படுகின்ற பண்பு முன்னர் நிகழ்ந்த ஒன்றை மீண்டும் செய்து காட்டுவது என்ற மனநிலையில் தான் அதாவது முன்னர் யாரோ ஒருவர் இவ்வாறு ஒன்று செய்து இருக்கிறார். அதனால் ஏற்பட்ட பயன்கள் இவைகள் அதன் காரணமாக நாமும் அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் எங்களுடைய வாழ்க்கையில் அதனை திருப்பி செய்கின்ற பொழுது நமக்கும் அதே பலன் கிடைக்கும் என்கின்ற நம்பிக்கை அங்கே இருப்பதை நாங்கள் காணலாம்.

எனவே சடங்கு என்பதனுடைய அடிப்படையான அம்சம் நம்பிக்கையென்பதாகும் நம்பிக்கையில்லாவிட்டால் நாம் சடங்கினைச் செய்யமாட்டோம். இவ் விசுவாசத்திற்கு இரண்டு தளங்கள் உள்ளன.

01. முன்னர் ஏதோ ஒன்று நிகழ்ந்தது என்பதில் நம்பிக்கை, இதனை ஐதீகம் (myth) என்று கூறுவார்கள்.

02. அது இவ்வாறுதான் நிகழ்ந்தது என்ற செய்கை சடங்கு(RITUAL) நம்பிக்கை என்று கூறுவார்கள்

நிகழ்ந்தது என்பதில் நம்பிக்கை, அது இவ்வாறு தான் நிகழ்ந்தது என்ற சடங்கு முறையில் நம்பிக்கை அதை திருப்பி செய்தால் அதே பலன் நமக்கு திருப்பிக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இந்த சமயச் சடங்குகள் எல்லா இடங்களிலும் உண்டு. உண்மையில் சடங்குகள் இல்லாத மதங்கள் இல்லை எந்தவொரு மதத்திற்கும் நம்பிக்கை சடங்கு என்ற இரண்டு விடயங்களும் அடிப்படைக் காரணமாயிருக்கும்.

நாங்கள் கடவுளே என்று கூறுவது ஒரு சடங்குதான் திருநீறு பூசுவதும் சடங்குதான். சிலுவை போட்டுக் கொள்வதும் சடங்குதான். இச் சடங்குகள் சற்று

விஸ்தாரமாக அமைகின்ற முறைமையிலே தான் நாடகங்கள் தோன்றுகின்றன. உதாரணமாக இந்துமத சடங்குகள் சிலவற்றைப் பார்ப்போம். கந்தசஷ்டி விரதக் கடைசியிலே நடைபெறுகின்ற சூரன்போர் என்கின்ற வைபவத்தின் சடங்கினை எடுத்துக் கொள்வோம். எப்போதோ ஒரு காலத்தில் ஏதோ ஒரு யுகத்தில் அசுரர்கள் செய்த அநியாயங்களினால் தேவர்கள் துன்பம் அடைந்து முருகனிடம் முறையீட முருகன் அந்த அசுரர்களின் தலைவனாகிய சூரனையும் அவன் தம்பிமாரையும் கொன்றது தான் நடந்த சம்பவமென்ற ஐதீகம் அந்த சம்பவம் ஐப்பசி மாதம் அமாவாசையை அடுத்து வருகின்ற ஆறாம் நாளில் நடந்ததாக நாம் நம்புகிறோம்.

அது நடந்த சம்பவம் தேவர்கள் எவ்வாறு தங்களுடைய கஷ்டங்களை எல்லாம் தீர்க்க வேண்டும் என்று பசி, பட்டினியாக இருந்து முருகனை வேண்டினார்களோ! அதே போல் நாங்கள் உபவாசம் இருந்து முருகனை வணங்கிறோம். சூரன் போரை எடுத்துப் பார்ப்போமானால் இதற்குள் ஒரு பூரணமான சடங்கு இருப்பதனை நாம் காணலாம்.

இதே போல் கிறிஸ்தவ சடங்கு ஒன்றையும் எடுத்துக் கொள்ளலாம். ஞாயிற்றுகிழமைகளில் கிறிஸ்தவ தேவாலயங்களில் நடக்கின்ற ஆராதனையில் இயேசுவினுடைய மரிப்பும் அவர் புத்துயிர்ப்பும் அங்கே சித்தரித்து காட்டுவதை காணலாம். அவ்வாறு உயிர்த்தெழுந்த இயேசுவினுடைய ஒரு பகுதியும் அவருடைய இரத்தத்தில் ஒரு பகுதியும் நம்முடன் சேர்ந்து கொள்வதற்கு குறியீடாக நாம் அப்பத்தினையும் திராட்சை ரசத்தினையும் நினைவுபடுத்துகிறோம்.

அந்த வகையில் இலங்கை தமிழ் நாடக அரங்கம் சமய சடங்குகளின் அடியாகவே தோற்றம் பெற்றது என்பது பல ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும். எனவே உலக நாடக தோற்றத்திற்கு சடங்குகளே அடிப்படை என்பதைப் போன்று ஈழத்து தமிழ் நாடக தோற்றத்திற்கும் சமய சடங்குகளே காரணமாயமைகின்றது.

**செல்வி. ராஜேந்திரன் ராஜ்பிரியா,**
13 கலைப்பிரிவு
2008 - 2010

# சிந்திக்கச் சில துளிகள்

| | |
|---|---|
| * அழகு என்பதென்ன? | பண்பான செயற்பாடுகள் |
| * வாக்கு என்பதென்ன? | சத்தியம் தவறாமை |
| * பிணக்கு என்பதென்ன? | நாவடக்கத் தெரியாமை |
| * கணக்கு என்பது என்ன? | வருவதைப் பேணத்தெரிவது |
| * துரோகி என்பவன் யார்? | நண்பன்போல் நடிப்பவன் |
| * விவேகி என்பவன் யார்? | வருமுன்காப்போன் |
| * நண்பன் என்பவன் யார்? | ஆபத்திலும் அருகிலிருப்பவன் |
| * ஆசான் என்பவன் யார்? | குறைகள் களைபவர் |
| * போற்ற வெண்டியது எது? | உழைப்பை |
| * பிரிக்க வேண்டியது எது? | சலிப்பு |
| * வகுக்க வேண்டியது எது? | இலட்சியம் |
| * கழிக்க வேண்டியது எது? | சோம்பல் |
| * பெருக்க வேண்டியது எது? | ஊக்கம் |
| * மிக மிக நல்லது - | திட்டமிட்ட செயற்பாடு |
| * மிக மிகத் தீயது - | பழிவாங்குவது |
| * மிகப் பெரிய வெகுமதி - | பொறுமை |
| * மிகமிகத் தேவை - | சமயோசித புத்தி |
| * மிக இனிமையானது - | அன்பு செய்வது |
| * மிக மோசமானது - | பொறாமை |
| * நம்பக் கூடாதது - | வதந்தி |

| | | |
|---|---|---|
| ✳ ஆபத்தைத் தருவது | - | அதிக பேச்சு |
| ✳ உறவைக் கெடுப்பது | - | கடன் |
| ✳ உயர்வுக்கு ஒரே வழி | - | உழைப்பு |
| ✳ சாதனையின் சாதனை | - | விடாமுயற்சி |
| ✳ முன்னேற்றத்தைச் சிதைப்பது | - | கோபம் |
| ✳ நிம்மதியைக் கெடுப்பது | - | சந்தேகம் |
| ✳ நோயைத் தருவது | - | மிதமிஞ்சிய உணவு |
| ✳ செய்ய வேண்டியது | - | உதவி |
| ✳ நட்பைப் பெற வழி | - | புகழ்ச்சியான பேச்சு |
| ✳ மதிப்பைப் பெற வழி | - | உயர் பண்புகள் |
| ✳ அமைதியாய் இருக்க ஒரே வழி | - | சகிப்புத் தன்மை |
| ✳ கடன்படாதிருக்க ஒரே வழி | - | சேமிப்பு |

**தொகுப்பு**
**திருமதி. ஷர்மிளா ரஞ்சன்**
**(ஆசிரியர்)**




# பிரம்மனின் வேற்றுருவமானவளே!

அன்பின் பிறப்பிடமே !
கற்பின் சிகரமே !
இன்பத்தின் இமய மலையே
இன் சொல்லின் இலக்கணமே.

உலகைச் சிருஷ்டிக்க - இப் பாரினில்
பிரம்மன் கொண்ட வேற்றுருவமே - நீயம்மா!
அன்பின் உருவமும் நீயம்மா!
பாசத்தின் இருப்பிடமும் நீயம்மா!

பத்து மாதங்கள் கருவறையாகிய - சொர்க்கத்திலே
எம்மை பாதுகாத்து ஈன்றெடுத்த தேவதையே!
உன் அரவணைப்பு சொர்க்கத்தின் உறைவிடமே
நீயோ கடவுளின் ஒரு கோடி தரிசனமே!

நிலைமாறும் உலகினில்
நிலைத்திடும் அன்பின் இருப்பிடமே
இன்றென்பது உண்மை - அதை
உணர வைத்த எம் அன்னையே!

கண்விழித்து உதிரத்தைப் பாலாக
ஊட்டினாள் அல்லும் பகலும் அன்போடு
அரவணைத்தாள் - உலகத்தின்
உறவுகளில் நிலையான உறவின் இருப்பிடமானவளே!

உன்னையும் என்னையும் படைத்தது யார்?
உலகில் உதித்திடும் உயிர்களின் முதல் வார்த்தையாய்
அமைந்த அன்னையே அன்பின் கடிமலரே
உன் அன்பிற்கு ஒப்பாக இப் பாரினில் யார் உண்டோ?

**செல்வி. சி. கவிதா**
தரம் - 12 கலைப் பிரிவு

# மாரியா மொண்டிசூரி அம்மையாரின் சிறந்த கல்விச் சிந்தனைகளும் இலங்கையின் ஆரம்பக் கல்வியில் அதன் செல்வாக்கும்.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த மொண்டிசூரி அம்மையார் (1870 - 1948) சிறார் கல்வி உளவியலாளர்களில் சிறப்பானவர்களுள் ஒருவராகக் கருதப்படுகின்றார். கற்றலுக்கான சிறந்த அடித்தளமானது; ஆரம்பக் கல்வியில் சிறப்புற அமைத்துக் கொடுக்க வேண்டும். அவ்வாறு அமைகின்றபோதே பிள்ளைகளின் எதிர்கால கல்வி பிரகாசமாக அமையும் என்ற நோக்கிலேயே சிறப்பான கருத்துக்களை சிறுவர்களுக்காக முன்வைத்துள்ளார்.

உளரீதியான பின்னடைவினைக் காட்டிய பிள்ளைகள் தொடர்பாக அவர் நடாத்திய ஆய்வின் பேறாக சாதாரண பிள்ளைகளுக்காக "மொண்டிசூரி கல்வி முறை" யை அவர் உருவாக்கினார். இவரின் கருத்து யாதெனில் ஆசிரியரானவர் கற்பிக்கும் போது பிள்ளைகளுக்கு இயற்கையான கற்றல் சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அதாவது கற்றலானது பிள்ளைக்கு பரீட்சயமான இயற்கைச் சூழலில் இருக்க வேண்டும் என்பதனை இவர் வலியுறுத்துகின்றார்.

வகுப்பறையானது சிறார்களின் வயதுக்குப் பொருத்தமான உபகரணங்கள் மற்றும் பொருட்களைத் தாராளமாகக் கொண்டதாக அமைய வேண்டும் எனக் கூறியுள்ளார். அவ்வாறு அமையாவிடின் உபகரணப் பாவனை பொருத்தமற்றதாக மாறிவிடும் என்பது உண்மை. இவரின் கருத்தின் சாராம்சம் என்னவெனின் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியூட்டக் கூடியதான உலகிற்கு அவர்களை இட்டுச் செல்ல வேண்டும். இதன் மூலம் பிள்ளைகள் கல்வியில் வெறுப்பு இன்றி மகிழ்ச்சிகரமாக கற்பதற்கு துணை நிற்கும்.

ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவமான பல்வேறுபட்ட திறமைகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வாறான தனித்திறமைகள் வெளிக் கொணரப்பட்டு விருத்தி அடைவதற்கான சுதந்திரம் கல்வியினூடாக வழங்கப்பட வேண்டும். என்பது அம்மையாரின் திடமான கருத்து ஆகும்.

பிள்ளைகளின் கல்விக்கு மிகப் பொருத்தமான முறை "சுய கற்றல் முறை" என்பதனை மொண்டி சூரி அம்மையார் வலியுறுத்துகின்றார் பிள்ளைகளை செயற்பட சுதந்திரம் வழங்கும் போது அவர்கள் தமது மனக்கிடக்கைகளையும், ஆற்றல்களையும் திறம்பட வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்து விடுகின்றது.

இயற்கைச் சூழலில் பிள்ளைகள் தானாகத் தேடி அறிந்து கொள்ள வேண்டும் எனக் கூறும் அம்மையார் இதுவே பிள்ளைகளின் நிலைத்து இருக்கும் கல்விக்கு பொருத்தமானது எனவும் கூறுகின்றார். இயற்கைச் சூழலிலே பிள்ளைகள் தாமாகக் கண்டறிந்து உணர்ந்து (உண்மைப் பொருட்கள்) அனுபவித்து கற்கின்றபோது அது சிறார்களின் மனதிலே மிகவும் உறுதியான நிலைத்து இருக்கும் தன்மையினை ஏற்படுத்தி

விடுகின்றது. உண்மைப் பொருட்களை காண்பிக்க முடியாத சந்தர்ப்பங்களில் மாதிரிகளை அமைத்துக் கற்பிக்க வேண்டியது ஆசிரியர்களின் கடமை எனக் கூறும் அவர், அப் பொருட்கள் மாணவர் தொட்டுணரக் கூடிய விதத்தில் வகுப்பறையில் காட்சிப்படுத்த வேண்டும் என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

எனவே பிள்ளைகள் இயற்கைச் சூழலிலே தாமாக முன்வந்து அவர்களின் வயதிற்குப் பொருத்தமான உபகரணங்களைத் தாராளமாகப் பயன்படுத்தி சுயகற்றல் முறையில் ஈடுபடும் போது அவர்களின் கற்றல் செயற்பாடு ஆக்கபூர்வமாக அமையுமென்பதை உளவியல் கருத்து வாயிலாக முன்வைத்துள்ளார். இங்கு ஆசிரியரின் கடமையென்னவெனில் வழிநடத்துவதே ஆகும்.

மாணவர்கள் தமது சூழலைப் பற்றியும், அங்கு நிகழ்கின்ற மாற்றங்களைப் பற்றியும் விளங்கிக் கொள்வதற்கு பிள்ளைகளுக்கு சிறந்த புலக்காட்சி அவசியமென்பதனைச் சுட்டிக் காட்டும். இவர் பிள்ளைகள், அறிவாளிகளாகவும் சிறந்த திறமைசாலிகளாகவும் விளங்குவதற்கு புலக்காட்சி அவசியமானது என்று கூறுகின்றார். இவர் தமது கொள்கைகளில் புலக்காட்சிக்கே முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார். அதாவது பிள்ளைகள் ஒவ்வொரு புலன் சார்பாகவும் காட்சி காண்கின்ற திறமையை வளர்க்க வேண்டும். பொருட்களையும் அவற்றின் இயல்புகளையும் வேறுபடுத்திக் காண்கின்ற திறனை வளர்க்கின்ற போது கற்றலின் முதன்மை இலக்கினை அடைந்து விடுகின்றது. புலன் உணர்ச்சி அனுபவங்களையும் பெற்றுக் கொள்ள முடியும் எனவே சிறுவயதில் இருந்து புலக்காட்சியின் ஊடாக கற்றல் முறை பிள்ளையின் கல்வி வளர்ச்சிக்கு அவசியமாகின்றது.

மேலும் மொண்டிசூரி அம்மையாரின் கல்வி முறை இலங்கையின் ஆரம்பக்கல்வியில் ஏற்படுத்திய செல்வாக்கை நோக்குவோமானால், இலங்கையின் ஆரம்பக் கல்வியானது. 6 வயது தொடக்கம் 10 வரையான ஐந்து ஆண்டுகளை மையப்படுத்தியதாக காணப்படுவது நாமறிந்த விடயம், இலங்கையின் ஆரம்பக்கல்வியில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதனை உணர்ந்த அரசானது பல்வேறு கால கட்டங்களில் ஆரம்பக்கல்விச் சீர்திருத்தங்களையும் பொருத்தமான காலப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கற்றல் கற்பித்தல் செயல் முறைகளை நோக்கும் போது இது இடையறாது தொடர்ச்சியாக நிகழ்வதாகும். கற்றல் விடயத்தில் பிள்ளைகள் தாம் கற்க விரும்புவதை தேர்ந்தெடுக்க சுதந்திரமுள்ளது ஆசிரியரானவர் மாணவர்களை மையப்படுத்தி கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இன்றைய கற்பித்தலின் பிரதான உத்திகளை நோக்கின்.

01. வழிப்படுத்தப்பட்ட விளையாட்டுக்கள்
02. செயற்பாடுகள்
03. எழுத்து வேலைகள் என பட்டியல்படுத்தலாம்

இவ்வாறான உத்திகளையே மொண்டிசூரி அம்மையார் தனது சிந்தனையில் அன்று முன் மொழிந்துள்ளார். என்பது விசேட அம்சமாகும். அம்மையாரின் கருத்தினையும்

இலங்கையில் ஆரம்பக் கல்வியில் அவருடைய செல்வாக்கினையும் நோக்கும் போது அது ஓரளவுக்கு ஒன்றுபடுவதனை அவதானிக்கலாம்.

பிள்ளைகள் பாடசாலைக்கு பல்வேறு சூழலில் இருந்து வருகின்றனர், அவர்கள் வெவ்வேறு இயல்புகள், ஆற்றல்கள் என்பவற்றைக் கொண்டுள்ளனர். இவ்வாறான சிந்தனை மட்டமுள்ள பிள்ளைகளை இனங்கண்டு வழிநடத்த வேண்டிய பொறுப்பு ஆசிரியரிடம் உள்ளது.

இலங்கையின் ஆரம்பக்கல்வி வகுப்புக்களில் கற்றலானது மகிழ்ச்சி கரமானதாக அமைய வேண்டும். இவ்வாறு கற்பிக்கும் போது கற்றலானது ஆக்கபூர்வமாக அமையும் இதற்காக பிள்ளை வசிக்கும் சூழல் குடும்பப் பின்னணி என்பவற்றை அறிந்து பெற்ற தகவல்கள் கோவைப்படுத்த வேண்டும் எனக் கொள்ளப்படுகிறது. இதனால் பிள்ளையின் நடத்தைக் கோலத்தைக் அறிந்து பிள்ளைக்கு பொருத்தமான கற்பித்தல் நுட்பங்களை பயன்படுத்த முடியும்.

இந்த விடயத்தையே மொண்டிசூரி அம்மையாரும் கூறுகின்றார். தம்மிடம் வருகின்ற பிள்ளைகளை ஆசிரியர் சரியாக இனங்கண்டு கொள்ளும் போது தான் பிள்ளையை சரியான மிகச் சிறந்த முறையில் வழிநடத்த முடியும் என்கின்றார்.

மேலும் இன்றைய ஆரம்பக்கல்வி முறை சுற்றாடலுடன் ஒன்றித்து கற்பிக்க வேண்டும், கற்பித்தலானது விளையாட்டுடன் கூடியதாக அமைய வேண்டும் என்பது. இன்றைய கல்விமுறையில் விசேட அம்சமாக காணப்படுகின்றது. மேலும் இன்று ஆரம்பக்கல்வியில் செயற்பாட்டுடன் கூடிய கற்பித்தல் முறை காணப்படுவதனை அவதானிக்கலாம். உதாரணமாக ஆடல், பாடல், நடித்தல், ஒட்டுதல், பாவனை செய்தல் போன்ற செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதனால் இவர்களின் கலைத்திறன் விருத்தியுறும் என்ற நிலைப்பாடு காணப்படுகின்றது. இத்தகைய செயற்பாட்டு கற்பித்தல் அவசியம் என்பதை மொண்டிசூரி அவர்கள் தமது கல்விச் சிந்தனையில் கூறியுள்ளார்.

ஆரம்பக்கல்வி மாணவர்களின் கற்றல் சூழலானது (வகுப்பறை) மாணவர்களின் ஆற்றல்களை வெளிக் கொணர்வதற்கு பொருத்தமான இடமாக அமைய வேண்டும் என்பதனை மொண்டிசூரி அன்று கூறியுள்ளார். இன்று எமது நாட்டின் தரம் 1ல் இருந்து வகுப்பறைகள் பிள்ளைகளின் சுதந்திரமான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடியவாறு அமையப் பெற்றுள்ளது.

இவ்வாறான பல்வேறு விடயங்களை எமது நாட்டின் ஆரம்பக்கல்வியில் காணக் கூடியதாகவுள்ளது. எனவே இலங்கையின் ஆரம்பக்கல்வி நடவடிக்கையில் சிறந்த கல்விச் சிந்தனையாளரான மொண்டிசூரி அம்மையாரின் அன்றைய தீர்க்க தரிசனமான சிந்தனைகள் இன்றும் பரிணமித்து வியாபித்து காணப்படுகின்றது என்றால் மிகையாகாது.

**திருமதி. நிற்றாமேரி விக்னேஸ்வரன்.**
ஆசிரியை,.

# அம்மா

உலகிலே பிள்ளை பிறந்தவுடன் உச்சரிக்கும் முதல் வார்த்தையும் முதன்மையான வார்த்தையும் அம்மா தான். அம்மா என்பது தன்னலமற்ற பொது நலமாக வாழும் இதயங்களில் ஒன்றெனவும் கூறலாம். அம்மா மீது பற்றில்லாத பிள்ளை வேறு பொருள் மீது பற்று வைத்தாலும் அது வீணானதாகவே கருதப்படும்.

தமிழில் உள்ள எழுத்துக்களில் முதல் எழுத்தாக ''அ'' உச்சரிக்கப்படுகிறது அதேபோல் முதல் சொல் அம்மாவாகும். ''தாயிற் சிறந்த தொரு கோயிலுமில்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'' என்பதற்கிணங்க நாம் பல கோயில்களுக்கு சென்று எவ்வளவோ பணத்தையும் செலவு செய்து கடவுளை தரிசிக்க முனைகின்றோம். அது பிழை என்று கூறவில்லை. இருந்தும் நம்முடனே ஒரு தெய்வம் இருப்பதை ஒருவரும் உணர்வதில்லை. நாம் உணர்ந்து அத்தெய்வத்திற்கு பணிவிடை செய்து நாளும் தொழுது வருவோமேயானால் உலகில் சிறந்த ஒரு மனிதனாக வாழ்வோம் என்பதில் ஐயமில்லை.

தாயானவள் எமக்கு சதையும் இரத்தமும் தந்து எம்மை உருவாக்கி பத்து மாதங்கள் படாதபாடு பட்டு வயிற்றில் சுமந்து பிறந்தவுடன் இரத்தத்தை பாலாக்கி தன் நித்திரையை தாலாட்டாக்கி தினமும் வருந்தி கண்ணை இமை காப்பது போல பாதுகாப்பாள்.

உலகில் பிறந்த எந்தவொரு மதத்தவரோ, இனத்தவரோ யாராக இருந்தாலும், அம்மா என்ற வார்த்தையை உச்சரிக்காமல் இருக்க மாட்டார்கள். எவன் ஒருவன் எந்த மொழியை தாய்மொழியாக கொள்கிறானோ அந்த மொழியில் ''அம்மா'' என்று சொல்வது வியக்கத்தக்கதல்ல.

எக்காலத்திலும் அம்மா என்று சொல்லுக்கு மதிப்புத்தான். அம்மாவில் பெருமதிப்பாக இருந்த பிள்ளை இன்று அம்மா என்றாலே துச்சமாக மதித்து புதிது புதிதாக தோன்றும் உறவுகளை ஏற்று தாயை தட்டிக்கழிக்கும் நிலைக்கு வந்துவிட்டது. ''தாய் சொல்லைத் தட்டாதே'' என்ற பழமொழிக்கு இணங்க வாழ்ந்தவன் இன்று தகவல் தொழில்நுட்பத்தின் பின்னால் பிழையாக சென்று மதியிழந்து நிற்கும் நிலையை நாம் காணக்கூடியதாக உள்ளது.


அன்று தொடக்கம் இன்றுவரை சினிமாவில் தாயின் பெருந்தன்மைகளை பாடல் வாயிலாக வெளிக்காட்டி நிற்கின்றார்கள். இது தாயின்மேல் கொண்ட ஈடுபாட்டினை மேலும் அதிகரிக்க செய்கின்றது. உதாரணமாக ''அம்மா என்றழைக்காத உயிரில்லையே'', ''அம்மா அம்மா எந்தன் ஆருயிரே......'' போன்ற பாடல்கள் மூலம் அறியலாம்.

இது மட்டுமல்ல பல கலைஞர்கள், கவிஞர்கள் தத்துவவாதிகள், சமய பெரியார்கள் போன்றோரும் தாயின் அவசியத்தையும் தாயின் தகுதிகளையும் அன்பினையும் எடுத்து கூறுகின்றனர் அம்மா. என்பது உலகில் அனைத்து உயிர்களுக்கும் உரிமையானதுமாகும்.

தாயை மதிக்காமல் நடப்பவன் அதற்குரிய தண்டனையை அனுபவிப்பான். ஆனால் தாயின் உள்ளம் அதனை கண்டு தன் பிள்ளை படும் வேதனையை பொறுக்க முடியாமல் அழுது கொண்டே இருக்கும். தன் பிள்ளை எப்படிப்பட்ட கெட்டவனாக இருந்தாலும் கூட மன்னித்து அரவணைக்கும் அன்புள்ளம் தாயைவிட வேறு எவருக்கும் கிடையாது என்றே கூறலாம்.

எனவே அம்மாவை உலகில் பிறந்த உயிர்கள் அனைத்தும் மதிக்க வேண்டும் தங்கத்தில் தங்கமாய் வைரத்தின் வைரமாய் மிகவும் மதிப்புக்கரிய முத்தாய் விளங்குகின்ற தாயே எமது இருளை போக்கி உலகில் நாம் வாழ ஒளி கொடுக்கும் தெய்வம் ஆகும். நாமும் தாயை மதித்து வாழ்வோம்.

**செல்வி. ந. பவிதா**
**தரம் - 09.**



*"Success full people look through a teles cope & see a great life. Pity minded ones look through a microcope & only see the faults of others"*

# விடுகதை

01) கிழித்த கோட்டிற்குள் தான் அவன் ஓடுவான் அவன் யார்?
ரயில்

02) கிண்ணி போலப் பூ பூக்கும், அதைக் கிள்ளி முடிக்க முடியாது?
ஊமத்தம் பூ

03) கிளிகள் மூன்று நிறம் இந்தக் கிளிகள் கூட்டினுள் சென்றால் ஒரே நிறம் இவை என்ன?
வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு

04) குடுக்கை நிறைய நல்ல வைர மணிகள் இது என்ன?
மாதுளம் பழம்

05) கிணற்றினுள் அம்புகளை வீசுவாரேயன்றி எடுப்பார் இல்லை இது என்ன?
மழைத்துளி

06) கிளை உண்டு, ஆனால் இலை இல்லை அது என்ன?
மான் கொம்பு

07) கிணற்றைச் சுற்றி வெள்ளைக் கற்கள் இவை என்ன?
பற்கள்

08) குட்டியும் போடும், குவலயம் எல்லாம் பறக்கும் இது என்ன?
வெளவால்

09) குட்டப் பிள்ளைக்கு குறுணி நகை. இது என்ன?
கோழி மயிர்

10) குட்டைச் சிறுக்கிக்குப் பெட்டிப் புடவைகள் இது என்ன?
வெள்ளைப் பூடு

செல்வன். து. தனுக்கஷன்
தரம் - 5P

# கூத்துக்கலை

கூத்து இருவகையாகப்பிரிக்கப்படும். ஒன்று "வடமோடி" மற்றையது "தென்மோடி" ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வகையான தாளக்கட்டுக்கள் உள்ளன. கூத்தினைப்பழக்குபவர் அண்ணாவியார் எனப்படுவார். அண்ணாவியாருடன் மத்தளம் அடிப்பவர் பக்கப்பாட்டுப்பாடுபவர்கள் ஆகியோர் காணப்படுவர். கூத்துக்கள் கிராமப்புறங்களில் வட்டக்களரிகளில் ஆடப்படுகின்றன. வட்டக்களரியானது 20 அடிக்கு மேற்பட்ட விட்டத்தில் ஒரு அடிக்கு மண்ணை உயர்த்தி சரியாத வகையில் அமைத்து வட்டமாக கம்புகளை நட்டு அதன் மேல் குடை போன்று வர்ணச்சேலைகளைக்கட்டி அமைப்பதே களரி எனப்படும்.

கூத்துக்கள் பெரும்பாலும் இரவு வேளைகளில் மாலை தொடக்கம் விடியும்வரை இக்களரிகளில் ஆடப்படும் கூத்துக்கள் யாரால் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்று சரியாக அறியமுடியவில்லை. என்றாலும் 1833 ஆம் ஆண்டளவில் ஸ்ரீகணேசையர்என்பவரால் எழுதப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. ஆரம்பகாலங்களில் இவை ஏடுகளில்தான் எழுதப்பட்டிருந்தன. நாளடைவில் இவை கொப்பிகளில் எழுதப்பட்டு வருகின்றன. கூத்துக் கொப்பிகளில் அநேகமான எழுத்துப்பிழைகள் இலக்கணப்பிழைகள், வரிமாறுபாடுகள் ஆகியவற்றினைக்காணக் கூடியதாகவுள்ளன.

மட்டக்களப்பைச் சேர்ந்த அமரர் பண்டிதர் வீ.வீ. கந்தையா அவர்கள் வடமோடிக் கூத்தான இராம நாடகக் கதையும் தென்மோடிக் கூத்தான அநுபுத்திர நாடகத்தினையும் தொகுத்து அச்சிட்டு நூலாக வெளியிட்டுள்ளார். இன்னும் முப்பத்தைந்திற்கு மேற்பட்ட கூத்துக்கள் ஏடுகள் கொப்பிகளிலேயே எழுதப்பட்டுள்ளதனை காணக்கூடியதாகவுள்ளது. கூத்துக்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், மலையகம் போன்ற பிரதேசங்களில் வெவ்வேறு விதமாக ஆடப்பட்டு வருகின்றன. கூத்துக்கள் இந்தியாவில் தமிழ் நாட்டின் நொண்டி நாடகத்திலிருந்துதோற்றம் பெற்றிருக்கலாமென்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

கூத்துக்கள் முதலில் அண்ணாவியாரால் பாத்திரங்கள் தெரிவு செய்யப்பட்டு குறித்த ஒரு நல்ல நேரத்தில் ஆரம்பிக்கப்படும் அதனைச் சட்டம் கொடுத்தல் என்று கூறுவார்கள். ஓரிரண்டு மாதங்கள் பழகிய பின்னர். சலங்கை கட்டுதல் நடைபெறும் அதன்பின் ஒருமாத காலம் பழகிய பின்னர் அரங்கேற்றம் நடைபெறும் சலங்கை கட்டும் மட்டும் தினக் கூத்தும் சலங்கை கட்டியபின் கிழமைக்கூத்தும் நடைபெறும்.

கூத்துப்பாத்திரங்கள் முதன் முதலாக களரியில் தோன்றுதல் "வரவு" எனப்படும் இது தனிவரவு, கொலுவரவு எனப்பிரிக்கப்பட்டுள்ளது. கலைஞர்களின் புகைத்தல் செலவு விளக்குப்பற்றும் செலவு (பின்னர் லைட்) ஆகியன அடங்கும் அரங்கேற்றம்,

சலங்கைக்கட்டு ஆகிய வைபவங்களில் அண்ணாவிமார்களுக்கு வேட்டி, சால்வை, சாப்பாடு போன்றன கூத்தாடுபவர்களால் வழங்கப்படவேண்டும் என்பது நியதி.

கூத்து முடிந்து களரி கும்பிட்டு கோவில்தலம் ஒன்றில் ஆடிவிட்டு ஊருக்குள் சென்று வீடு வீடாக ஆடுவார்கள் இதில் ஆடுபவர்களுக்கு சன்மானங்களாகப் பணமும், மதுபானங்களும் கிடைக்கும்.

தற்போது கூத்தினை நவீன நாட்டுக் கூத்தாக மாற்றமடையச்செய்துள்ள பேராசிரியர். சு. வித்தியானந்தன் இதன் முன்னோடியாளர். பேராசிரியர் மௌனகுரு அன்புமணி ஆகியோரும் இம்முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். தற்போது பல்கலைக்கழக மட்டத்தில் கூத்துக்கள் ஆடப்படுகின்றன. முதன் முதலாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சு. வித்தியானந்தன் அவர்களால் "இராவணேசன்" என்னும் நவீன நாட்டுக் கூத்து தயாரிக்கப்பட்டு நடிக்கப்பட்டது. இதன் பேராசிரியர் சி. மௌனகுரு இராவணனாக நடித்தார். அதன் பின்னர் "வாலிவதம்" போன்ற கூத்துக்கள் ஆடப்பட்டன தற்போது தமிழ்த் தினப்போட்டிகளில் கூத்துக்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதே.

### கூத்துப்பாடல் ஒன்று

**கட்டியக்காரன் பாடல் (வரவு)**

கட்டியக்காரன்

"சிரசினில் குல்லா கட்டி சிறக்கவே உடைதரித்து உருகவே கதைகள் பேசி உருட்டியே விழித்துப்பார்த்து பறக்கவே நடைநடந்து பற்புகள் திருதராசன் வாசல் காக்கும் பெருமைசேர் கட்டியக்காரன் சிறப்புடன் வருகின்றானே".........

**கூத்தில் வரும் பாத்திரங்களின் வகை**

ராசா, ராணி, தோழிகள், செவிலி, மருத்துவிச்சி , சேவகன், முனி, கள்ளன், பறையன், குறவன், குறத்தி, வைத்தியன், அனுமான், சடாயு, ஓடக்காரன் ஆகியன.

**கூத்தில் அணியும் உடையும் ஆபரணங்களும்**
**உபகரணங்கள்**


முடி, தலைக்கவசம், மார்புப்பதக்கம், கைப்பட்டி, இடுப்புப்பட்டி, சலங்கை, பிரம்பு, தண்டாயுதம், வில், வேல், அம்பு, அம்பறாப் பொதி, ஊன்றும் கோல், தேர்க்குதிரை, ஓடம், குண்டலம், நெற்றிப்பதக்கம், திலகம், முகமாற்று சடை, தாடி, ஆகியன.

**இப்பிரதேசத்தில் ஆடப்படும் கூத்துக்களின் பெயர்கள்**

1. வள்ளி திருமணம்
2. இராம நாடகம்
3. அனுபுத்திர நாடகம்
4. பப்பிரவாகன் நாடகம்
5. அல்லி நாடகம்
6. பவளக் கொடி நாடகம்
7. இராவணேசன்
8. வாலி வாதம்
9. அனுமன் சண்டை
10. 13ம் போர்
11. 14ம் போர்
12. 15ம் போர்
13. 18ம் போர்
14. கண்டிராசன் கதை
15. மயான காண்டம்
16. அரிச்சந்திரன் நாடகம்
17. சராச்சந்தன் போர்
18. கர்ணன் சண்டை


**செல்வி. இ. கஜேந்தினி**
8V

---



## என் அம்மா!

**பத்து மாதம் தாங்கி**
**பெற்று எடுத்த அம்மா**
**பாசமாக என்னைப்**
**பார்த்து வளர்க்கும் அம்மா**



**நித்தம் நித்தம் எனக்கு**
**புத்திமதிகள் கூறிடுவாள்**
**நிச்சயமாய் அவரை - நான்**
**நெஞ்சுக்குள்ளே வைப்பேன்**

**செல்வி. கி. சிநேகா**
தரம் - 3P

# புலமைப் பரீட்சையும் புலக்காட்சியும்

நான் எனது பழைய சினேகிதி ஒருவரை மிக நீண்ட நாட்களுக்குப் பின் போன வாரம் கோவில் திருவிழாவில் சந்தித்தேன். சுக துக்கங்களை சமமாகப் பகிர்ந்து கொண்டோம். பிள்ளைகள் பற்றிய பேச்சை எடுத்ததுமே

"என் மகன் படி படி என்றா படிக்கிறானே இல்ல ரியூசனுக்குப் போகச் சொன்னாக் கிறிக்கட் விளையாடப் போயிடுறான் "என்று அலுத்துக் கொண்டார். அதற்கு நான் "மகன் என்ன ஏ. ஏல். ஆ செய்யிறார்? என்றேன். "குபீர்" என்று சிரித்துவிட்டுக் கொலசிப் என்றார்.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவரையும் அவர் தம் பெற்றோரையும் ஒரு கணம் எண்ணிப் பார்க்கின்றேன். சற்று வேதனையாகத்தான் இருக்கிறது. சமூகத்தில் எந்தப் பரீட்சைக்கும் இல்லாத தனி மதிப்பு இப்பரீட்சைக்கு உண்டு.

எல்லாப் பொழுதிலும் புத்தகப் பையும், கையுமாகப் பிள்ளைகள் பல்வேறு வகுப்புக்களுக்குப் படையெடுக்கிறார்கள். இப் பரீட்சைக்கான ஆயத்த வகுப்புக்கள் தரம் மூன்றிலேயே ஆரம்பித்து விடுகின்றன. ஏன் தரம் ஒன்றில் என்று கூறினாலும் அது மிகையாகாது. காலை ஆறு மணிக்கு அனுப்பிய பிள்ளையை இரவு எட்டு மணிக்கு அழைத்துச் செல்லும் பெற்றோர்கள் சிலரையும் நான் கண்டிருக்கிறேன்.

"காலை ஆறு மணிக்கு அரங்கேறும் சீருடையும் புத்தகப்பையும் இரவு எட்டு மணிக்குத்தான் இளைப்பாறும்" என்றால் இவ் இளசுகளின் இதயங்கள் தான் என்னாவது? இதைப் பெற்றோர்களே சிந்திக்க வேண்டும்.

மித மிஞ்சிய மேலதிக வகுப்புகளால் பிள்ளைகளுக்கு விளையாடக் கூட நேரமில்லை. விளையாட்டின்போது எத்தனையோ திறன்கள் வளர்க்கப்படுகின்றன. கல்வியலாளர்களும் சிறார்களுக்கு விளையாட்டோடு கலந்த கற்பித்தல் முறைகளையே காட்டி நிற்கிறார்கள். விளையாட்டு மட்டுமல்ல சிறார்களின் உணவு வேளைகள் கூட தவிர்க்கப்படுகின்றன. இதனால் பல நாட்கள் படித்து பார்த்து இருந்து பரீட்சை நாளன்று நோய் வாய்ப்பட்டுப் பலவீனம் அடையும் சந்தர்ப்பங்களும் ஏற்படாமலில்லை. அதிக விடயங்களை அள்ளித் திணிப்பதால் பிள்ளைகள் மன அழுத்தங்களுக்கு உட்படுவதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.

பத்து வயதுப் பாலகனுக்கு ஓய்வு மிக முக்கியமானது. பாடசாலை தவிர்ந்த வேளைகளில் ஒரு மணித்தியால அல்லது இரு மணித்தியால மேலதிக வகுப்பு போதுமானது அப்போது தான் பிள்ளைக்கு விளையாடவும் வீட்டுப்பாடங்களைச் செய்யவும் விட்ட தவறுகளைத் திருத்தவும் வீட்டில் நேரம் கிடைக்கும்

எல்லா ஆசிரியர்களும் நிச்சயம் ஒரு தாயாக இருக்க முடியாது. ஆனால் எல்லாத் தாய்மாரும் வீட்டில் நிச்சயம் ஒரு ஆசானாக இருக்க முடியும்

புலமைப் பரிசில் பரீட்சை எடுக்கும் மாணவருக்குப் பரவலாக எங்கும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுக் கொண்டிருந்த வேளையிலே, அக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் ஒன்று எனக்கு கிடைத்தது. பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த பெற்றோர்கள் இருவரின் பேச்சுப் பரிமாற்றங்கள் இவை.

ஒருவர் "நீங்க ஏன் மட்டக்களப்பில தேவநாயகம் ஹோல்ல நடந்த செமினாருக்கு வரல்ல நாளைக்கு வந்தாறுமூலையில ஒரு செமினார் இருக்கு நாங்க இதோட எட்டாவது செமினாருக்கு வந்திருக்கம். செமினாருக்கு மட்டும் கட்டின காசு இரண்டாயிரத்திற்கும் மேல் இருக்கும்" என்றார்.

அதற்கு மற்றவர்

"செமினாருக்கு மட்டுமா? ரியூசன் காசெல்லாம் சேர்த்துப் பார்த்தா இருபதினாயிரத்திற்கும் மேலாகும்" என்றார்.

பெற்றோர்களுக்கு பிள்ளைகளில் அக்கறை இருக்க வேண்டியது மிகவும் அவசியம். இது பிள்ளையை அலைக்கழிக்கும் வகையில் அதிகரித்து விட்டதோ? அவ் வேளை எந்த முடிவுக்கும் என்னால் வரமுடியவில்லை. இவ்வாறான பெற்றோர்களின் பிள்ளைகளில் பலர் பரீட்சையில் சித்தி பெறுகிறார்களோ என்னவோ ஆனால் தமது வருமானத்தை பெருக்கும் போட்டியில் சிலர் வெற்றி பெற்று விடுகிறார்கள்.

இப்போதெல்லாம் மழை விட்டாலும் தூவானம் விடாது என்பது போல பிள்ளைகள் புலமைப் பரிசில் பரீட்சை எழுதி முடித்து விட்டு வீட்டுக்கு வந்து பன்னிரெண்டு மணித்தியாலங்கள் ஆவதற்குள் இரண்டாம் கட்டப் பரீட்சை வீட்டிலே பெற்றோர்கள் மேற்பார்வையில் நடந்தேறும். இதற்கென புத்தகக் கடைகளில் போட்டோப்பிரதியாக வினாப் பத்திரங்கள் சுடச் சுட வெளியாகும். பின் பொருத்தமற்ற புள்ளித் திட்டத்திலே அவை திருத்தப்பட்டு ஏனைய பிள்ளைகளுடன் ஒப்பீடு செய்து வெற்றியில் திளைப்பதும், வேதனைப்படுவதுமான பெருமிதங்களே தற்போது பெற்றோர்களிடம் காணப்படுகிறது.

2008 மூன்றாம் தவணை ஆரம்ப நாள் அன்று தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையை விடுமுறையில் எதிர் கொண்ட களிப்போடு கலகலப்பாக பேசிக்கொண்டிருந்த மாணவரைப் பார்த்து "எப்படி பிள்ளைகள் பரீட்சை எல்லாம்"? என்றேன் "அப்பாடா சனியன் ஒன்று தொலைஞ்சு" என்று ஒரு மாணவி படாரென்று பதில் தந்தார். அவள் ஒரு துடுக்கான மாணவிதான் இருந்தாலும் எல்லோருமாகச் சேர்ந்து அவர் மனதில் ஒரு பெருஞ் சுமையை ஏற்படுத்தி விட்டனரோ? என்று எண்ணிப்பார்க்காமலும் இருக்க முடியவில்லை. இத்தனைக்கும் இடையில் இப் பரீட்சையின் நோக்கம் தான் யாது? நீங்கள் பரீட்சை வினாத்தாளின் முகப்பை அவதானித்து இருந்தால் தெரியும்.

மாணவர்களை பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். ஆனால் பெற்றோர்களிடையே தமது கௌரவத்தை வெளிக்காட்டும் ஒரு போட்டிப் பரீட்சையாகவே தற்போது மாறி வருகிறது.

அதுமட்டுமன்றி இன்று அநேக பாடசாலைகளில் நடப்பது என்ன? தமது பாடசாலையின் பெயரை முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதற்காக ஐந்தாம் தரத்தின் ஆரம்பத்திலேயே ஒரு அனுமதிப் பரீட்சையை நடத்தி அதில் எழுபது அல்லது எழுபத்தைந்து புள்ளிகளுக்கு மேல் பெறும் மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கே விசேட வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. வசதி குறைந்த சற்றுப் பின் தங்கிய நிலையிலுள்ள மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் குறைவு. நகர்ப்புறங்களில் வருமானம் கூடிய பெற்றோர்களின் பிள்ளைகளே இப் பரீட்சையில் அதிகம் சித்தி பெறுகின்றனர். அவர்களுக்கு உதவிப்பணம் கிடைப்பதில்லை. வேறு பாடசாலைகளில் சேர்வதற்கு மட்டும் இடம் கிடைக்கிறது.

உண்மையிலேயே இப் பரீட்சை வினாப் பத்திரங்களில் இடம்பெறுகின்ற நுண்ணறிவு வினாக்கள் சிலவற்றைச் செய்வதற்கு பெரியவர்கள் கூடச் சிரமப்படுவார்கள். அண்மையிலே "இளைஞர்களுக்கான நாளை" அமைப்பின் தலைவர் "நாமல் ராஜபக்ஷ" அவர்களால் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட கருத்தரங்கில் மாணவர்களுக்கென வழங்கப்பட்ட கையேட்டில் காணப்படும் வாசகங்கள் இவை.

"தற்கால சமூகத்திலே முதிர்ச்சியடைந்த ஒருவருக்கு கூட துரிதமாக பதில் அளிப்பதற்கு கடினமானதாக விளங்கும் நுண்ணறிவுப் பரீட்சைகள் பலவற்றுக்கு குறுகிய காலத்தில் சிறுவர்கள் பதிலளித்தல் வேண்டும். இரண்டு மணித்தியாலக் குறுகிய காலத்தில் எண்பது வினாக்களுக்கு பதிலளிப்பதற்கு பதினொரு வயதான ஒரு சிறு பிள்ளைக்கு நேரிடுகிறது."

ஆகவே எனது பிள்ளை அதிக புள்ளிகளைப் பெற வில்லையே என்று அங்கலாய்க்க வேண்டிய அவசியம் தான் என்ன? இதற்கு ஆசிரியப்பெற்றோர்கள் கூட விதிவிலக்கு அல்ல.

இப்பரீட்சையில் வருடந்தோறும் வெட்டுப் புள்ளிகள் வெவ்வேறு விதமாக அமைகின்றன. 2004 இல் 128, 2007 இல் 143, 2008 இல் 114, 2009 இல் 139, இது மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையிலேயே அமைகிறது. உதாரணமாக 10% ஆன மாணவர்களையே தெரிவு செய்வதாயின் மாணவர்கள் பெற்றுக் கொண்ட மேல் எல்லைப்புள்ளியில் இருந்து குறித்த மாணவரைத் தெரிவு செய்யும் வரையிலான கீழ் எல்லைப் புள்ளி வெட்டுப்புள்ளியாக அமையும்.

இவ் வகையில் குறித்த வெட்டுப்புள்ளி வரை புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களே பாடசாலைகளைத் தெரிவு செய்வதற்கும், உதவிப்பணம் பெறுவதற்கும் தகுதி உடையவராகிறார்கள். ஏனைய குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களைச் சித்தியடையாதோர் என்று குறைவாக நினைத்து நிலை குலைவது தவறு.

ஏனைய முக்கிய பரீட்சைகளான க.பொ.த சாதாரண தர, உயர் தரப் பரீட்ரைசகளில் மாணவர்கள் 35 அல்லது 40 புள்ளிகளைப் பெற்றாலே சித்தி அடைந்தவராகக் கருதப்படுவார். 75 க்கு மேல் புள்ளிகள் பெறின் அதிவிசேட சித்தி பெற்றவராகுவார். ஆனால் தரம் ஐந்து மாணவர் இன்றைய நிலையில் ஒரு வினாப்பத்திரத்தில் 75 புள்ளிகளுக்கு மேல் (அதி விசேசித்தி) பெற்றாலே அவர் சித்தி என்று நாம் எதிர்பார்க்கும் நிலையை அடைவார். இது எல்லோருக்கும் இலகுவான காரியம் அல்ல.

எனவே தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் இரண்டு வினாப்பத்திரங்களிலும் மொத்தமாக 80 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களும் சித்தியடைந்தவர்களே. இதையிட்டு பெற்றோர் ஏதோ கௌரவம் குறைந்து விட்டதாக எண்ணிக் குழப்பமடைவதில் அர்த்தமில்லை. நாம் கௌரவத்தை எண்ணிப்பார்க்கும் அதே வேளை பிள்ளையின் மனப் பக்குவத்தையும் ஒரு கணம் எண்ணிப் பார்த்தல் வேண்டும். கௌரவப் பிரச்சனையால் தம் பிள்ளைகளை பரீட்சைக்கே அனுப்பாது விட்ட வரலாறுகள் கூட எம்மிடையே உண்டு.

புலமைப்பரிசில் பரீட்சையில் குறைவான புள்ளிகளைப் பெற்ற எத்தனையோ மாணவர்கள் க.பொ.த சாதாரணதர, உயர்தரப் பரீட்சைகளில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் சென்றதையும் நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம்.

இறைச்சிக் கோழிகளை விற்பனை செய்வோர் அக் கோழிகளை விரைவில் நிறையுடையதாக்க வேண்டி அடிக்கடி தீனி போட்டு வளர்ப்பார்கள் அதுவும் அந்தக் குறிப்பிட்ட காலம் வரை தான் வளரும் அதற்கு மேல் நாளாக நாளாக நிறை குறைய ஆரம்பிக்கும் இவ்வாறு தான் சிறார்களும் கட்டாயப்படுத்தித் திணிக்கும் போது உடனே வெற்றி பெற்றாலும் நாளடைவில் அவர்கள் வெறுப்படைந்து விடுவார்கள்.

மொத்தத்தில் இப் பரீட்சையைப் பொருட்படுத்த வேண்டாம் என நான் கூற வரவில்லை பிள்ளைகளை ஓய்வின்றி ஓட்டம் காட்டி ஒட்டு மொத்தமாகத் திணித்து கல்வியிலிருந்து ஒதுங்கி விட வழிவகுக்காமல் சுதந்திரமாகவும், சுயமாகவும் சிந்தித்துக் கற்க வழிகாட்டினால் நினைத்த பெறுபேற்றை பெற்றுக் கொள்வதோடு நிரந்தரமான அறிவுச் செல்வத்தையும் அவர்களுக்கு பெற்றுக் கொடுத்தவர்கள் ஆவோம்.

கல்வியிலே புதிய மாற்றம் ஒன்று ஏற்பட்டு மாணவருக்கும் மற்றவருக்கும் நன்கு பரிட்சயமாகுமுன் அடுத்த திட்டம் அறிமுகமாகும் இந்த அவசர உலகத்திலே துள்ளித் திரியும் சின்னஞ் சிறார்களின் சிரமங்கள் நீங்கும் நாள் தான் எந்நாளோ?.

**திருமதி. இ. மகாலிங்கம்,**
**ஆசிரியர்.**

**"All leaders must be learnes. The moment you stop learning is the moment you stop leading. Remember learning to be a leader takes a life time.**

# வருந்திப் பெற்றதிந்தச் சமாதானம்

வந்தமர இடமின்றி
வட்டமிட்டு வட்டமிட்டு
தவித்திருந்த வெண்புறா – எம்
வாசல் தேடி இன்று வந்ததே !

இருளில் மறையும் ஒளிபோல
ஒளியில் மறையும் இருள்போல
சமரில் மறைந்திருந்த சமாதானம் – எம்
தேசத்தில் வலம் வர நேர்ந்ததே!

சாதி, மத பேதங்களும்
சதிகளும் மாயங்களும்
வஞ்சனைகளும் மனக்கறைகளும் – நீக்கிவிடு
நேசமிகு நெஞ்சத்தை நெருங்கிடுமே சமாதானம்!

பிறரை நேசித்து நேசித்து
நெஞ்சத்தைச் சுத்தம் செய் – அறத்தை
வாசித்து வாசித்து
அன்பை நீ பெற்றுக் கொள்
யோசித்து யோசித்து
அதர்மத்தை அழித்து விடு!

வருந்திப் பெற்றதிந்தச் சமாதானம் – இதை
வழியனுப்பும் வகைகளை நீ தேடாதே
தானம் செய் தனக்கு வை
தழைத் தோங்கட்டும் நம் இலங்கை!

**செல்வி. க. டிகாந்தினி**
தரம் - 12 கலைப் பிரிவு

# நினைவுகள்

எம் செயல்களுக்கெல்லாம் அடிப்படையாக அமைவது நாம் நினைக்கும் நினைவுகளே. நினைவுகள் நல்லவையாக இருந்தால் நல்ல பயனைத் தரும் நினைவுகள் தீயவையாக இருந்தால் தீய விளைவுகளையே தரும் நாம் எப்போதும் நல்லவற்றையே நினைத்தல் வேண்டும்.

இதைத்தான் பாரதியார் கூறியிருக்கிறார்

"நினைவுகள் நல்லது வேண்டும்
நெருங்கிய பொருள் கைபட வேண்டும்"

நினைவுகள் நல்லவையாக இருக்கும் போது வேண்டிய பொருள் எளிதில் கைக்கு கிட்டிவிடும்.

நினைவுகளின் பிறப்பிடம் மனம். மனம் எப்பொழுதும் பரிசுத்தமானதாகவும் களங்கமில்லாததாகவும் இருத்தல் வேண்டும். பரிசுத்தமே பரன் இயேசு தங்குமிடம் எனக் கூறப்படுகிறது. பரிசுத்தமான மனம் இல்லையேல் தெய்வத்தை யாரும் தரிசிக்க முடியாது. "வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது". மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டியதில்லை. "மனம் திருந்த இனம் திருந்தும்". என்பது ஆன்றோர்வாக்கு. எம் நினைவுகள் அழுக்குப் படிந்தவையாக இருந்தால் நாம் செய்யும் செயல்களும் அழுக்கானவையாகவே இருக்கும். மனதை செம்மையாக வைத்திருக்க ஒவ்வொருவரும் முயற்சி செய்யவேண்டும். மகாத்மாகாந்தி தன் மேசையிலே மூன்று குரங்கு பொம்மைகளை வைத்திருப்பாராம் அவற்றில் ஒன்று தனது வாயைக் கையால் மூடியிருக்குமாம் மற்றையது காதுகளைக் கையால் மூடியிருக்குமாம்; இன்னொன்று கண்களைக் கைகளால் மூடிக் கொண்டிருக்குமாம் தீயவற்றைப் பேசாதே தீயவற்றைக் கேளாதே தீயவற்றைப் பாராதே என்று அவை கூறிக் கொண்டிருந்தவையாம். நல்ல நினைவுகளை உடையவர்களின் பார்வை, கேள்வி, உரை என்பன நல்லவையாகவே இருக்கும்.

வாழ்விலே நடக்கும் ஒவ்வொரு சம்பவங்களையும் திரும்பவும் நினைவுக்குக் கொண்டு வந்து திருத்த வேண்டியவையவைகளை திருத்தி நடக்கும் போது ஒரு மனிதன் முழு மனிதனாகிறான். நினைவுகள் இளமையானதாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் மனிதன் ஆரோக்கியமான உடல் அமைப்பை உடையவனாக இருப்பான். நினைவுகள் தளர்ச்சி அடையும் போது எல்லாமே தளர்வுற்றுக் காணப்படும். கல்வியைக் கற்றுக் கொண்டிருக்கும் மாணவனின் நினைவுகள் பசுமையானதாக இருத்தல் வேண்டும். எப்போதும் நான் படித்துப் பரீட்சையில் சித்தியடைந்து என் இலட்சியத்தை

நிறைவேற்றுவேன் எனும் நினைவுகள் மீண்டும் மீண்டும் மனதில் வர வேண்டும். அப்போது தான் தாம் எதிர்பார்க்கும் இலக்கை அடைய முடியும். அவ்வாறு பசுமையான நினைவுகளை ஏற்படுத்தக் கூடியவர்களாக ஆசிரியர்கள் இருத்தல் வேண்டும். தாரமும், குருவும் தலைவிதிப் பயன். நல்ல நினைவுகள் கொண்ட உள்ளங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

ஒரு விடயத்தைச் செய்யும் போது என்னால் இதைச் செய்து முடிக்க முடியும். என்னால் இதைச் செய்து உயர்ச்சி அடைய முடியும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். நான் யார்? நான் எப்படி இருக்க வேண்டும்? நான் எவற்றைச் செய்ய வேண்டும்? நான் யார் யாரை நேசிக்க வேண்டும்? எனது கடமைகள் என்ன? என்பதைப் பற்றி ஒரு மாணவன் சிந்திப்பானேயானால் உயர்ச்சி நிச்சயம். இப்போது மகான்களாகப் பேசப்படுபவர்கள் எல்லாம் முன்னைய சிந்தனையாளர்களே. சிந்தனையில் தெளிவு வேண்டும். ஒரு விடயம் நடந்தபின் மூடி மறைக்க சிந்தியாமல் நடந்த விடயத்திற்கு சரியான தீர்வை ஏற்படுத்த சிந்திக்க வேண்டும். சிந்தனையைப் பொறுத்துத் தான் அதன் விளைவு இருக்கும். வினை விதைத்தவன் வினையை அறுப்பான். வெறுமனே நாம் இவற்றைச் சொல்லிக் கொண்டு செயலில் வேறொன்றைச் சிந்திப்போமேயானால் படுகுழிக்குள் விழுவது நிச்சயம். மாறிக் கொண்டு வரும் உலகத்தில் சுயநலத்திற்காக மனிதன் எவற்றையெல்லாம் சிந்திக்கிறான்.

ஒரு குழந்தையை பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்து பாலூட்டி சீராட்டி வளர்க்கும் தாய்மாரின் மத்தியில் பிள்ளையைக் குப்பைத் தொட்டியில் போடும் தாய்மாரும் உள்ளனர். தாய்மையின் சிந்தனை எவ்வாறு போகிறது. சரியாகச் சிந்தித்து செயல்படாமையே இதற்குக் காரணம் ஒவ்வொரு மனிதனின் சிந்தனையும் நல்லவையாக மாறும்போது உலகம் மாற்றம் அடையும்.

**திருமதி. பா. வசந்தகுமார்**
பிரதி அதிபர்.

# விஞ்ஞான விளக்கம்

01) அபாயத்திற்குள்ளாகும் போதும் நமது இதயத் துடிப்பு மிகுதியாகுவது ஏன்?

1. ஒரு நிமிடத்திற்குச் சாதாரணமாக இதயத் துடிப்பு வயது வந்த ஆணிற்கு 70 - 72 தடவை.
2. பெண்ணுக்கு 78 - 82 தடவை
3. சிறுவர்களுக்கு 90 தடவை
4. கடின உழைப்பு, உணர்ச்சி வசப்படுதல் காரணமாக 140 தடவை

காரணம் - பேரச்சம், கடுஞ்சினம் என்பவற்றால் நமது உடலிலுள்ள அட்ரினல் சுரப்பியைத் தூண்டி அட்ரினலின் என்ற ஹார்மோனை வெளிக் கொணரும். இந்த ஹார்மோன் இரத்தத்துடன் கலந்து இதயத்துடிப்பை மிகுதியாக்குவதுடன் உயர் இரத்த அழுத்தத்தையும் உண்டாக்கும்.

02) தனது எடையைப் போல் பன்மடங்கு எடையை எறும்பு சுமக்கிறது. மனிதரால் முடியாது ஏன்?

ஓர் எறும்பு தனது எடையைப் போன்று 50 மடங்கு எடையைச் சுமக்கும் காரணம் பூச்சிகளுடைய சிறுகுடலில் 1000 வகையான தசைகள் உண்டு. மனித உடலிலுள்ள தசைகளின் எண்ணிக்கை 800 ஆகும்.

மற்றுமோர் காரணம் எறும்புக்கு 3 சோடி காலுண்டு. இதனால் சுமந்து செல்லும் சுமையின் எடை முழுவதும் எறும்பின் ஆறு காலிற்கும் பகிர்ந்தளிக்கப்படும். மாறாக மனிதனின் இரு கால்கள் மட்டுமே எடையனைத்தையும் சுமந்து செல்ல வேண்டியுள்ளது.

**செல்வி. சு. தீக்க்ஷிகா**

**தரம் - $10^P$**

"There is only one you and things only you can do. So don't set your goals by what others deem important. Only you know what is best for you."

# அன்னையின் ஆத்மா

காளிகோயில் மணியோசை கணீர் கணீரென ஒலிக்க படுக்கையில் இருந்து விழித்தாள் காயத்திரி எதிரிலே இருந்த தன் அன்னையின் படத்தைப் பார்த்து வணங்கியவள் துள்ளியெழுந்து தனது காலைக்கடன்களை முடித்து சமையல் அறையில் புகுந்தாள். மூன்று குழந்தைகளின் தாயான காயத்திரி ஓர் ஆசிரியை ஆவாள். கணவரும் ஓர் ஆசிரியர் அம்மா, அப்பா, அக்கா, அண்ணா, சின்ன அக்கா என அவளது குடும்பம். எல்லோரும் திருமணமாகி குடியும் குடித்தனமுமாக வாழ்கின்றனர். தற்போது தாயை இழந்த காயத்திரி தந்தையை தன்னுடன் வைத்துக் கொண்டு கணவர் பிள்ளைகளுடன் வாழ்கிறாள்.

பொது நிறமும் நீண்டு கருகருவென வளர்ந்த கருங் கூந்தலும் எடுப்பான கண்ணும் துடிப்பான உள்ளமும், உற்சாகமான நடையும் எவரையும் கவரும் சிரிப்பும், மிடுக்கான பேச்சும் கடமை உணர்வும் கொண்ட புதுமைப் பெண்ணாக வலம் வருவாள் காயத்திரி செல்லப்பிள்ளை கடைக்குட்டியென அனைவரது அன்பையும் நிறையப் பெறுவாள் காயத்திரி. படிப்பிலும் , விளையாட்டிலும், பாட்டிலும், வீட்டு வேலையிலும் கெட்டிக்காரி. படித்துப்பட்டம் பெற்று ஒழுங்குடன் ஒழுக்கம் கொண்ட வாழ்க்கையை ரசித்து வாழத்துடிக்கும், வாழும் காயத்திரி ஒரு நல்ல ஆசிரியை.

சமையல் வேலையில் மும்முரமாக ஈடுபட்ட காயத்திரி தேனீர் தயாரித்து கணவருக்கும் பிள்ளைகளுக்கும் கொடுத்துவிட்டு தனது தந்தைக்கும் கொடுத்து தானும் அருந்தியவளாக வேலைகளில் ஈடுபட்டாள். சமையலை முடித்து எல்லோருக்கும் தேவையானவற்றை ஒழுங்குபடுத்தி விட்டு பிள்ளைகள், கணவர், தானும் என பாடசாலைக்குக் கிளம்பினர். தந்தைக்கு தேவையான உணவையும் தயாரித்து தந்தையிடம் விடைபெற்று தனக்குரிய ஆட்டோ வந்ததும் பாடசாலை நோக்கி விரைந்தாள். காயத்திரி. காணும் ஆசிரிய நண்பர்களை காலை வணக்கத்துடன் வரவேற்றவளாக கடமையில் ஈடுபட்டாள்.

அன்று காயத்திரியின் உடல் நிலை சரியில்லை. தலை கனத்தது. உடல் நடுங்கியது. பயங்கரக்காச்சல் வெளியில் காட்டிக் கொள்ளாது அன்றைய தினத்தை ஒருவாறு பாடசாலையில் சமாளித்து வீட்டிற்கு விரைந்தாள். காயத்திரி குழந்தை தந்தை, கணவர் என இவர்களுக்கு உணவைப் பரிமாறக் கூட முடியவில்லை கட்டிலில் சாய்ந்தாள். அன்னையின் படத்தை நோக்கியவளுக்கு அழுகையும் வேதனையும் அவளை வெகுவாகத் தாக்கியது. என் அம்மா இருந்தால் எவ்வளவு உதவியாக இருக்கும் என உடல் வலியை விட அம்மாவின் நினைவு மிக வலியை ஏற்படுத்தியது. அம்மா.... அம்மா என முணு முணுத்த காயத்திரிக்கு தாயின் உயிர் பிரிந்த வேளை நிழலாடியது.

மூன்று நாட்களாக அம்மாவால் எழுந்து நடக்க முடியவில்லை உண்ண முடியவில்லை சரியான நித்திரையில்லை. மூச்சு விடக் கஷ்டப்பட்டாள் சிறிது நேரம் கூட சும்மா இருந்ததில்லை அந்த அன்னை ஏதாவது ஒரு வேலை செய்வாள். குடும்பம், பிள்ளைகள் என உழைத்து உழைத்து ஓடாய் தேய்ந்து உரம் ஏறிய உடலாக தனது வாழ்நாளை குடும்பத்திற்காகச் செலவிட்டாள் அந்த அன்னை தந்தையின் மாதாந்த ஊழியம் போதவில்லை இதனால் வயல் என்றும், சேனை என்றும் வருமானம் தேடித்தேடி தாயும் தந்தையும் ஓடி ஓடி உழைத்தார்கள். பிள்ளைகளையும் கண்ணும் கருத்துமாக படிக்கவைத்தார்கள். திருமணங்கள் முடித்து வைத்தார்கள். வீடு வாசல் என தேடிக் கொடுத்தார்கள். இன்று உடல் மெலிந்து தளர்ந்து போனாலும் உளம் வலிந்து, மகிழ்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறனர் காரணம் தனது கடமைகளை ஒழுங்காக முடித்து தனது பிள்ளைகளின், பேரப்பிள்ளைகளின், பூட்டப்பிள்ளைகளின், வளர்ச்சியே அந்த உள வலிவுக்கும் மகிழ்வுக்கும் காரணம்.

படுக்கையில் இருந்த அந்த தாயின் ஆத்மா பிரியும் காலம் நெருங்கி விட்டதை அந்த சிவகாமி அம்மையின் குடும்பத்தார் உணர்ந்தனர். வைத்தியம் செய்தனர். உறவுகள் சூழ்ந்து இருந்து கவனித்தனர். கோயில்களுக்குப் பூசை என்றும் அர்ச்சனை என்றும் ஆராதனை செய்தனர். அந்த அன்னையால் முடியவில்லை. பல இதயங்களை சுமந்த அந்த இதயம் கடும் பலவீனமாகிவிட்டது என டாக்டர்கள் கூறிவிட்டனர். அவர் இவ்வுலகை விட்டகலும் நாள் அன்று அயலவரும் சொந்தங்களும் பிள்ளைகளும் , பேரப்பிள்ளைகளும். பூட்டப் பிள்ளைகளும் அந்த அன்னையின் ஆத்மாவை வழியனுப்ப காத்துக் கொண்டிருந்தனர்.

காயத்திரி தன் தாய் மரண வேதனையால் கஷ்டப்படுவதை சகிக்க முடியாது அன்னையின் தெய்வமான அந்த முருகக் கடவுளிடம் மன்றாடினாள். என் அம்மாவின் உயிரை கஷ்டப்படுத்தாது உன்னுடன் எடுத்துவிடு என அழுது வேண்டினாள். ஆனால் அன்று அந்த ஆத்மா பிரியவில்லை காரணம் அன்று பஞ்சமி அடுத்தநாள் முருகனின் சஷ்டி திதி அது வரையுமே அந்த ஆத்மா பிரியாது காத்திருந்தது. இரவு நிமிடங்கள், மணித்தியாலங்கள் எனக் கடந்தது. பால் பருக்கினார்கள் எனக்கு இனி எதுவும் வேண்டாம் என்றாள் அன்னை காயத்திரி தன் மகளை அம்மாவிற்கு முத்தம் கொடு என்றாள் அவளும் அவரை அணைத்து முத்தமிட்டாள். புன்முறுவலுடன் எல்லோரையும் ஒரு முறை பார்த்தாள். பின் ஒரு முறை படுக்கையில் இருந்து தைரியத்துடன் எழும்ப எத்தனித்து படுக்கையில் சாய்ந்தாள் எனது உடல் வலிக்கின்றது என்றாள். இதுவா மரண வேதனை.

காயத்திரி தன் அன்னையை மார்பில் சாய்த்து அணைத்தபடி இருந்தாள். சாமமாகியது. ஆந்தை அலறும் சத்தம் சுற்றும் முற்றும் ஒலித்தது. சாமம் என்பதால் சுற்றியிருந்தவர்கள் எதிர்பாராது சற்றுக் கண் அயர்ந்தனர். காயத்திரி அம்மா என அழைத்தாள் ம்....ம்.... என சத்தம் கேட்டது. பின் "டேய் இங்கே வா" என அம்மா கூறினாள். அப்பா என்னை எதுவும் பேச வேண்டாம் என சைகை காட்டினார்.

பின் அம்மா எனது கை நோகுது. என காயத்திரி தன்னை சீராட்டி இவ்வளவு காலமும் வளர்த்து ஆளாக்கிய அந்தக்கைகளை முத்தமிட்டு வருடிக் கொண்டிருந்தாள் தாய் தன் கண்களை மூடினாள் காயத்திரி எல்லோரையும் அழைத்தாள். எல்லோரும் அருகில் நின்றனர் அன்னையின் கால் பெருவிரல் அசைந்தது. காலின் செயற்பாடு முடிந்தது. பின் இதயத்துடிப்பு நின்றது. காயத்திரியின் வருடலிலிருந்து இரு கைகளும் கீழே சரிந்தன. அப்பா அப்பா என காயத்திரி தன் தந்தையை அழைத்தாள் காயத்திரியின் அணைப்பில் இருந்த அன்னையின் உடலை தந்தையும் காயத்திரியின் அண்ணாவும் தூக்கி வசதியாக வைத்தனர். பின்அன்னையின் கழுத்து நரம்பு அசைந்தது. உடல் மரத்துவிட்டது. உடலை விட்டு ஆத்மா பிரியும் அனுபவம் அன்றுதான் அதுவும் தன் தெய்வத்தின் உயிர் பிரிந்ததைக் கண்டாள் அனைவரும் கதறி அழுதனர்.

இவற்றை நினைத்து அழுது கொண்டிருந்த காயத்திரியை "அம்மா" என தனது சின்ன மகளின் குரல் அழைத்தது. கணவரும் உடன் வந்தார். காயத்திரிக்கு குளிசை தண்ணீருடன் வந்த கணவர். என்ன? அம்மாவை நினைக்கிறீயோ எனக் கேட்க தன்னைச் சுதாகரித்துக் கொண்டவளாக குளிசையை வாங்கி வாயில் போட்டுக் கொண்டாள்.

முற்றும்.

ஆசிரியை

**திருமதி. நிர்மலாதேவி பாஸ்கரன்**

***"Your habits become your character & your character becomes your life. Remember that you first make your habits & then your habits make you"***

# மட்டக்களப்பு பிரதேச மக்களின் மிக முக்கியமான அன்றாட உணவு வகைகள்

**முதலில் இங்குள்ள மக்களின் உள்ள அரிசி வகை பற்றி பார்ப்போம்**

"ஆத்தை மறித்துக்கட்டி
அழகு சம்பா நெல் விதைத்து
ஆத்துத் தண்ணி வற்ற வற்ற
அழகு சம்பா வாடுதடி"

என்ற கிராமியப்பாடலின் மூலம் சம்பா அரிசி முக்கிய இடத்தினைப் பெறுவதினை அறிய முடிகின்றது. சம்பா அரிசியில் பலவகைகள் உள்ளன. அழகு சம்பா, சீனட்டிச் சம்பா (இது வயதிற்கு வந்த பிள்ளைக்கு சோறாகவும் , பிட்டாகவும் உண்ணக் கொடுப்பது), மொட்டச் சம்பா, முத்துச் சம்பா, கமுகம்பூச் சம்பா, சரவணப்பழச் சம்பா, இளங்கலையன் சம்பா, சீரகச் சம்பா ஆகியன இங்குள்ள மக்கள் பொதுவாக விரும்பியுண்ணும் அரிசியினை ஊர் அரிசி அல்லது கைக்குத்தரிசி , புழுங்கல் அரிசி என்றெல்லாம் அழைப்பார்கள். இதில் தண்ணீரில் பதத்திற்கு அவித்து காயப்போட்டு குற்றியெடுப்பது புழுங்கல் அரிசி என்றும் அவியாமல் பச்சையாக குற்றியெடுப்பது பச்சையரிசி எனவும் கூறப்படும். இதில் தவிடு நீக்கியது நீக்காதது (தவிட்டரிசி) என இருவகைகள் உள்ளன. அதே போல் வெள்ளைப்பச்சை கொளியல் பச்சை எனவும் இருவகைகள் உள்ளன. இதனை விட இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வகைகள் சிலவும் அரசினால் நிவாரணமாகவும் கூப்பன் சமுர்த்தி போன்ற உதவிகள் பெறுபவர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

அவையாவன மில்ச்சாட், கோறா , சண்டியன் ஆகியன தற்போது கலப்பின நெல் வர்க்கங்கள் விவசாயத்திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் அரிசி வகைகளும் மாறிவிட்டன.

## மரக்கறி வகைகள் :

இங்குள்ள மரக்கறிகளை தமிழ் மரக்கறி என்றழைப்பார்கள். இவற்றில் முக்கியமானவை மரவள்ளி இதில் பல வகைகள் உள்ளன. (ஆறு மாத்தையான், கறுப்பு மரவள்ளி, கோழிமுட்டை, முதிரை வெள்ளை, நாய் வெள்ளை, சந்தன வெள்ளை) அளவை பேராதனை இவையிரண்டும் அளவைப்பகுதியிலும் கண்டிப் பேராதனை விவசாயப் பண்ணையிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டவை வெண்டி, கத்தரி, புடலங்காய், பீர்க்கங்காய் (வரிப்பீர்க்கு, பால்பீக்கு) பாகற்காய், அவரைக்காய் (பல இனங்கள்) கொத்தவரை, நாடங்காய், சுரக்காய் (பூசனி), நீற்றுப்பூசனி, வாழைக்காய்

(சாம்பல் மொந்தன், கூட்டு மொந்தன், இலவங்கா மொந்தன்) பலாக்காய் , ஈரப்பலாக்காய் தக்காளி, முருங்கைக்காய் (பால் முருங்கை , யாழ்ப்பாண முருங்கை, வாகரை முருங்கை, புழு முருங்கை) வள்ளிக்கிழங்கு (சக்கரை வள்ளி, மோதக வள்ளி, உலக்கை வள்ளி, திருகை வள்ளி, ராச வள்ளி, பிடி கிழங்கு) கக்கரி, வெள்ளரி, வர்த்தகை, வத்தாளை (சீனி வெள்ளை, கோழிமுட்டை) கத்தரி, ஆகியன. இதனை விட காட்டுப்பிரதேசங்களில் அல்லது நீர் நிலைகளிலிருந்தும் சில மரக்கறி உணவு வகைகள் பெறப்படுகின்றன. அவையாவன வட்டுக்கத்தரி, சுண்டக்காய், தும்பங்காய், கருணைக்கிழங்கு, இவைகள் மருத்துவக் குணம் மிக்க காய்கறிகளாயுள்ளன. நீர் நிலைகளிலிருந்து தாமரைக்கிழங்கு ஒல்லிக் கிழங்கு பெறப்படுகின்றன. வத்தகக்காய், பழத்திற்கும் கறி சமைப்பதற்கும் உபயோகப்படுகின்றது. சித்தாண்டிக் கிராமத்தில் வத்தகக்காய் விற்று பணக்காரராகிய ஒரு போடியார் இருந்ததாக கூறப்படுகின்றது. இவரது பெயர் சரியாகத் தெரியவில்லை இவர் வத்தகப் போடியார் என அழைக்கப்பட்டார். என்பது குறிப்பிடத்தக்கது.

**கீரை வகைகளும் இலைக்கறி வகைகளும் :**

கீரை (அரக்கீரை, புளிக்கீரை, குப்பைக்கீரை, பச்சைக்கீரை) பசளி, பொன்னாங்கன்னி, சுரைக்கொழுந்து முருங்கைக்கீரை, அகத்திக்கீரை, வாதராணி, வல்லாரை, தூதுவளை(மருத்துவக் குணம்), லெச்சகடடை, ஆகியன.

**காடு களனிகளில் பெறப்படும் இலைக்கறி வகைகள்:**

முள்ளுக்கீரை, தேங்காய்பூக்கீரை, தகரை இலை, யானைத்தகரை, திராய், முடக் கொத்தான், குறிஞ்சா இலை, பாலை இலை, கானாந்தி இலை, காரை இலை, முல்லை இலை, முசுட்டை இலை, காட்டுக்குறிஞ்சா, பால் குறிஞ்சா, நத்தைச்சூரி, வள்ளல் (கங்குன்), குமுட்டி சாதூன, எழுத்தாணிக்கீரை, மண்டு இலைத்தண்டு (இவைகள் அனைத்தும் மருத்துவக் குணமிக்க இலைக்கறிவகைகளாகவுள்ளன)

**மீன் வகைகள் :**

கடல் மீன்கள்- சுறா(வெள்ளைச்சுறா, முதிரைச்சுறா, மம்பட்டிச்சுறா, உடும்புச் சுறா), வேளா, அறுக்குளா, பாரை(கருக்குப்பாரை, குரும்பவட்டியல், கட்டாப்பாரை, கடல் மறிச்சான், கச்சப்பாரை, மஞ்சட்பாரை, தகட்டுப்பாரை, அறுக்குளாப்பாரை), முரல்(புள்ளை முரல், கம்பா முரல், பாம்பு முரல், கருமுரல், சொக்கட்டையா முரல், ஊசி முரல்), சீலா, கீரி, சாளை, சூடை, தொண்டன், ஊளா, குறசீலா “சிங்களப்பெயர்” செப்பலி, சேறி, சூரன், வளையா, கும்புளா, கலவா (உறவிக்கலவா, செங்கலவா,

புல்லிக்கலவா) கீரிமீன், கணவா (ஊசிக்கணவா, கோவலன் கணவா இது ஆட்களைப்பிடிப்பது) நெத்தலி, தேறல், உழுவை (கரி உழுவை, வெள் உழுவை, மான் உழுவை) போத்தல் கணவா, மைக்கணவா, முட்டைக்கணவா, ஓட்டுக்கணவா ஒட்டி , ஓரா (பெரிய ஒட்டி) புள்ளி ஒட்டி, வரி ஒட்டி, மாம்பழ ஒட்டி, கல் ஒட்டி, பறட்டை ஒட்டி, பண்டி ஒட்டி) பீவகிறன், மண்ணா, கால மீன், பால மீன், கொடுவா, சின்னக் கொடுவா, குதிப்பு, திருக்கை (ஓலவாலன், புளிங்கொட்டை, மணல் திருக்கை, மூத்திரத்திருக்கை, வெளவால் திருக்கை, மம்பட்டித்திருக்கை, பூவாலன் திருக்கை தமிர் திருக்கை (இதில் மின்சாரம் உள்ளது மனிதர்கள் அல்லது பிற உயிர்களின் உடற்பாகங்கள் பட்டால் தூக்கி அடிக்கும்) பேத்தை (அறுக்குளாப் பேத்தை, முட்டைப்பேத்தை, முள்ளுப்பேத்தை - இதனை சில பிரதேச மக்கள் சாப்பிடுகின்றனர்.

"ஆத்தில் பேத்தை கழிவு ஊரில் நாம் கழிவு என்ற பழமொழி உள்ளது. குருவிலி வெடியரசன் விளல், தளையான், உலமியா, துள்ளுவண்டன், நுகரை, மகரை (மகரம்) காரல் (சோத்துக்காரல், யானைக்காரல், முள்ளுக்காரல், மஞ்சட்காரல், மஸ்காரல், அறுக்குளாக்காரல், அம்பக்கார்ல் (சிங்களப் பெயர், திரளி, பால் திரளி, பூந்திரளி, கொய் மீன் முண்டக்கண்ணி தோலி, பூஞ்சக்கண்ணி, லாகன், மங்கு, செத்தல், வாளை (முள்ளு வாளை, சுண்ணாம்பு வாளை, மாவாளை, தண்ணிவாளை) கொப்புறா , தளப்பத்து, சிலுந்தல், செஞ்சிலுந்தல், கொடுவாச்சிலுந்தல், ஓங்கில்

இறால் - சிங்கறால், மணல்றால், வெள்றால், முட்டிறால், மாடன்றால், கருவண்டன், மட்டுறால்(மட்டு நகர் போல் காரணப் பெயராகியது), கூனிறால், கல்றால், செம்மூக்கன், சூலாப்பழு

நண்டு - கல் நண்டு, கடல் நண்டு, நீலாக்காலி, சட்டி நண்டு, முட்டி நண்டு, செம்பி நண்டு, கண்ணாக்கடியன், மெதுக்கால் (ஓடு களட்டியது) மள்ளு நண்டு, கம்பி நண்டு, பொட்டு நண்டு

## ஆற்று மீன்கள் அல்லது ஏரி மீன்கள் :

மணலை (பொக்கணி மணலை, சிறயா, வெள்ளியா, பிலாக்கொட்டை, சினை மணலை, கைமீன், காடையன் மணலை) கெழுத்தி,முட்டைக்கெழுத்தி, களிக் கெழுத்தி, ஆக்கணங்கெழுத்தி, தளயான், சப்பமூக்கு குதிப்பான் திரளி, காரல், சிலுந்தல், கீரி, விலாங்கு செத்தல், சரகு ஒட்டி, நண்டு இறால் முதலியன. ஆற்று நீர் கடலுடன் கலப்பதால் இரு நீர் நிலைகளிலும் மேற் சொன்ன மீன் இனங்கள் பொதுவாகக் காணப்படுகின்றன. (கீரி, கெழுத்தி, பேத்தை ஆகியன பாடவல்லன)

**குளத்து மீன்கள்:**

விரால், குறட்டை, வாளை, கணையான், பொட்டியான் முண்டான், சள்ளல்,ஜப்பான், கோல்டன், குளத்துறால், குளத்து நண்டு, செங்கணையான், ஜரல், முறாக்கை,பனையான், உழுவை, செத்தல், விலாங்கு முண்டான் முதலியன.

**மட்டி :**

மட்டியென்றொரு வகை மீனினம் ஆற்றின் மணலினுள் காணப்படுவது ஓட்டினுள் இருக்கும் மீனவர்களால் மீனவப் பெண்களால் தோண்டி எடுக்கப்படுவது. அதன் வகைகள் பாக்கு மட்டி, கண்ணாமட்டி, கொக்கு மட்டி, காக்கா மட்டி, பால்மட்டி, பஞ்சாங்க மட்டி, சிவத்தமட்டி, பன்னல், திருவிலப்பன்னல் ஆகியன.

**கவ்வாட்டி**

இதுவும் ஆறறினுள் உள்ள பறம்பிக் கற்களில் ஒட்டிக் கொண்டிருக்கும் மீனவர்கள் உளி சுத்தியல் கொண்டு சென்று சுளியோடி அதனை உடைத்து எடுப்பார்கள்.

இவற்றைவிட சூம்பக்கெழுத்தி நூலான், மஞ்சக் குஞ்சி, ஓங்கில் கடல்பனையான் புலிச்சிறா, உதடன், வெடியரசன், குட்டான், அஞ்சிலா, ஐயாமாசி, அதக்கை, பத்தாமட்டி, கூரல், முலப்பாளி, வெளவால், ஆகிய மீனினங்கள் ஆறு கடல் ஆகிய நீர் நிலைகளிலும் காணப்படுகின்றன. இவையனைத்தும் மட்டக்களப்பு மக்களின் நாளாந்த மீன் உணவுகளாகும்.

**ஆக்கம் - திருமதி. திராவிடமலர் பாஸ்கரன்**

ஆசிரியை.

***"Failing isn't fatal. Failure is not failing to reach yours dreams. Failure is not having a dream. You are never a failure until you give up."***

# யாழ் தேவி

சிக்குப்புக்கு சிக்குப்புக்கு புகைவண்டி
யாழ்ப்பாணம் செல்லும் புகைவண்டி
மக்களைப் புன்னகையுடன் ஏற்றுது பார்
மறைந்தது மீண்டும் ஓடுது பார்

எங்கள் யாழ்தேவியின் அழகைப் பார்
நீல நிறத்தால் ஜொலிக்குது பார்
வடக்கின் வசந்தம் பாடுது பார்
வருக வருகவென அழைக்குது பார்

யாழ்தேவியிலே நாமும் சென்றிடவே
நித்தம் நிதியைச் சேர்த்திடுவோம்
நீண்ட கால யுத்தம் நீங்கிய பின்
நிம்மதியாய் யாழ்ப்பாணம் சென்றிடுவோம்.

ஏடுகள் தாங்கி வரும் வடக்கின்
சுவடுகளை தினம் நாம் இரசிக்கின்றோம் ~ இனி
கள்ளம் கபடமற்ற சிறுவர் நாம்
மெல்ல மெல்ல இசைத்துப் போகும்
தொன்மை கொண்ட யாழ்தேவி
தொடருந்தில் குதூகலமாய் சென்றிடுவோம்.

**செல்வன். செ. பவிக்காந்த்**
**தரம் - 5P**

# இன்றைய கல்வியும் நல்லாசிரியரும்

கல்விக்காகப் பிள்ளையா? பிள்ளைக்காக கல்வியா? இந்த வினாவினை உங்களிடம் வினவும் போது நிச்சயமாக "பிள்ளைக்காகத்தான் கல்வி" என்பதே உங்கள் விடையாக இருக்கும். இந்த விடைக்கான காரணம், கல்வி எண்ணக்கருவில் இன்று ஏற்பட்டிருக்கும் மாற்றமாகும். பண்டைக்காலத்தில் பிள்ளையின் மனம் ஒரு வெற்றுக் கொள்கலனாகவும், அறிவால் அதை நிரப்புபவர் ஆசிரியராகவும் கருதப்பட்டார். ஆகவே கல்வியில் முக்கியத்துவம் பாடப்பொருளுக்கும் போதனையாளருக்குமே கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்நவீன யுகத்தில் இந்நிலை மாற்றப்பட்டு கல்வியில் பிள்ளைக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

கல்வி எனும் போது பாடசாலை சென்று கற்கும் கல்வியை மாத்திரம் அது குறிக்காது. ஒரு பிள்ளையானது தனது தாயின் கருவில் இருக்கும் காலம் தொடக்கம், வாழ் நாள் நீடித்த கல்வியையே அது குறிக்கின்றது. பிரகலாதன் தனது தாயின் வயிற்றில் இருக்கும் போதே அறக் கருத்துக்களைக் கற்றான் என்ற புராணக் கதை இன்றைய கல்வியாளர்களின் ஆய்வின் பயனாக மெய்ப்பிக்கப்பட்டுள்ளமையும், கல்வி கருவறை முதல் கல்லறை வரை (Womb to tomb) எனும் UNESCO வின் கருத்தையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

"கல்வி" எனும் சொல் பரந்த பொருளுடையதாகக் காணப்படுகின்றது. எனினும் "கல்" என்பதை கல்லுதல் எனக் கொண்டால் "உள்ளே இருப்பதை அகழ்ந்து வெளிக்கொணர்தல்" என்ற கருத்து அமைகின்றது என கல்வியலாளர்கள் கருத்துக் கூறுகின்றனர். ஆகவே குழந்தையின் உள்ளே இருக்கும் அறிவாற்றலை மலரச் செய்தலே கல்வியாகும். என்ற நவீன காலச் சிந்தனைக்கேற்பவே கல்வி வரை விலக்கணப்படுத்தப்படுகின்றது.

நவீன கல்வித் திட்டமானது இன்றைய சமூக தேவைகளுக்கேற்ப பலவிதமான நோக்கங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அவையாவன எல்லோருக்கும் கல்வி, வாழ்நாள் நீடித்தகல்வி, நவீன கல்வி, விஞ்ஞான வளர்ச்சிக் கல்வி, மற்றும் மீண்டெழும் புதியதேவை, பூகோள பண்டைக்காலக் கல்வி முறை போன்று வெறும் எண், எழுத்து, வாசிப்பு என்ற எழுத்தறிவுக் கல்வியாகக் காணப்படுவதில்லை இன்றைய கல்வி முறை. இதனையே காந்தியடிகளும் "எழுத்தறிவு என்பது மனிதனின் கல்வி எனும் செயற்பாட்டில் ஓர் அம்சம் மாத்திரமே, கல்வி என்பது சமூகத்தின் நன்மையின் பொருட்டு பிள்ளையினுள்ளே அடங்கியுள்ள முழுத்திறமையையும் கொணர்வதாகும்." என்று இக்கால சிந்தனைக்கேற்ப முன்கூட்டியே கூறிச் சென்றுள்ளார்.

எமது நாடு சுதந்திரம் பெற்று அரை நூற்றாண்டுக்கு மேலாகியும் இன்னும் ஆங்கிலேயரின் எழுது வினைஞர் தேவையைப் பூர்த்தியாக்கும் கல்வி முறையிலிருந்து

நாம் விடுதலை பெறவில்லை. அதன் பலன் தான் வேலையற்ற படித்தோர் பட்டாளம் நாளுக்கு நாள் உருவாகிக் கொண்டிருக்கின்றதையும் நாம் காணக் கூடியதாக உள்ளது. உண்மையான கல்வி தொழிலுக்கான ஒரு காப்புறுதியாகவே அமைய வேண்டும். அதாவது ஒரு மாணவன் பாடசாலையில் பெறும் கல்வி, கலாசாரம் என்பன அவனது வாழ்க்கைக்கு உதவ வேண்டும். கல்வி ஒவ்வொரு தனி மனிதனையும் உற்பத்தியாளனாகவும், நல்ல பிரஜையாகவும் மாற்ற வேண்டும். இதனையே இன்றைய கல்விச் சிந்தனையாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அடுத்து இன்றைய கல்வித்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் நவீன கால சிற்பிகளான நல் ஆசிரியர்களை எடுத்து நோக்குவோம். பொதுவாக நல்லாசிரியரின் இலக்கணத்தை நன்னூல் பின்வருமாறு கூறுகின்றது.

"குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலை பயில் தெளிவு கட்டுரை வன்மை
உலகியல் அறிவோடு உயர் குணம் இணையவும்
அமைபவன் நூலுரை ஆசிரியனே"

இங்கு ஆசிரியருக்குரிய இயல்பாக நிலம், மலை, நிறைகோல், மலர் என்ற நான்கையும் எடுத்துக் கொண்டால், அகழ்வாரைத் தாங்கும் நிலம் ஆசிரியரின் பொறுமைக்கு நிகரானது. மலைபோல் அசையாத மனவலிமை, எதையும் தாங்கும் இதயம், ஆசிரியனுக்கு வேண்டும். துலாக்கோல் போல் எப்பக்கமும் சாயாத நடுநிலமை ஆசிரியருக்கு வேண்டும். இறுதியாக ஆசிரியர் மலர் போன்று குழந்தைகளால் மட்டு மல்ல சமூகத்தாலும் விரும்பப்பட வேண்டும். மலரானது ஒரே நாள் வாழ்ந்தாலும் தன்னைப் பிறரின் இன்பத்திற்கு அர்ப்பணித்து விட்டு அழிகின்றது. அந்தக் கடமையுணர்வும் பிறர் நலம் பேணலும், அர்ப்பணிப்பும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் அவசியமாகும்.

நாட்டிற்கான நற்பிரஜைகளை உருவாக்கும் மகத்தான பணியை ஆற்றுபவர் ஆசிரியரே. அவர்களது செயற்றிறனிலேயே குழந்தைகளின் உயர்வு தங்கியுள்ளது. நவீன கல்வித் திட்டத்திற்கமைய பிள்ளையின் கற்றல் செயற்பாடுகளுக்கு ஆசிரியர் வளவளராக விளங்க வேண்டும். கட்டாயப்படுத்தலின்றி தங்களது செயற்பாடுகளை இயல்பாகச் செய்வதற்கு வழியமைக்க வேண்டும். பிள்ளைகள் செயற்படுவதற்கான உடன்பாடான வழிகாட்டல்களையும் போட்டிச் செயற்பாடுகளையும் தவிர்த்து கூட்டுச் செயற்பாடுகளை ஊக்குவிப்பவராகவும் ஆசிரியர் இருக்க வேண்டும்.

ஓர் ஓவியன் அழகான ஓவியமொன்றை உருவாக்க வேண்டுமானால் அவன் அதற்கான தனது சாதனங்களை அறிந்திருக்க வேண்டும். அது போன்று ஆசிரியனும் ஒரு கலைஞனே. அவன் பாடத்தை மாத்திரம் அறிந்திருந்தால் போதாது. அவன் குழந்தைகளின் இயல்பையும் அறிந்திருக்க வேண்டும். குழந்தைக்கு அறிவை

வழங்குவதற்கு தேவையான நுட்பங்களையும் அறிய வேண்டும். ஜோன் அடம்ஸ் எனும் கல்வியலாளர் இதனை மிகப் பொருத்தமாக இவ்வாறு கூறுகின்றார்.

"கற்பித்தல் என்ற பதம் இரண்டு செயற்படு பொருளைக் கொண்டது ஒன்று ஆள், மற்றது பொருள், ஆசிரியர் யோகனுக்கு மொழி கற்பிக்க வேண்டுமானால் அவர் மொழியை விட யோகனை நன்கு புரிந்திருக்க வேண்டும்." இவரின் கூற்றுக்கமைய நல்லாசிரியர் ஒவ்வொருவரும் தமது பாடப்பரப்பினை விட தங்களது மாணவர்களை நன்கு புரிந்திருக்க வேண்டும். அத்துடன் தற்கால சந்தர்ப்ப சூழ் நிலைக்கேற்ப நவீன கலைத்திட்டங்களுக்கமைய ஒரு பிள்ளை வெற்றியடைவதற்கு அறிவுக் கூர்மையும், புத்தி சாதூரியமும் மாத்திரம் போதுமானதல்ல. கூடவே மாற்றமடையும் திறனையும் விருத்தி செய்ய வேண்டும். இன்றைய கற்றல் கற்பித்தல் செயன் முறைத் திட்டத்திற்கமைய முதலாவதாக ஈடுபடுத்தல் படிமுறைக்கும் (Engagement step) அதாவது மாணவர்களுக்குத் தேவையான தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட முன்னறிவுக்கு கொண்டு வருதல், அடுத்ததாக முன்னறிவினை அடிப்படையாகக் கொண்ட தேடல் படிமுறைக்கும் (Exploration) அதனைத் தொடர்ந்து குழு நிலை ஒத்துழைப்பினூடாகத் தேடிப் பெறப்பட்ட தகவல்களை விளக்குதல் எனும் படிமுறைக்கும் (Explanation) நான்காவதாக மாணவர்கள் தேடியறிந்தவற்றை தங்களுக்கூடாகவே விரிவுபடுத்தல் படிமுறையையும் (Elaboration) மாணவர்களை பங்காற்றச் செய்வதுடன், மாணவர் தேடலில் ஈடுபடும் சந்தர்ப்பத்தில் கணிப்பீட்டினையும் (Assessment), மாணவர்கள் கண்டறிந்தவற்றை விளக்கும் போதும், விரிவாக்கும் போதும் மதிப்பீட்டையும் (Evalauation) நடாத்துவதற்கான ஆற்றலை ஆசிரியர் பெற வேண்டும். இதனையே இன்றைய புதிய சகத்திரத்தின் கலைத்திட்ட மறுசீரமைப்பு தேசியகல்வி நிறுவகப் பணிப்பாளர் ஐ.எல்.கினிகே அம்மையார் தெளிவுபடுத்துகின்றார்.

எனவே நல்லாசிரியர்களான ஒவ்வொரு ஆசிரியரும் மேற்குறிப்பிட்ட முறைகளை சிறப்புறக் கையாள்வதுடன், நல்லதொரு மாணவ சமூகத்தினூடாக நாளைய எதிர் கால சமூகத்தின் விடியலுக்கும் வித்திட்டு விருட்சமாக்க வேண்டியது தலையாய கடமையும் கட்டாயமும் ஆகும்.

**திருமதி. விஜிதா முருகவேள்**
ஆசிரியை.


*தாழை வெளிவர தளராதுழைத்த பெருந்தகையோரை வாழ்த்துகின்றேன்!*

*வளர்க தாழை!*

*வளம் பெறுக!*

**திரு. யோ. லட்சுமிகரன்,**
**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்.**

# தமிழ் மொழியில் பயன்படுத்தப்படும் குறியீடுகள்

| குறியீடு | உதாரணம் | குறியீட்டின் பெயர் |
|---|---|---|
| 1. ா | கா | அரவு, கால் |
| 2.  | கி | விசிறி, மேல் விலங்கு |
| 3.  | கீ | சுழிவிசிறி, சுழிமேல் விலங்கு |
| 4.  | கு | கீழ் விலங்கு |
| 5. \| | சு, பு | இறங்கு கீறு |
| 6.  | து, று | மடக்கேறு |
| 7.  | தூ | மடக்கேறு, கீற்றுக்கால் |
| 8.  | பூ | கீழ் விலங்குச் சுழி |
| 9. ெ | கெ | ஒற்றைக் கொம்பு, முன்கோடு |
| 10. ே | கே | இரட்டைக்கொம்பு, முன்சுழிக் கோடு |
| 11. ை | கை | சங்கிலிக் கொம்பு, முன்னிலைக் கோடு, |
| 12. ெ, ா | கொ | முன்ஒற்றைக் கொம்பும் பின் அரவும், முன்கோடும் பின்காலும் |
| 13. ே, ா | கோ | முன் இரட்டைக் கொம்பும் பின் அரவும் முன் சுழிக்கோடும் பின் காலும் |
| 14. ெ, ள | கௌ | முன் ஒற்றைக் கொம்பும் பின் வெள்ளிக் காலும் |
| 15. • | க் | குற்று, புள்ளி, மெய்ப்புள்ளி |

தொகுப்பு
செல்வி. சு. கவிநயா
தரம் - 4

# சின்னச் சின்ன பாப்பா

சின்னச் சின்ன பாப்பா
சிவந்த மேனி பாப்பா

கண் சிமிட்டும் பாங்கே
கவர்ச்சி மிக்க தோற்றம்

உன் பேச்சில் தானே
உள்ளம் மகிழ்ந் தேனே

நற் பண்பு பழகியே
நன்கு வளர் நீயே

படிப்பில் நன்றே பயின்று
பயனைப் பெற்றுச் சிறப்பாய்....!

பெற்றோர் சொல் கேட்டு
புவியோர் புகழ வாழ்வாய்..............!!





செல்வி. தி. சோபனா
தரம் 4V

---

பழைய மனிதனைக் களைந்திடுவோம்
புதிய மனிதனை அணிந்திடுவோம்
புத்தம் புதிய சிந்தனைகளில்
புதிய ரசத்தைக் கலந்திடுவோம்
பகைவரைச் சந்திக்கச் சென்றிடுவோம்
உவகை பொங்கிப் பேசிடுவோம்
சபித்து சாபங்கள் கூறாமல்
செபித்து ஆசி அளித்திடுவோம்.

| |
|---|
| பு |
| து |
| மை |
| பு |
| னை |
| வோ |
| ம் |

ஆக்கம்:
செல்வி. கு. லக்ஷிகா,
தரம் $4^{C}$

# முட்டைகள் உருண்டை வடிவில் இருப்பது ஏன்?

முட்டை, உருண்டை வடிவில் இருப்பதால்தான் மேற் புறத்தில் அதிக அழுத்தத்தை அதனால் தாங்க முடிகிறது. முட்டை வளர்ந்து குஞ்சாவதற்கு வெப்பம் தேவைப்படுகிறது. அதற்காகவே தாய்ப் பறவை முட்டைகளின் மீது அமர்ந்து அடைகாக்கிறது. உருண்டையாக இருந்தால் தான் பறவையின் கனத்தால் ஏற்படும் அழுத்தத்தை அதனால் தாங்க முடியும்.

குஞ்சு உருவானதும் முட்டையைப் பிளந்து கொண்டு வெளியே வரவேண்டுமல்லவா? அதற்காக குஞ்சு தன் முட்டைப் பல்லினால் குத்தி முட்டையை உடைக்கிறது உருண்டை வடிவில் உள்ள பொருட்கள் உட்புறமாக அதிக அழுத்தத்தைத் தாங்கமாட்டா லேசாக அழுத்தினாலே போதும் அதிக வலுவில்லாத குஞ்சு எளிதில் முட்டையை உடைப்பதற்கும் இது சௌகரியமாக இருக்கிறது.

பெரும்பாலான முட்டைகள் முழு உருண்டையாக இராது. ஒரு பக்கம் மட்டும் சுற்றுகூம்பியது போல இருக்கும். கிண்ணம் போலக் கூடு அமைந்தாலே முட்டைகள் உருண்டு விழாமல் பாதுகாப்பாக இருக்கும் கூட்டில் எப்போதும் முட்டைகளின் கூம்பிய முனைதான் கீழ் நோக்கி இருக்கும் அதிக பரப்பில் பறவைகளின் வெப்பம் பரவ முடியும்.

கடற் பறவைகள் ஒழுங்கான கூடு கட்டுவது இல்லை அவ்வாறு தாறுமாறாக இருக்கும் மலைச் சரிவிலோ பாறைகள் மீதோ இவை முட்டையிடும். இவைகளின் முட்டைகள் உருண்டை வடிவில் இல்லாமல் நீள் வட்டமாக இருக்கும். இதுவும் பாதுகாப்புக்காக இயற்கை செய்துள்ள ஏற்பாடு தான் பலமாகக் காற்றடிக்கும் போது முட்டை உருண்டு விழுந்து விடாமல் இருக்கும் இடத்திலேயே சுழலும் நீள்வட்ட வடிவமாக இருப்பதால் தான் இவ்வாறு நேர்கிறது.

பறவைகளின் முட்டை எவ்வாறு உருவாகிறது தெரியுமா? கருப்பையில் மஞ்சள் கரு மட்டுமே தோன்றுகிறது. அதிலிருந்து வெளியே வந்து பிறப்பு உறுப்பின் மேல் முனையை அடையும் போது வெள்ளைக்கரு அதை மூடுகிறது.

கீழ் முனைக்கு வரும் போது ஜவ்வு போன்ற மேல்தோலும் ஓடும் அதைப் போர்த்தி மூடுகின்றன. முட்டை காற்றுப்புகக் கூடிய நுண்ணறைகளை ஏராளமாகக் கொண்டது. கரு வளர்வதற்கு வேண்டிய ஆக்சிஜன் இதன் மூலம் தான் உள்ளே செல்கிறது. முட்டையின் நீர்ப் பகுதி ஆவியாகி வெளியேறுவதும் இதன் மூலம் தான் மஞ்சள் கருவை உட்கொண்டே கரு வளர்கிறது.

குஞ்சுக்கு அதன் அலகைச் சுற்றி பல் போன்ற உறுதியான உறுப்பு இருக்கும். இதை முட்டைப் பல் என்பார்கள் இதைக் கொண்டே குஞ்சு முட்டையை உடைக்கிறது. பிறகு அந்தப் பல் விழுந்து விடும்.

**தகவல்**

**திருமதி. சிவாஜினி வசந்தகுமார்.**

**ஆசிரியை**

# அறிந்து கொள்வோம்

1. உலகத்தில் உள்ள சனத்தொகை கூடிய நகரம் எது? - டோக்கியோ

2. உலகத்தில் இயற்கை அழிவுகளால் அதிகம் பாதிக்கப்படும் நாடு எது? - வங்களாதேஷ்

3. உலகத்தில் முஸ்லிம்கள் அதிகம் வாழும் நாடு எது? - இந்தோனேசியா

4. இலங்கையின் பெரிய நிருவாக மாவட்டம் எது? - அனுராதபுரம்

5. இலங்கையின் முதலாவது ஒலிம்பிக் பதக்கம் பெற்றவர் யார்? - திரு. டங்கன் வைற்

6. உலகில் அதிக வானொலி நிலையங்களைக் கொண்ட நாடு எது? - அமெரிக்கா (10, 000)

7. உலகத்தில் சிறிய தேசிய கீதத்தைக் கொண்ட நாடு எது? - யப்பான் (4 வரிகள்)

8. உலகத்தில் அதிக அளவு கிராமங்கள் உள்ள நாடு எது? - இந்தியா

9. உலகத்தில் மிகப் பெரிய நூலகம் எங்குள்ளது? - அமெரிக்கா

10. உலகத்தில் அதிகம் பேசப்படும் மொழிகள் எவை? - மண்டாரின் (சீனமொழி), ஆங்கிலம், இந்தி

11. உலகத்தில் பெரிய பல்கலைக்கழகம் அமைந்துள்ள நாடு எது?
அமெரிக்கா, இந்தியா, மெக்சிக்கோ

12. உலகிலே மிகப் பெரிய அஞ்சல் துறை உள்ள நாடு எது? - இந்தியா

13. 300 க்கு மேற்பட்ட மொழிகள் பேச்சுவழக்கில் உள்ள நகரம் எது? - லண்டன்

14. உலகிலே மிகப் பெரிய காடு எது? - தென் ஆபிரிக்காவில் உள்ள அமேசன் காடு

15. கூடிய நாடுகளைக் கொண்ட கண்டம் எது? - ஆபிரிக்கா

16. தீவுகள் அதிகம் உள்ள கண்டம் எது? - ஐரோப்பா

17. அவுஸ்ரேலியாவைக் கண்டு பிடித்தவர் யார்? - கப்டன் யேம்ஸ் குக்

18. 16 நாடுகளைக் கொண்ட நாடு எது? - சீனா

19. உலகத்தில் மிகப் பெரிய துறைமுகம் உள்ள நாடு? - அமெரிக்கா (நியூயோர்க்)

20. உலகிலேயே பெரிய கால்பந்து மைதானம் உள்ள இடம் எது?
பிரேசில் (ரியோடி ஜெனிரா)

**செல்வன். ச. நிதர்சன்**
தரம் - 8C

# யாருமற்ற இளமலரே

அன்னையின் கருவுக்குள் பத்திரமாய்
பத்துத் திங்கள் இருந்து - புது உலகை
ஆளுகின்ற வண்ணம் இதுவோ?
ஆடை இன்றி வாடையில் மெலிந்து
நீ சோற்றுக்காய் ஏங்குகிறாய்.

வறுமையின் விளிம்பில் சிக்கிக் கொண்ட
உன் வாழ்க்கையின் வரைபே - திசை மாறியது.
உனது தாய் தந்தை எங்கே?
உன்னை ஆதரிப்பார் யாருமில்லையா?
விழி திறக்க முடியவில்லை
வழி கூடத் தெரியவில்லை - என்று
ஏங்கும் சிறுமி

வறுமையின் மடியில் மலர்ந்த இப் பூ
மீண்டும் வறுமையின் மடியில் இருந்து
மனித குலத்தில் உயர நினைக்கின்றாளே.
உன் எதிர்கால விளிம்பில் தான்.
உனது வசந்தம் தொங்கிக் கொண்டிருக்கின்றது.
உன் வறுமையின் மடியில் - எதிர்கால
தேடல்களை உனக்குள்ளே - தேடிக் கொள்.

**செல்வி. ம. ஜதா**
தரம் - 12 கலை

---

# சூறாவளி

படபட என்று அடித்தது யன்னல்
மடமட என்று முறிந்தது மரங்கள்
பட்டம் போலே பறந்தது கூரை
நட்டம் தந்து போனது காற்று

வெளியில் நானும் சென்று பார்த்தேன்
வழியில் கிடந்தன பெரிய மரங்கள்
எட்டி எட்டி எங்கும் பார்த்தேன்
சுற்றி நின்றோர் சூறாவளி என்றனர்.

**செல்வி S. நிரோசினி**
தரம் - 4V

# நல்லுரை

01. வாழ்க்கையில் எது நடக்குமோ அது கட்டாயம் நடந்தே தீரும்.

02. தாயின் இதயமே எதையும் மன்னிக்கும் நீதிமன்றம்

03. இன்பம் இருக்கும் இடத்தில் தான் அன்பு இருக்கும்

04. உன்னுடைய அவசரப்பேச்சு உன்னை அநாதரவாக்காமல் பார்த்துக் கொள்

05. காலத்தை தவிர நமக்கு எதுவும் சொந்தமில்லை

06. உள்ளத்தில் அன்பு இருந்தால் மட்டும் போதாது அது செயலில் வெளிப்பட வேண்டும்.

07. நட்பு எனும் மாளிகையில் நம்பிக்கை என்பது அஸ்திவாரம்

08. யாரும் பாராட்டாத இடத்தில் சாதனை நிகழ்த்திப் பயனில்லை

09. அன்பும், பண்பும் அவரவர் பிறவிக் குணம்

10. எண்ணங்களின் சுமையால் மனதை நசுக்கக் கூடாது

11. கற்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே மேல்.

12. ஒரு சண்டைக்குக் காரணம் மண், பொன், பெண் ஆகும்.

13. உண்மையை நீ மறந்தால் அது ஒரு நாள் உன்னை அழிக்கும்.

14. கூவும் இசையால் பறவையை அறி கொடுத்த வாக்கால் மனிதனை அறி

15. தீயவருக்கு இன்பமில்லை பொறுத்தாருக்கு துன்பமில்லை

16. நட்பு நட்சத்திரம் போன்றது, நண்பன் நிலவு போன்றவன்.

17. வரும் காலத்தை நினைத்து அஞ்சாதே சென்ற காலத்தை நினைத்து அழாதே

18. நல்ல மனம் படைத்தோருக்கு நல்லவர்கள் துணையிருப்பார்கள்

19. நிதானம் பல விதத்தில் நல்ல முடிவுகளை ஏற்படுத்தும்

20. தொடங்கிய இடத்தை தெரிந்து கொள். அப்பொழுது தான் முடிக்கும் இடத்தை அறிந்து கொள்வாய்.

21. கொடிய வார்த்தைகள் உள்ளத்தையும், உறவையும் பிரிக்கிறது.

22. சிந்தனை இன்றி கல்வி கற்பது வீணான செயலாகும்

23. ஆசையுள்ளவரை வேதனையும் கூடவே இருக்கும்.

24. புத்திசாலி எதையும் உபயோகம் இல்லை என்று நினைப்பதில்லை.

25. தாய் மொழி கண் போன்றது பிறமொழி கண்ணாடி போன்றது.

**செல்வி. ஸ்ரீ . கிருசாந்தி**
**தரம்** - 12 கலை

---

# பிஸ்கட் புடிங்



**தேவையான பொருட்கள்**

பிஸ்கட் - 250 kg
பட்டர் - 250 kg
சீனி - 250 kg
பால் - 1/2 கோப்பை
வனிலா - 1 தேக்கரண்டி
ஜாம் - 250 kg
கொக்கோ பவுடர் - அளவுக்கு
முந்திரிப் பருப்பு - அளவுக்கு

**செய்முறை :-**

பட்டரையும் சீனியையும் நன்றாக அடிக்கவும். சிறிது பாலையும் அதனுடன் சேர்த்து அடித்து வனிலா, கொக்கோ பவுடர் சேர்த்து அடிக்கவும். ஜாமை ஒரு பாத்திரத்தில் எடுக்கவும். ஒரு பாத்திரத்தில் மெலிபன் பிஸ்கட்டை பரவலாக அடுக்கவும். அதன் மேல் பரவலாக பாலை ஊற்றவும். பின் கிறீம் பூசவும் திரும்பவும் விஸ்கட்டை அதன் மேல் பரவலாக அடுக்கவும். பின் ஜாம் கலவையை பூசவும் இவ்வாறு மாறி மாறி அடுக்கிப் பூசிய பின் மேலே முந்திரிப் பருப்பை தூவி குளிர்சாதனப் பெட்டியில் வைத்து எடுத்து பரிமாறலாம்.

# பொன் மொழிகள் - 50

01. பக்திக்கும், மதிப்புக்கும் உரிய இடம் கோயில் மட்டுமல்ல, நாம் பணிபுரியும் இடமும் தான்.

02. நீங்கள் எந்த பதவியில் இருக்கின்றீர்கள் என்பது முக்கியமல்ல, இருக்கின்ற பதவியில் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்பது தான் முக்கியம்.

03. உழைப்பு ஒன்றே உணவை செரிக்க செய்யும் மருந்து.

04. நீ கண்ணீர் சிந்தாமல் இருக்க வேண்டும் என்றால் வியர்வை சிந்து.

05. ஆயுளின் பெருமை ஆண்டுகளில் இல்லை அவன் வாழும் முறையில் தான் உண்டு.

06. தம்முடைய கடமைகளை சரிவரசெய்பவர்களிடம் உரிமைகள் தாமாகவே வந்து சேருகின்றன.

07. பயமும், தயக்கமும் உள்ளவர்களைத் தோல்வி தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

08. நடத்தை என்பது ஒரு கண்ணாடி அதில் ஒவ்வொருவரும் அதன் மூலம் தம் பிம்பத்தை வெளிக்காட்டுகின்றனர்.

09. அடக்கம், உண்மை, கற்பு இந்த மூன்றும் பெண்களை பாதுகாக்கும் தேவதைகள்.

10. சாமர்த்தியம் என்பது எப்படியும் காரியத்தை சாதிப்பது திறமை என்பது முறைப்படி சாதிப்பது.

11. உள்ளத் தூய்மையே ஒழுக்கத்தின் உயிர்நாடி

12. உன்னால் தீபங்கள் எரியும் என்றால் - நீ தீக்குச்சியாய் இருப்பதில் ஆனந்தப்படு

13. தன் குறைகளை பார்ப்பவனுக்கு மற்றவர்களது குறைகளை பார்க்க நேரமிருக்காது.

14. பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து விடும்.

15. படைக்கும் உணவில் ஒரு துளி அன்பை கலந்து பரிமாறு வெவ்வேறு ருசி உள்ள எல்லோருக்கும் அது பிடிக்கும்.

16. நீ சொர்க்கத்தை எங்கேயும் தேடாதே அது உன் தாயின் காலடியில் தான் இருக்கிறது.

17. தவறுகளை ஒப்புக்கொள்ளும் தைரியமும், அதை திருத்திக் கொள்ளும் பக்குவமும் தான் உண்மையான வெற்றிக்கு வழிவகுக்கின்றது.

18. நூல் நிலையம் பெரியோர்களின் ஆன்மாக்கள் வாழும் புண்ணிய தலமாகும்.

19. காலத்தை விரயமாக்குபவன் மாபெரும் ஊதாரி

20. மற்றவர்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதில் முதல் நபராக இருங்கள்

21. கவலையற்ற எதிர்காலத்திற்குக் கல்வியே நிகழ்காலம்

22. கல்வி என்பது ஆபரணமல்ல, ஆடை

23. மன்னனுக்கு சிறப்பு அவன் நாட்டில் மட்டுமே கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு

24. வாழ்வில் அணியாகவும், தாழ்வில் துணையாகவும் விளங்குவது கல்வி

25. நல்ல அறிவு எந்த மூலையில் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அதை தேடிச்செல்

26. நண்பனுக்கு உயிரைக் கொடுப்பது எளிது ஆனால் உயிரைக் கொடுப்பதற்கு உரிய நண்பன் கிடைப்பது அரிது

27. நல்லவர், நட்பைப் பொருள் கொடுத்தாவது பெறுக, தீயவர் நட்பைப் பொருள் கொடுத்தாவது விடுக.

28. எந்த பழக்கமும் முதலில் சிலந்தி வலை போன்று மெல்லிதாய் இருக்கும் நாளடைவில் அதுவே இரும்பு சங்கிலி போல உறுதியாக மாறிவிடும்.

29. மனத்தை மண் குடிசையாக வைத்திராமல் எந்த புயலையும் தாங்கும் இரும்பு கோட்டையாக வைத்திருக்க பழக வேண்டும்.

30. நல்ல நூல் என்பது ஆயிரம் நல்ல நண்பர்களுக்கு சமம் தீயவை ஆயிரம் விரோதிகளுக்கு சமம்.

31. அன்பளிப்புப் பொருளை விட அதை அளிக்கும் முறைதான் மதிப்புமிக்கது.

32. உணர்ச்சி அரியணையில் அமர்ந்திருக்கும் போது அறிவு வெளியே போய்விடும்.

33. உயிர்களிடம் கருணை காட்டாதவன் மீது இறைவனும் கருணை காட்டமாட்டான்.

34. திறமை உங்களை உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்லலாம், ஆனால் நல்ல பண்புதான் உங்களை அங்கே நிலைக்க செய்யும்.

35. உலகை ஆட்டிவைக்க விரும்புகின்றவன் முதலில் தன்னை நன்கு திடகாத்திரமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

36. உண்மையான பெரிய மனிதனுக்கு முதல் அடையாளம் பணிவாக இருக்கும்.

37. தன் தாய்மொழியைச் செம்மையாகப் பயன்படுத்தத் தெரியாத எவனுக்கும் பிறமொழியில் நல்ல புலமை வராது.

38. எவற்றுக்கும் இன்றியமையாதவை தூய்மை, பொறுமை, விடாமுயற்சி

39. இதயம், ரோஜா மலராக இருக்கும் போது நினைவுகளும் நறுமணமாகத்தான் இருக்கும்.

40. கர்வம் கொண்டிருப்பவனைக் கண்டு வெற்றி திருமகள் விலகிவிடுவாள்.

41. அன்பை விதைப்பவர்கள் நிம்மதியை அறுவடை செய்வார்கள்

42. தன்னை வெட்டும் கோடரிக்கும் நறுமணம் தரும் சந்தனமரம் போன்றவனே சிறந்த மனிதன்.

43. திரும்பத் திரும்பச் செய்யும் எந்த பணியிலும் விரைவில் நிபுணராக முடியும்

44. பிறருடைய தவறுகளைப் பார்த்து அறிவாளி தன்னுடைய தவறுகளை திருத்திக் கொள்வான்.

45. மனிதன் சேர்க்கும் செல்வம் தேனீ சேர்க்கும் தேன் போன்றது அது மற்றவர்களுக்கும் பயன்பட வேண்டும்.

46. சோம்பலாய் இருப்பது முட்டாள்கள் எடுத்துக் கொள்ளும் விடுமுறை

47. ஒருவனிடத்திலுள்ள சிறுகுறை பல நற்பண்புகளை மறைத்து விடும்.

48. பிறரை ஏய்ப்பவனே இறுதியில் பிறரால் ஏமாற்றப்படுவான்

49. கல்வியின் குறிக்கோள் புள்ளி விபர அறிவை பெறுவதல்ல, பண்புநெறி அறிவை பெறுவதே

50. ஆயிரம் முறை சிந்தியுங்கள் ஒருமுறை முடிவு எடுங்கள்.

தொகுப்பு
**செல்வி . M. ஸ்ரீ சத்தியநாராயணி**
ஆசிரியை.

# காலத்தால் அழியாத கல்வி

காலம் பார்த்து வயலில்
விதைத்த விதை பின்பு
பச்சைப் பசுமையான இயற்கையை
தோற்றுவிப்பது போல்!

இங்கிதம் பார்த்து சிறுபிள்ளை
மனதில் விதைத்த கல்வி
மனதை எத்தனை கூறு போட்டாலும்.......... கல்வி
காலத்தால் அழியாது!

நிலத்தில் பற்றற்ற நிலையில் வேர் கொண்ட மரம்
மழை நீரால் அடித்துச் செல்வதுபோல்
மனதில் விருப்பமின்றிக் கற்கின்ற கல்வி
மனதில் நின்று நீங்கி விடும்!

உளி கொண்டு செதுக்கிய சிற்பம்
நிலைத்து நிற்பது போல்
எழுத்தாணி கொண்டு எழுதிக் கற்கும் கல்வி
காலத்தால் அழியாது!

கற்கக் கசடறக் கல்வி தன்னை
இராப்பகலாக அயராது கற்றிடுவாய்
நிறைவான மனதுடன் நீ பயிலும் ஏட்டுக் கல்வி
காலத்தால் அழியாது!

கடும் காற்றிலும் பறக்காது
கொடும் மழையிலும் கரையாது
நெடுந்தீயிலும் எரியாது நீ கற்ற கல்வி
காலத்தால் அழியாது!

**ஆசிரியை : திருமதி ஜெ. லோகானந்தன்**



# கல்வி விதி

தென்றலில் கிடைக்கின்ற சுகம்
தேடினாலும் வருவதில்லை;
கற்றதால் வரும் இன்பம்
கடல் கடந்தாலும் வருவதில்லை

தலைமுறைகள் பல வந்தும்
தலையில் கூடை இறங்கவில்லை
தலை நிமிர்ந்து நடப்பதற்கு நம்
தலைகள் விடுவதில்லை

# இலட்சியம்

உன் வெற்றியின் இரகசியம்
உண்மையான இலட்சியம்
இலட்சியம் நிறைவேற
இரும்பாகப் போராடு.

# நட்பு

இது உயிரானது;
என்றும் உண்மையானது
இடையில் கைவிடாது
துன்பத்தில் கரம் சேர்ப்பது

செல்வன். நா. நிசாந்தன்,
13 (கலைப்பிரிவு)

---

# சேரும் போது..............!

மேகம் இரண்டு சேரும் போது
மின்னல் பூக்கிறது
காகம் இரண்டு சேரும் போது
உறவைக் காக்கிறது

உள்ளம் இரண்டு சேரும் போது
இதயம் திறக்கிறது:
உள் புறம் ஒன்றாய் காணும் போது
உயர்வு பிறக்கிறது.

மின்னல் துள்ளிச் சிரிக்கும் போது
மேகம் வெளுக்கிறது.


மண்ணில் இருளின் கறைகள் நீங்க
மௌனம் கலைகிறது.

மக்கள் ஒன்று சேரும் போது
நாடு சிறக்கிறது
வாழ்வும் செயலும் இணையும்போது
வாசம் பிறக்கிறது.

செல்வி. வி. வாணி,
தரம் - 7P

# பிறந்தநாள் மேசை அலங்காரம்

## தேவதை




01. உருளைக்கிழங்கு பேஸ்ரி நொசில்ஸில் நிரப்பி தலை, கண் - மிளகு, மூக்கு, வாய் - சிவப்பு


02. லேபஸ் விஸ்கட் சிறகு

03. நொசிலஸ் பூ போடுதல்

04. வட்டமான பாண் துண்டு

05. கூம்பு வடிவக் கட்லட்

## வாத்து





01. மாக்கலவையை பேக் செய்த தலை, சிறகு, கால்

02. கட்லட் அல்லது முட்டை

03. கண், மிளகு

## முயல்




01. கோவா - சிறிது

02. கோவா - பெரிது


03. கத்தரிக்காய்

04. கத்தரிக்காய்

05. மிளகு

06. மாக்கலவை முறுக்கு


கூடை




01. வத்தகக் காய்

02. உருளைக்கிழங்கு அவித்து பிசைந்து களரிங் சேர்த்து உருவங்கள்

கொக்கு





01. லீக்ஸ்

02. கோவா

03. கரட்

04. மிளகாய்

மரம்




01. கரட்

02. பச்சை மிளகாய்


திருமதி. பா. வசந்தகுமார்.
பிரதி அதிபர்.

# சமூகமயமாதலின் முக்கியத்துவம்

ஒரு மனிதன் சமூகக் கட்டமைப்பின் ஆரம்பநிலையில் காணப்படும் குடும்பத்திலிருந்து பருவ வளர்ச்சிகளைத் தாண்டி சமூகத்துக்குள் நுழையும்போது அவன் அங்கு சமூகத்துக்குப் பொருத்தப்பாடான ஓர் சமூகப்பிராணியாகின்றான். பின்பு பல்வேறு மாறுபட்ட சவால்களை சந்திக்க வேண்டி ஏற்படுகின்றது. இந்த சவால்களை எதிர்த்து சாகசம் செய்யும் ஓர் மகத்தான கருமமே சமூக மயமாதலின் செயற்பாங்காகும். அந்த வகையில் சமூக மயமாதல் என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் என்பவற்றை எடுத்து நோக்குவோம்.

சமூக மயமாதல் என்பது ஒரு மனிதன் சமூகத்தில் ஓர் சமூகப்பிராணியாக இணைந்து கொள்ள அவன் எடுத்துக் கொள்கின்ற முயற்சி அவனுக்கு தரப்படுகின்ற பயிற்சி சமூகமயமாதல் (Socialization) எனப்படும். மேலும் மனிதனையும் சமூகத்தினையும் இணைக்கும் ஒரு இணைப்புப்பாலமாகவும் சமூகமும் மனிதனும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று பின்னிப்பிணைந்த ஒரு இணக்கத்தை உருவாக்குவதே சமூகமயமாக்குதலின் ஒரு முக்கிய பங்காகும். குழந்தை பிறந்தவுடன் சமூகத்துக்குப் பொருத்தப்பாடான செயற்பாடுகளை மறந்தே செயற்படுகின்றது. பின்பு சமூகத்துக்கு இணக்கமாகவும் பொருத்தப்படாகவும் காணப்படுகின்றவற்றை அதனுடைய புறக்காரணிகளின் தாக்கத்திறனை வைத்துக் கொண்டும் சமூக விழுமியத் திறன்களை வைத்துக் கொண்டும் குடும்ப உறுப்பினரின் நடத்தையில் ஏற்படுகின்ற மாற்றத்தினை அவதானித்துக் கொண்டும் தன்னை ஒரு சமூகத்துக்குப் பொருத்தப்பாடான சமூகப்பிராணியாக மாற்றிக் கொள்ளாதிருக்கின்றது.

ஒரு மனிதனுடைய பல்வேறுபட்ட தேவைகளை தாமாகவே நிறைவேற்றிக் கொள்ளவும் எப்படியும் வாழ்ந்துவிடலாம் என்று நினைக்கும் சமூகக் குழுக்களின் மத்தியில் இப்படித்தான் வாழவேண்டும் என எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் பழமையைப் போற்றுகின்ற பண்பாட்டினையும் நவநாகரிகத்திக்கு ஏற்புடைய வகையில் வாழ்க்கையைத் தரமுயர்த்துகின்ற திறனையும் அறிய உதவும் ஓர் ஆராட்சிக் கோலாகவும் இது விளங்குகின்றது எனலாம். எனவே சமூகத்தில் ஒருவன் பொருத்தப்பாடுடைய சமூகத் தன்னிறைவை பெறவேண்டுமாகையால் சமூகமயமாதல் எனும் பாங்கு முக்கியமான ஓர் திறவு கோலாகும்.

அந்த வகையில் இந்தப்பாங்கினை மேம்படுத்துவதற்கு சமூக நிறுவனங்கள் சம வயதுக்குழுக்களின் செல்வாக்கு தொடர்பாடல் என்பன இன்றியமையாத செயற்படுத்தும் கருமபீடங்களாக பிரதிபலிக்கின்றன. அவற்றில் குடும்பம் ஓர் பாரிய பொறுப்பினைச் சுமந்து கொண்டுள்ளது. தன்னிடம் இருந்து வெளியேறும் நபர்களை சமூகத்துக்குப் பொருத்தமான ஒரு சமூகப்பிராணியாக்குவதில் பாடசாலை, கல்வி

நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள், விளையாட்டுக்கழகங்கள், சமவயதுக்குழுக்கள், இணையம், தொலைபேசிச்சேவை, களியாட்ட நிகழ்வுகள் போன்றவற்றின் மூலம் தன்னை சமூகத்துக்குப் பொருத்தப்பாடு உடைய மனிதனாக மாற்றியமைக்கின்ற வல்லமை இவைகளுக்கு உண்டு எனலாம். இருந்தபோதிலும் இவற்றைவிட ஒரு மனிதன் நல்லவனாதலும் கெட்டவனாதலும் தான் தங்கிவாழும் குடும்பத்திலேயே தங்கியுள்ளது. எனலாம்.

சமூக மயமாதல் மூலம் ஒரு மனிதன் பூரணமடைகின்றான் சமூகத்தில் விரும்பத்தக்கவனாகவும். மதிக்கத்தக்கவனாகவும் அவன் மாற்றம் அடைகின்றான். இருந்தபோதிலும் நல்ல பழக்க விழுமியங்களில் நிறைந்த ஒருவன் தீய சமூகத்திலோ தீய குடும்பத்திலோ, தீய குழுக்களிடையே தொடர்பு கொண்டு காணப்பட்டால் அவன் சமூகப்பார்வையில் சமூகப் பொருத்தப்பாடு அற்றவனாக காணப்படுகின்றான். ஆனால் சமூகமயமாக்கல் பாங்குகளின் மூலமும் சிறப்பான ஊட்டிகளை வழங்குவதன் மூலமும் அவன் சிறப்பான ஒரு விரும்பத்தக்க சமூகப் பிராணியாக மாறுகின்றான் எனவே ஒருவனின் வெற்றிக்கு அடிப்படையாக அமைவது அவனுடைய சமூகமாகும் அமெரிக்காவில் பெருந் தொகையான விஞ்ஞானிகள் இருக்கின்றார்கள். என்றால் அங்கு சமூகம் கல்வி, தகவல்தொழில்நுட்பத்தில் முன்னேறிக் காணப்படுகின்றது. அதே போல யப்பானில் அதிக தொழிநுட்பவியலாளர்கள் காணப்படுகிறார்கள் என்றால் அங்கு அதற்குரிய சூழ்நிலையினை அந்நாட்டு சமூகம் அதற்குரிய களத்தினை அமைத்துக் கொடுக்கின்றது எனலாம். மனிதன் பிறந்து சுயமாக இயங்குவது இல்லை அவன் சுயமாக இயங்கும் வரை சமூகத்தை சார்ந்தவனாகவே காணப்படுகின்றான்

எனவே அபிவிருத்தியடைந்த நாடானாலும் சரி அபிவிருத்தி அடைந்துவரும் நாடானாலும் சரி அங்கு அனைத்து தேவைகளும் கடமைகளும் தளம்பல் இல்லாமல் நடைபெறுவதற்கு சமூகமயமாதல் செயற்பாங்கு அவசியமாகும் இந்த வகையில் அனைத்து சமூகப்பிராணிகளும் சமூகமயப்படுத்தலிற்கு உட்படுகின்றன. எனலாம்.

**திரு. S. சதீஸ்குமார்**
(ஆசிரியர்)

"Train your child right way, when he is mature he will not depart from it. View your child as a book not to be written, but to be read.

# நீயும் ஒருவராய்

மெய்ஞானம் தழுவிய விஞ்ஞானமானது இவ்வுலகம்
பிறப்பினில் வருவது உயர்வல்ல - உன்
கடின உழைப்பினில் வருவதே உயர்வு
இடுக்கினைக் கண்டு இலக்கினை மறப்பதா?
சாதிக்கப்பிறந்தவனடா நீ

சோதனைகளெல்லாம் சாதனைகளாக்கடா
வாலிப வயதில் வரும் மிடுக்கையெல்லாம்
வழிப்படுத்தினால் வாழ்க்கை உயரும்
இன்னல்களைக் கண்டு இலக்குகளை மறப்பதா?
இலட்சிய வீரரடா நீ

முட்கள் இல்லாமல் றோஜாக்கள் இல்லை
முயற்சிகள் செய்யாத ராஜாக்கள் இல்லை
முடியாது என்பது முயலாத வரைக்கும்தான்
ஓர் அடி எடுத்து வைத்தால் முத்தாகுமடா உன் பயணம்
கூர்ப்பின் வழியினில் அதி உன்னத இடத்தில் நீயடா

கூறுகிறது இயற்கை விஞ்ஞானம்
மூளையின் வலுவிலும் நீதான் முன்னேற்றமானவனாம்
அதோ பார் .........................
முயற்சி செய்யும் வேளையில்
முத்து முத்தாக நீயும் ஒருவராய்...................



**செல்வன். ந. நவநீதன்**
13 கலை

# ஒழுக்கமும் உயர்வும்

**ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்.**

என்பது வள்ளுவர் வாக்கு அத்தகைய ஒழுக்கமுடைய மனிதர்களே இவ்வுலகில் வாழத்தகுதி உடையவர்கள்.

இந்து சமயத்தின் தொன்மை நூல்களான வேத உபநிடத இலக்கியங்களிலே ஒழுக்கமானது நால்வகை வர்ண ஆச்சிரம நெறியினை பின்பற்றுதலே சிறப்பான ஒழுக்கம் எனப்பட்டது. அதாவது நால் வர்ணங்களிலே ஒன்றான பிராமணர்கள் கல்வி சார் கடமைக்குரியவர்கள் எனவும் சத்திரியர்கள் எனவும் அரச காமத்துக்குரியவர்கள் எனவும் வைசிகர் பொருளாதார கடமை உடையவர்களாகவும் சூத்திரர்கள் சேவைசார் கடமைக்குரியவர்கள் எனவும் குறிப்பிட்டு இவ்வொழுக்கத்தை கடைப்பிடித்தும் இறைவனை அடையலாம் எனப்பட்டது. இதே போல் ஆச்சிரம ஒழுக்கங்களில் ஒன்றான பிரம்மச்சரியத்தில் கல்வி கற்றும் அடுத்த நிலையான கிருகஸ்த நிலையில் திருமணம் செய்தும் அக்கால ஒழுக்கங்களை சிறப்பாக பின்பற்றல் பற்றியும் வானப்பிரசித்த நிலையில் துறவுக்கு செல்ல ஆயத்தமாகி சந்நியாச நிலையில் துறவுக்குச் செல்ல வேண்டும். எனவும் கூறி அதிலே பல வகையான ஒழுக்க கடமைகளை ஆற்றி உயர்வடைதல் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

இவை தவிர பிற ஒழுக்கமான தந்தைக்கு, தாய்க்கு, கீழ்ப்படிதல் உண்மை பேசுதல், பெரியோருக்கு கீழ்படிதல், குருவிற்கு கீழ்படிதல் போன்ற பல ஒழுக்க நெறியினை கடைப்பிடித்து உயர்தல் பற்றி கூறப்பட்டுள்ளது.

இதே போல் அற நூல்களான திருக்குறள் நாலடியார் வாக்குண்டாம், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்றவற்றிலும் பிரதான கருத்தாக ஒழுக்கமே காட்டப்பட்டது. உதாரணமாக திருக்குறளிலே பிறர்மனை நயவாமை, கள்ளுண்ணாமை, கொல்லாமை, வாய்மை உடைமை, ஒழுக்கம் தவறுவதால் ஏற்படும் கேடு என்பன விளக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வள்ளுவர் ஒழுக்கத்தினால் எல்லோரும் உயர்வடைவர். ஒழுக்கம் தவறுவதால் நாம் அடையத்தகாத பெரும்பழி அடைவர் என்ற கருத்தை கொண்டு,

**"ஒழுக்கத்தின் எய்துவார் மேன்மை இழுக்கத்தின்**
**எய்துவார் எய்தாப் பழி"** என்கிறார்.

அதே போல் நல்லொழுக்கமானது நன்மைக்கு வித்தாகி இருமையிலும் இன்பம் தரும் தீய ஒழுக்கம் எக்காலத்திலும் துன்பமே தரும் எனற் கருத்தைக் கொண்டு.

**"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்"** என்கிறார்.

ஔவையார் அறம் செய்ய விரும்பு, ஆறுவது சினம் இயல்வது கரவேல், ஈவது விலக்கேல் என வாழ்க்கைக்கு தேவையான ஒழுக்கங்களை காட்டியிருந்தார். அத்தோடு "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று" போன்ற சிறப்பான ஒழுக்கங்களை பின்பற்ற எம்மை வழிப்படுத்துகின்றார்.

இந்து சமயமானது ஒவ்வொரு படிமுறை ஒழுக்கத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றது. குறிப்பாக மாணவர்களாக இருக்கும் போது குருவிடம் சிரத்தையோடும், பக்தியோடும் இருந்து கல்வியினை கற்க வேண்டும்.

பின்னரான இல் வாழ்க்கையின் போது இல்லத்தை நாடி வரும் விருந்தினரை இன் முகத்துடன் வரவேற்று இனியமொழி பேசி வரவேற்றல் வேண்டும். திருவள்ளுவர் முகமலர்ச்சியோடு விருந்தினரை போற்றுகின்றவர்களின் வாழ்வில் திருமகள் மனம் மகிழ்ந்து நிலையாகத் தங்குவாள் எனக் கூறுகிறார்.

அத்தோடு இறை வழிபாடு. செய்ய வேண்டும். இரந்து வருவோருக்கு ஈதல் வேண்டும். நல்ல மக்களைப் பெறல் வேண்டும். நல்ல வழியினில் பொருளீட்டல் வேண்டும். இக்காலத்தில் கள்ளுண்ணாமை, கொல்லாமை, பிறர்மனை நயவாமை போன்ற நல்ல பண்புகளை பெற்று சிறப்பாக வாழவேண்டும்.

இதன் பின்னரான நிலையில் துறவினைக் கடைப்பிடிக்க வேண்டும் எனப்பட்டது எனினும் தற்காலத்திற்கு இப்படி நிலை பொருத்தமற்றது இருப்பினும் ஒவ்வொரு காலத்துக்குரிய ஒழுக்கங்களையும் சரியாக பின்பற்றினால் தவம் செய்யாமல் இறைவனை அடையலாம் எனப்படுகின்றது.

ஒருவர் எல்லா வகையான நன்மைகளையும் உடையவராகி கல்வி, செல்வம் வீரம் போன்ற அனைத்தையும் கொண்டு சிறப்பான வாழ்க்கை வாழ்ந்தாலும் அவரிடத்திலே ஒழுக்கமில்லையாயின் அவரிடம் இருக்கும் ஏனைய நல்ல விடயங்களுக்குப் பயனில்லாமல் போய்விடும்.

"வள்ளுவர்" **அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர் மக்கட் பண்பிலாதார்"** என்கிறார் அரம் போல கூர்மையான அறிவு இருந்தாலும் ஒழுக்கம் இல்லாவிடில் அறிவில்லாத மரத்துக்கு ஒப்பானவர்களாக கருதப்படுவர் என்றார்.

ஆதி காலத்திலே மனிதன் நாகரீகம் பிறக்கும் முன்னர் மிருகமாகவே வாழ்ந்தான் எனப்படுகின்றது. தமக்கென ஒழுக்கங்களை வகுத்துக் கொண்ட பின்னர் தான் மனிதன் உயர்வடையத் தொடங்கினான் அத்தோடு இக்காலத்தில் ஒருவர் ஒழுக்கம் தவறி வாழ்ந்தால் அவனை சமூகம் ஒதுக்கி வைக்கிறது. இது மிகப் பெரிய தண்டனையாகும். எனவேதான் நாம் அனைவரும் வாழ்க்கைக்குரிய அறங்களைக் கடைப்பிடித்து வையகத்திலே வாழ்வாங்கு வாழ்வோம்.

**செல்வி. சி. பிரகாசினி**
தரம் 12 கலை



# பேத்தாழை

ஆதியிலே நீ பல தாழை மரத்தினது - இயற்கை
எழில் சோலைதனில் காட்சியளித்தாயே
இன்றைய பேத்தாழை எனும் நாமத்தை
என்றென்றும் தனதாக்கி கொண்டாயே

உன் மடிதனில் அன்று சிறு பள்ளிக் கூடந்தனை - பெரும்
கஸ்டத்தின் மத்தியில் பெற்றெடுத்தாயே
அக் கூடம் வளர்ந்திட இடமில்லாத போதினிலும் உன்
புதல்வனின் பெரும் உள்ளத்தைத் திறந்தாயே.

அவ் இடத்தினிலே தொடர் மாடிகளுடன் இன்று - பல
கலைகளிலே அக் கூடம் உயர்ந்திடக் கண்டாயே
உன் கிரமத்துச் செல்வங்களை
பல வழிகளிலும் வளர்த்திட வித்திட்டாயே

உன் தர்மத்தின் தலைவன் தயங்காமல் - என்றும்
தாங்கி வழிநடத்திட தயை கூர்ந்தாயே
இன்னும் பல வருடங்கள் தம் சேவைதனை
எம் வித்தியாலயத்திற்கு வழங்கிட வைப்பாயே

உன் மண்ணிலே பிறந்த மைந்தன் இன்று
எம் கதாநாயகனாய் உம் வளர்ச்சிதனிலே
தம் அயராத சேவையினை என்றும் புரிந்திட
அன்றே எமக்கு ஈன்று தந்தாயே

இன்று உன் வளர்ச்சியினை - பல
துறைகளிலும் ஓங்கிட தந்திட்டாயே
உன் நாமம் இன்று போல்
என்றென்றும் ஒளி வீசிட வைப்பாயே.

**செல்வி. ஹேமறஜனி அந்தனி**
(நூலக உதவியாளர்)
பேத்தாழை

# கல்வி எனும் சொத்து

கற்றவர் மக்களால் போற்றப்படுகின்றனர். கற்றவர்கள் எல்லா இடங்களிலும் மதிக்கப்படுகின்றனர் சபைதனிலே கற்றவர்களை உலகம் வாழ்த்தும் வணங்கும். அதுதான் வரலாறு. ஆம்! கல்வி ஒரு சொத்து மனிதர்களிடமிருந்து எவராலும் அபகரிக்க முடியாது. என்கிறார் எபிக்டெட்டல்ஸ் எனும் அறிஞர்.

பல்வேறுபட்ட சமுதாயங்கள் வாழாமல் வளராமல் போனதற்கும், நசிந்து மடிவதற்கும் கல்வியின்மை ஓர் காரணமாகும். இந்த நவீன யுகத்தினில் சில நாடுகள் வளர்ச்சியுறாமைக்கு கல்வி அறிவு இன்மையே காரணமாகும்.

கல்லாதவரை பற்றி 'அரிஸ்ரோட்டில்' கூறும் போது கல்லாதவரை இறந்தோருக்கு சமமானவர் எனவும் காந்தியடிகள் கூறும்போது நம்மிடையே புதைந்துள்ள சிலவற்றை உடல், மனம், ஆன்மா ஆகியவற்றில் படிந்துள்ள சிறந்த கூறுகளை சீர்பட வெளிக் கொணர்வதே கல்வியின் நோக்கமாகும் என்கிறார்.

கல்வி ஒருவரை உயர்ந்த இடத்தில் கொண்டு சேர்க்கும் என்பதன் இலக்கணத்திற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டியவர் இந்தியா தேசத்தின் முன்னாள் குடியரசுத் தலைவர் மாந்தருக்கு கல்வி அழகே அழகு என்று ஆதரித்தனர் சான்றோர்கள்.

"இளமையில் கல்வியை புறக்கணித்தவன் எதிர்காலத்தை இழந்தான்" என்கிறார். யுரிப்பிடீல் என்னும் அறிஞர் கல்வி என்பது விலைமதிப்பில்லாத சொத்து அள்ள அள்ள குறையாத அமுதசுரபி. இவற்றுக்கு எல்லாம் மேலாக மனிதனை மனிதனாக்கும் கருவி. கற்க கற்க சிறப்பு வரும் அப்படிப்பட்ட அரும் பொருளை அடைய வேண்டும் மனித சமுதாயம் போற்றும் பெருவாழ்வு வாழ வேண்டும்.

**செல்வி. க. கஜேந்தினி**
தரம் - 5V



# அமைதியும் அழகுதான்

அசதி கொண்டு அகிலம் இளைப்பாற
ஆதவன் சாந்தம் ஆனான்
கார் ஆடை அணிந்து
சுகமாக கண்ணயர்ந்தான்

தண்ணொளி வீசிட வலம் - வரவே
வெண் மதியும் தயாரானாள்
தாரகைகள் தாரையாய் அணி வகுக்க
தகதகக்க மதி மயங்கும்

முகம் மலர அல்லிகள் தாழ் நீக்கி
தண்ணீரின் மேல் தலை தூக்க
தவளையொலியிலும் சங்கீதமும்
தண் மணமும் தாலாட்ட

அன்னையவள் மடியில் தலை வைத்து
தென்றலின் வருடலால் தமை மறந்து
உறங்குகின்ற சேய்களின் அமைதியும்
அல்லல் மனதிற்கு அழகுதானே!

**செல்வன். கி.தனராஜ்**
தரம் - 13 கலைப் பிரிவு.


**தாழை தழைத்தோங்க எனது ஆசிகள் உரித்தாகட்டும்.**

**திரு. A. சிவனேதுரை**
**பிரதேச சபை உறுப்பினர்,**
**கோறளைப்பற்று.**

# வர்த்தக சினிமாவும் அதன் தாக்கமும்

20ம் நூற்றாண்டின் தலைசிறந்த வெளிப்பாட்டுச் சாதனமாக விளங்குவது சினிமாவாகும். தமிழில் 1931 இல் பேசும் படமாக பரிணமித்து இலங்கையில் தமிழ்ச்சினிமா 1952 இல் வெளியானது. இதில் வர்த்தகச் சினிமாவும் அதன் தாக்கமும் பல்கிப் பெருகியுள்ளன.

சினிமாவை மூன்று பெரும் பிரிவாக அதன் வெளிப்பாட்டு நோக்கை அடிப்படையாகக் கொண்டு வகுத்து நோக்க முடியும்.

1) முதலாம் சினிமா - கலைப்படங்களாக இருக்கும்
2) இரண்டாம் சினிமா - கலைப்படங்களின் தாக்கத்தையும் வர்த்தக சினிமாவின் தாக்கத்தையும் உள்வாங்கி வெளிவரும் சினிமா.
3) மூன்றாம் சினிமா - முழுமையாக வர்த்தக நோக்கில் எடுக்கப்படும் சினிமா என்பனவாகும்.

இம் மூன்று வகை சினிமாவிலும் வர்த்தக சினிமாவே அதிகம் வளர்ச்சியடைந்ததாகவும் மக்களின் பெரும் விருப்பத்துக்குரியதாகவும், மக்களின் மேல் பாரிய தாக்கத்தை தோற்றுவிப்பதாகவும் இருக்கும்.

வர்த்தக சினிமாக்கரர்களின் நோக்கம் பொருளாதார நலனாக இருப்பதால் தமது பொருளாதார நலனைப் பேணத்தக்க விதத்திலே சினிமாவைக் கையாளுவர். இந்நோக்கு நடிகர் தயாரிப்பாளர், நெறியாளர் போன்ற சினிமாவுடன் தொடர்புடைய சகல பிரிவினரிடமும் காணப்படும். உதாரணமாக முன்னணி நடிகர்களில் ஒருவராக விளங்கும் கமலஹாசன் தினமுரசு இதழில் நான் ஓர் உயர்ந்த யானை மணிரெத்தினம் சொன்ன சம்பளம் எனக்கு போதாது எனக் குறிப்பிடப்பட்டிருப்பது, நடிகை விசித்திரா சினிமாவுக்கு நிறையப்பேர் வருவதே நிறையச் சம்பாதிக்கணும் என்பதற்காகத்தான். யாராவது சமூக சேவை செய்ய சினிமாவுக்கு வருகிறார்களா? அதிகம் தருகின்றோம் கொஞ்சம் கவர்ச்சியாக நடி என்றால் செய்கிறோம் எனக் குறிப்பிடுவதும் நடிகர்கள் தம் பொருளாதார நலனில் எவ்வாறு அக்கறை உடையவர்களாக விளங்குகிறனர் என்பதையும் அவர்கள் ஒரு வியாபாரப் பண்டமாக எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றார்கள் என்பதையும் துல்லியமாக சுட்டி நிற்கின்றது.

வர்த்தகச் சினிமா தொடர்ந்து தன்பிடியில் வைத்திருப்பதற்கும் சினிமாவின் பால் மக்கள் கவரப்படுவதற்கும் பல்வேறு உத்திகளைக் கையாள்கின்றது. இவ்விடயத்தில் ஏனைய தொடர்புச் சாதனங்களும் பெரும்பங்காற்றுகின்றன. இதன் நோக்கம் வர்த்தக சினிமாவின் பிரபல்யத்திற்கும் விருத்திக்கும் வித்திடுவதன்றி தங்களின் பொருளாதார விருத்திக்குப் பயன்படுத்துவதாகும்.

இந்நிலைமை சினிமாவில் மக்கள் நாட்டம் கொள்வதற்கும் வழியமைக்கின்றது. சினிமா தொடர்பான செய்திகளைத் தாங்கி வரும் பொம்மை, சினிமா எக்ஸ்பிரஸ் போன்ற சஞ்சிகைகளும், ஆனந்தவிகடன், இந்தியா ருடே, ராணி, குமுதம், கற்கண்டு, குங்குமம் போன்ற சஞ்சிகைகளும் சினிமா சார்பான பல செய்திகளை வழங்குகின்றன. இவற்றைப் படிக்கும் மக்கள் சினிமாவின் பால் நாட்டம் கொள்கின்றனர். குறிப்பாக ஆனந்தவிகடன் படங்களுக்குப் புள்ளி வழங்கி அதன் மூலம் மக்களைச் சினிமாவின் மேல் நாட்டம் கொள்ள வைக்கின்றது.

வானொலி, தொலைக்காட்சி, செய்தித் தாள்கள் போன்றவை தமது நிகழ்ச்சி நிரலில் சினிமா விளம்பரத்துக்கு குறித்த பகுதியை ஒதுக்குகின்றன. சில வர்த்தகம் சார்ந்த படங்கள் வெளிவரும் முன்னர் குறித்த படங்களுக்குரிய பாடல்கள் படத்தின் காட்சிகள் வெளியிடப்படும். உதாரணம் குறிப்பாக சக்தி TV இறுதியாக வெளியாகிய படங்களில் பத்து திரைப்படங்களை தெரிவு செய்து அப்படங்கள் தொடர்பான விமர்சனங்களும் அவற்றுக்குரிய மக்களின் அபிப்பிராயங்களும் வாக்குரிமைகளையும் விளம்பரப்படுத்தும் இதைவிட புதிதாக வெளிவரும் பாடல்கள் காட்சிகள், நடிகர்களது பேட்டிகளைப்பார்த்த மக்கள் படத்தின் பால் கவரப்பட்டு அதனைப் பார்ப்பதற்காக குறித்த சினிமா எப்போது வெளியாகிறது என எதிர்பார்த்து ஆர்வம் கொள்வதற்கு வழியேற்படுகின்றது

இதைவிட காட்சிகளை மக்கள் கவரும் வகையில் போஸ்டர்களாக வெளிப்படுத்தல் குறித்த சில நடிகர்கள் சிறந்த நடிகர்கள் எனும் அபிப்பிராயத்தை மக்களுக்கு தோற்றுவித்தல் உதாரணமாக M.N கிருஷ்ணன் , மதுரம், M, G, R சிவாஜிகணேசன், ரஜனி, விஜய், போன்ற பலரைக் குறிப்பிடலாம்.

இவை தவிர திரைப்படங்களின் அமைப்பையும் மக்களை கவரத்தக்க விதத்தில் ஒரு கதையோட்டம் காணப்படல் காதாநாயகன், கதாநாயகி பாத்திரங்கள் வில்லன் பாத்திரங்களை வெல்லல், நகைச்சுவை வெளிப்பாடு, காதல் காட்சிகளினூடாக படம் நகருதல், பாலியல், வன்முறைகாட்சிக்கு சம முக்கியத்துவம் கொடுத்தல், திரைப்பட முடிவு மக்கள் எதிர்பார்த்த வகையில் சந்தோசமாக முடிவடையும் தன்மை என்பன மக்களின் பலவீனமான பகுதிகளை உணர்ந்து அதற்கு ஏற்ப தயாரிப்பாளர் மக்களுக்கு

சினிமாவை விருந்தாகப் படைக்கின்றனர். இது சமூகத்தில் பல இடர்பாடுகளைத் தோற்றுவிக்கின்றது.

இவ் வர்த்தக சினிமாவினால் காட்டப்படும் சமூகம் கற்பனைப்படுத்தப்பட்ட யதார்த்தமுடையதே. சினிமா படங்களின் மூலம் காட்டப்படும் வாழ்க்கையை மக்கள் தங்கள் நடைமுறை வாழ்வுடன் பொருத்திப் பார்த்து அதைவிட மேம்பட்டதென உணர்வர். பின்னர் அதை தங்களின் நடைமுறை வாழ்வில் கடைப்பிடிக்க முயல்வர். இது பல அவல நிலைகளை தோற்றுவிக்கும்.

சினிமாவில் ஆண்களை மேலானவர்களாகவும், பெண்களை அவர்களுக்கு கீழானவர்களாகவும் சித்தரிக்கும் ஒரு போக்கும் இருக்கும். இது பெண் ஆணுக்கு கட்டுப்பட்டு வாழ வேண்டும் என்ற நிலையைத் தோற்றுவிக்கும். மாறாக "**படையப்பா**" போன்ற படங்களில் வரும் நீலாம்பரியாக ரம்யாகிருஷ்ணன் பாத்திரம் ஆண் பெண்ணுக்கு கட்டுப்பட்டு வாழ வேண்டுமென்பதையும் உணர்த்துவதாக உள்ளது. இவ்வாறான விடயங்கள் குடும்பத்தில் ஒழுங்கமைப்பு சிதைவடைந்து குடும்ப அங்கத்தவர்களின் எதிர்காலம் இருட்டடிப்புச் செய்யப்படும் நிலை காணப்படுகின்றது.

பாலியல் நாட்டம் மக்களின் பலவீனமான பகுதிகளில் ஒன்று. நடிகை சங்கவி தினமுரசில் யாரும் பயப்பட வேண்டாம். நவீன உடைகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளில் அணிந்து நடிப்பேன். என வெளிப்படுத்தப்பட்ட குறிப்பு வர்த்தக சினிமாவில் மக்களை கவரும் உத்திமுறையின் வெளிப்பாடாகவுள்ளது. இது எமது இளம் தலைமுறையினருக்கு பாலியல் துஸ்பிரயோகம், இளமைத் திருமணம், கல்வியை இடைநிறுத்தல் பலதார மணம் எனும் பல விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

சினிமாவின் மூலம் காட்டப்படும் விடயம் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் படம் பார்க்க வேண்டும் என்ற உணர்வைக் கொண்டுவருவதுடன், அவர்கள் பார்த்த விடயங்களை இன்பமாக பகிர்ந்து கொள்வதன் மூலம் திரைப்படம் பார்க்காதவரையும் குறித்த படத்தை பார்க்க வேண்டுமென்ற ஆர்வத்தை ஏற்படுத்தும் இத் தன்மை அவர்களை அறியாமை இருளில் தள்ளி விடுகின்றது.

சினிமாக்காரர்கள் வரலாற்று, புராண, இதிகாச, ஆன்மீக விடயங்களை தங்களின் தேவைக்கேற்ப மாற்றியமைப்பதால் அது மக்களின் மத்தியில் பிழையான வழியில் வழிநடத்துவதற்கு வழிவகுக்கின்றது.

இப்பின்புலத்தில் வர்த்தக சினிமா சமூகத்தில் தோற்றுவிக்கும் தாக்கம் ஆபத்தானவை இது பல முரண்பாடுகளை தோற்றுவிக்கும் எனச் சுட்டிக்காட்டி மக்கள்

மத்தியில் சினிமாவின் கலைத்துவ உண்மைகளை புலப்படுத்த வேண்டும். இதில் சினிமா சார்பான செய்திகளை வழங்கும் தொடர்புச்சாதனங்கள் பங்காற்ற வேண்டும். அத்துடன் மக்கள் முன்னணியில் முதலாந் தர இரண்டாம் தர திரைப்படங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் இவை சினிமாவை ஒரு கலை வடிவமாக எவ்விதம் நோக்க வேண்டுமென்பதையும் அதன் கலையின்பத்தை மக்கள் அனுபவத்துக்கு -ள்ளாக்குவதற்கு உரிய தொரு சூழலை தோற்றுவிக்கும்.

இச் செயற்பாடுகள் குறித்த காலத்தின் பின்னா் வா்த்தக சினிமாவை செயலிழக்கச் செய்வதுடன் சினிமாவை மக்களுக்கான சிறந்த வெளிப்பாட்டுச் சாதனமாக வளா்த்தெடுத்துச் செல்லத் தக்க நிலையை தோற்றுவிக்கும் இக்காலகட்டத்தில் மக்களின் பல்வேறு பிரச்சினைகளையும் சுட்டுவதாகவும். அவா்களின் வாழ்வியல் முரண்பாடுகளுக்குத் தீா்வு கூறுவதாகவும் அமைந்து மக்கள் வீறுநடை போடுவதற்கான பாதையைச் சமூகத்துக்கு சினிமா வழியமைத்துக் கொடுக்கும்.

இவ்வடிப்படைகளை விளங்கிக் கொண்டு மக்களின் நலனில் கருத்தூன்றி மக்களுக்கான வெளிப்பாட்டுச் சாதனமாக சினிமா செயற்படும். போதே சினிமாவின் மூலம் பல்வேறு கருத்துக்களை மக்களுக்கு கொண்டு சோ்ப்பதுடன் சிறந்த கலைச்சாதனமாகவும் பிரயோசனமுள்ள பொழுது போக்கு வடிவமாகவும் சினிமா செயற்படும் என்பதில் ஐயமில்லை.

**ஆசிரியா்**

**திருமதி. புனிதவாணி - சிவகுமாா்**


# தாழை சஞ்சிகை தொடர்ந்து வெளிவர வாழ்த்துக்கள்!.



**திரு. S. பஞ்சலிங்கம்**
உரிமையாளா்,
ரம்மியா கொன்ஸ்ரக்சன்,
பேத்தாழை.

# உலகின் பொருளாதார நெருக்கடி

உலகம் இன்று மிக மோசமானதொரு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. என்பது பலரும் அறிந்த ஒரு விடயமாகும் 1930 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட (1929 - 1934) உலகப் பெரு யுத்தத்திற்குப் பின்னர் உலக நாடுகளைப் பாதித்துள்ள மிகப் பெரும் நிதி நெருக்கடியாக இது கருதப்படுகின்றது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஜப்பான் உள்ளிட்ட வளர்ச்சியடைந்த நாடுகளும் சீனா, இந்தியா, போன்ற வளர்முக நாடுகளும் இதன் பாதிப்பிற்குட்பட்டுள்ளதோடு ஏனைய மூன்றாம் உலக நாடுகளையும் இது பாதிக்கத் தொடங்கியுள்ளது.

கடன், வங்கித் தொழில் வர்த்தகம் நாணயங்கள் என்பவற்றோடு தொடர்பு கொண்ட இந்த நெருக்கடியினால் இவ்வருடம் உலகப்பொருளாதாரம் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் முதன்முறையாக பின்நோக்கி நகருமென சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது. அதாவது உலகப் பொருளாதாரம் 1.3 வீதத்தால் சுருங்குமென குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலும் சில பாரிய நிதி நிறுவனங்கள் முறிவடைந்துள்ளதோடு. சில நிறுவனங்கள் ஏனையவற்றுள் உள்வாங்கப்பட்டன. இன்னும் சில அரசாங்கங்களினது மீட்சி நிதியைப் பெற்றுள்ளன. நிதி நிறுவனங்களில் முறிவு இந்நாடுகளில் பங்குச் சந்தையில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் அமெரிக்க முதலீட்டாளர்கள் தமது நிதிகளை யென், யூரோ, சுவிஸ்பிராங் போன்ற உறுதியான நாணயங்களுக்கு மாற்றத் தொடங்கியமை அமெரிக்க டொலரைப் பாதித்தது.

இந்த நெருக்கடிக்கான ஆரம்பக் குறிகள் 2007 ஆம் ஆண்டில் நடுப்பகுதியிலேயே தோன்றி விட்டது 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தின் பின்னரே அது தீவிரமடைந்து வெளிப்படத் தொடங்கிற்று மேற்படி நாடுகளில் முதலீடுகள் வீழ்ச்சியடைந்து மக்களது வருமானம் பொருட்கள் சேவைகளின் கேள்வி அவற்றின் விலைகள் உற்பத்தியாளரது இலாப எல்லைகள் என்பன வீழ்ச்சியடையத் தொடங்கிய பொழுது உற்பத்தி நிறுவனங்கள் தமது இலாபங்களைப் பேணிக் கொள்வதற்காக தமது ஊழியரது எண்ணிக்கையை குறைக்கத் தொடங்கின இதனால் பல நாடுகளில் வேலையில்லாப்பிரச்சினைகள் தீவிரமடைந்ததோடு இவை தொடர்ந்தும் ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைத்து வருவது குறிப்பிடத் தக்கது.

பாரிய வங்கிகள் வேறு நிதி நிறுவனங்கள் என்பன முறிவடைந்தமை பங்குச் சந்தைகளில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்திற்று பங்கு விலைகளும் பங்குகளினது ஏனைய சொத்துக்களினதும் சந்தைப் பெறுமதியும் வீழ்ச்சியடைந்தன. அமெரிக்காவில் தோன்றிய இதன் நெருக்கடி வெகு விரைவில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஏனைய

வளர்ச்சியடைந்த நாடுகள் உட்பட சீனா, இந்தியா போன்ற நாடுகளுக்கும் பரவத் தொடங்கிற்று.

முதலாளித்துவ பொருளாதாரங்கள் பொதுவாக காலத்திற்கு காலம் ஏற்ற இறக்கங்களிற்கு உட்படுவது சகஜமாகும் பொருளியலில் இது வர்த்தக சகட ஓட்டமெனக் கூறப்படுகின்றது ஆனால் இன்று உலகை ஆட்டிப்படைக்கும் நிதி நெருக்கடியானது அமெரிக்காவில் பாரிய நிதி நிறுவனங்களின் தவறான கடன் செயற்பாடுகளினாலும் ஏற்பட்ட ஒன்றேயென துணிந்து கூறலாம். சில ஆண்டுகளிற்கு முன்னர் அமெரிக்க நிதி நிறுவனங்களும் வங்கிகளும் வீடமைப்பதற்காக குறைந்த வட்டியில் பெருமளவு நிதியினைக் கடனாக வழங்கத் தொடங்கின. இதன் விளைவாக வீடமைப்புத் துறையில் ஒருவித பூரிப்பு நிலை தோன்றியது. குறைந்த வட்டியில் இலகுவான கடன்களைப் பெறக் கூடியதாக விருந்ததால் வீடமைப்பிற்கு மட்டுமன்றி பல்வேறு உத்தேச நடவடிக்கைகளுக்கும் பெருமளவு கடன்கள் பெறப்பட்டன.

சில முதலீட்டு வங்கிகளிடம் மிகக் குறைவான வைப்புகளே இருந்தமையால் அவை துரித கதியில் முறிவடைந்தன. இந்தப்பிரச்சினை காரணமாக பெருமளவு ஒதுக்கீடுகளைக் கொண்டிருந்த நிதி நிறுவனங்கள் கூட நெருக்கடிக்குள்ளான இந்நிலையில் பங்குகளில் சந்தைப் பெறுமதி வீழ்ச்சியுற்று பங்குச் சந்தை வீழ்ச்சிக்கு காரணமாகின்றது.

இலங்கையிலும் தாராண்மைக் கொள்கைகளின் கீழ் நிதித்துறை மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதால் வெளிநாடுகளில் நிதித்துறையிலேற்படும் நெருக்கடிகள் இலங்கையையும் பாதிப்பதற்கான சாத்தியங்களுண்டு. மேலும் அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளிற்கோ இலங்கை தனது உற்பத்தி பண்டங்களை ஏற்றுமதி செய்கின்றது. எனவே அந்த நாடுகளில் ஏற்படும் பொருளாதாரப் பின்னடைவினால் எமது ஏற்றுமதிகள் பாதிக்கப்படுமென்பது ஏற்கனவே உணரப்பட்டுள்ளது. உலக நிதி நெருக்கடியானது 03 முக்கிய வழிகளினூடாக இலங்கையைப் பாதிக்கலாம்.

01) பொருட்கள் சேவைகள் சார்ந்த வர்த்தகம் (02) நிதிப்பாய்ச்சல்களும் ஏனைய நிதிக் கொடுக்கல் வாங்கல்களும் (03) வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களின் பணச் செலுத்தல்கள்.

அத்துடன் நிதி நெருக்கடி காரணமாக உல்லாசப் பயணிகள் வருகையில் வீழ்ச்சி ஏற்படுவதினால் இலங்கைக்கு பெருமளவு வெளிநாட்டு வருமானம் உழைத்துத் தரும் இன்னொரு துறையான உல்லாசப் பயணத்துறையும் பாதிக்கப்படும். இலங்கையினது பிரதான ஏற்றுமதிப் பண்டமான தேயிலை, இறப்பர், தைத்த ஆடைகள், சப்பாத்து, மாணிக்கக்கற்கள் என்பன வளர்ச்சியடைந்த நாடுகளிற்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேலும் பெரும்பாலான நிதிப்பாய்ச்சல்களும் அந்த நாடுகளுடனேயே மேற் கொள்ளப்படுகின்றன. இவையனைத்துமே உலக நிதி நெருக்கடியினால் பாதிக்கப்படக்

அன்னியச் செலாவணி உழைப்பில் வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையரின் பயணச் சொத்துக்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இதுவும் பாதிக்கப்படக் கூடியதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. நிதி நெருக்கடியினால் ஏற்பட்ட பெற்றோலிய பொருட்களின் விலை வீழ்ச்சி காரணமாக மத்தியகிழக்கு நாடுகளின் ஏற்றுமதி வருமானங்களில் வீழ்ச்சியேற்பட்டுள்ளதனால் அந்நாடுகளில் கட்டிட நிர்மாணத்துறையிலும் வேறு அபிவிருத்தி நடவடிக்கையிலும் தளர்ச்சி அடைந்துள்ளன. இது அந்நாடுகளில் இலங்கையருக்கான வேலை வாய்ப்புக்களைப் பாதிக்க வல்லது.

அடுத்தாக வளர்ச்சியடைந்த நாடுகளில் ஏற்பட்டு வரும் பொருளாதாரப்பின்னடைவு அந்நாடுகள் வெளிநாட்டு உதவி வழங்கும் ஆற்றலை பாதித்துள்ளது எனவே வெளிநாட்டு நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை மேற்கத்திய நாடுகளிலுள்ள தனியார் நிதி நிறுவனங்களை நாட வேண்டிய நிலை எற்பட்டுள்ளது. இலங்கை இன்று ஒரு இரட்டை நெருக்கடியினை எதிர் நோக்கியுள்ளது. உலகப் பொருளாதார நிதி நெருக்கடியின் தாக்கம் ஒரு புறம் இருக்க வரவு செலவு திட்டகுறை நிலை சென்மதி நிலுவைப்பிரச்சினை என்பவற்றால் அது உள்நாட்டு நெருக்கடி ஒன்றையும் சமாளிக்க வேண்டியுள்ளது.

ஏனைய வளரும் நாடுகளைப் போலன்றி இலங்கை வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதில் தோல்வி கண்டுள்ளது 1977 ஆம் ஆண்டு முதல் மொத்தமாக அது 3.5 பில்லியன் டொலர் பெறுமதியான வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெற்றுள்ளது. வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கு இலங்கை ஒரு போட்டித் தன்மை கொண்டதும் வெளிநாட்டு முதலீடு சார்பான சினேகபூர்வமான ஒரு முதலீட்டு சூழலைக் கொண்டதுமான ஒரு நாடாக மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது.

இந்த நெருக்கடி எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் பொருளாதார மீட்சி எப்போது ஏற்படும் என்பது பற்றி பொருளாதார நிபுணர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன ஒரு சிலர் 12 - 18 மாதங்களில் மீட்சி ஏற்படுமென்றும். வேறு சிலர் 2011 ஆம் ஆண்டில் கூட மீட்சி ஏற்படமாட்டாது என்றும் கூறுகின்றனர். இன்னும் சிலர் அடுத்த 05 வருட காலத்திற்கும் இது நீடிக்கும் என்றும் கூறுகின்றனர். எது எவ்வாறாயினும் உலகப் பொருளாதார நெருக்கடி வளர்ந்த நாடுகளை மாத்திரமன்றி வளர்முக நாடுகளையும் ஒரு உலுக்கு உலுக்கும் என்பது திண்மம். எனவே அதனை சமாளிக்கும் ஆற்றலை நாம் வளர்த்து எமது தாய் நாட்டை பொருளாதாரம் மிக்க நாடாக மாற்றி மீட்சியடைய வைப்போமாக!

**செல்வி. சி. பிரியா**
தரம் - 13 கலை

# நலமான வாழ்வுக்கு தெய்வீக மூலிகைகள்

**சிவனுக்கு - வில்வம்**

உடல் உழைப்பின்றி இருந்தால் உடல் நலம் தொடர்ந்திருக்காது. தக்க உழைப்பிற்குப் பின்னர் நான்கைந்து வில்வ இலைகளை மென்று விழுங்கி, உணவையும் உட்கொண்டு வந்தால் நல்ல முறையில் ஜீரணமடைந்து உணவின் முழுச் சக்தியையும் உடல் பெறும். உடலின் கண் இருக்கும் விஷத் தன்மையையும் நீக்கும்.

**சக்திக்கு - வேப்பிலை**

"சக்தி"க்குரிய வேப்பிலையை வேக வைத்து எடுத்த சாற்றை அவ்வப்போது சிறிது அருந்தி வந்தால் உடலிலுள்ள நோய் கிருமிகள் அழிவதுடன் கிருமிகள் உற்பத்தியாகாமலும், அன்றாட உடலுறுப்புத் தேய்மானங்கள் அன்றாடம் புதுப்பிக்கப்பட்டும், இறுதி வரை முழுச்சக்தியுடன் பிணியின்றி வாழ்ந்திடலாம்.

**விநாயகருக்கு - அறுகம்புல்**

பிள்ளையாருக்கு உரியதெனக் கூறும் அருகம்புல்லை வாரம் ஒரு முறை வேகவைத்து கஷாயம் தயாரித்து குடித்து வந்தால் வலியும், வியாதியும் இன்றி வாழலாம்.

**கங்கைக்கு - மாவிலை**

நீருக்கு உரிய மாவிலைகளை வேகவைத்து அவ்வப் போது கஷாயம் இறக்கிக் குடித்து வந்தால் நம் உடலில் நீரினால் உண்டாகும் வியாதிகளை நீக்கிக் கொள்ளலாம். உ+ம். கும்பாபிஷேகம், புதுமனைப் புகுவிழாக்களிலும் கலசங்களிலும் நீரை மாவிலையால் தூய்மையடையச் செய்து மக்கள் மீதும் வீடுகளிலும் தெளிக்கின்றார்கள் அல்லவா?

**திருமாலுக்கு - துளசி**

திருமாலுக்குரிய துளசி இலையை பறித்து அவ்வப் போது மென்று தின்று வந்தால், நமது உடலின் எலும்பும் தசையும் உறுதியடைந்து பலத்தைப் பெறும். நல்ல உடலுடன் வாழ்ந்தால் "தூய உள்ளம்" பெற்று மற்றவர்க்கும் உதவும் குணம் வளரும்.

**துளசி :-**

**தலைவலி குணமாக,**

ஐந்து துளசி இலையை மென்று தின்று விட்டு, இரண்டு இலையைக் கசக்கி நோயுள்ள இடத்தில் சிறிது நேரம் அழுத்தித் தேய்த்துக் கொண்டிருந்தால் தலைவலி உடனே குணமாகும்.

**நோய் அணுகாதிருக்க :-**

உடலில் எந்த நோயும் ஏற்படக் கூடாது, நோய் இன்றி சுகமாக வாழ வேண்டுமென்று நினைப்பவர்கள் துளசி இலையில் இரண்டு கைப்பிடியளவு கொண்டு வந்து, அதை ஆய்ந்து எடுத்து ஒரு சுத்தமான பாத்திரத்தில் போட்டு ஒரு டம்பளர் தண்ணீர் விட்டு மூடி ஒரு பாதுகாப்பான இடத்தில் வைத்து விட வேண்டும். இதை மாலை நேரத்தில் செய்வது நல்லது. காலையில் அந்தப் பாத்திரத்தை எடுத்து நீரை மட்டும் (இறுத்து) வடிகட்டி வெறும் வயிற்றில் குடித்து விட வேண்டும். இதே போல 21 நாள் குடித்து (குடிக்க) விட்டு, மறுபடி 21 நாள் இடைவெளி விட்டு மறுபடி 21 நாள் சாப்பிட வேண்டும். இவ்விதம் செய்து வந்தால், எந்த நோயும், பயங்கரமான தொற்று நோய் கூட அணுகாது. கொலரா என்னும் வாந்திபேதி, தடிமன், அம்மன் இவை பரவி வரும் காலத்தில் இவ்விதம் குடித்து வந்தால், பயப்படவே தேவையில்லை. கிருமிகள் தொற்று ஏற்பட்டாலும், அவைகளை துளசி நீர் சக்தி அழித்து விடும்.

**தோல் சம்பந்தமான கோளாறுகள் குணமாக :-**

தேகத்தில் எங்காவது சொறி, அரிப்பு, சொரசொரப்பு, லேசான புண் இவைகள் தோன்றியிருக்குமானால், துளசி இலையை அரைத்து தடவி வைத்திருந்து வெந்நீரில் குளித்து வந்தால் இவைகள் மறைந்து விடும்.

**தாமரை**

தாமரையில் வெண்தாமரை, செந்தாமரை என இரு வகை உண்டு. இதில் செந்தாமரையே அதிக அளவில் நோய் தீர்க்கும் மருந்தாகப் பயன்பட்டு வருகிறது. "அரவிந்தம்" என்பதும் "கமலம்" என்பதும் தாமரையைத் தான் குறிக்கும்.

**இருதய நோய் குணமாக :-**


செந்தாமரை இதழ்களைக் கொண்டு வந்து ஆய்ந்து வெய்யிலில் காய வைத்து பெரும் பொடியாக இடித்து வைத்துக் கொண்டு ஒரு டம்ளர் அளவு தண்ணீரைக் கொதிக்க வைத்து அதில் $\frac{1}{4}$ தேக்கரண்டியளவு தாமரை இதழைப் போட்டு இறக்கி வைத்து இளஞ்சூடாக இருக்கும் போதே வடிகட்டி, பால், சர்க்கரை (சீனி) சேர்த்துக் கொடுத்து வரவேணடும். காலை மாலையாக 21 நாள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இருதய நோய் குணமாகும்.

**குடல் புண் ஆற :-**

குடலில் புண் ஏற்பட்டு வலி இருக்குமானால் மேற் சொன்னபடியே தேநீர் தயாரித்து சாப்பிட்டு வந்தால் குடல் புண் ஆறிவிடும் ஆனால் தொடர்ந்து சாப்பிட வேண்டும்.

**தொகுப்பு,**

**திருமதி. தங்கப்பிள்ளை அருள்தாசன், (ஆசிரியர்)**





Mr. N.Subramaniyam (Watcher - Temprary), Miss. S. Vaytheki (Labourer - Volunter), Miss. A. Hemarajani (Libruary Asst - Volunter)


# பயன்தரும் இணைய வகுப்பறைகள்.

தகவல் தொழில்நுட்பத்தில் தவழ்ந்து வரும் இவ்வுலகில் இணையம் **Internet** வழியிலாக பல்வேறு நற்கருமங்களை இன்றைய நவீன உலகில் மனிதன் அனுபவித்துக் கொண்டு இருக்கும் இவ்வேளையில் பலவிதமான அனுகூலம் மற்றும் பிரதிகூலங்களைச் சுமந்து கொண்டு இருக்கும் இணையத்தில் பயன் தரும் அறிவுசார் கல்வி மற்றும் தொழிநுட்பங்களைச் தன்வசம் வைத்துக் கொண்டு காலத்தின் வேகத்தில் **Abdate** பண்ணிக் கொண்டு இருப்பது இந்த பயன்தரும் கல்விசார் இணையத்தளங்களின் மகத்தான சேவையாகும்.

இந்தவகையில் கல்விசார் இணையப் பக்கங்களைப் பார்க்கும் போது பலபுதுமையான வினைத்திறனான கற்றல் மற்றும் கற்பித்தலுடன் கூடிய நவீனத்துவமான விடயங்களையும், கல்வியியலாளர்களின் சிந்தனையிலும் ஓர் கல்விப்புரட்சிக்கு வழிவகுத்துக் கொண்டு இருக்கின்றது என்பது மறுக்கமுடியாத ஓர் விடயமாகும்.





மேலும் இந்த இணையத் தளங்களினூடாக உலகில் உள்ள மாணவர்களின் தொடர்பாடல் திறன், மற்றும் தேடலில் அவர்களது அறிவில் ஒரு புதிய திருப்புமுனையை ஏற்படுத்துவதாகவும் இந்த கவ்வி இணையத்தளங்கள் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டு இருப்பதும் இதனுடைய விசேடத்துவங்களில் ஒன்றாகும். அதேவேளை தற்போது சில இணையத்தளங்களில் சிறப்பான (**Education Learning Soft ware**) இலவசமாக பதிவிறக்கக்கூடிய வசதிகளும் மாணவர் நலன் கருதி செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி தற்போது விற்பனையில் காணப்படுகின்ற கற்றல் மற்றும் கற்பித்தல் தொடர்பான மென்பொருட்களின் மூலம் இன்றைய இளம் சந்ததியினர் குறிப்பாக மாணவர்கள் தங்களுக்குத் தேவையான விடயங்களை தேடிப் பெற்றுக் கொள்ளும் வசதியும் காணப்படுகின்றது உதாரணமாக **Microsoft Encarta, Encyclopedia.** போன்றவைகளைக் குறிப்பிடலாம்




கல்விக்காக வடிவமைக்கப்பட்ட இணையப்பக்கங்களில் ஆசிரியருக்குரிய **Lesson Plan, Work Plan** மற்றும் விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்ப பரிசோதனை பயிற்சி மாதிரி கோப்புகள் முதலிய விடயங்களையும் அவர்களால் அறிந்து கொள்ளமுடிகிறது. மேலும் மாணவர்களின் **Group Activities, Abdate Knowledge**, தொடர்பாடல் திறன் அவர்கள் கணனியின் மீது கொண்டுள்ள ஆர்வம். முதலிய பல எண்ணிலடங்கா விடயங்களையும் இந்த இணையத்தளங்கள் வழங்கிக் கொண்டு வருவது சிறப்பம்சமாகும். மேலும் மாணவர்களிடம் உள்ள அறிவு, திறன், மனப்பாங்கு முதலியவற்றில் ஓர் மாற்றத்தைக் கொண்டுவந்து அவர்களின் கல்வியியல் வாழ்க்கையில் ஓர் புதிய திருப்புமுனையை அமைத்துக் கொண்டு இருப்பதும் இதனுடைய சிறப்பியல்புகளில் ஒன்றாகும்.

மேலும் இன்று தொழிநுட்ப யுகத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கும் கல்விச் சமூகமானது இணையத்தினூடாக வெளிநாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள், தொழிநுட்பக் கல்லூரிகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட கற்கைகள் மற்றும் உயர் தொழில் சார் கல்வி நடவடிக்கைகளை இணையத் தளங்கள் மூலமாக தங்களின் விண்ணப்பங்களையும் கல்வி நடவடிக்கைகளையும் மேற்கொண்டு பயன்மிக்க விடயங்களை உள்வாங்கிக் கொள்கின்றனர், இன்றைய தகவல் தொழிநுட்ப உலகில் தன்னையும் ஓர் அங்கத்தவராக நினைப்பதில் இப்படியானோர் பெருமை கொள்கின்றனர்.




இதே போன்று இணையத்தில் பலவகையான தேடும்பொறிகள் (Search engines ) உதாரணமாக Yahoo, google, msn போன்றவைகள் பல்வேறுவகையான கல்விநடவடிக்கைகளுககுரிய கட்புல மற்றும் செவிப்புல சாதனங்கள் உள்ளடக்கிய (Visual Education) தன்னகத்தே வடிகட்டி **Filter** பண்ணி வைத்துக் கொண்டு இருப்பதுடன் அதனை காலத்தின் போக்கிற்கமைய புதுவிடயங்களை சேர்ப்பதிலும் முயற்சி செய்து வெற்றிபெற்றுள்ளார்கள். இதனால் இலகுவானமுறையில் Audio, Video மூலம் கல்விசார் விடயங்களை பரிசோதனை வாயிலாகவும், செய்முறை மூலமாகவும், மற்றும் விளக்கப்படங்கள் மூலமாகவும் அமைந்துள்ளது சிறப்பம்சங்களாகும்.




அபிவிருத்தி அடைந்த நாடுகள், மாத்திரம் இன்றி அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் இதனுடைய விளைவுகளை நன்கு அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மேற்குலக நாடுகளில் பாடசாலை செல்லும் மாணவர்கள் தங்களது விடுமுறைகாலங்களில் வீடுகளில் இருந்து கொண்டு இணையம் வாயிலாக தங்களது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். அதே போலவே பாடசாலைப் படிப்பை முடித்தவர்கள் அல்லது தொழில் புரிபவர்கள் இணையத்தில் வடிவமைக்கப்பட்ட கல்வி தளங்களில் தங்களின் அதிகபட்ச நேரத்தை செலவு செய்து பயனுள்ள விடயங்களை சேகரிப்பதில் ஆர்வம் காட்டுகின்றார்கள்.

எனவே இன்றைய காலகட்டத்தின் தேவையை நன்கு அறிந்து குறிப்பாக மாணவர்களின் நலன்கருதி இணைய வகுப்பறைகள் பல ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்ற இவ்வேளையில் பல்வேறு விதமான அறிவுசார்ந்த நவீன திறன்களை மாணவர்களிடம் ஏற்படுத்திய பெருமை இந்த தளங்களையே சாரும். மேலும் எமது நாட்டின் முதற்தர பாடசாலைகளின் வகுப்பறைகளில் கற்பித்தல் செயற்பாடுகளை Video, Audio ஆகியன உள்ளடங்கப்பட்ட கோப்புக்களை (File) தொடர்புசாதனங்கள் உள்ள பாடசாலைகள் பயன்படுத்திக் கொண்டு இருக்கின்றன.

எனவே இன்றைய நவீன கல்விக்கு இந்த தொடர்பு சாதனங்கள் அதிக பங்கை வகிப்பதுடன் அத்துடன் இணையத்தின் வாயிலாகவும் அதிகமான மாணவர்கள் தங்களின் தேடலின் மூலம் பல்வேறு விதமான நன்மைகளைப் பெற்றுக் கொண்டு இருக்கின்றார்கள் என்பது யதார்த்தமானதாகும்

**தொகுப்பு :- விஜயபாஸ்கர் (ஆசிரியர்)**

# FASHIONS

Human beings did everything according to their wills and pleasures. The activities of human beings is the corner stone of civilization. Human race considered fellow beings as civilized and cultured according to the activities performed.

The East as the west had its own culture and civilization. It is the fashion or mode of activities that designed and determined civilization. Fashion could be generally grouped under enting habits, dresses and ceremonies, such as weddings, birthdays and funerals.

Dresses were disigned to surt a certain fashion at a certain period of time. A particular kind of dress which is sought often as fashionable becomes outdate at another period of time. Fashion plays a major role in teenager's life. Remember the proverb "Simplicity is the key note of beauty." We should not run ofter the fashions.

We should think of our Eastern Culture. The dressers. We wear, should not bring shame to our culture mordern people are very busy and live in a restless world. There are some people.

Who can encourage us to fall into last. So we must be careful of choosing fashionable clothes. Let us protect our Eastern tradition and culture. MAny people have a genvine desire to wear beautiful dresses.

The best way to escape temptation is to wear decent clothes. 'No grave trouble will over take the right eovs, but the wicked shall be filled with evil' If you are willing and obedient the society will respect you.

**Mrs. V. Suresh**
**Agriculture Teacher.**




**இடமிருந்துவலம் : 1வது - திருமதி. P. சிவகுமார்** (பகுதித் தலைவர்), **திருமதி. T. மகாலிங்கம்** (பிரதி அதிபர் கல்வி), **திரு. T. சந்திரலிங்கம்** (அதிபர்), **திருமதி. P. வசந்தகுமார்** (பிரதி அதிபர் நிருவாகம்), திருமதி.V.விஜயராகவன் (பகுதித் தலைவர்)

**2வது - திருமதி. S. சோமநாதன்** (பகுதித் தலைவர்), **திரு. R. ராஜ்பிரகாஸ்** (பகுதித் தலைவர்), **திருமதி. ப. சுரேஸ்** (பகுதித் தலைவர்),

# பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 2009

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு. T. சந்திரலிங்கம் அதிபர் |
| செயலாளர் | - | திருமதி தெ. ராஜ்மோகன் |
| பொருளாளர் | - | திருமதி. இ. மகாலிங்கம் |
| உபசெயலாளர் | - | திருமதி. சா. சிதம்பரப்பிள்ளை |
| உறுப்பினர்கள் | - | திரு. சு. சின்னத்தம்பி |
| | - | திரு. க. தயானந்தன் |
| | | திரு. கா. மகேஸ்வரம் |
| | | திருமதி. சி. சோமநாதன் |
| | | திருமதி. ஜெ. லோகானந்தன் |
| | | திருமதி. சு. செல்லத்தம்பி |
| | | திருமதி. யோ. புண்ணியசேகரன் |
| | | திருமதி. ப. விஸ்வலிங்கம் |
| கணக்காய்வாளர் | - | திருமதி. ஆ. அருமைநாயகம் |

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோர் விபரம்

| ஆண்டு | சித்தி பெற்றவர் பெயர் | புள்ளி |
|---|---|---|
| 1999 | 1. ந. சோபா<br>2. சி. கிருபாகர்<br>3. P. ரகுநாதன் | 132<br>128<br>130 |
| 2002 | 1. சி. அனுராஜ்<br>2. சி. கிருசாந்தி<br>3. ஜெ. ஸோஜிதா | 129<br>130<br>136 |
| 2003 | 1. த. வனித்தா | 125 |
| 2004 | 1. ச. வேணுஜா | 154 |
| 2005 | 1. நா. ராஜிதா | 140 |
| 2006 | 1. இ. சுஜானி | 145 |
| 2009 | 1. ச. சரணீதன்<br>2. து. தனுக்ஷன்<br>3. செ. பவிக்காந்த்<br>4. இ. திருபிகா<br>5. ஜெ. அட்சயன்<br>6. ஈ. ஹம்சாயினி | 149<br>147<br>145<br>141<br>140<br>139 |

# க.பொ.த. (சா/த) பரீட்சைப்பேறுபேறுகள்

| ஆண்டு | சிறந்த பெறுபேற்றைப் பெற்றவர் | D | C | S | |
|---|---|---|---|---|---|
| 1999 | இ. சாந்தினி | 3 | 5 | 1 | |
| 2000 | சி. கோணேஸ்வரி<br>ப. தேவநேசன் | 2<br>1 | 2<br>6 | 4<br>2 | |
| | | A | B | C | S |
| 2001 | இ. யுகதாஸ் | 3 | 2 | 2 | 3 |
| 2002 | மு. கமலநாதன் | 1 | 2 | 2 | 2 |
| 2003 | ம. வினோத் | 5 | 2 | 3 | - |
| 2004 | ஜீ. கார்த்திகா | 7 | 1 | 2 | - |
| 2005 | ந. சோபா | 3 | 1 | 5 | 1 |
| 2006 | சி. ருஷாந்தினி | 3 | 2 | 1 | 4 |
| 2007 | சு. தனுஜா<br>ச. டிசா | 4<br>4 | 1<br>2 | 4<br>1 | 1<br>3 |
| 2008 | சி. அனுராஜ்<br>சி. கிருசாந்தி | 5<br>4 | -<br>2 | 3<br>2 | 1<br>1 |




இடமிருந்துவலம் : செல்வன். S. சரணிதன், செல்வன். T. தனுக்சன், செல்வி R. திருபிகா. திரு. T.சந்திரலிங்கம் (அதிபர்). M. கலைவாணி (ஆசிரியை), திருமதி. V. விஜயராகவன் (பகுதித் தலைவர்), செல்வி. E. கம்சாயினி, செல்வன். J. அட்சயன், செல்வன். S. பவிக்காந்.

# விளையாட்டு சாதனைகள் - 2008

## மாகாணமட்டம்

| மாணவர் பெயர் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 1. உ. இளங்கோ | 200 m ஓட்டம் | 02ம் இடம் |
| 1. உ. இளங்கோ<br>2. கை. கிஷாந்<br>3. பி. பிரசாந்<br>4. பி. மிதுனன் | 4x100 m அஞ்சலோட்டம் | பங்கு பற்றியமை |
| **தேசிய மட்டம்**<br>1. உ. இளங்கோ | 200m ஓட்டம் | பங்கு பற்றியவர் |







# 2009 போட்டிகளும் வெற்றி பெற்றோர் விபரங்களும்

## உலக உளநல தினம் கட்டுரைப் போட்டி வலயமட்டம்

| பிரிவு (தரம்) | மாணவர் பெயர் | நிலை |
|---|---|---|
| 10,11 | ஜெ. ஜிலக்சி | 1 |
| | சு. தீக்ஷிக்கா | 2 |
| 12, 13 | த. நித்தியவாணி | 5 |

## உலக காசநோய் தினம் கட்டுரைப் போட்டி மாவட்ட மட்டம்

| பிரிவு (தரம்) | மாணவர் பெயர் | நிலை |
|---|---|---|
| 10 | சு. தீக்ஷிக்கா | 2 |

## ஆசிரியர்களுக்கான, மாணவர்களுக்கான பாடசாலைக் கல்வி மென்பொருள் ஆக்கப் போட்டி மாகாண மட்டம்

| தரம் | மாணவர் பெயர் |
|---|---|
| 11 | சி. மிதுனா |
| 11 | க. ரதிஸ்காந் |
| 11 | த. வனிதா |
| 12 | உ. கிருபாஜினி |
| 11 | பி. ரஜீந்திரன் |
| 11 | க. சரணியா |
| 12 | பா. அஸ்வினி |
| 12 | க. டிகாந்தினி |
| ஆசிரியர் | திரு. ச. கார்த்தீபன் |
| ஆசிரியர் | திரு. பி. விஜயபாஸ்கர் |

# தமிழ் மொழித் தினம் 2009

| பிரிவு | மாணவர் பெயர் | நிகழ்ச்சி | நிலை | | |
|---|---|---|---|---|---|
| | | | கோட்டம் | வலயம் | மாவட்டம் |
| 1 | சி. லிந்துஜா | கட்டுரை | 2 | - | - |
| 4 | சு. தீக்ஷிகா | கட்டுரை | 3 | - | - |
| 5 | ஜெ. டயனி | திறனாய்வு | 2 | - | - |
| 4 | ஜெ. ஜிலக்ஷி | கு.நா.ஆக் | 1 | 1 | 2 |
| 5 | த. நித்தியவாணி | கு.நா.ஆக் | 3 | - | - |
| 4 | த. வனித்தா | கவிதை | 1 | 2 | - |
| 5 | ஸ்ரீ. கிருஷாந்தி | சிறுகதை | 1 | 1 | 2 |
| 4 | கோ. சரணியா | பேச்சு | 3 | - | - |
| 5 | இ. ராஜ்பிரியா | இலக்கணம் | 2 | - | - |
| குழு | சி. ரேணு<br>கோ. சரணியா<br>ம. அனித்தா<br>கீ. அர்ச்சனா<br>த. தயானி<br>ஜெ. ஜிலக்ஷி | நா பாடல் | 1 | 3 | |
| குழு | ரா. ராஜ்பிரியா<br>ஜெ. நிஷாந்தினி<br>சி. பிரியா<br>ரு. நவனீதன்<br>த. நித்தியவாணி | தமிழறிவு வினா விடை | 2 | - | - |
| குழு | ம. ஜதா<br>கை. காயத்திரி<br>ம. கிருஷாந்தி<br>ரா. ரம்யா<br>சு. அஜந்தா<br>உ. கிருபாஜினி<br>சி. நிலுஜா<br>நா. ராஜிதா<br>கை. கிஷாந்<br>பி. மிதுனன்<br>ஆ. தனேஸ்வரன்<br>ஸ்ரீ. கிருஷாந்தி | நாடகம் | 3 | - | - |

## விஞ்ஞான வினா விடைப் போட்டி

| தரம் | மாணவர் பெயர் | நிலை கோட்டம் | வலயம் |
|---|---|---|---|
| 7 | T. ஜான்சி | 2 | - |
| 9 | N. ராஜிதா | 1 | 3 |
| 11 | T. வனித்தா | 1 | - |

## சமூகவிஞ்ஞான போட்டி

| தரம் | மாணவர் பெயர் | நிலை கோட்டம் | வலயம் |
|---|---|---|---|
| 9 | நா. ராஜிதா | 1 | 1 |
| 9 | ந. பவிதா | 2 | 2 |
| 10 | ப. தயானி | 1 | 1 |
| 10 | ப. அஸ்வினி | 1 | 2 |

## கணித வினாவிடைப் போட்டி

| தரம் | மாணவர் பெயர் | நிலை கோட்டம் | வலயம் |
|---|---|---|---|
| 10 | ப. தயானி | 1 | 3 |
| 9 | நா. ராஜிதா | 1 | 1 |

## விவசாயப் போட்டிகள்

| தரம் | மாணவர் பெயர் | நிகழ்வு | நிலை கோட்டம் |
|---|---|---|---|
| 11 | ம. அனித்தா | பேச்சு | 1 |
| 11 | ஜெ. ஜிலக்ஷி | வினா விடை | 2 |
| 11 | சி. மிதுனா | | |
| 11 | கோ. சரணியா | | |

**விஞ்ஞான ஆய்வு கூட ஒழுங்குபடுத்தல் போட்டி 2ம் இடம்.**

# English Day Competition - 2009
# Divisional Level

| Name of the Student | Grade | Events | Placement |
|---|---|---|---|
| Miss. K. Sneka | 3 | Recitation | 3rd |
| Miss. S. Kavinaya | 4 | Recitation | 3rd |
| Miss. T. Jancy | 7 | Recitation | 3rd |
| Miss. S. Rishoba | 9 | Recitation | 3rd |
| Miss. S. Dicsiga | 10 | Recitation | 2nd |

## Copy Writing

| | | | |
|---|---|---|---|
| Miss. V. Sathurmiya | 3 | Recitation | 3rd |
| Miss. E. Kamsayani | 5 | Recitation | 2nd |

## Creative Writing

| Name of the Student | Grade | Events | Placement |
|---|---|---|---|
| Mas. S. Subarojan | 7 | Recitation | 3rd |
| Miss. T. Thamika | 8 | Recitation | 2nd |
| Miss. R. Sujani | 8 | Recitation | 3rd |
| Miss. P. Thayani | 10 | Recitation | 3rd |

## Dictation

| | | | |
|---|---|---|---|
| Miss. P. Thayani | 10 | Recitation | 3rd |

## Oratory

| | | | |
|---|---|---|---|
| Miss. R. Piradeepa | 13 | Recitation | 3rd |

| பெயர் | நிகழ்ச்சி | நிலை | | |
|---|---|---|---|---|
| | | கோட்டம் | வலயம் | மாவட்டம் |
| **13 - 19 வயது பெண்** | | | | |
| T. தர்மிகா<br>A. திவ்யா<br>A. அகல்யா<br>K. யோயன்னா<br>S. செவ்வந்தி<br>N. தேனுயா<br>S. பவித்திரா<br>T. ஜான்சி<br>S. அக்சிதா<br>S. சர்மியா<br>V. வாணி<br>S. நிலானி<br>S. நிலோயிதா | காற்பந்து | 1 | 2 | - |
| **15 - 19 வயது ஆண்** | | | | |
| M. நிதர்சன்<br>P. திவாகர்<br>S. டானியல் ஜெபராஜ்<br>A. அயந்<br>P. மிதுனன்<br>N. நிசாந்தன் | செஸ் | 2 | 2 | - |
| **17 வயது ஆண்** | | | | |
| A. கணேஸ்வரன்<br>M. நிதர்சன்<br>P. றொட்னி<br>S. டானியல் ஜெயராஜ்<br>J. ரயிந்திரன்<br>K. கிசாந்<br>P. மிதுனன்<br>J. ஜெனசாஸ் | கரப்பந்து | 3 | - | - |

| பெயர் | நிகழ்ச்சி | நிலை கோட்டம் | நிலை வலயம் | நிலை மாவட்டம் |
|---|---|---|---|---|
| **15 வயது பெண்** | | | | |
| P. டிலோமினா<br>A. அஜந்தா<br>S. டிலூயா<br>S. ரியாமின<br>A. திவ்யா<br>T. தர்மிகா<br>N. திவ்யா<br>S. பவித்திரா<br>A. அகல்யா<br>K. யோயன்னா<br>S. மிதுனா | கரப்பந்து | 2 | - | - |
| **15 வயது ஆண்** | | | | |
| A. அருண் | | | | |
| J. ஜெயதீஸ்வரன் | | | | |
| A. திவேசன்<br>T. யுகர்நிதன<br>D. சயிவ்<br>S. திலிபன்<br>S. டிலக்சராயன்<br>K. கிசோப்பிரசாந் | கரப்பந்து | 2 | - | - |
| S. நிலக்சிகன் | | | | |
| M. கேக்குமார் | | | | |
| **ஆண் 13 - 15 வயது** | | | | |
| D. சயிவ்<br>K. கிசோப்பிரசாந்<br>J. ஜெயதீஸ்வரன்<br>S. நிலக்சிகன்<br>V. நிவேதன்<br>M. கேக்குமார் | கரம் | 2 | 2 | - |

| பெயர் | நிகழ்ச்சி | நிலை கோட்டம் | வலயம் | மாவட்டம் |
|---|---|---|---|---|
| **ஆண் 16 - 19 வயது** | | | | |
| A. கணேஸ்வரன்<br>S. சுவிராஜ்<br>K. தனராஜ்<br>K. கிசாந்<br>T. ரயிந்திரன்<br>S. சதீஸ்கரன் | கரம் | 2 | 2 | - |
| **15 வயது ஆண்** | | | | |
| N. பவிதா<br>P. டிலோமினா<br>N. திவ்யா<br>N. அர்ச்சனா<br>S. சியாமினி<br>S. டிலூயா<br>P. மிலோமினா<br>K. தனுஜா<br>S. சிவகவ்றி<br>T. சிந்துஜா | வலைப்பந்து | 2 | - | - |
| **15 வயது ஆண்** | | | | |
| A. விஜய்<br>S. நிலக்சிதன்<br>N. யுகன்<br>J. ஜெயதாஸ்<br>T. நிலக்சன் | 4 x 100 அஞ்சல் | 1 | 1 | 3 |

| பெயர் | நிகழ்ச்சி | நிலை<br>கோட்டம் | <br>வலயம் | <br>மாவட்டம் |
|---|---|---|---|---|
| **17 வயது ஆண்** | | | | |
| A. கிசாந்<br>P. மிதுனன்<br>P. பிரசாந்<br>A. பிரசாந்<br>T. சதீஸ்கரன்<br>A. தனேஸ்வரன் | 4 x 100, 4 x 400 அஞ்சல் | 1 | 1 | 3 |
| **15 வயது ஆண்** | | | | |
| T. நிலக்சன் | 100m | 1 | 1 | - |
| **19 வயது ஆண்** | | | | |
| K. தனராஜ் | குண்டு | 1 | 1 | - |
| **17 வயது ஆண்** | | | | |
| P. பிரசாந்தன் | 100m | 1 | 1 | 3 |
| **19 வயது பெண்** | | | | |
| T. அனோயினி | 100m | 1 | 2 | - |
| **17 வயது பெண்** | | | | |
| R. உதயமலர் | 400m | 2 | 2 | - |
| R. உதயமலர் | 100m | 3 | - | - |

# என்றும் மறவா நன்றிக்குரியவர்கள்...

மட் / பேத்தாழை விபுலானந்த வித்தியாலய வரலாற்றில் கன்னிப் பிரசவமாகிய "தாழை" சஞ்சிகை எமது கைகளில் தவழ்ந்து கொண்டிருப்பதற்கு இடையூறுகள் இடைவராமல் இறையருள் புரிந்திட்ட இறைவனுக்கு முதற்கண் நன்றி உரைப்பதோடு,


பாடசாலை மட்டங்களில் சஞ்சிகையினை வெளியிடுவதென்பது கஸ்ரமான ஒரு காரியமாகும் இருப்பினும் வெளியிடப்படும் சஞ்சிகை தரமானதாகவும் அதே நேரம் கல்விச் சமூகத்தார் அனைவருக்கும் பயன்பாடுடையதாக அமைய வேண்டும் எனும் நோக்கில் சகல வழிகளிலும் ஆலோசனைகளையும், ஒத்துழைப்பினையும் வழங்கிய வித்தியாலய முதல்வர், திரு.த. சந்தரலிங்கம் அவர்களுக்கும் மற்றும் பிரதி அதிபர்கள் ஆசிரிய குழாத்தினர், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

"தாழை" சஞ்சிகை மணம்பரப்ப ஆசிச்செய்திகளையும், வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய உயர்ந்த உள்ளம் கொண்ட பெருந்தகைகளுக்கும், சிறந்த ஆக்கங்களைத் தந்து உதவிய மாணவச் செல்வங்களுக்கும், ஆசிரியர்களுக்கும், நன்கொடைகள் மூலம் எமது இதழ் வெளியீட்டுக்கு உதவிய நல் உள்ளங்களுக்கும் அட்டைப் படத்தை திறம்பட வடிவமைத்துத்தந்த திரு. P. விஜயபாஸ்கர் ஆசிரியர் அவர்களுக்கும் இம் மலரினை குறுகிய காலத்தில் எழிலுற அச்சேற்றித்தந்த எவகிறீன் அச்சகத்தாருக்கும் எமது நன்றிகள்.

தாழை மலர் சிறப்புற மலர்வதற்கு நல் மனதோடு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒத்துழைத்து உதவியவர்களுக்கும் தோளோடு தோள் நின்றுழைத்த எம் இதழ் வெளியீட்டின் இனிய நெஞ்சங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலர் வெளியீட்டுக்குழு சார்பாக
செயலாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்

நன்றி மறப்பது நன்றன்று.....



Evergreen Printers, 185A, Trinco Road, Batticaloa. 065-2222607